# தவறான புரிதல்கள்

## தவறான புரிதல்களின் முகத்திரையை கிழித்தெறிதல்


ஆசிரியர்
ஸையத் ஹமீத் மோஹ்ஸின்

தமிழாக்கம்
சேயன் இப்ராஹிம்



வெளியீடு

SALAAM Centre

ஸலாம் சென்டர்
*65*, முதல் மெயின், எஸ.ஆர்.கே கார்டன்
ஜெயநகர் கிழக்கு, பெங்களூரு - *560041*
கைபேசி: +91 9901129956 / +91 9945177477 / +91 9945188488
E-mail: salaamcentrebangalore@gmail.com

THAVARANA PUTHIRTHAL ( Tamil ).
ISLAM, Facts vs. Fictions ( English ).
Copyright © 2013 SYED HAMID MOHSIN.
ISBN: 978-81-928089-6-3

All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, including photocopy, recording, or any information storage and retrieval system, without permission in writing from the author, except for the situation below which is permitted.

For Reprinting
Reprinting or reproducing this book on the condition that absolutely no change, addition, or omission is introduced is permitted free of charge. To make high quality reprints, you may contact the author / Salaam Centre to obtain free copies of the soft copy or printing files of this book.

The Web Site of this book :
This e-book is available on the Web, world wide at:
www.misconceptions.in , www.quranforall.in
Price:

Printed and Published by :
SALAAM CENTRE
# 65, Ist main, S.R.K. Garden, Jayanagar, Bangalore – 560 041
Contact: +91 99011 29956 / +91 99451 77477 / 080-2663 9007
Email: salaamcentrebangalore@gmail.com

# பொருளடக்கம்


✳ பொய்யும் மெய்யும் 1
✳ அன்பு நம்மை ஒன்றிணைக்கிறது 4
✳ ஒரே மாதிரியான மாறாத பிரச்சாரம் 5
✳ ஒரு சார்பான வரலாறு 7
✳ பலதார திருமணம் 7
✳ தனிச்சட்டம் 9
✳ ஹஜ் மானியம் 10
✳ முஸ்லிம் ஜனத்தொகை 11
✳ முஸ்லிம்களை தாஜா செய்தல் 13
✳ பாகிஸ்தானும் இந்திய முஸ்லிம்களும் 16
✳ 786 17
✳ பிறையும் நட்சத்திரமும் 19
✳ விஷமப்பிரச்சாரம் 19
✳ பாக்கிஸ்தான் கொடி 20
✳ விரும்பத்தகாத இறைச்சி 20
✳ காதல் ஜிகாத் 21
✳ வந்தேமாதரம் 24
✳ திப்புசுல்தான் 27
✳ தலாக் 38
✳ குலா 41
✳ பத்வா 43
✳ குப்ர் - காபிர் 45
✳ முஸ்லிம்கள் அசைவ உணவு உண்பதேன்? 47
✳ அசைவ உணவு வன்முறையைத் தூண்டுகிறதா? 50

✳ ஹலால் - ஹராம் 51
✳ இஸ்லாமிய முறைப்படி விலங்குகளை அறுப்பது 52
✳ மதுபானங்கள் - சூதாட்டம் - தடை 53
✳ கற்பழிப்பு - பாலியல் பயங்கரவாதம் 56
✳ கற்பழிப்பு - விபச்சாரம் வேறுபாடு 57
✳ இஸ்லாமிய அரசு - முஸ்லிம் நாடு வேறுபாடு 59
✳ முஸ்லிம்கள் - முஹம்மதியர்கள் 61
✳ ஷியா - சுன்னி முஸ்லிம்கள் 64
✳ உருது ஒரு அந்நிய மொழியா? 68
✳ இஸ்லாத்தில் சமயத் தலைமை இல்லை 69
✳ பள்ளிவாசல் அல்லது மஸ்ஜித் 71
✳ பள்ளிவாசல் சில முக்கிய அம்சங்கள் 73
✳ இந்த முழு உலகமும் பள்ளிவாசலே 73
✳ தொழுகை அழைப்பு 75
✳ முஸ்லிம்கள் கஅபாவை வணங்குகிறார்களா? 78
✳ முஸ்லிம்கள் கருங்கல்லை வணங்குகிறார்களா? 80
✳ ஏன் முஸ்லிமல்லாதவர்கள் மக்காவில் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை 82
✳ தர்கா - பள்ளிவாசல் வித்தியாசம் என்ன? 84
✳ மதரஸாக்கல்வி 88
✳ ஏன் இறைவனுக்கும்-நபிகளாருக்கும் உருவப்படங்கள் இல்லை 92
✳ நபிகளார் இஸ்லாத்தை வாளால் பரப்பினார்களா? 96
✳ இஸ்லாம் வன்முறை மூலம் பரப்பப்பட்டதா? 100
✳ புராதன எதிரி - நவீன வெறுப்பு 110
✳ விஷம் கக்கும் வகுப்புவாத அரசியல் 125

✳ ஜிகாத் 130
✳ ஜிகாத்தின் பல பரிமாணங்கள் 130
✳ பெரிய ஜிகாத் 130
✳ மிக உயர்ந்த ஜிகாத் 132
✳ சிறிய ஜிகாத் 132
✳ சமூக ஜிகாத் 134
✳ போர் பற்றி நபிகளார் கூறுவதென்ன? 137
✳ ஜிகாத் - தவறான விளக்கம் 141
✳ சமயத்தை தவறாகப் பயன்படுத்துதல் 146
✳ ஒடுக்குமுறை பயங்கரவாதம் வேறுபாடு என்ன? 150
✳ இஸ்லாமோபியாவை உருவாக்குதல் 157
✳ பயங்கரவாதத்தின் வேர்கள் 161
✳ பயங்கரவாதம் - ஊடகங்களின் இரட்டை நிலை 169
✳ வன்முறை-பயங்கரவாதம்-இன அழிப்பு பட்டியலில் மேற்கு நாடுகளுக்கு முதலிடம் 172
✳ தற்கொலை குண்டுவெடிப்பு இஸ்லாத்தில் தடை 181
✳ இஸ்லாமிய அடிப்படைவாதம் 188
✳ கடந்த காலமும்-எதிர்காலமும் 192
✳ பெண்கள் - இஸ்லாமியக் கண்ணோட்டம் 200
✳ இஸ்லாத்தில் பெண் உரிமைகள் 203
✳ இஸ்லாத்தில் பெண்களின் கடமைகள் 207
✳ முக்காடு அல்லது புர்கா 208
✳ கோஷா - நவீனத்தின் வெளிப்பாடு 213
✳ வாரிசுரிமை சொத்தில் பெண்களின் பங்கு 213
✳ பெண்களுக்கு வாக்குரிமை இல்லையா? 217
✳ பெண் கல்வியும் வாகனம் ஓட்டும் உரிமையும் 219

✳ பலதார திருமணமும் ஒருதார திருமணமும் 220

✳ மேற்கத்திய ஆயுதம் 220

✳ ஜுடிஸம் - பலதார திருமணம் 222

✳ கிறிஸ்துவம் - பலதார மணம் 223

✳ ஹிந்துயிஸம் - பலதாரமணம் 225

✳ மேற்கத்திய சமூகம் - பலதார திருமணம் 226

✳ இஸ்லாம் - பலதார திருமணம் 228

✳ விதவைகள்-விவாகரத்தான பெண்களின் மறுமணம் 233

✳ முஹம்மது(ஸல்) அவர்களின் குடும்ப வாழ்க்கை 237

✳ தவறாகப்புரிந்து கொண்ட குர்ஆன் வசனங்கள் 241

✳ நன்றி 255

✳ ஆதார நூல்கள் 258

# முன்னுரை

பிரச்னைகள் மிகுந்த ஒருகாலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தும் வண்ணமே உலகில் தேசிய அரசுகள் உருவாக்கப்பட்டுள்ளன. சமய, சாதி, மொழி உணர்வுகளைத் தூண்டி விட்டு அதனைத் தங்களுக்குச் சாதகமாகப்பயன் படுத்திக்கொள்ள முயலும் சில சக்திகளின் செயல்பாடுகள் காரணமாக சமூகங்களுக்கிடையிலான சுமுக உறவுகளுக்கு தொடர்ந்து பயமுறுத்தல் இருந்து கொண்டே வருகிறது. சமயங்களின் வழியாக ஆன்மீக ஆறுதலைப் பெறுவதற்கு மாறாக, அவற்றை மக்களைப் பிளவுபடுத்தும் கருவிகளாகப் பயன்படுத்துகின்றனர். வணிகமயமும், நுகர்வுக் கலாச்சாரமும் மக்களைக் கொள்ளையடித்து நாடுகளின் இயற்கை வளங்களையும், அமைதியையும் சீர் குலைக்கின்றன. உலகப் பெரும் வல்லரசுகளின் கட்டுப்பாட்டிலுள்ள நுகர்வு கலாச்சாரச் சக்திகள், தங்களது தொழிற்சாலைகளின் சக்கரங்கள் தொடர்ந்து சுழல வேண்டுமென்பதற்காக, போர்களைத் தூண்டிவிடவும் தயாராக உள்ளன. இவர்களது இத்திட்டங்களை அம்பலப்படுத்த வேண்டிய கல்வி நிறுவனங்கள் ஆராய்ச்சிக் கூடங்கள், ஊடகங்கள் ஆகியன அவர்களைச் சார்ந்து இருக்கின்ற காரணத்தால் அவற்றை விமர்சித்திடத் தயங்குகின்றன. அவர்களது ஆதரவில்லாமல் பொது சமூகத்தின் குரலைக் கேட்க முடியாது என்ற நிலை உருவாகி விட்டது.

போர் ஆயத்தங்களைத் துவக்குவதற்கு முன்னரே முஸ்லிம்களை இழிவுபடுத்தியும், அவர்களைப் கோபமூட்டும் வகையிலும் ஊடகங்கள் செய்திடும் ஒரே மாதிரியான வெறுப்புப் பிரச்சாரம் துவங்கி விடுகிறது. இவை

சமூகங்களின் நல்லுறவுகளுக்குப் பெரும் பாதகங்களை விளைவிக்கின்றன. உலக மயமாக்கப்பட்ட செய்தி ஊடகங்களின் வாயிலாக தொடர்ந்து பொய்ப்பிரச்சாரம் செய்யப்படுவதை நாம் கண் கூடாகப் பார்க்கிறோம். "நீங்கள் எங்களுடன் இருங்கள்; அல்லது பயங்கரவாதிகளுடன் இருங்கள் என்ற தத்துவம் நடுநிலையாளர்களையும், முடிவெடுக்காதவர்களையும், சூழ்நிலைக்கு ஏற்ப முடிவெடுக்க இயலாமல் அமைதிகாப்பவர்களையும் வாயடைக்கச்செய்து விட்டது.

இஸ்லாம், முஸ்லிம் என்ற வார்த்தைகள், தீங்கு விளைவிக்கக் கூடிய ஆயுதங்களை தோளிலே சுமந்து கொண்டு திரிகின்ற சிவந்த கண்களைக் கொண்ட தாடி வைத்திருக்கும் போராளிகளின் பிம்பங்களையே நம் கண்முன் கொண்டு வருகின்றன. இந்த பிம்பங்களே நமது ஊடகங்களிலும், திரைப்படங்களிலும், பத்திரி கைகளிலும் பெருமளவு ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. ஜிகாத், முல்லா, முஜாஹிதீன், ஃபத்வா, ஷியா, சன்னி, வஹாபி, மதரஸா போன்ற வார்த்தைகளைச் சுற்றியே அரசியல் விவாதங்கள் நடத்தப்படுகின்றன. இந்த வார்த்தைகள் மேற்கு உலகம் நடத்தி வருகின்ற பயங்கர வாதத்திற்கு எதிரான "போரை" நியாயப்படுத்துகின்றன.

கடந்த பல ஆண்டுகளாக, ஊடகங்கள் முஸ்லிம் சமுதாயத்தைக் குறி வைத்து திட்டமிட்டமுறையில் அவதூறுப்பிரச்சாரம் செய்து வருகின்றன. இந்த ஒரு சார்பு நிலைக்கு வரலாற்றில் காணப்படும் தவறான, திரிக்கப்பட்ட தகவல்களும் அரசியலுமே காரணங்களாகும். எனவே ஏழைகள், அதிகாரமற்றவர்கள் ஆகியோரின் நம்பிக்கைகளும் அவர்களது சமூகச் சிறப்பியல்களும் அவதூறுக்கு உள்ளாக்கப் படுகின்றன. உலகில் நடைபெறும் அனைத்துக் கேடுகளுக்கும் முஸ்லிம்களே காரணம் எனக்குறை கூறப்படுகிறது. வல்லரசு நாடுகளின் பயங்கரவாதத்திற்கும் பொருளாதாரச் சுரண்டல் களுக்கும் பலியானவர்கள் "பயங்கர வாதிகள்" என்று குற்றம் சாட்டப்படுகின்றனர். "ஜிகாத்" அப்பாவிமக்களுக்கு எதிராக நடத்தப்படும் போர் எனத் தவறான முறையில் வியாக்யானம் செய்யப்படுகின்றது.

எண்ணெய்க்கிணறுகள் மீதும் எண்ணெய் வளங்களின்

மீதும் கண் வைத்துள்ளவர்கட்கு வெறுப்புணர்வும், போர்களும் அவசியத் தேவைகளாக உள்ளன என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அவர்களின் இந்த விளையாட்டை நன்கு கண்காணித்து பொய்ப்பிரச்சாரத்தைத் தோலுரித்துக் காட்ட வேண்டிய தருணம் இப்போது வந்து விட்டது. ஒருவருடைய நம்பிக்கையை இன்னொருவர் புரிந்து கொள்ளச் செய்வதற்கான நேர்மறை முயற்சிகளில் ஈடுபடுவது மக்களை ஒன்றிணைப்பதற்கும் ஒருவரது வலிமையிலிருந்து இன்னொரு பயன்பெறவும் உதவி புரியும் என்பது திண்ணம்.

மக்களிடையே தோன்றியுள்ள தவறான எண்ணங்களை வலுப்படுத்துவதில் மேற்கத்திய நாடுகள் பெரும் பங்காற்றி வருகின்றன. "பயங்கரவாதத்திற்கு எதிரானது" என்று கூறி நடத்தப்பட்ட போர்களில் இலட்சக்கணக்கான மத்திய கிழக்குப் பகுதியிலுள்ள மக்கள் உயிரிழந்துள்ளனர். இவை "நாகரீகங்களுக்கிடையிலான மோதல்கள்" என்றும் "வெள்ளையர்களின் மேலாண்மையை நிலை நாட்டச் செய்திட்ட போர்கள்" என்றும் அவர்கள் கூறுகின்றனர். இரு தேசக்கொள்கையும் இந்தியத் துணைக்கண்டத்தில் இதனையே செய்தது. அறிவார்ந்த ரீதியிலும் கொள்கை ரீதியிலும் இந்தப் போக்குகளையும் அச்சங்களையும் எதிர்த்துப் போராட வேண்டும். ஆனால் தற்போது நடந்து வரும் விவாதங்கள் ஒரு சார்பானவை. மூன்றாம் உலக நாடுகளின் மீது மேற்கத்திய நாடுகளின் தலையீடு பற்றியோ, அல்லது சில பலவீனமான நாடுகளில் மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் நடத்தப்படும் இராணுவப் புரட்சிகள் பற்றியோ அந்நாடுகளில் தங்களுக்கு வேண்டிய சர்வாதிகாரிகளை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்துவது பற்றியோ மக்களிடையே எந்த விதமான விழிப்புணர்வையும் உருவாக்குகின்ற விதத்தில் இந்த விவாதங்கள் அமையவில்லை. ஐரோப்பியர்கள் யூதர்களின் மீது நிகழ்த்திய கொடுமைகளைக் காரணம் காட்டி மத்திய கிழக்குப் பகுதியில் இஸ்ரேல் நடத்தி வருகின்ற அராஜகச் செயல்கள் பற்றியும் இந்த விவாதங்கள் பேசப்படுவது இல்லை. அமைதியாகவும் நல்லிணக்கத்துடனும் வாழ்ந்திட முன்னேற்றப் பாதையில் அடியெடுத்துச் செல்ல மக்கள் ஒருவருக்கொருவர் நெருங்கி வரச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இதனை நிறைவேற்றிட ஒரு சார்பான போக்குகளையும்,

அச்சங்களையும் கொள்கை ரீதியில் எதிர்த்துப் போராட வேண்டும். இந்த சமூக நடவடிக்கைகள் அனைத்து மக்களையும் ஊடுருவிச் செல்ல வேண்டும். அதன் மூலமே அனைத்து சமூக மக்களின் வாழ்வினை மேம்படுத்த முடியும். வகுப்புவாத மற்றும் பயங்கரவாத அரசியலின் பின்னணியில் உள்ள உண்மைகளை சமுதாயத்தின் அனைத்துத் தளங்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டம் தற்போது சந்தித்து வருகின்ற மிகப்பெரும் பிரச்னைகளை பற்றி விவாதங்கள் நடைபெற்று வருகின்ற சூழலில், இந்தியாவில் வாழும் இந்து-முஸ்லிம்களின் உறவுகளைச் சீர்குலைக்கின்ற விதத்தில் ஒரு சராசரி இந்தியனின் உள்ளத்தில் முஸ்லிம்களைப் பற்றி இருக்கின்ற தவறான கருத்துக்களைப் பற்றி இந்நூல் விரிவாகப் பேசுகிறது. இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்க வேண்டுமென்ற நோக்கிலும் இந்திய முஸ்லிம்களின் கலாச்சார மரபுகள் எங்ஙனம் இந்திய நாட்டிற்கேயுரிய சிறப்பியல்புகள், பழக்க வழக்கங்கள், சுற்றுப்புறச் சூழல்கள் போன்ற அம்சங்களால் உருமாற்றம் பெற்றுள்ளன என்பது பற்றியும் இந்நூல் விளக்குகிறது. பிரச்னைகளை நன்கு அலசி ஆராய்ந்து, அவற்றின் பல்வேறு நிலைப்பாடுகளையும் பிரித்தறிந்து அவை எங்ஙனம் உலக வல்லரசுகள், பயங்கரவாதத்திற்கு எதிரான போர், தேர்தல் அரசியல்கள், சில சுய நலசக்திகள் அரசியல் லாபத்திற்காக மேற்கொள்ளும் தவறான பிரச்சாரங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையன என்பதைப்பற்றியும் இந்நூல் விளக்குகிறது. முஸ்லிம்கள் அனைவரும் அப்பாவிகள் என்று நிரூபித்திடச் செய்யும் முயற்சியோ அல்லது பழி அனைத்தையும் பிறர் மீது சுமத்தும் நோக்கமோ இதில் இல்லை. முஸ்லிம்களின் குறைபாடுகள், மாறுபாடுகள், வழி தவறிய செயல்கள் ஆகியனவும் இந்நூலில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன.

மற்றவர்களின் மீது, குறிப்பாக மேற்கத்திய நாட்டினர் மீது முஸ்லிம்கள் கொண்டிருக்கும் நியாயமான மனக்குறைகளை வெளிப்படுத்தும் ஒரு முயற்சியே இது என்றும் கருதலாம். பயங்கரவாத வன்முறைச் செயல்களுக்கு முஸ்லிம்களே காரணம் என்று உச்ச தொனியில் செய்யப்படும் கொடூரமான பிரச்சாரங்களுக்கிடையே முஸ்லிம்களின் நியாயமான

மனக்குறைகள் எடுபடாமலேயே போய் விடுகின்றது. முஸ்லிம்களுக்கு ஊடக பலம் இல்லாத காரணத்தால், தங்களது தரப்பு நியாயத்தை முறையாகத் தெளிவாக வெளிப்படுத்துகின்ற வாய்ப்புகளும் அவர்கட்குக் குறைவாகவே உள்ளன. எனவே முஸ்லிம்கள் தரப்பு நியாயத்தைப் பிறர் எளிதில் புரிந்து கொள்ளும் முறையில் எடுத்துரைத்து அவர்கள் எண்ணுவதையும், உணர்வதையும் வெளிப்படுத்தி அது எந்த அளவிற்கு பொதுவான உலகக் கருத்தோடு ஒத்துப் போகிறது அது எங்கு மற்றவர்களின் கருத்துக்களோடு மோதுகிறது என்பதைப் பற்றியும் விளக்குகின்ற ஒரு முயற்சியே இது எனலாம். இஸ்லாம்-மேற்கு உலகினர் என்ற இரு தரப்பினருக்குமிடையேயுள்ள சாதகமான மற்றும் பாதகமான அம்சங்களைப் பட்டியலிடுகின்ற ஒரு "வரவு-செலவு அட்டவணையாக" இதனை கருதிட வேண்டாம். இரு தரப்பினரிடையேயும் அதிக அளவில் புரிந்துணர்வை ஏற்படுத்தி ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகளை உருவாக்கிட வேண்டும் என்ற நம்பிக்கையிலேயே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாங்கள் இதனைப் பல ஆண்டுகளாகவே செய்து வருகிறோம். அதனை மேலும் விரைவுபடுத்த வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. எங்களோடு சமூக ஆர்வலர்கள், ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட தனி நபர்கள் என அனைவரும் சேரவேண்டும். இந்த மிக முக்கியமான பணிக்கு உதவுவதற்காகவே "தவறான புரிதல்கள்" என்ற நூலைக் கொண்டு வந்துள்ளோம்.

# மொழிபெயர்ப்பாளரின் உரை

பெங்களூரு "ஸலாம் சென்டரின்" நிறுவனரும், தலைவருமான ஜனாப் ஸையத் ஹமீத் மோஹ்ஸின் எழுதியுள்ள "Mis Conception" என்ற ஆங்கில நூலின் தமிழாக்கமே "தவறான புரிதல்கள்" என்ற இந்நூலாகும். இந்நூலை மொழி பெயர்க்கின்ற பணியினை எனக்கு வழங்கிய அவருக்கும், எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாத்தைப் பற்றியும், முஸ்லிம்களைப்பற்றியும் உலகளாவிய அளவிலும், இந்திய அளவிலும் நிலவி வருகின்ற தவறான கருத்துக்கள், எண்ணங்கள், புரிதல்கள், பொய்ப் பிரச்சாரங்கள், அவதூறுப் பிரச்சாரங்கள் ஆகிய அனைத்திற்கும் விரிவான முறையில் ஆதாரங்களைத் திரட்டி தக்க முறையில் பதில் தந்துள்ளார் இந்த நூலின் ஆசிரியர் ஜனாப் ஸையத் ஹமீத் மோஹ்ஸின் அவர்கள். இந்த விஷயங்கள் பற்றி ஏற்கனவே பல நூல்கள் வெளிவந்துள்ள போதிலும் அந்த வரிசையில் வந்துள்ள இந்நூல் பிற நூல்களை விடவும் சிறப்பானது என்பதைப் படிக்கின்ற வாசகர்கள் உணர்ந்து கொள்வர் என்பது திண்ணம். பிற சமய மக்களின் உள்ளங்களில் நிலவி வருகின்ற தவறான எண்ணங்களைப் போக்கவே ஆசிரியர் இந்நூலை எழுதியுள்ள போதிலும் முஸ்லிம்களும் அறிந்து கொள்ள வேண்டிய வரலாற்று ரீதியான பல செய்திகள் இதில் உள்ளன.

எனது மொழி பெயர்ப்பின் கையெழுத்துப் பிரதிகளை முழுவதும் படித்துச் சரிபார்த்து எழுத்துப் பிழைகளையும், இலக்கணப்பிழைகளையும் திருத்தி செழுமைப்படுத்திய கடையநல்லூர் மசூது தைக்கா மேல்நிலைப் பள்ளியின் ஓய்வு பெற்ற தமிழாசிரியர் ஜனாப் சேவரையன் அப்துல் ஹுஸைன் சார் அவர்கட்கும், இதனைச் சிறந்த முறையில் கணினி அச்சுச் செய்த தந்த கடையநல்லூர் "மூன் ஆப்செட்" சகோதரர் எம்.எஸ்.ஜாகிர் ஹுசைன் அவர்கட்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேயன் இப்றாகிம்
(சே.அ.முஹம்மது இப்ராகிம்)

# பொய்யும் மெய்யும்

பொதுமக்கள், தனிநபர்கள், நாடுகள், சமயங்கள் ஆகியவற்றுக்கிடையிலான சமநிலை தொடர்ந்து மாறிவரும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது மக்களின் உள்ளத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவை நம்மையும் நமது செயல்களையும் தொடர்ந்து விளங்கிக் கொள்ளச் செய்வதோடு நமது நம்பிக்கைகளிலும், போதனைகளிலும், பழக்க வழக்கங்களிலும் சேர்ந்துள்ள தூசியையும், புழுதியையும் விலகி ஓடச் செய்து கொண்டிருக்கிறது..

இந்தியத் துணைக்கண்டத்திற்கு இஸ்லாம் வந்து ஓராயிரம் ஆண்டுகள் ஆன பின்னரும் இஸ்லாத்தின் மீது பல்வேறு விதமான விமர்சனங்கள் இன்றைக்கும் எழுப்பப்பட்டு வருகின்றன. இந்துக்களும், முஸ்லிம்களும் சகித்துக் கொள்ள இயலாத ஒரு மன நிலையில் இந்தத் துணைக் கண்டத்தில் வாழ்ந்திடவில்லை. இந்த இரு சமய மக்களும் இந்த மண்ணிலேயே பிறந்து, இந்த மண்ணில் பாய்கின்ற கங்கை, சிந்து நதியின் நீரைக் குடித்து வாழ்ந்து வருகின்றவர்களே. கலை, நாகரீகம், பண்பாடு, மரபுகள் என அனைத்து அம்சங் களிலும் இந்த இரு சமய மக்களும் தங்களது பங்களிப்பைச் செய்துள்ளனர். எனினும், ஊடகங்களின் தவறான பிரச்சாரம் காரணமாகவும், பிரித்தாளும் அரசியல் மற்றும் முரண்பட்ட அரசியல் நலன்கள் காரணமாகவும், இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான உறவில் சந்தேகக்கோடுகள் தோன்றியுள்ளன. அண்டை வீட்டுக்காரர்களுக்கிடையில் இடைவெளி அதிகரித்து வருகிறது. இதற்கு முன்னர் எந்த விதமான பிரச்னைகளும் இல்லாத இம் மக்களுக்கிடையில் அரசியல் காரணமாகப் பிளவுகள் ஏற்பட்டு வருகின்றன.

அரேபியாவில் இஸ்லாம் தோன்றிய நூறு ஆண்டுகளுக் குள்ளாகவே சிந்துச் சமவெளிப் பகுதியின் கதவுகளை அது தட்டியது. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே பல சூபி ஞானிகளும், சமய அறிஞர்களும் தங்களது ஆசிரமங்களை நிறுவி அனைத்து சமய நம்பிக்கை கொண்ட மக்களிடமும் ஆன்மீகம் மற்றும் அமைதி பற்றி பிரச்சாரம் செய்தனர்.

ஏராளமான சூபி ஞானிகள் சமாதானம், அன்பு, நல்லிணக்கம் ஆகிய செய்திகளை மக்களிடையே போதித்து அதன் மூலம் அனைத்துத் தரப்பினரின் மரியாதையையும், அன்பையும் பெற்றிருந்தார்கள். இந்த ஒருங்கிணைப்பு மற்றும் பரஸ்பர நல்லெண்ணம் மூலமாக இந்துவும், இஸ்லாமும் இணைந்த புதிய கலாச்சாரமும், மொழிகளும், கட்டிடக் கலையும் உருவாகின. ஹிந்துஸ்தானி இசை, கவ்வாலி, கஜல், உருது, மொகலாய சமையற்கலை, மொகல் வண்ணம் பூச்சு, சீக்கிய சமயம், ஆரிய சமாஜம் போன்றவை இரு சமய மக்களின் புரிதல் காரணமாகவே உருவாகின.

வம்சங்கள் வந்து போயின. போர்கள் எல்லைகளை மாற்றியமைத்தன. அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. புதிய இயக்கங்கள் தோன்றின. அரசுகள் வீழ்ச்சியடைந்தன. உறவுகளில் தாக்கம் ஏற்பட்டது. கி.பி.1857ல் மொகலாயப் பேரரசு முற்றிலுமாக வீழ்ச்சியடைந்து ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டை தங்களது முழுக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். இந்தப் புதிய காலனி அரசு மரபு வழியால் ஒன்றிணைந்திருந்த இந்திய மக்களை பிளவுபடுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டது. அலுவலகப் பணிகளுக்கு எழுத்தர்களைத் தயார் செய்திட உருவாக்கப்பட்ட அவர்களின் கல்விக் கொள்கை மக்களைப் பிளவு படுத்தும் ஒரு கருவியாகவும் பயன் படுத்தப்பட்டது. சமய அடிப்படையின் காரணமாக எந்த விதமான பகையுணர்ச்சியும் கொண்டிராத மக்கள் தங்களுக்குள் "நாமா-அவர்களா?" என்று எண்ண ஆரம்பித்தனர்.

கல்வியில் பின் தங்கியிருக்கும் இந்திய முஸ்லிம்கள் இங்கு வாழும் பிற சமய மக்களிடம் தங்களது நிலையினை எடுத்துச் சொல்ல இயலாத நிலையில் இருக்கின்றனர். இதன் காரணமாக அவர்களது பிம்பம் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது.

அவர்களைப் பற்றி பொய்யும், புனைசுருட்டும் வெற்றி கரமாகப் பரப்பப்பட்டுள்ளன. திரித்து எழுதப்பட்டுள்ள வரலாற்று நூல்கள் ஒன்றுமறியாத மக்களின் உள்ளங்களில் விஷத்தை விதைத்துள்ளது. முஸ்லிம்களின் குறைகள் மிகைப் படுத்தப்பட்டு அவர்களது சாதனைகள் மறைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கும் பிற மக்களுக்குமிடையிலான பரஸ்பரக் கருத்துப் பரிமாற்றங்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. எனவே முஸ்லிம்களுக்கும், பிற சமய மக்களுக்குமிடையிலான பரஸ்பரத் தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்தி அதனை மேலும் மேம்படச் செய்ய வேண்டிய அவசரத் தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. இல்லையென்றால் தற்போது நிலவி வரும் தப்பெண்ணங்களும், தவறான செய்திகளும் நிலைமையை மேலும் சிக்கலாக்கி விடும் அபாயம் உள்ளது.

# அன்பு நம்மை ஒன்றிணைக்கிறது

தீவிரவாதிகளும், குற்றவாளிகளும், அரசியல்வாதிகளும் மக்களின் சமய உணர்வுகளைத் தூண்டிவிட்டு இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பெரும் பிளவினை ஏற்படுத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

முக்கியமான இந்திய அரசியல் தலைவர் ஒருவர் "இந்தியாவில் முஸ்லிம்களை "நம்மவர்களாகக் கருதும் மனப்பான்மை மாறி "அவர்களாகக்" கருதும் மனப்பான்மை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடுகிறார். இந்த மனப்பான்மை தற்போது பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டு வருகிறது. இன்றைக்கும் கூட முஸ்லிம்கள் இந்திய தேசிய நீரோட்டத் தினுள் அனுமதிக்கப்படவில்லை என்பதே உண்மையான நிலவரமாகும்.

பொய்யும், அரைகுறை உண்மையும் பரப்பப்பட்டு அதன் காரணமாக ஏற்படும் பரஸ்பர அவநம்பிக்கையே வகுப்பு வாதத்தை வேரூன்றி வளரச் செய்கிறது. எனவே வகுப்பு வாதிகள் அனைத்து விதமான உபாயங்களையும் கையாண்டு வெறுப்பையும் உணர்ச்சியையும் தூண்டுகிறார்கள். அவர்கள் மற்றவர்கள் மீதுதேவையற்ற வெறுப்பைத் தூண்டுகிறார்கள். அதே நேரத்தில் ஒரு சாராரிடம் இல்லாத பெருமையை மிகைப்படுத்திக் கூறி வருகிறார்கள். ஒரு பிரிவினரைக் கேலிசெய்வதும், ஒரு பிரிவினரின் முக்கியத்துவத்தையும், அதிகாரத்தையும், பெருமையையும் மிகைப்படுத்திக் கூறுவதுமே அவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் வழிமுறைகளாக உள்ளன. மக்களிடையே செல்லுபடியாகும் என்று எண்ணிக் கொண்டு திரித்து எழுதப்பட்டுள்ள வரலாற்றைப் பரப்பிடவும், புகழை மறைத்திடவும், மூடுண்ட

மனப்பான்மையை வளர்த்திடவும் இந்த புதிய உபாயங்களை அவர்கள் மேற்கொள்கிறன்றனர்.

இந்தியாவில் 20 கோடி முஸ்லிம்கள் உள்ளனர். இவர்களின் மாண்பினைக் குலைக்கும் வண்ணம் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இது சமூகங்களுக்கிடையே போட்டியை ஏற்படுத்தி ஒரு சிறிய சம்பவம் கூட வன்முறை மோதலுக்குக் காரணமாக அமைந்து விடுகிறது. சமயம், மக்களிடையே சகோதரத்துவ அன்பையும், பரஸ்பர மரியாதையையும் ஏற்படுத்தும் ஒரு நேர்மறையான சக்தியாக இருந்திட வேண்டும். ஆனால் சமயச் சார்பற்ற பன்முக ஜனநாயக அமைப்பு கொண்ட ஒரு நாட்டின் குடிமக்களாக நாம் நடந்து கொள்வதில்லை. யார் இதனைச் செய்தார்கள்? ஏன் செய்தார்கள் என்ற கேள்விகள் பதில் அளிக்கப்பட வேண்டிய கேள்விகளே! ஆனால் வாரி இறைக்கப்பட்டுள்ள சேறு முற்றாகத் துடைக்கப்படவேண்டும் என்பதே உண்மை நிலையாகும்.

இந்தியாவிலுள்ள இந்த இரண்டு சமூகங்களுக்கிடையே பரஸ்பரத் தொடர்புக்கான வாயில்கள் திறந்து விடப்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும். அதன் மூலமே அவர்கள் சமூக, கலாச்சார, வரலாற்றுச் சூழலில் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ள முயற்சிகள் மேற்கொள்ள முடியும். மற்றவர்களின் நம்பிக்கையை மதித்து நடப்பதன் மூலமே, சமூக நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் கட்டிட முடியும். வெறுப்பு நம்மை பிரிக்கிறது. அன்பு நம்மை இணைக்கிறது இந்த தாரக மந்திரமே நட்புறவை வலுப்படுத்தி மக்களின் முன்னேற்றத்திற்காக நாம் பாடுபடுவதை உறுதி செய்யும்.

## ஒரே மாதிரியான மாறாத பிரச்சாரம்

முஸ்லிம்களைப் பற்றியும், அவர்களது செயல்பாடுகள் பற்றியும் தொடர்ந்து ஒரே மாதிரியான கருத்துக்களே காலங்காலமாக பரப்பப்பட்டு வருகின்றன. முஸ்லிம்களுக்கென்று தனிச் சிவில் சட்டங்கள் இருப்பதால் முஸ்லிம் ஆண்கள் நான்கு பெண்களைத் திருமணம் செய்து கொள்கின்றனர். அது

போல் முத்தலாக் (மூன்று முறை சொல்வது) என்று கூறி வேண்டாத மனைவியரை விவாகரத்துச் செய்து விடுகின்றனர் என தொடர்ந்து பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. அது போல் முஸ்லிம்கள் குடும்பக் கட்டுப்பாட்டில் ஆர்வம் காட்டு வதில்லை என்றும் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இப்படிச் சொல்வது முஸ்லிம்களின் மக்கட் தொகை பெருகி வெகு சீக்கிரத்தில் அவர்கள் பெரும்பான்மை மக்களின் எண்ணிக் கையை விட அதிகமாகி விடுவார்கள் என்ற பிரச்சாரத்திற்கு வழி வகுக்கிறது. வரலாற்றுப் புத்தகங்களில் உள்ள திரிபுகள் எரிகின்ற தீயில் மேலும் எண்ணெய் ஊற்றுவது போல் அமைந்துள்ளன.

முஸ்லிம்கள் கட்டாய மதமாற்றத்தில் ஈடுபட்டார்கள். கோவில்களை இடித்தார்கள், இடித்த கோவில்களின் இடிபாடுகளின் மீது பள்ளிவாசல்களைக் கட்டினார்கள். சிலைகளைச் சேதப்படுத்தினார்கள் என்ற பொய்ப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் தங்களது "பழிவாங்கும்" செயல்களை நியாயப்படுத்த வகுப்புவாதிகள் முயற்சிக்கிறார்கள்.

முஸ்லிம்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒரே கட்சிக்குத்தான் வாக்களிக்கிறார்கள் என்ற தவறான பிரச்சாரத்தை மேற்கொள்ளும் அவர்கள், சில முஸ்லிம் அமைப்புகள் தேர்தல்களில் போட்டியிடுவதை "சிறுபான்மை அரசியல்" என்றும் குறிப்பிடுகிறார்கள். மத்திய அரசும், சில மாநில அரசுகளும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த நாளை அரசு விடுமுறை நாளாக அறிவித்ததையும், முஸ்லிம்களின் பொருளாதார நலன்களுக்காக சில திட்டங்களை அறிவித்ததையும் "வாக்கு வங்கி அரசியல்" என்றும், சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்தும் முயற்சிகள் என்றும் இவர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு மனரீதியிலான மோதலுக்கும் பிளவிற்கும் வழி வகுக்கிறார்கள்.

## ஒரு சார்பான வரலாறு

வரலாற்று நாயகர்களான ஔரங்கசீப், திப்புசுல்தான் ஆகியோரை ஒருதலைச் சார்பானவர்களாகச் சித்தரிப்பதன் மூலம் இந்து முஸ்லிம்களிடையே பிளவை ஏற்படுத்தி தங்களது இன்றைய அரசியல் தேவையினைப் பூர்த்தி செய்திட அவர்கள் முயற்சிக்கின்றனர். உதாரணமாக ஔரங்கசீப் பனாரஸ் கோவிலை இடித்த சம்பவம் வேண்டுமென்றே பெரிது படுத்தப்படுகிறது. குத்ப்ஷாஹி மன்னர் அபுல் ஹஸன் தனாஸா என்பவர் முறைகேடான வழிகளில் ஈட்டிய தனது செல்வத்தை கோல்கொண்டாவிலுள்ள ஜூம்ஆ மசூதியில் குவித்து வைத்திருந்தார் என்று காரணம் கூறி ஔரங்கசீப் அதனை இடித்தது பற்றி யாரும் பேசுவதில்லை. இந்த இரண்டு சம்பவங்களிலும் வழிபாட்டுத் தலங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டதை மாமன்னர் ஔரங்கசீப் அறிந்து கொண்டதனாலேயே அவற்றை இடிக்க உத்தரவிட்டார். அதே நேரத்தில் சில முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் அவரை இறை பக்தி மிக்கவர் என்றும், இஸ்லாமிய நெறிமுறைகளின்படி வாழ்ந்தவர் என்றும் புகழ்ந்துரைத்து, அவர் தனது தந்தையார் ஷாஜஹானை 17 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைத்து வைத்ததையும் தனது மூன்று சகோதரர்களை கொடூரமான முறையில் கொன்றதையும் குறிப்பிட மறந்து விடுகிறார்கள். ஔரங்கசீப்பின் ஒவ்வொரு நடவடிக்கையும் அவர் தனது அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்த மேற்கொள்ளப்பட்டவையேயாகும். அதற்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சொல்வதற்கு ஒன்றுமில்லை. எனவே அவரை அளவுக்கு அதிகமாக புகழவும் வேண்டாம், பழிக்கவும் வேண்டாம்.

## பலதார மணம்

முஸ்லிம்கள் பலதார மணம் புரிகிறார்கள் என்ற பொய்யும் பிற சமய மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. மக்கட்தொகைப் பெருக்கத்தைப் பலதார மணத்துடன் சம்பந்தப்படுத்தி கூறப்படும் கட்டுக்கதையும் இம் மக்களின் உள்ளத்தில் ஆழமாகப்பதிந்துள்ளது. குழந்தை பிறப்பு விகிதம் குழந்தைகள் பெறத் தகுதிபடைத்த வயதுடைய பெண்களின்

எண்ணிக்கையைப் பொறுத்தே அமையும். ஒருவனுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியர்கள் இருக்கிறார்கள் என்பதை வைத்து குழந்தைகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப் படுவதில்லை. எனவே குழந்தைகளின் எண்ணிக்கை பலதார மணம் காரணமாக அதிகரிப்பதில்லை என்பதே யதார்த்த நிலையாகும். சில சமூகங்களில் நிலவி வரும் சிசுக் கொலை காரணமாகவும், வரதட்சணைக் கொடுமை காரணமாக பெண்கள் உயிரோடு எரிக்கப்படுவதும் பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருவதற்கு வழிவகுக்கிறது.

இரண்டாவதாக, தற்போதுள்ள ஆண்கள் பெண்கள் விகிதாச்சாரம், முஸ்லிம் ஆண்கள் நான்கு பெண்களைத் திருமணம் செய்து கொள்ள இடம் அளிக்காது. அப்படி முஸ்லிம்கள் ஆண்கள் அனைவரும் நான்கு பெண்களைத் திருமணம் செய்து கொள்கிறார்கள் என்பதை ஒரு வாதத்திற்காக ஏற்றுக் கொண்டால், 75 சதவிகித முஸ்லிம் ஆண்களுக்கு திருமணம் செய்யப் பெண்கள் கிடைக்க மாட்டார்கள். 1981ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி முஸ்லிம்களில் ஆண், பெண் விகிதம் 1:068 என்ற அளவிலும் இந்துக்களில் 1:072 என்ற விகிதத்திலும் உள்ளது. அதாவது 1000 முஸ்லிம் பெண்களுக்கு 1068 முஸ்லிம் ஆண்கள் உள்ளனர். இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும் போது அனைத்து முஸ்லிம் ஆண்களும் நான்கு பெண்களைத் திருமணம் செய்வதென்பது சாத்தியமற்ற ஒன்றே என்பது தெளிவாகும்.

இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் (1961 மக்கட் தொகை கணக்கெடுப்பு) முஸ்லிம்கள் பலதார மணம் புரிகிறார்கள் என்ற பொய்ப்பிரச்சாரத்தை முற்றிலும் அடித்து நொறுக்கியுள்ளது. இந்தப் புள்ளி விவரங்களின்படி பலதாரமணம் ஆதிவாசிகளிடம் அதிக அளவில் உள்ளது (15.25%) அதற்கு அடுத்து பௌத்தர்களும் (7.9%), சமணர்களும் (6.72%) ஹிந்துக்களும் (5.80%) வருகின்றனர். முஸ்லிம்களில் பல தார திருமணம் 5.70% என்ற அளவிலேயே உள்ளது. புனேயில் உள்ள மல்லிகா மிலிட்டரி கோகலே இன்ஸ்டிட்டியூட் நடத்தியுள்ள ஆய்வில் பல தாரமணம் முஸ்லிம்களை விட இந்துக்களிடமே அதிகமுள்ளது என்ற உண்மை தெரியவந்துள்ளது. சில

தீவிரவாத இயக்கங்கள் நாம் இருவர்; நமக்கு இருவர்; அவர்கள் (முஸ்லிம்கள்) ஐவர், அவர்கட்கு 25பேர் என்று பிரச்சாரம் செய்து வருகின்றனர். அதாவது முஸ்லிம்களுக்கு நான்கு மனைவியர்கள் 25 குழந்தைகள் என்று பிரச்சாரம் செய்கின்றனர். இந்தப் பிரச்சாரத்தின் மூலம் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தையே பழிக்கின்றனர்.

1993 ஆம் ஆண்டு அஹமதாபாத் நகரில் செய்யப்பட்ட ஆய்வில், அந்த நகரிலுள்ள முஸ்லிம்களில் 279பேர் மட்டுமே இரு மனைவியரைக் கொண்டிருந்தனர் என்ற உண்மை தெரிய வந்தது. இந்த ஆய்வை வெளியிட்டிருந்த ஹிந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழ் (13.7.2003) முஸ்லிம்கள் பலதார மணம் புரிகிறார்கள் என்று குறை கூறி பிரச்சாரம் செய்யப்பட்ட போதிலும் இந்துக்களிடையேயும் பலதார மணம் உள்ளது என்று கருத்துத் தெரிவித்திருந்தது. அப்போது அஹமதாபத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 29951 நட்புறவு ஒப்பந்தங்கள் (மெய்த்திரிகரார்) பதிவு செய்யப்பட்டிருந்தன. "மெய்த்திரி கரார்" என்பது திருமணமான ஹிந்து ஆண் ஒருவர் திருமண பந்தத்தை முறிக்காமலேயே இன்னொரு பெண்ணுடன் நட்புறவு கொண்டு சேர்ந்து வாழ்வதற்கான ஒப்பந்தமாகும். முதல் மனைவி உயிரோடு இருக்கும் போது இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்யக்கூடாது என்ற இந்து திருமணச் சட்டத்திலிருந்து தப்பிக்கவே இந்த மாதிரியான ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன. அந்த நாளேடு இது பற்றிக் குறிப்பிடுவதாவது:- இது சட்டப்படி நடைமுறைப்படுத்தக் கூடியதல்ல. எனினும் "மெய்த்திரிகரார் முறை" திருமணமான ஒருவனுடன் நட்புறவு வைத்திருக்கும் இன்னொரு பெண்ணுக்கு ஒரு விதமான பாதுகாப்பை அளிக்கிறது.

## தனிச்சட்டம்

முஸ்லிம்களுக்கெனத் தனிச் சிவில் சட்டம் இருப்பது ஒரு சலுகை என்பது போல் சில பிரிவினர் எழுதியும், பேசியும் வருகின்றனர். ஆனாலும் இது போன்ற "சலுகை" இந்தியாவிலுள்ள அனைத்து சமுதாய மக்களுக்கும் வழங்கப் பட்டிருக்கிறது என்ற உண்மையை அவர்கள் மறைத்து

விடுகிறார்கள். இந்துக்களுக்கும், இந்து சமூகத்திலுள்ள வேறு சில பிரிவினருக்கும் இது போன்ற தனிச் சட்டங்கள் உள்ளன. அவை சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்பத்தின் சொத்துக்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ளவும், வரிகள் செலுத்தவும் தனிச்சட்டங்கள் உள்ளன. வடகிழக்கு மாநிலங்களிலுள்ள பல்வேறு இனக் குழுவினர் அவர்களுக்குள் எழும் குடும்பப் பிரச்னைகளை அவர்கள் கடைப்பிடித்து வரும் பாரம்பர்யச் சட்டங்களின் மூலமே தீர்த்துக் கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளனர். கோவா மாநிலம், போர்ச்சுக்கீசிய சட்டங்களைப் பின்பற்றுகிறது. தென் மாநிலங்களில் வசிக்கும் இந்துக்கள், வட மாநில இந்துக்கள் பின்பற்றி வரும் குடும்பச் சட்டங்களுக்கு மாற்றான சட்டங்களைப் பின்பற்றி வருகின்றனர். நிலையான ஒரே மாதிரியான சீர்த்திருத்தம் தேவை எனப்பலரும் கூறி வருகின்றனர். ஆனால் "பொது சிவில் சட்டம்" ஒன்றைக் உடனடியாகக் கொண்டு வந்து அதனை மக்கள் மீது திணிப்பது பிரச்னையை மேலும் சிக்கலாக்கவே துணை செய்யும். இது போன்ற ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டால், முஸ்லிம் களைவிட இந்துக்களே அதிகம் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள்.

## ஹஜ் மானியம்

அரசால் இயக்கப்படும் விமானங்கள் மூலமாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் முஸ்லிம்களுக்கு இந்த மானியம் வழங்கப்படுகிறது. உண்மையில் இந்த மானியம் ஹாஜிகளுக்கு வழங்கப்படுவதில்லை. மாறாக மத்திய அரசு தனது விமான நிறுவனங்களுக்கே இந்த மானியத்தை வழங்குகிறது. அதனையும் படிப்படியாகக் குறைக்க வேண்டுமென உச்சநீதிமன்றம் அண்மையில் உத்தர விட்டுள்ளது. இந்த மானியத்தை முஸ்லிம்களே விரும்ப வில்லை. இஸ்லாமிய சமய மரபுகளின் படியும் இந்த மானியம் ஏற்கத்தக்கதல்ல. இதற்கிடையில் பலமாநில அரசுகள் புனித பயணம் மேற்கொள்ளும் பிற சமய மக்களுக்கும் மானியம் வழங்கத் துவங்கியுள்ளன.

# முஸ்லிம் ஜனத்தொகை உண்மையிலேயே அதிகரித்து வருகின்றதா?

முஸ்லிம்கள் நான்கு பெண்களைத் திருமணம் செய்து கொள்வதால் அவர்களின் மக்கட் தொகை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. விரைவில் அவர்களின் மக்கட் தொகை இந்துக்களின் மக்கட் தொகையை விட அதிகரித்து இந்தியா ஒரு முஸ்லிம் நாடாகிவிடும் என்றும் தவறான பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இன்னும் சிலர் முஸ்லிம்கள் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப் பதில்லை என்றும் தங்களது மக்கட் தொகையை உயர்த்திக் கொள்ளவே பலதார மணம் புரிகிறார்கள் என்றும் பிரச்சாரம் செய்கின்றனர்.

சில தீவிரவாத இயக்கங்கள் வேண்டுமென்றே இது போன்ற பொய்ப் பிரச்சாரத்தில் பல்லாண்டுகளாக ஈடுபட்டு வருகின்றன. முஸ்லிம்களின் மக்கட் தொகை அதிகரித்து விடும் என்ற பய உணர்ச்சியை பெரும்பான்மை சமய மக்களின் மத்தியில் உருவாக்குவதன் மூலம் அரசியல் லாபம் அடைய அவர்கள் முயற்சிக்கின்றனர். அதற்காகவே இது போன்ற உண்மைக்கு மாறான பொய்யும் புனைசுருட்டும் கலந்த பிரச்சாரத்தை மக்களிடையே தொடர்ந்து செய்து வருகின்றனர்.

மக்கட் தொகை கணக்கெடுப்புப் புள்ளி விவரங்கள் இது போன்ற பொய்ப் பிரச்சாரத்தில் எள்ளளவும் உண்மையில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. மக்கட் தொகை கணக்கெடுப்பின் போது "சமயம்" பற்றியும் கணக் கெடுக்கப்படுகிறது. 1971ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி இந்தியாவில் 82.7 சதவிகித இந்துக்களும் 11.2 சதவிகித முஸ்லிம்களும் இருந்தனர். 1991ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி இந்துக்களின் சதவிகிதம் 82.6 முஸ்லிம்களின் சதவிகிதம் 11.4 (மலையாள மனோரமா - 1992) முஸ்லிம்களின் வளர்ச்சி விகிதம் இந்துக்களுடன் ஒப்பிடும் போது சற்று அதிகம் உள்ளது. அதாவது இந்துக்களின் மக்கட்தொகை வளர்ச்சி விகிதம் 2.3 சதவிகிதம் என்ற அளவில் இருக்கும் போது, முஸ்லிம்களின் வளர்ச்சி விகிதம் 2.7 சதவிகிதமாக இருக்கிறது (2001 மக்கட் தொகை

*கணக்கெடுப்பு) ஆனால் இதற்குச் சமூக பொருளாதார மற்றும் கல்வி அறிவின்மை போன்ற அம்சங்களே முக்கியக் காரணங்களாகும். ஒரே மாதிரியான சமூக, பொருளாதார அம்சங்கள் இருக்கும் போது இந்துக்களின் மக்கட் தொகை வளர்ச்சி விகிதமும் முஸ்லிம்களின் மக்கட் தொகை வளர்ச்சி விகிதமும் ஒன்றாகவே இருக்கும். இதற்குக் கேரளா ஒரு மிகச் சிறந்த உதாரணமாகும். கல்வி அறிவு காரணமாக இம் மாநிலத்திலுள்ள இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்துவர்களின் வளர்ச்சி விகிதம் ஒரே சீரான அளவில் உள்ளது. (1.84) இதற்கு மாறாக, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இந்துக்களின் வளர்ச்சி விகிதம் சற்று அதிகமாக உள்ளது. இந்துக்களின் மக்கட் தொகை வளர்ச்சி விகிதம் 3.7 சதவிகிதம் என்ற அளவில் இருக்கும்போது, முஸ்லிம்களின் வளர்ச்சி விகிதம் 2.6 சதவிகிதமாகவே இருக்கிறது.*

*ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, சமய ரீதியான மக்கட்தொகை வளர்ச்சி ஒரே சீராகவே உள்ளது. மேலும் இப்போதுள்ள நிலை தொடரும் என்று வைத்துக் கொண்டாலும் (அப்படி அமைய வாய்ப்பில்லை) இன்னும் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகும் கூட முஸ்லிம்களின் மக்கட் தொகை இந்துக்களின் மக்கட் தொகையை விட அதிகரிக்கும் வாய்ப்பு கிஞ்சிற்றும் இல்லை. மாறாக. 1961–1971 மற்றும் 1971–1981 இடைப்பட்ட இந்த கால கட்டத்தில் நிகழ்ந்த மக்கட் தொகை வளர்ச்சி விகிதத்தை ஆய்வு செய்து பார்த்தால் இந்துக்களின் மக்கட் தொகை 23.71 சதவிகிதத்திலிருந்து 24.4 சதவிகிதம் உயர்ந்து முஸ்லிம்களின் மக்கட் தொகை 30.85 சதவிகிதத்திலிருந்து 30.20 சதவிகிதமாக குறைந்துள்ளது தெரிய வருகிறது. இந்த வளர்ச்சி விகிதம் 1981 ஆம் ஆண்டிலிருந்து அப்படியே நிலைத்து நிற்குமானால், இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையிலான மக்கட் தொகை வளர்ச்சி விகிதம் முறையே 30.71 சதவிகிதமாகவும், 30.55 சதவிகிதமாகவும் இருக்கும். அதாவது இந்துக்களின் வளர்ச்சி விகிதம் சற்று அதிகமாகவே இருக்கும்.*

# முஸ்லிம்களைச் சமாதானப்படுத்துதல் (தாஜா செய்தல்)

நாட்டின் வளத்திலும், பொருளாதாரத்திலும் முஸ்லிம்களுக்குரிய பங்கினைக் காட்டிலும் அதிகம் வழங்கி அவர்களைச் சமாதானப்படுத்தும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளதாக சில தீவிரவாத இயக்கங்களும், சில அரசியல் கட்சிகளும் பிரச்சாரம் செய்து வருகின்றன. இந்தக் கூற்று தவறானது என்பதை முஸ்லிம்களின் கல்வி மற்றும் பொருளாதார நிலைகளைப் பற்றி ஆராய 2005ஆம் ஆண்டு மத்திய அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதி சச்சார் குழுவின் பரிந்துரைகள் நிரூபித்துள்ளன. இந்த அறிக்கை 2006ஆம் ஆண்டு அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. "முஸ்லிம்களைச் சமாதானப்படுத்தும் கொள்கை" என்ற விஷமப் பிரச்சாரத்தைச் செய்து வரும் சில சக்திகளின் வாய்களை அடைக்கும் விதமாக இந்த அறிக்கையில் சில புள்ளி விவரங்கள் காணப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட மற்றும் மலைஜாதி மக்களின் நிலையை விடவும் இந்திய முஸ்லிம்களின் நிலை மோசமாக உள்ளதாக இந்தக் குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது. சில வியப்பூட்டும் புள்ளி விவரங்களை இக்குழு அரசிடம் சமர்ப்பித்துள்ளது. அரசு வேலை வாய்ப்புகளிலும் பிற சமூக பொருளாதார அம்சங்களிலும் முஸ்லிம்கள் தற்போது பெற்றிருக்கும் நிலைதான் அவர்களது சமூக அந்தஸ்தை தீர்மானிக்கும் விஷயமாகும். இந்தியாவில் 15 சதவிகித முஸ்லிம்கள் உள்ளனர். கல்வி, வேலை வாய்ப்புகளில் அவர்களின் பிரதிநிதித்துவம் எப்படியுள்ளது என்பது பற்றி இனி ஆராய்வோம்.

1. இந்திய அரசின் உயர் பதவிகளில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. முதல் பிரிவு (Cl) பதவிகளில் 3.19 சதவிகிதமும், இரண்டாம் பிரிவு (Cl II) பதவிகளில் 4.30 சதவிகிதமும் நான்காம் பிரிவுப் பதவிகளில் 8.16 சதவிகிதமும் முஸ்லிம்கள் உள்ளனர். தனியார் துறைகளில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இதற்கும் குறைவாகவே உள்ளது.

2. அரசுத்துறைகளில் பணிபுரியும் முஸ்லிம்களின் எண்ணிக்கை வெறும் 2.5 சதவிகிதமே. ஆனால் முஸ்லிம் ஜனத்தொகை 15 சதவிகிதமாகும்.

3. IAS ல் முஸ்லிம்கள் 3.0 சதவிகிதமும், IFS ல் 1.8 சதவிகிதமும், இந்திய ரெயில்வே துறையில் 4.5 சதவிகிதமும், காவல் துறையில் 6 சதவிகிதமும், பொது சுகாதாரத்துறையில் 4.4 சதவிகிதமும், போக்குவரத்துத் துறையில் 6.5 சதவிகிதமும் உள்ளனர்.

4. மாநில உயர் நீதி மன்றங்களில் உள்ள 310 நீதிபதிகளில் 14 பேர் மட்டுமே முஸ்லிம்கள் (1.4.1980 நிலவரப்படி)

தொழில் துறையில்:- நாட்டிலுள்ள பெரும் தொழில் நிறுவனங்களில் ஒன்றிரண்டு மட்டுமே முஸ்லிம்களுக்குச் சொந்தமானது. அல்லது அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. 1979 மற்றும் 1980 ஆண்டுகளில் தொழில்கள் துவங்க வழங்கப்பட்டுள்ள உரிமங்களில் (ரூ.3கோடிக்கும் ரூ. 20 கோடிக்கும் இடைப்பட்ட அளவில் துவக்கப்பட்ட நிறுவனங்கள்) முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகக் குறைவே.

1979ல் வழங்கப்பட்ட மொத்த உரிமங்கள் 260. இதில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டவை வெறும் 5 மட்டுமே. அதாவது 1.9சதவிகிதம்.

1980ல் வழங்கப்பட்ட மொத்த உரிமங்கள் 386. இதில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டவை 6. அதாவது 1.5 சதவிகிதம்.

கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிலில் மட்டுமே முஸ்லிம்கள் அதிக அளவில் உள்ளனர். இது சம்பந்தமாக நாடு முழுவதும் 12 மாநிலங்களில் உள்ள 31 மாவட்டங்களில் எடுக்கப்பட்ட ஆய்வின் படி, நாட்டிலுள்ள 12.68 லட்சம் கைவினைஞர்களில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 51.89 சதவிகிதமாகும். ஆனால் சொந்தமாக நிறுவனங்கள் வைத்துள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கை வெறும் 4.4 சதவிகிதமே.

அரசின் நிதி உதவி பெறும் விஷயத்தை எடுத்துக் கொண்டால், கடன் பெற்ற முஸ்லிம்களின் எண்ணிக்கை 4.3 சதவிகிதமாகும். அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை

2.02 சதவிகிதமே. அரசின் அனைத்து நிதி அமைப்புகளும் சேர்ந்து பல்வேறு வட்டி விகிதங்களில் முஸ்லிம்களுக்கு வழங்கிய கடன் தொகை வெறும் 3.76 சதவிகிதம் மட்டுமே.

முஸ்லிம்களின் சராசரி ஆண்டு வருமானம் நாட்டின் சராசரி தேசிய ஆண்டு வருமானமான ரூ.4247 ஐ விட ஐந்து சதவிகிதம் குறைவாகவே உள்ளது.

கல்வியைப் பொறுத்த அளவில், 1987 – 88 திட்டக்குழு அறிக்கையின் படி முஸ்லிம்களில் 42 சதவிகிதம் பேர் கல்வி அறிவு பெற்றுள்ளனர். இது தேசிய சராசரியான 52.11 சதவிகிதத்தைவிடக் குறைவானதாகும். முஸ்லிம் பெண்களைப் பொறுத்த அளவில் 11 சதவிகிதத்தினரே கல்வியறிவு பெற்றுள்ளனர். இது தேசிய சராசரியான 39.42 சதவிகிதத்தை விட மிகக் குறைவானதாகும்.

முஸ்லிம்களின் நிலை பற்றி ஆராய அமைக்கப்பட்ட நீதிபதி சச்சார் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் கவலை தரத்தக்கதாக உள்ளன. முஸ்லிம்களின் தற்போதைய சமூகப் பொருளாதார நிலை, மனித முன்னேற்றக் குறியீட்டுக்கும் கீழேயே உள்ளது. அரசு வேலை வாய்ப்புகளில் அவர்களது பிரதிநிதித்துவம் மிகக் குறைவாக உள்ளது. அவர்களில் பெரும்பான்மையோர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர். கல்வி அறிவற்றவர்களாக உள்ளனர். சாதகமான தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் அவர்களின் நிலை மேலும் மோசமடையும். அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவமும், பெருமளவில் குறைந்து கொண்டே வருகிறது. பாதுகாப்பின்மை மற்றும் சமமாக நடத்தப்படாமை காரணமாக அவர்கள் அஞ்சிய நிலையிலேயே வாழ வேண்டியதுள்ளது. அதன் காரணமாக சிறுபான்மையினர் என்ற அடையாளத்தை உணர்கின்றனர். வகுப்புக் கலவரங்கள் காரணமாக அவர்கள் தனி குடியிருப்புகளில் வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது. இது போன்ற தனிக் குடியிருப்புகளில் வாழ்வதால் அவர்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைகிறது. அவர்கள் மனத்தளவில் பாதிக்கப்பட்டு பிற்போக்கான எண்ணங்கள் தோன்றவும் அதன் காரணமாக பிற சமூகங்களுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்படவும் காரணமாகின்றது.

அதிகாரிகளின் புறக்கணிப்பு காரணமாக இந்திய முஸ்லிம்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். படிப்படியாக நாட்டில் இரண்டு விதமான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒன்று பலமிக்க செல்வாக்குப் பெற்ற பெரும்பான்மை மக்களுக்கென்றும், இன்னொன்று சிறுபான்மை மக்கள் குறிப்பாக முஸ்லிம்களுக்கென்றும் கையாளப்பட்டு வருகின்றன. முஸ்லிம்களை இரண்டாந்தரக் குடிமக்கள் என்ற நிலைக்குத் தள்ள வேண்டும் என்ற சில தீவிரவாத இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் குறிக்கோள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## பாகிஸ்தானும் இந்திய முஸ்லிம்களும்

சில தீவிரவாத இயக்கங்கள், பாகிஸ்தான் முஸ்லிம்களின் புனித நாடு என்று பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றன. உண்மையில் இஸ்லாமிய அடிப்படையில் பார்த்தால் முஸ்லிம்களுக்குப் புனித பூமி என்று எந்த ஒரு நாடும் உலகில் இல்லை. நாடு அல்லது நிலத்திற்கு எந்த விதமான புனிதமும் இஸ்லாத்தில் இல்லை. முஸ்லிம்களின் புனித இடங்களான கஅபா இருக்கும் மக்கா நகர், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பள்ளிவாசல் என்றழைக்கப்படும் மஸ்ஜித் நவபி இருக்கும் மதினா நகர் ஆகியவற்றைப் போல பாகிஸ்தானில் எந்த விதமான சமய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும் இல்லை. உலகிலுள்ள பிற முஸ்லிம் நாடுகளான மலேசியா, இந்தோனிஷியா போல பாகிஸ்தானும் ஒரு முஸ்லிம் நாடு என்பதைத் தவிர அந்நாட்டிற்கு வேறு எந்த முக்கியத்துவமும் இல்லை. (57 வது முஸ்லிம் நாடு). அது போலவே பாகிஸ்தான் நாட்டுக் கொடிக்கும் எந்த சமய முக்கியத்துவமும் இல்லை. இந்திய முஸ்லிம்கள் அதற்கு மரியாதை செலுத்துவதில்லை. அதனை ஏற்றுவதும் இல்லை. அது ஒரு நாட்டின் கொடி அவ்வளவே. ஒரு கிரிக்கெட் போட்டியிலோ அல்லது ஹாக்கி போட்டியிலோ பாகிஸ்தான் வெற்றி பெற்றால், அதனைக் கொண்டாட வேண்டுமென்று எந்த ஒரு

முஸ்லிம் தலைவரும் சொன்னதில்லை. இந்திய முஸ்லிம்கள் சென்று பார்வையிடக் கூடிய எந்த ஒரு புனித இடமும் பாகிஸ்தானில் இல்லை. மாறாக, லாகூரில் உள்ள ஒரு குருத்வாராவிற்கு இந்திய சீக்கியர்கள் ஆண்டு தோறும் சென்று வருகிறார்கள்.

## 786

சிலுவை கிறிஸ்துவர்களின் சின்னமாகும், ஓம் அல்லது சுவஸ்திகா ஹிந்துக்களின் சின்னமாகும். தங்களது சமய அடையாளத்தைக் காட்டிட விரும்பிய சில முஸ்லிம்கள் 786 என்ற எண்ணையும் பிறை-நட்சத்திரத்தையும் பயன் படுத்துகின்றனர். ஆனால் இஸ்லாம் இது போன்ற சின்னங்கள் எதையும் பயன்படுத்தும்படி கூறவில்லை. எந்த ஒரு சின்னத்தையும் அடையாளத்திற்கான அதிகாரப்பூர்வமான சின்னமாகவும் அங்கீகரிக்கவில்லை.

786 என்ற எண் அரபியிலுள்ள "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்" என்ற வாக்கியத்திற்கு பதிலாக பயன்படுத்தப்படுகிறது. இது திருக்குர்ஆனில் ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்தில் வருகின்ற ஒரு சிறு பிரார்த்தனை வசனமாகும். ஒரு முஸ்லிம் எந்த ஒரு செயலலைச் செய்வதாக இருந்தாலும் "அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்பெயரால்" என்ற பொருள்படும் இந்த வசனத்தை ஓதியே துவக்க வேண்டும். அரபு மொழியின் ஒவ்வொரு எழுத்திற்கும் ஒரு எண் மதிப்பு கொடுப்பது அரபுகளின் வழக்கமாகும். இதற்கு "அப்ஜத்" கணக்கீட்டு முறை என்று பெயர். பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்ற வார்த்தைகளின் எண் மதிப்பின் கூட்டுத் தொகை 786 ஆகும். எனவே இந்த வசனத்தை முழுவதுமாக எழுதுவதற்குப் பதிலாக சிலர் கடிதங்கள் எழுதும் போதும் அல்லது ஏதாவது ஒரு செய்தியை எழுத்துப் பூர்வமாக பதிவு செய்யும் போதும் "786" என்று எழுதி ஆரம்பிக்கின்றனர். இதற்கு இஸ்லாத்தில் எந்த விதமான சமய அனுமதியும் இல்லை. இது அரபிய இலக்கியத்தில் நிலவிய

ஒரு இந்திய மரபேயாகும். எனவே இதற்கு எந்த விதமான சமய முக்கியத்துவமும் அளிக்கத்தேவையில்லை.

சில மூடப்பழக்க வழக்கங்கள் நவீன முறையில் கடைப்பிடிக்கப்படுகின்றன. அதுபோலவே 786ம் நவீன வழி முறைகளில் கடைப்பிடிக்கப்படுகின்றது. சில முஸ்லிம் செல்வந்தர்கள் தங்கள் கார்களின் பதிவு எண்களின் கடைசி மூன்று இலக்கங்கள் 786 என்று முடியும்படி பார்த்துக் கொள்கிறார்கள். சிலர் தங்களது கைபேசி எண்களின் கடைசி இலக்கங்களும் அவ்வாறு இருக்கும்படி பார்த்துக் கொள்கிறார்கள். இதற்காக அதிகப் பணம் செலவழிக்கவும் அவர்கள் தயாராக உள்ளனர். இன்னும் சிலர் மிக எளிதாக நினைவில் வைத்துக் கொள்ள முடியும் என்பதற்காகவும், மற்றவர்கட்குச் சொல்ல எளிதாக இருக்கும் என்பதற்காகவும் அந்த எண்களை விரும்புகிறார்கள். சினிமா உலகம் கூட இந்த எண்களின் உணர்வு பூர்வமான முக்கியத்துவத்தை அறிந்து அதனைப் பயன்படுத்துகின்றது. பாலிவுட் திரைப்படம் ஒன்றில் நடிகர் ஷாருக்கான் "லாகூர் சிறை கைதி எண் 786" என்ற பாத்திரத்தில் நடித்துள்ளார்.

# பிறையும், நட்சத்திரமும்

இஸ்லாமிய நாட்காட்டி (காலண்டர்) சந்திரனை அடிப்படையாகக் கொண்டதாகும். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதினாவிற்குச் சென்ற நாளிலிருந்து இஸ்லாமிய ஆண்டான ஹிஜ்ரி கணக்கிடப்படுகிறது. இஸ்லாமியப் பேரரசின் இரண்டாவது கலீபாவான ஹழ்ரத் உமர்(ரலி) அவர்களின் ஆட்சியின் போது இந்த சந்திரனை அடிப்படையாகக் கொண்ட ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டது. முக்கிய சமய நிகழ்வுகளான ஹஜ், ரம்ஜான், நோன்பு, நோன்புப் பெருநாள் (ஈதுல் பித்ரு) ஹஜ்ஜுப் பெருநாள் (ஈதுல் அஹ்ஸா) போன்றவை சந்திரனை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன. பிறை வானில் தோன்றும் நாளே இஸ்லாமிய மாதத்தின் முதல் நாள் என்பதால் பிறை காணப்படுவது மிகவும் முக்கியமானதாகும். ஆசியா மற்றும் ஆப்ரிக்கா கண்டத்தின் பெரும் பகுதிகளை தன்னகத்தே கொண்டிருந்த துருக்கி உதுமானியப் பேரரசின் கலிபாக்கள் பிறையையும், நட்சத்திரத்தையும் அடையா ளமாகக் கொண்டதோடு, அவற்றை தங்களது தேசக் கொடியிலும் பதித்திருந்தனர். அதிலிருந்து முஸ்லிம்கள் உதுமானியப் பேரரசின் கொடியை ஏற்றுக்கொண்டனர். இந்த மரபுகளைப் பின்பற்றியே பல முஸ்லிம் நாடுகள் தத்தமது தேசியச் சின்னமாக பிறைறையும், நட்சத்திரத்தையும் ஏற்றுக் கொண்டன. இதற்கு எந்த விதமான சமய முக்கியத்துவமும் இல்லை.

## விஷமப் பிரச்சாரம்

பாகிஸ்தான் நாட்டுக் கொடியில், பிறையும், நட்சத்திரமும் இருப்பதைச் சுட்டிக் காட்டி, சில வலதுசாரி இந்துத்துவ அமைப்புகள் மக்களைக் குழப்ப முயலுகின்றன.

பிறையும், நட்சத்திரமும் கொண்ட கொடிகள் முஸ்லிம்களின் சின்னமாகும். தர்காக்களிலும், அடக்கஸ்தலங்களிலும் இந்த கொடிகள் பறப்பதைக் காணலாம். பாகிஸ்தான் கொடியின் வலது பக்கத்தில் உள்ள வெள்ளை நிறப் பகுதி கொடியின் கால் பகுதியை உள்ளடக்கியதாக இருக்கிறது.

## பாகிஸ்தான் கொடி

மரபு ரீதியிலான பிறையும் நட்சத்திரமும் கொண்ட முஸ்லிம்களின் கொடியை, பாகிஸ்தான் கொடி என்று கூறி சில வலது சாரி இந்துத்துவ அமைப்புகள் முஸ்லிம்கள் மீது குற்றம் சுமத்தி வருகின்றன. ஆனால் இந்த வகுப்புவாத அமைப்புகளே, வகுப்புக் கலவரங்களை உருவாக்க வேண்டு மென்பதற்காக அரசு அலுவலகங்களில் பாகிஸ்தான் கொடியை ஏற்றி விஷமச் செயலில் ஈடுபடுகின்றன. இது சம்பந்தமாக கர்நாடக மாநிலம் பெல்காம் மாவட்டத்திலுள்ள சிண்டகி என்ற ஊரில் ஆறு "ராமசேனா" ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர் (ஆதாரம் ஹிந்து 11.1.2012).

இராமசேனாவைச் சார்ந்த இளைஞர்களே, பாகிஸ்தான் கொடியை அங்குள்ள தாசில்தார் அலுவலகத்தில் ஏற்றி பழியை முஸ்லிம் சமூகத்தின் மேல் போட்டனர். வகுப்புவாதிகள் இது போன்ற செயல்களில் ஈடுபட்டுப் பிடிபடுவார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

## விரும்பத்தகாத இறைச்சி

வகுப்பு மோதல்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், 2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் நாள் ஹைதராபாத் நகரிலுள்ள பல இந்துக் கோவில்களில் மாட்டிறைச்சியை வீசியதாக நான்கு இந்து இளைஞர்கள் பிடிபட்டனர். காவல்துறையினர் மிகவும் விறுவிறுப்புடன் செயல்பட்டு சம்பவம் நடைபெற்ற ஒரு வாரத்திற்குள் இந்துக் கோவில்களின் புனிதத்தன்மைக்கு ஊறு விளைவித்ததாக இந்த இளைஞர்களைக் கைது செய்தனர்.

மக்கள் மதச் சின்னங்களுடனோ அல்லது அவற்றின் புனிதத்தைக் கெடுப்பதிலோ அளவுக்கதிகமான வெறியுணர்வு கொண்டிருக்கக் கூடாது என்பதையே இது போன்ற சம்பவங்கள் காட்டுகின்றன. பன்முக ஜனநாயக ஆட்சி முறையைக் கொண்டுள்ள இந்தியா போன்ற ஒரு நாட்டில் உணர்வுகளைத் தூண்டிவிட்டு சமுதாயத்தில் குழப்பம் ஏற்படுத்த முயலும் விஷமிகளுக்குப் பஞ்சமில்லை. தீவிரவாத அமைப்புகள் கோபமூட்டும் செயல்களில் ஈடுபடும் முகவர்களை நியமித்து உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு மக்களை சமய இன அடிப்படையில் திரளச் செய்து அதன் மூலம் தேர்தல்களில் இலாபம் அடைய முயற்சிக்கின்றனர். மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு சம்பவங்களிலும் வலது சாரி இந்துத்துவா சக்திகள் தாமாகவே ஆட்சேபகரமான செயல்களில் ஈடுபட்டு பழியை முஸ்லிம்களின் மீது போட்டுள்ளனர். முஸ்லிம்கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதில்லை. அப்படி ஈடுபடுவார்கள் என்று கற்பனை கூடச் செய்ய முடியாது.

தங்களது பழைய யுக்திகள் தற்போது செல்லுபடி யாவதில்லை என்ற சலிப்பும் இந்த வலது சாரி தீவிரவாத இயக்கங்களிடம் தோன்றியுள்ளது. அயோத்தியா பிரச்னை ஓய்ந்து விட்ட காரணத்தால் வேறு ஏதாவது ஒரு பிரச்னையைக் கிளப்பி வகுப்பு உணர்வைத் தூண்டிவிட்டு தங்களது வாக்கு வங்கியை ஒரு முகப்படுத்த இவை முயற்சிக்கின்றன. பொதுமக்கள் (முஸ்லிம்கள், இந்துக்கள்) இது போன்ற விஷயங்களில் பெரிதும் பொறுமை காத்திட வேண்டும். நிதானத்தை இழந்து விடக்கூடாது. மக்கள் விழிப்பாக இருந்து சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கும் அமைப்புகளும் நடுநிலையோடு செயல்பட்டால் நாட்டைச் சீர்குலைக்க நினைக்கும் இதுபோன்ற விஷமத்தனமான செயல்களில் ஈடுபடுவோரின் திட்டங்கள் முறியடிக்கப்படும் என்பது உறுதி.

## காதல் ஜிகாத்

கர்நாடக மாநிலத்தில் பி.ஜே.பி ஐந்து ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அங்கு ஒரு விஷமத்தனமான

பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. அதாவது சில முஸ்லிம் அமைப்புகள் இந்துப் பெண்களைக் காதலிக்கும்படி முஸ்லிம் இளைஞர்களைத் தூண்டி அதன் மூலம் அப்பெண்களை இஸ்லாமிய சமயத்திற்கு மாற்றும் முயற்சியில் ஈடுபடுகின்றன என்பதே அப்பிரச்சாரமாகும். இந்த விஷயம் சில வாரங்களாக பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக வெளியிடப்பட்டன. கர்நாடகா மற்றும் கேரள சட்டமன்றங்களிலும் இப் பிரச்னை எழுப்பப்பட்டது. ஆனால் கர்நாடக அரசு இது பற்றி மேற் கொண்ட போலீஸ் விசாரணையில் இந்தப் பிரச்சாரத்தில் உண்மை எதுவுமில்லை எனக் கண்டறியப்பட்டது. இது போன்ற தவறான பிரச்சாரம் அம்மாநிலத்தின் கடற்கரை மாவட்டங்களில் சில வகுப்புவாத சக்திகளால் திட்டமிட்டு செய்யப்பட்டன. இந்த விஷயம் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வருவதற்கு முன்னர் பொது இடங்களிலும் பயணத்தின் போதும் இந்துப் பெண்களுடன் பேசிய முஸ்லிம் இளைஞர்கள் "கண்காணிப்புக்குழுக்கள்" என்று சொல்லப்பட்ட இந்து அமைப்புகளால் தாக்கப்பட்டனர்.

இதுபோன்ற விஷயங்களை இந்து அமைப்புகள் கையிலெடுப்பதற்கு அரசியல் ரீதியிலான சில காரணங்களும் இருந்தன. சில தீவிரவாத இந்து அமைப்புகள், இந்துக்களைப் பாதுகாப்பதற்காகவும் முஸ்லிம் இளைஞர்கள் மீது காதல் வயப்படும் இந்து பெண்களை பாதுகாப்பதற்காகவும் நாங்கள் இருக்கிறோம் என்று அறிவித்தன. பெண்கள் சமூகக் கௌரவத்தின் அடையாளம், அவர்கள் சமுதாய அமைப் பிலிருந்து வெளியே செல்வது தங்களது சமூகத்திற்கு அவமானம் விளைவிக்கும் என்ற எண்ணமும் அந்த அமைப்புகளிடம் இருந்தது.

இந்த வலதுசாரி அமைப்புகளின் பிரச்சாரத்தில் ஆரம்பத்திலிருந்தே எந்த விதமான உண்மையும் இல்லை. முதன் முதலில் இந்தக் குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்ட போது, கர்நாடக மாநில உயர்நீதிமன்றம் விசாரணைக்கு உத்தரவிட்டது. இதனை விசாரித்த காவல் துறையின் உயர் அதிகாரி (டி.ஜி. ரேங் ஆபிசர்) முஸ்லிம் இளைஞர்கள் இந்துப் பெண்களை ஆசை வார்த்தை காட்டி காதல் வலையில் விழவைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டில் உண்மையில்லை என்றும் அதே நேரத்தில் சாதி மறுப்புத் திருமணங்கள்

அவ்வப்போது நடைபெறுவது உண்மை தான் என்றும் எனினும் அத் திருமணங்களில் எந்த விதமான வற்புறுத்தலும் இல்லை என்றும் உயர்நீதி மன்றத்தில் அறிக்கை அளித்தது. இன்னொரு அறிக்கை "காதல் ஜிகாத்" என்ற ஒரு முறையே இல்லையென்றும், இது போன்ற செயல்களில் திட்டமிட்ட முறையில் எந்த அமைப்பும் ஈடுபடவில்லையென்றும், ஆனால் அதே நேரத்தில் முஸ்லிம்களைத் திருமணம் செய்து கொண்டுள்ள பிற சமயப் பெண்கள் தங்களது கணவன் மார்களின் சமயமான இஸ்லாத்திற்கு மாறி விட வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் கூறியது. இது விஷயத்தில் அமைப்பு ரீதியில் எந்த விதமான முயற்சியும் இல்லை யென்றும், கட்டாய சமய மாற்றம் இல்லையென்றும் அறிக்கை வெளி வந்த பிறகு பத்திரிகை செய்திகள் பிசுபிசுத்துப் போயின. இதற்குப் பிறகும் கூட "கண்காணிப்புக் குழு"க்கள் முஸ்லிம்களுக்கு எதிரான தங்களது பொய்ப் பிரச்சாரத்தை நிறுத்திடவில்லை.

"காதல் ஜிகாத்" என்ற முறை இருப்பதாகக் கூறுவது பொது அறிவுக்கோ, நியாயத்திற்கோ ஏற்புடையதாக இல்லை "ஜிகாத்"தை ஆண்கள்-பெண்களுக்கிடையே காதல் உணர்ச்சியை ஏற்படுத்திட(ப் பயன்டுத்த)முடியாது. ஏனெனில் காதல் இயல்பாக வரக்கூடியது. இயற்கையானது. அதற்கு கிரியோ ஊக்கிகளோ அல்லது வெளிப்புற தூண்டுதல்களோ தேவையில்லை. அதனை இட்டுக்கட்டிச் செய்ய முடியாது நாடகமாடவும் முடியாது. அது உள்ளங்களில் பூக்கிறது. பரஸ்பரத் தொடர்புகள் மூலம் வளர்ச்சியடைகிறது. இது போன்ற சூழ்நிலைகளில் எந்த விதமான வற்புறுத்தலும் அதில் இருக்க முடியாது என்பதே யதார்த்த நிலையாகும்.

# வந்தே மாதரம் பாடல் தேசியமா? அரசியலா?

இந்தப் பாடலுக்கு ஒரு சர்ச்சைக்குரிய வரலாறு உண்டு. இது பக்கிம் சந்திர சாட்டர்ஜி என்ற வங்காளக் கவிஞரால் இயற்றப்பட்டு பின்னர் அவர் எழுதிய "ஆனந்த மடம்" என்ற நாவலில் சேர்க்கப்பட்டது. இந்த நாவல் முழுவதும் "முஸ்லிம்கள் வெறுப்பு" நிரம்பியுள்ளது. இந்தப் பாடல் நாட்டின் ஒரு பகுதி மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள நிலையில், முஸ்லிம்கள் இதற்கு ஆரம்பம் முதலே எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளனர். நாட்டை துர்க்கா தேவியுடன் ஒப்பிட்டுப் பல வரிகள் இந்தப் பாடலில் இடம் பெற்றுள் ளதால் முஸ்லிம்கள் அதனை ஏற்கவில்லை. இஸ்லாம் ஓரிறைக் கொள்கை கொண்ட சமயமாக இருப்பதால் அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த கடவுளையும் அது அங்கீகரிப் பதில்லை. அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்கிட இஸ்லாம் அனுமதிப்பதில்லை. ஆனால் வலது சாரி தீவிரவாதிகள் முஸ்லிம்களின் எதிர்ப்பினை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு இந்தப்பாடலைப் பாடாதவர்கள் "தேச விரோதிகள்" எனச் சித்தரிக்க முயல்கின்றனர்.

முஸ்லிம்கள் தேசியஉணர்வும், நாட்டுப் பற்றும் மிகக் கொண்டவர்கள். ஆனால் அதற்காக நாட்டை வணங்குவதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நாட்டின் பால் பற்றுக் கொள்வதற்கும் நாட்டை வணங்குவதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அவர்கள் உணர்ந்தேயுள்ளனர். சவூதி அரேபியாவிலோ, அல்லது ஈரானிலோ நாட்டை வணங்கும் படி அங்குள்ள மக்களை அரசு வேண்டுவதில்லை. நாட்டை நேசிப்பதாகக் கூறிக்கொண்டு அதனை கடவுளின் தகுதிக்கு உயர்த்தக்கூடாது.

ரவீந்திரநாத் தாகூர் எழுதிய "ஜன கண மன" நமது நாட்டின் தேசியப் பாடலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குக் காரணம், அது நமது நாட்டின் பன்முகத் தன்மையையும் வேற்றுமையில் ஒற்றுமையைப் போற்றும் வரிகளைக் கொண்டிருப்பதுமே காரணமாகும். வந்தே மாதரம் பாடலில் உள்ள முதல் இரண்டு பத்திகள் மட்டுமே நாட்டைப் பற்றியுள்ளது. அடுத்து வரும் பகுதிகள் "தாய் நாடு இந்துக் கடவுள்களுக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது"

"வந்தே மாதரம்" பாடல் விஷயத்தில் வகுப்பு வெறியைத் தூண்டிட முயற்சிக்கும் வலதுசாரித் தீவிரவாதிகள் அதே நேரத்தில் தேசியப்பாடலான "ஜன கண மன" வை குறை கூறிப் பேசி வருகின்றனர். அப் பாடல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இந்தியாவுக்கு வருகை தந்த போது அவரை வாழ்த்திப் புனையப்பட்ட பாடல் என்று கூறுகின்றனர். நோபல் பரிசு பெற்ற, ஏகாதிபத்திய எதிர்ப்பு மனப்பான்மை கொண்ட மாபெரும் கவிஞரான ரவீந்திரநாத் தாகூரின் பெருமையைச் சீர்குலைக்கச் செய்யும் முயற்சியே இது.

நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ், தான் நிறுவிய "சுதந்திர இந்தியாவின்" தேசியப் பாடலாக "ஜன கண மன" பாடலையே ஏற்றுக் கொண்டார். மகாத்மா காந்திஜியும் "ஜன கண மன" பாடலில் நமது தேசிய கலாச்சாரத்தின் பண்புக் கூறுகள் இருப்பதாகக் கருதினார். இந்த ஒரு காரணத்திற் காகவே சில தீவிரவாத சக்திகள் "ஜன கண மன" வை நீக்கிவிட்டு "வந்தே மாதரம்" பாடலை நாட்டுப்பாடலாக ஆக்க வேண்டுமென்று கோரி வருகிறார்கள்.

"ஜன கண மன" வைக் கீழ்மைப்படுத்தும் சில சக்திகளின் முயற்சிகளோடு ஒப்பிடும்போது "வந்ததே மாதரம்" பாடலுக்கு முஸ்லிம்கள் தெரிவிக்கும் எதிர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றுதான். வலதுசாரி தீவிரவாதிகளின் இந்தப் போக்கிற்கு அவர்களது வகுப்புவாத கொள்கையே காரணமாகும். நாட்டிற்கு மரியாதை செலுத்தி அதன் சிறப்புகளைக் கொண்டாட ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு வாய்ப்புகள் வழங்காமல் அதனை நெருக்கடிக்கு உள்ளாக்குவதே அவர்களின் முக்கிய நோக்கமாகும். இந்திய உச்ச நீதிமன்றமும் இது சம்பந்தமான தீர்ப்பு ஒன்றை சில ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கியது.

கேரள மாநிலத்தில் "ஜெகாவோ நம்பிக்கையாளர்கள்" என்ற கிறிஸ்தவப் பிரிவைச் சார்ந்த மாணவர்கள் தங்களது சமய நம்பிக்கை தடுக்கிறது என்று காரணம் காட்டி நாட்டுப் பாடலைப் பள்ளிக்கூடத்தில் பாட மறுத்தபோது, பள்ளி நிர்வாகம் அம்மாணவர்களை பள்ளியிலிருந்து நீக்கியது. தாங்கள் நீக்கப்பட்டதை எதிர்த்து அம் மாணவர்கள் தொடுத்த வழக்கினை விசாரித்த உச்ச நீதி மன்றம், ஒரு சமயச்சார்பற்ற நீதி மன்றம் ஒரு குறிப்பிட்ட சாராரின் சமய நம்பிக்கைகள் தவறா சரியா என்பதைப் பற்றி விசாரிக்க முடியாது என்றும், சமூகத்தின் குறிப்பிட்ட ஒரு சாராரின் நம்பிக்கை மெய்த்தன்மை கொண்டதாகவும், நேர்மையானதாகவும் இருந்து, அந்த நம்பிக்கை பொது அமைதிக்கோ அல்லது நெறிகளுக்கோ முரணாக இல்லாத பட்டசத்தில் அதில் குற்றம் எதுவும் இல்லை என்று தீர்ப்பளித்தது. பள்ளிக்கூடத்திலிருந்து மாணவர்களை நிர்வாகம் நீக்கியது இந்திய அரசியல் சட்டத்தின் 25வது பிரிவு வழங்கியுள்ள சமயச் சுதந்திரத்திற்கு எதிரானது என்று தீர்ப்பளித்தது. இதன் காரணமாக நீக்கப்பட்ட மாணவர்கள் மீண்டும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

நீதிபதி சின்னப்பரெட்டி வழங்கிய இந்தத் தீர்ப்பு பற்றி புகழ் பெற்ற வழக்கறிஞர் சோலி ஜோராப்ஜி கருத்துத் தெரிவிக்கையில் நமது மரபுகள் சகிப்புத்தன்மையைப் போதிக்கின்றன. நமது தத்துவம் சகிப்புத்தன்மையைப் போதிக்கின்றது. நமது அரசியல் சட்டமும் சகிப்புத்தன்மையை வலியுறுத்துகிறது. எனவே நாம் அதனை நீர்த்துப்போகச் செய்திட வேண்டாம். என்று குறிப்பிட்டார்.

# திப்பு சுல்தான் ஒரு தேச பக்தர் தூற்றப்படுகிறார்

கி.பி.18ஆம் நூற்றாண்டில் மைசூரை ஆட்சி புரிந்த திப்பு சுல்தானை இழிவு படுத்திட சில நடுநிலை தவறிய வரலாற்று ஆசிரியர்கள் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். அவர் கொடுங்கோல் மன்னராகவும், ஒரு வெறிபிடித்த முஸ்லிமாகவும் சித்தரிக்கப்படுகிறார். ஆங்கில காலனி ஆதிக்க ஆட்சியாளருக்கு துணை நின்ற காரணத்திற்காக திப்புவால் தண்டிக்கப்பட்ட சிலர் இந்த அவதூறுப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டனர்.

இந்தியாவில் நடைபெற்ற முஸ்லிம்களின் ஆட்சியை எதிர்மறைக் கண்ணோட்டத்தில் பார்த்திடும் சில வரலாற்று ஆசிரியர்களும் இந்த அவதூறுப் பிரச்சாரத்தில் பங்கு பெறுகின்றனர். தங்களது அரசியல் எதிரிகளுக்கு எதிரான அவர்களது இயற்கையான வெறுப்பு காரணமாக வரலாற்றின் குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தை வகுப்புவாத மயமாக்கு வதற்கும், முஸ்லிமல்லாத மக்களையும், அரசுகளையும் பாதிக்கப்பட்டவர்கள் போல சித்தரிக்கவும் அவர்கள் முயற்சிக்கின்றனர். ஆங்கில காலனி ஆதிக்க ஆட்சியாளர்கள் பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடித்து தங்களது ஆதிக்கத்தை நீடித்துக் கொள்ள இது போன்ற முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து வந்துள்ளனர்.

திப்பு சுல்தானும் அவரது தந்தை ஹைதர் அலியும் இம் முயற்சிகளுக்குப் பலியாகியுள்ளனர். இந்த இரு சக்தி வாய்ந்த எதிரிகள் பால் ஆங்கிலேயர்கள் பெரும் விரோதம் கொண்டிருந்தனர். ஏனெனில் முதல் மைசூர் போரில் (1767) இவர்கள் ஆங்கிலேயப் படைகளை சென்னையிலுள்ள ஜெயின்ட் ஜார்ஜ் கோட்டை வரை விரட்டிச் சென்றனர். ஒரு

துரோக ஒப்பந்தம் மட்டும் செய்யப்படாமல் இருந்திருந்தால், தென்னிந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் அப்போதே முடிவுக்கு வந்திருக்கும். இது போன்ற சில பின்னடைவுகள், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தங்களது வெறுப்புப் பிரச்சாரத்தை மிகுந்த உத்வேகத்துடன் செய்திட ஊக்குவித்தன. இந்து சமய மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் நாட்டை ஆண்ட ஒரு முஸ்லிம் மன்னர் அந்நாட்டின் குடிமக்களால் வெறுக்கப்படவும் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் முயற்சிகள் மேற்கொண்டனர். 18ஆம் நூற்றாண்டில் இந்த முயற்சிகள் உடனடியாக வெற்றி பெறவில்லையாயினும் இந்த வகுப்புவாத வரலாறு அடுத்து வந்த நூற்றாண்டுகளில் மிகுந்த உத்வேகம் அடைந்தது. 1980களில் சில காவி வரலாற்று ஆசிரியர்கள் கொண்ட சிறு குழு ஒன்று உருவாகி சில குறிப்பிட்ட மன்னர்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இவர்களின் ஒருசார்பான வரலாற்றுச் செய்திகள் பள்ளிப்பாடப் புத்தகங்களிலும் ஊடகங்களிலும் வெளியிடப்பட்டன. இந்நிலையில் திப்புசுல்தானைப் பற்றி கடந்த இருபது ஆண்டுகளாக இவர்கள் நடத்தி வருகின்ற முயற்சிகள் வெற்றியடைந்துள்ளதில் வியப்பொன்றுமில்லை.

இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபட்டவர்களில் ஒருவராக திப்பு சுல்தானைச் சேர்ப்பதற்கு சில எதிர்ப்புக் குரல்கள் கிளம்பியுள்ளதைப் பார்க்க விநோதமாக உள்ளது. தீபகற்ப இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களை வெளியேற்று வதற்காகப் போராடியவர்களில் திப்பு சுல்தான் மிகவும் முக்கியமானவர். அதற்காகத் தனது உயிரையே தியாகம் செய்தவர். அதுமட்டுமல்ல கி.பி.1793ல் நடைபெற்ற மூன்றாவது மைசூர் போரில் ஆங்கிலேயர்கள் கை ஓங்கியதன் காரணமாக அவர்களுடன் ஏற்பட்ட உடன் படிக்கையின் அடிப்படையில் செலுத்த வேண்டிய அபராதத் தொகையான 2.30 கோடி ரூபாயைச் செலுத்தும்வரை தனது இரண்டு மகன்களையே அவர் பிணையாகக் கொடுக்கவும் இணங்கினார். ஆங்கிலேயர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையை இரண்டு தவணைகளில் செலுத்திய பின்னரே சென்னையில் சிறை வைக்கப்பட்டிருந்த தனது மகன்களை மீட்டார். இவ்வளவு பெரிய தொகையை நஷ்டஈடாகச்

*செலுத்திய மன்னருக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழாமல் இருந்தது, அவர்பால் அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தையே காட்டுகிறது.*

*திப்பு சுல்தான் இஸ்லாமிய மரபுகளைப் பேணுவதில் கவனமாக இருந்தார் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. அவரது அரசாங்கம் "இறைவன் அளித்தஅரசாங்கம்" (சுல்தானேட் குதாதத்) என்றே அழைக்கப்பட்டது. ஆனால் அதே நேரத்தில், அனைத்து சமய மக்களும் நல்லிணக்கத்துடன் வாழவேண்டும் என்பதிலும் அவர் பெரும் நம்பிக்கை கொண்டவராக இருந்தார். தமது நாட்டின் குடிமக்கள் இந்துக்களாக இருந்தாலும் சரி, முஸ்லிம்களாக இருந்தாலும் சரி அனைவரின் நல் வாழ்விற்காகவும் பாடுபட்டார். பள்ளிவாசல், கோவில் என்று அவர் பாகுபடுத்திப் பார்த்ததில்லை. தன்னுடைய ஆட்சி நிர்வாகத்தில் பல இந்துக்களை நியமித்ததோடு, அரசவையின் மிக உயர்ந்த பதவிகளிலும் இந்துக்களை நியமித்திருந்தார். பூர்ணய்யா என்பவரைத் திவானாகவும் (மீர் ஆசப்)கிருஷ்ணராவ் என்பவரை நிதி மந்திரியாகவும் நியமித்திருந்தார். ஷாமா ராவ் என்பவரை தபால் மற்றும் காவல் துறை அமைச்சராகவும், சீனிவாசராவ், அப்பாஜி ராவ், மூல்சந்த் ஆகியோரை தனது அரசின் தூதுவர்களாக முறையே சென்னை, பூனா, டெல்லி ஆகிய இடங்களில் நியமித்தார். அவரது தனி உதவியாளராக சுப்பாராவ் என்பவரும், அவரது நம்பிக்கைக்குரியவர்களாக நாயக்ராவ், நாயக் சங்கானா ஆகியோரும், அவரது முன்சியாக (கணக்காயர்) நார்ணையா என்பவரும் நியமிக்கப் பட்டிருந்தனர். கூர்க் பகுதி தளபதியாக நாகப்பையாவும், இராணுவத்தின் ஒரு பிரிவின் தளபதியாக ஹரிசிங்கும் நியமிக்கப்பட்டிருந்தனர். 3000 குதிரைகளைக் கொண்டிருந்த குதிரைப் படையின் தளபதியாக சிவாஜி நியமிக்கப் பட்டிருந்தார். இந்து சமய நம்பிக்கையளர்களை அடக்கி ஒடுக்கியவராக திப்பு சுல்தான் இருந்திருந்தால் அதே சமயத்தைச் சார்ந்த பலரை அரசின் மிக முக்கியப் பதவிகளில் எங்ஙனம் நியமனம் செய்திருப்பார். சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?*

*கோவில்களுக்குத் திப்பு வழங்கிய நன்கொடைகள் ஏராளம். ஆனால் இந்தச் சிறிய கட்டுரையில் அதனைப்*

பட்டியலிட இயலாது. தன்னுயை சமயச் சார்பற்ற தன்மையை வெளிப்படுத்துவதற்காக திப்பு சுல்தான் இவைகளைச் செய்யவில்லை. ஏனெனில் அது போன்ற ஒரு கருத்துருவாக்கம் அன்றைய காலகட்டத்தில் உருவாகவில்லை. தங்களுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்த குடிமக்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பது, சமய ஆட்சியாளர்களின் கடமையாக இருந்தது.

ஆங்கிலேயர்கட்குத் துணை நின்றவர்கள், ஆங்கிலேய காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாக இருக்க உறுதி பூண்டவர்கள் என்ற முறையில் நண்பர்களையும், எதிரிகளையும் அடையாளம் கண்டிட நடைபெற்ற அரசியல் போராட்டத்தின் தெளிவான நிலையினைப் படம் பிடித்துக் காட்டிட இந்த தெளிவற்ற வரலாற்றாசிரியர்கள் தவறி விட்டனர். ஆங்கிலேயர்களின் எடுபிடிகளாக இருந்த காரணத்தால் தான் கூர்க்கர்களையும், கேரளாவிலுள்ள நாயர்களையும், முஸ்லிம்களான கர்நாடக நவாபுகளையும் திப்புசுல்தான் போரிட்டு அடக்கினார்.

ஔரங்கசீப்பும் திப்புசுல்தானும் என்ற நூலில் டாக்டர் பி.என்.பாண்டே எழுதியிருப்பதாவது:- அவர் (திப்பு சுல்தான்) கூர்க்கிலிருந்த இந்துக்களையும், மங்களூரிலிருந்த கிறிஸ்தவர்களையும், மலபாரிலிருந்த நாயர்களையும் அடக்கி ஒடுக்கியதற்கு அவர்கள் ஆங்கிலேயர்களுடன் சேர்ந்து கொண்டு திப்புவின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டதே காரணமாகும். இத்தகைய போக்குகள் எங்கெல்லாம் இருப்பதாகச் சந்தேகித்தாரோ அங்கெல்லாம் அவர் போரிட்டுள்ளார். இந்த விஷயத்தில் அவர் மலபார் மாப்பிள்ளைமார்கள், மகாதேவி முஸ்லிம்கள் சாவனூர் நவாபுகள், நிஜாம் என யாரையும் விட்டு வைக்கவில்லை.

எனவே திப்புசுல்தானை ஒரு சமய தீவிரவாதி என்று அழைப்பது மிகவும் தவறான கருத்தாகும். ஆங்கிலேயர் களுடன் சேர்ந்து கொண்டு தனது அரசைக் கவிழ்த்திட முயற்சித் தவர்களையே அவர் அடக்கி ஒடுக்கினார். எனவே அது அரசியல் ரீதியானது. சமய ரீதியானதல்ல. அப்படி இருந்தி ருந்தால் மகாத்மா காந்திஜி திப்புசுல்தானை "இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் சின்னம்" என்று புகழ்ந்து கூறியிருக்கமாட்டார்.

திப்புவின் ஆட்சியின் போது கூர்க் பகுதியிலுள்ள இந்து மக்கள் தற்கொலை செய்து கொண்டதாக ஒரு கெஜட்டை ஆதாரமாகக் காட்டி கூறப்பட்ட வரலாற்றுத் திரிபுகளை ஒரிஸா மாநில ஆளுநராக இருந்த பி.என் பாண்டே அம்பலப்படுத்தியுள்ளார்.

திப்பு சுல்தான் கட்டாய மதமாற்றத்தில் ஈடுபட்ட காரணத்தால் 3000 பிராமணர்கள் தற்கொலை செய்து கொண்டனர் என்ற தகவல் அலகாபாத்திலுள்ள ஆங்கிலோ பெங்காலி கல்லூரியின் வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள செய்தி டாக்டர் பாண்டேவின் கவனத்திற்கு வந்தது. அந்த வரலாற்றுப் புத்தகத்தின் ஆசிரியரான டாக்டர் ஹர்பிரசாத் சாஸ்திரி கல்கத்தா பல்கலைக் கழக சமஸ்கிருதத் துறையின் தலைவர். புகழ் பெற்ற அறிஞர்.

எதனை ஆதாரமாகக் கொண்டு இந்தச் சம்பவத்தை நீங்கள் வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் எழுதியுள்ளீர்கள் என்று விளக்கம் கேட்டு டாக்டர் பாண்டே, டாக்டர் சாஸ்திரிக்கு கடிதம் ஒன்று எழுதினார். பல நினைவூட்டுக் கடிதங்களுக்குப் பின்னர் இந்தச் சம்பவம் மைசூர் கெஜட்டில் இடம் பெற்றுள்ளதாக டாக்டர் சாஸ்திரி பதில் அனுப்பினார். இதன் பின்னர் டாக்டர் பாண்டே, அப்போதைய மைசூர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சர் பிரிஜேந்திர நாத் சீல் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் டாக்டர் சாஸ்திரியின் இந்தக் கூற்று உண்மை தானா என்பதை மைசூர் கெஜட்டியரைப் பார்த்து ஆய்வு செய்து பதில் அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். சர் பிரிஜேந்திரா, டாக்டர் பாண்டேயின் கடிதத்தை கெஜட்டின் புதிய பதிப்பு ஒன்றினை வெளியிடும் பணியில் ஈடுபட்டிருந்த பேராசிரியர் ஸ்ரீகண்டய்யாவிற்கு அனுப்பி வைத்தார். இதற்குப் பதிலளித்த பேராசிரியர் ஸ்ரீ கண்டய்யா கெஜட்டில் மேற்குறித்த சம்பவம் பற்றிய பதிவு எதுவும் இல்லையென்றும் மேலும் ஒரு வரலாற்றாசிரியர் என்ற முறையில் அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்பதைத் தன்னால் உறுதியாகச் சொல்ல முடியுமென்றும் பதிலளித்தார். ஸ்ரீகண்டய்யா தனது பதிலில் திப்புசுல்தானின் பிரதம மந்திரியும், இராணுவத் தளபதியும் பிராமணர்களே என்றும் குறிப்பிட்டிருந்தார். மேலும் திப்பு சுல்தானின் கருவூலத்திலிருந்து ஆண்டு தோறும் மானியம் பெற்று வந்த 156

இந்துக் கோவில்களின் பட்டியலையும் அவர் தனது கடிதத்துடன் இணைத்து அனுப்பியிருந்தார். திப்புவால் நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு லிங்கம் இன்றைக்கும் நஞ்சன் கூடு கோவிலில் வணங்கப்பட்டு வருகிறது. ஸ்ரீரங்கப்பட்டணத்திலுள்ள ஸ்ரீரங்கநாதன் கோவில் திப்புவின் அரண்மனையிலிருந்து கூப்பிடும் தூரத்தில் இருந்தது. பள்ளிவாசலிலிருந்து வந்த தொழுகை அழைப்பையும், கோயிலிலிருந்து வந்த மணியோசையையும் ஒரே மரியாதையுடன் அவர் தனது அரண்மனையிலிருந்து செவிமடுத்தார். (Inpact International, London - vol 28.July 1998).

இந்த "பிராமணர்கள் தற்கொலைக்" கதையை டாக்டர் சாஸ்திரி "கர்னல் மைல்ஸ்" என்பவர் எழுதிய "மைசூர் வரலாறு" என்ற நூலிலிருந்து எடுத்தாண்டிருந்தார் என்பது பின்னர் பெரிய வந்தது. இந்தக் கதையை விக்டோரியா ராணியின் தனி நூலகத்திலிருந்த பாரசீகக் கையெழுத்துப் பிரதிகளிலிருந்து எடுத்ததாக "மைல்ஸ்" குறிப்பிட்டிருந்தார். இதனை டாக்டர் பாண்டே சரிபார்த்த போது, ராணி விக்டோரியா நூல் நிலையத்தில் அப்படிப்பட்ட ஒரு கையெழுத்துப் பிரதி ஏதும் இல்லை என்பது தெரியவந்தது. இருந்த போதிலும் டாக்டர் சாஸ்திரியின் இந்த வரலாற்றுப் பாடப்புத்தகம், அஸ்ஸாம், மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா, உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய ஏழு மாநிலங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இன்றைக்கும் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. டாக்டர் பாண்டே இது பற்றிய கடிதப் போக்குவரத்துகளைக் கொண்ட கோப்பினை கல்கத்தா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் சர் அஸ்டோஷ் சௌத்ரிக்கு அனுப்பிவைத்தார். அவர் உடனே டாக்டர் சாஸ்திரியின் வரலாற்றுப் பாடப்புத்தகத்தை பாடத் திட்டத்திலிருந்து நீக்கினார். எனினும் சில ஆண்டுகளுக்குப் பிறகு (1972ல்) "இந்த தற்கொலைக் கதை" உத்திரப் பிரதேசத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் தொடர்ந்து இடம் பெற்று மாணவர்கட்கு கற்பிக்கப்படுவதை டாக்டர் பாண்டே கண்டுபிடித்தார். இந்த வடிகட்டிய பொய் வரலாற்றுப் புத்தகங்களில் உண்மை என்பது போல் சித்திரிக்கப்பட்டுள்ளது வேதனை தரத்தக்கதாகும்.

இந்துக் கோவில்களுக்கு ஏராளமான அளவில் மானியங்களையும், நன்கொடைகளையும் திப்பு வழங்கியுள்ளார். அவற்றைப் பட்டியலிட சில புத்தகத் தொகுதிகள் வெளியிட வேண்டியதிருக்கும். பேஷ்வாக்களின் படையினர் சிருங்கேரிக் கோவிலைத் தாக்கி சேதப்படுத்தியதைக் கேள்வியுற்ற திப்பு பெரிதும் மனம் வருந்தியதாகவும், தன்னுடைய அரசிலிருந்து நிதி உதவி செய்து அந்தக் கோவிலில் கடவுள் சிலையை மீண்டும் வைத்ததாகவும் அந்தக் கோவிலிலுள்ள ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது. காஞ்சிபுரத்தில் (தமிழ் நாடு) ஒரு கோயிலைக் கட்டிட அவர் 10,000 ஹன்ஸ் வழங்கியதோடு கோவில் கட்டுமானப் பணிகள் முடிந்த பின்பு நடைபெற்ற தேரோட்டத்திலும் கலந்து கொண்டார். மெல்கோட்டி கோயிலில் இரண்டு பிரிவுகளுக்கிடையே ஏற்பட்ட பிரச்னையை அவர் தலையிட்டு சுமுகமாகத் தீர்த்து வைத்தார். அவருடைய முடிவை இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டனர். திண்டுக்கல்லில் அவர் போர் ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்த போது, ராஜா கோயில் இருந்த தெற்குப் பகுதியிலிருந்து சுட வேண்டாமென தனது படையினருக்கு உத்தரவிட்டார். பழைய கன்னட இலக்கியங்களில் திப்புவைப் பற்றிய இரங்கற் பாடல்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. சீபி என்ற இடத்திலுள்ள கோவிலின் (தும்கூர் மாவட்டம்-கர்னாடக) மேற் கூரை உட்பகுதியில் உள்ள சுண்ணாப்புப் பூச்சில் இவை எழுதப்பட்டுள்ளன. பழைய மைசூர் மாநிலத்தின் கிராமப் புறங்களில் திப்புசுல்தானைப் புகழ்ந்து இன்றைக்கும் பாடல்கள் பாடப்படுகின்றன. திப்பு வீரமரணம் அடைந்து ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகும் அவரைப் பற்றிய சித்திரங்களும் செய்திகளும் தீட்டப்பட்டிருப்பதைப் பார்க்கின்ற போது, இறப்பிற்குப் பின்னரும் மக்கள் அவர்பால் கொண்டிருந்த அன்பையும் பிரியத்தையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

இந்து சமய மக்களால் திப்பு வெறுக்கப்பட்டிருந்தால், இறுதிச் சடங்கின் போது இரத்தம் தோய்ந்திருந்த அவரின் உடல் மீது அவர்கள் சாஷ்டாங்கமாய் விழுந்து அழுதிருக்க மாட்டார்கள். வெற்றி பெற்ற ஆங்கிலப் படைவீரர்கள் ஸ்ரீரங்கப்பட்டிணத்திலுள்ள வீடுகளைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த போது அந்நகரத்து இந்து மக்கள் அவரது

அரண்மனையின் இரண்டு பக்கங்களிலும் வரியாக நின்று கொண்டு மிகுந்த துயரத்துடன் அழுது புலம்பி அவரது உடல் மீது சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கியுள்ளனர். (பீட்சன் 1880 - முகம்மது மொயினுத்தீன் எழுதியுள்ள "சன் செட் அட் ஸ்ரீரங்கப்பட்டிணம்" என்ற நூல் ஓரியண்டல் லாஸ்மன்ஸ்-2000) ஒரு மத வெறி பிடித்த அரசராக திப்பு இருந்திருந்தால், இந்துக் குடிமக்கள் அவ்விதம் நடந்து கொண்டிருக்கமாட்டார்கள்.

## மனித சமுதாயத்திற்கு திப்புவின் பங்களிப்பு

பேராசிரியர் ஷேக் அலி (மங்களூர் மற்றும் கோவா பல்கலைக் கழகங்களின் முன்னாள் துணை வேந்தர்) தனது "திப்பு சுல்தான் - ஒரு மதச்சார்பற்ற ஆட்சியாளர்" என்ற நூலில் எழுதியிருப்பதாவது:-

> திப்பு சுல்தானின் 17 ஆண்டுகால ஆட்சியின் பாராட்டத்தக்க அம்சம் அவர் கடைப்பிடித்த உள்நாட்டுக் கொள்கையே ! அவர் வர்த்தகம், கலைகள், கைவினைப் பொருட்கள் உற்பத்தி ஆகியவற்றின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டினார்.
>
> மிகச்சிறந்த நிர்வாக அமைப்பை உருவாக்கியிருந்தார். கடற்படை, ராக்கெட், வர்த்தகத்திலும், தொழிற் சாலைகளிலும் அரசின் கட்டுப்பாடு, குண்டுகள் தயார் செய்வதற்காக தொழிற் சாலைகள் மற்றும் பட்டறைகள், கைத்துப் பாக்கிகள், கண்ணாடி, வெட்டுக் கருவிகள், தாள், சக்கரை, ஆகியன அவரது சிந்தனையில் உதித்த அம்சங்களாகும். சாகர் கஞ்சம் ஒரு தொழில் துறை துணை நகரமாக விளங்கியது. அங்கு துணிகளும், காகிதமும் உற்பத்தி செய்யப்பட்டன. வர்த்தக மையங்களை உள்நாட்டில் மட்டுமின்றி மஸ்கட், ஜித்தா, பஸ்ரா, பெரு ஆகிய வெளிநாடுகளிலுள்ள நகரங்களிலும் அவர் நிறுவினார். சந்தனக் கட்டைகள், சில்க், கருமிளகு, போர்வைகள், யானைத் தந்தம் ஆகிய பொருட்கள் தரை மார்க்கமாவும் கடல் மார்க்கமாகவும் ஏற்றுமதி

செய்யப்பட்டன. பட்கலும், மங்களூரும் ஹொன்னாவரும் முக்கியத் துறைமுகங்களாக விளங்கின. ஆரம்பக் கல்வியை அவர் கட்டாயமாக்கினார். தனது நாட்டில் கூட்டுறவு வங்கிகளையும் தபால் சேவையையும் அறிமுகப் படுத்தினார். காவிரியின் குறுக்கே அணை ஒன்று கட்ட அவர் திட்டமிட்டிருந்தார். நீர்ப்பாசன வசதிக்காக காவிரியின் குறுக்கே "சதா-யி-மோஹி" திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். அந்த இடத்தில் தான் பின்னர் சர்.எம்.விஸ்வேஸ் வரய்யா அணை ஒன்றைக் கட்டினார். (கிருஸ்ண ராஜ சாகரம்) அணைக்கட்டின் முதல் வாசலில் உள்ள கல்வெட்டில் "நான் ஆரம்பித்து வைக்கிறேன் ஆனால் நிறைவு பெறுவது இறை வனின் கரங்களில் உள்ளது" என்ற வாசகங்கள் ஆங்கிலம், பெர்சியன் மொழிகளில் காணப்படு கின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அவர் கலைஞர்களையும், கைவினைஞர்களையும் வரவழைத்து வைத்துக் கொண்டார். விவசாய முன்னேற்றத்திற்கு முன்னுரிமை வழங்கினார். தேவையான விவசாயிகளுக்குக் கடன் வழங்கினார். தரிசு நிலங்களில் சாகுபடி செய்திட ஊக்குவித்தார். ஜமீந்தாரி முறையை ஒழித்தார்.

விளைச்சலுக்குத் தகுந்தாற்போல் விவசாயி களுக்கு வரி விதிக்கப்பட்டது. விளைச்சலில் நான்கில் ஒரு பங்கு வரியாக வசூல் செய்யப் பட்டது. மகசூல் பொய்த்துப் போனால் வரி விலக்கு அளிக்கப்பட்டது. அவர் சில்க் தொழிற் சாலைகளைத் துவக்கினார். அவரது நாட்டில் 21 சில்க் தொழிற்சாலைகள் இருந்தன. நீதித் துறையில் ஒரு புதிய முறையை அறிமுகப் படுத்தினார். அதன் படி சிறைக்கைதிகள் அபராதம் செலுத்துவதற்குப் பதிலாக பழ மரங்களை வளர்க்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். ஊழல் அதிகாரிகளும், சமூக விரோத சக்திகளும் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டனர். மது,

அடிமை முறை கைவிடப்பட்ட குழந்தைகளை விற்பனை செய்தல் ஆகியவற்றுக்குத் தடை விதித்தார். சூதாட்டம், புகையிலை உபயோகித்தல், வீண் செலவுகள் ஆகியவற்றுக்கும் தடை விதித்தார். ஒவ்வொரு துறையிலும் அவர் சீர்திருத்தங்களை மேற் கொண்டார். புதுமையான நாட்காட்டி (காலண்டர்) எடைகள், அளவுகள், வங்கி, நிதித்துறை, வருவாய்த்துறை, நீதித்துறை, இராணுவம், கடற்படை, நெறிமுறைகள், பண்பாடு என அனைத்து விஷயங்களிலும் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். "ரஹாதி" என்றழைக்கப்பட்ட வெகுமதி நாணயங்களை அவர் வெளியிட்டார். அந்த நாணயங்களில் சிவன், பார்வதி, சிருங்கேரி சாரதா, உடுப்பி கிருஷ்ணா ஆகியோரின் உருவங்கள் பாரசீக, கன்னட எண்களுடன் பொறிக்கப்பட்டிருந்தன.

சில சமூகங்களில் திருவிழாக்களின் போது மனித உயிர்களைப் பலியிடும் வழக்கமும் அப்போது இருந்து வந்தது. ஆண்களிடையே பலதாரமணமும், பெண்கள் மிகக் குறைந்த அளவில் ஆடைகள் அணியும் வழக்கமும் நிலவிவந்தன. திப்புசுல்தான் இது போன்ற பண்பற்ற பழைய பழக்கங்களைத் தடை செய்தார். பல நலத்திட்டங்களை மேற்கொண்டதன் காரணமாகவும், சீர்திருத்தங்கள் காரணமாகவும் திப்புசுல்தான் தனது நாட்டுக் குடிமக்களின் உள்ளம் கவர்ந்தவராகத் திகழ்ந்தார். அவர் மேற்கொண்ட சில சீர்திருத்த நடவடிக்கைகளை "சமயத்தில் தலையீடு" என்று அவரது எதிரிகள் குறை கூறினர். எனினும் இந்திய வரலாற்றில் முடிசூடிய மன்னர்களாகத் திகழ்ந்த ஏராளமான மன்னர்களுள் திப்புசுல்தான் மிக முக்கியமானவராகவும், ஒளி உமிழும் நட்சத்திரமாகவும் திகழ்ந்தார். மிகப் பெரிய செல்வாக்குப் பெற்றிருந்தவரும், வரலாற்றாளருமான வங்காளத்தைச் சார்ந்த சல் ஜாதுநார் சர்கார் என்பவர் திப்புவை மிக உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றுகிறார். அவரது பல்வேறு பணிகளைப் பாராட்டியுள்ள அவர் "திப்புசுல்தான் ஒரு மிகப் பெரிய விடுதலைப் போராட்ட வீரர், மிகச் சிறந்த நிர்வாகி,

சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்" என்றும் புகழ்ந்துரைத்துள்ளார்.

மூன்றாவது மைசூர் போரின் போது, திப்புவிற்கு எதிராகப் பம்பாயிலிருந்து படைப்பிரிவு ஒன்றை நடத்தி வந்த எட்வர்ட் மூர் என்பவர், திப்புவின் ஆட்சியதிகாரம் பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் மிகவும் பொருத்தமுடையதாக இருக்கும் (திப்பு ஆட்சியை நேரில் பார்த்த ஒரு சாட்சி) அவர் கூறியிருப்பதாவது:-

"ஒரு புதிய நாட்டின் வழியாகச் செல்லும் ஒருவர் அங்கு நன்கு விளைந்துள்ள வயல்களையும், சுறுசுறுப்பான மக்களையும், புதிதாக உருவான நகரங்களையும் வர்த்தக முன்னேற்றத்தையும் அதிகரித்து வருகின்ற நகரங்களையும் அனைத்து அம்சங்களிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி காரணமாக மக்கள் மகிழ்ச்சியோடு இருப்பதையும் பார்க்கின்ற போது மக்களின் விருப்பப்படி ஆட்சி செய்கின்ற ஒரு சிறந்த இணக்கமான அரசு அங்கு நடைபெற்று வருகின்றது என்ற முடிவுக்கே வருவார். திப்புவின் நாட்டில் இந்தக் காட்சிகளைத் தான் நான் பார்த்தேன். இந்த அரசைப்பற்றி எங்களுடைய தீர்க்கமான கருத்தும் இதுதான்.

# தலாக் (விவாகரத்து)

விரிவான ஆனால் எளிய திருமணம் மற்றும் விவாகரத்து சட்டங்களை வழி வகுத்துத் தந்துள்ள சமயங்களில் இஸ்லாம் முதலிடத்தைப் பெறுகிறது. திருக்குர்ஆனின் கூற்றுப்படி, திருமணம் என்பது ஒரு ஆணுக்கும், பெண்ணுக்குமிடையில் நடைபெறும் ஒரு சமுதாய ஒப்பந்தமாகும். ஆணும் பெண்ணும் குறிப்பிட்ட சிலர் முன்னிலையில் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். ஒவ்வொருவர் தரப்பிலிருந்தும் ஒருவர் திருமணத்தை முன்மொழிகிறார். இருவர் சாட்சிகளாக இருக்கின்றனர். ஒரு காழி ஒப்பந்தத்தை எழுதுகிறார். அவரே திருக்குர்ஆனிலிருந்து நிக்காஹ் பற்றிய வசனங்களை ஓதுகிறார். திருமணப் பதிவேட்டில் மணமக்கள் இருவரின் கையொப்பத்தையும் பெறுகிறார். இதுவே ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் முறையாகும். திருமண நிகழ்ச்சி அத்துடன் நிறைவு பெறுகிறது.

திருமணம் செய்து கொண்ட தம்பதியினரிடையே பிரச்னைகள் ஏற்பட்டு இனிமேல் சேர்ந்து வாழ முடியாது என்ற நிலை ஏற்படுமானால் (குழந்தைகள் பெற்றெடுத்திருந்த போதிலும்) அவர்கள் பிரிந்து செல்வதற்கான விரிவான வழிமுறைகளையும் இஸ்லாம் வகுத்தளித்துத் தந்துள்ளது. இதற்கு தலாக் (திருமண ரத்து) என்று பெயர். ஒரு முஸ்லிம் தனது மனைவியை வாய் மொழியாக மூன்று தடவை தலாக் சொல்வதன் மூலம் திருமண பந்தத்தை முறித்துக் கொள்ள முடியுமென்ற தவறான கருத்து எப்படியோ பரப்பப்பட்டு விட்டது. இஸ்லாமிய வழி முறையில் இதற்கு இடமில்லை. சில மௌலவிகள், ஒருவன் தொலைபேசி மூலமாகவோ அல்லது கைபேசி மூலமாகவோ அல்லது குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலமாகவோ "தலாக்" சொன்னாலும் அதனை ஏற்றுக் கொள்ளலாம் என மார்க்கத் தீர்ப்பு வழங்குகின்றனர். இது தவறானதாகும். குடி போதையிலும் இருக்கும் ஒருவன் சொன்ன தலாக்கும் கனவு கண்டதன் காரணமாக சொல்லப்

பட்ட தலாக்கும் கூடச் செல்லுமென்று சில மௌலவிகள் தீர்ப்பளித்துள்ளது இன்னும் மோசமானதாகும். சில பாலிவுட் சினிமா படங்களின் கதைக்கருவாகவும் இதுபோன்ற தலாக் நிகழ்ச்சிகள் அமைந்து விடுகின்றன. போதையிலுள்ள ஒருவனின் தொழுகையையே ஏற்றுக் கொள்ளாத இஸ்லாம், எப்படி போதையிலுள்ள ஒருவன் சொல்லும் தலாக்கை ஏற்றுக் கொள்ளும் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே சில சுயநலமிகள் இது போன்று இஸ்லாத்திற்கு எதிரான முறையில் செயல்பட்டு இஸ்லாத்தைப் பற்றியும், முஸ்லிம் களின் குடும்பவியல் சட்டங்கள் பற்றியும் தப்பெண்ணங்கள் தோன்றிடக் காரணமாக அமைந்து விடுகிறார்கள்.

இந்த விஷயத்தில் ஊடகங்களின் பங்களிப்பும் விஷமத்தன மானதாகும். முதலாவதாக ஊடகங்களிலும், பத்திரிகைகளிலும் சொல்லப்படுவதற்கு முற்றிலும் மாறாக முஸ்லிம்களிடையே விவாகரத்து பெருமளவு இல்லை என்பதே உண்மை நிலையாகும். இரண்டாவதாக பார்வை யாளர்கள் வட்டத்தை விரிவுபடுத்திட வேண்டுமென்ற நோக்கில் சில ஊடகங்கள் நடக்காத சில இட்டுக்கட்டிய நிகழ்வுகளை மௌலவிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்று அதற்குரிய தீர்ப்புகளைப் பெற்று இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தையும் அதன் அம்சங்களையும் சிறுமைப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. மூன்றாவதாக இஸ்லாமிய சட்டதிட்டங்களை அறியாத சில முஸ்லிம்கள் கோபத்தில் ஒரே நேரத்தில் மூன்று முறை தலாக் சொல்லி அதன் மூலம் பெண்களின் வாழ்க்கையை சீர்குலைக்கும் முயற்சிகளில் பொறுப்பற்ற முறையில் ஈடுபடுகின்றனர். இது இஸ்லாத்தின் பெருமைக்குப் பங்கம் விளைவிப்பதோடு, இஸ்லாம் வகுத் தளித்துத் தந்துள்ள தலாக் முறை பற்றிப் பிறர் குறை கூறிடவும் வழி வகுக்கின்றது.

இஸ்லாம் ஆண்களுக்கும் பெண்களுக்குமுள்ள தனிப்பட்ட வித்தியாசமான குண நலன்களை அங்கீகரிக்கிறது. "நிக்காஹ்" அவர்களை கணவன் மனைவியாக ஒன்று சேர்க்கிறது. அதே நேரத்தில் அவர்கள் பிரிந்து செல்ல விரும்பினால் அதனை எப்படிச் செய்திட வேண்டு மென்பதற்கும் இறைவன் வழி முறைகள் வகுத்தளித்துத்

தந்துள்ளான். இது இல்லையென்றால் சேர்ந்து வாழ இயலாத பல தம்பதியினரின் வாழ்க்கையே நரகமாகி விடும். ஆண்கள், தங்களது மனைவியரைக் கொல்ல முயற்சிக்கலாம். அல்லது மனைவியர்கள் தற்கொலைக்கு முயற்சிக்கலாம், விருப்பமில்லாத இணக்கமற்ற நிலையில் கணவனும் மனைவியும் கட்டாயம் சேர்ந்து தான் வாழ வேண்டும் என்ற நிலையை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. தம்பதியினர் களிடையே சுவைகள், விருப்பங்கள், குண இயல்புகள் காரணமாக பிரச்னைகள் ஏற்பட்டு சேர்ந்து வாழ முடியவில்லை என்றால் பிரிந்து செல்வதே சிறந்த வழியென இஸ்லாம் பரிந்துரைக்கின்றது. இதன் காரணமாகவே பிரிந்து செல்வதற்கான கண்ணியமான வழிமுறைகள் இஸ்லாத்தில் உள்ளன. இதற்கு "தலாக்" என்று பெயர். சில சமயங்களின் குடும்பச்சட்டங்கள் திருமண பந்தத்தை முறித்துக் கொள்வதை அனுமதிப்பதில்லை. அத்தகைய சமூகங்களைச் சார்ந்த பெண்கள் தொல்லைக்கும், கொடுமைக்கும் உள்ளாகின்றனர். ஏன் உயிரோடு எரிக்கப்படுகிறார்கள்.

இந்த "தலாக்" என்ற வழி முறையினைக் காலம் காலமாக சில முஸ்லிம்கள் தவறான முறையில் பயன்படுத்தி வருகின்றனர். இஸ்லாமியச் சட்டங்களுக்கு தவறான முறையில் விளக்கமளித்து தங்களது செயல்களுக்கு நியாயம் கற்பிக்கின்றனர்.

"தலாக்" என்பது திருமண உறவுகளை முறித்திட வகுக்கப்பட்டுள்ள ஒரு சட்ட பூர்வமான முறையாக இருந்த போதிலும் இஸ்லாத்தில் அது ஒரு கொடுமையான செயலாகவே கருதப்படுகிறது என்பதே உண்மை நிலையாகும். திருமண முறிவை இறைவன் வெறுக்கிறான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள போதிலும், திருக்குர்ஆன் மணமுறிவை அனுமதிக்கிறது.

ஒரு கணவன் தனது மனைவியை மணமுறிவு செய்து கொள்ளும் முறையை திருக்குர்ஆன் கீழ்க்கண்டவாறு விளக்குகிறது.

> மணமுறிவு சொல்லப்படலாம் அதன் பின்னர் உங்களது மனைவியை கண்ணியமான முறையில் அனுப்பிவிடுங்கள் அல்லது நீங்கள் கண்ணியமான

முறையில் பிரிந்து செல்லுங்கள். (குர்ஆன் 2:229)
மேலும் இறைவன் கூறுவதாவது:

இவ்வாறு விவாகரத்து செய்தல் இரண்டு தடவைகளே! (இதன் பின்னர்) நல்லமுறையில் சேர்ந்து வாழலாம் அல்லது அழகான முறையில் விட்டு விடலாம். மனைவியருக்கு நீங்கள் கொடுத்தவற்றிலிருந்து எந்த ஒன்றையும் திரும்பப் பெறுவதற்கு அனுமதி இல்லை. அவ்விருவரும் (சேர்ந்து வாழும் போது) அல்லாஹ்வின் வரம்புகளை நிலை நாட்டமாட்டார்கள் என்று நீங்கள் அஞ்சினால் அவளுக்கு எதையேனும் ஈடாகக் கொடுத்து பிரிந்து விடுவது இருவர் மீதும் குற்றமில்லை. இவை அல்லாஹ்வின் வரம்புகள், எனவே அவற்றை மீறாதீர்கள். அல்லாஹ்வின் வரம்புகளை மீறுவோரே அநீதி இழைத்தவர்கள் (குர்ஆன் 2.229)

இந்த இறை வசனங்களோடு, திருக்குர்ஆனின் 4வது அத்தியாயம் 34மற்றும் 35 வசனங்களில் சொல்லப்பட்டுள்ள ஏழு கட்ட வழிமுறைகளும் மண முறிவுக்கான வழிமுறைகளாகும். ஆனாலும் இந்த வழிமுறைகள் புறக்கணித்து சில காழிகள் (மார்க்க நீதிபதிகள்) ஒரே நேரத்தில் சொல்லப்படும் மூன்று தலாக்குகளை ஏற்றுக் கொண்டு திருமண முறிவை அங்கீகரித்து விடுகிறார்கள். இது போன்ற தலாக் முறையைப் பின்பற்றுபவர்கள் இறைவனின் கோபத்திற்கு உள்ளாவார்கள் என நபிகள் நாயகம்(ஸல்) நவின்றுள்ளார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் நெருங்கிய தோழரான ஹழ்ரத் உமர்(ரலி) இதுபோல் நடந்து கொண்ட ஒருவருக்கு தண்டனை அளித்தார்கள்.

## குலா
## பெண்கள் விவாகரத்துப் பெறும் முறை

கணவனுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாத பட்சத்தில் ஒரு பெண் அவனிடமிருந்து பிரிந்து செல்கின்ற உரிமையை இஸ்லாம் வழங்கியுள்ளது. கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற முயடியாத சூழலில் ஒரு முஸ்லிம் பெண் ஒரு காழியை

(மார்க்க நீதிபதி) அணுகி தனக்கு விவாகரத்து பெற்றுத்தருமாறு கோரலாம். இதற்கு "குலா" என்று பெயர்.

ஆனால் விவாக ரத்தினை அவள் உடனடியாகப் பெற முடியாது அவள் "இத்தா" இருக்க வேண்டும். (பேராசிரியர் கௌல்சன் இதனை திருக்குர்ஆனின் மாபெரும் புதுமை என்று குறிப்பிடுகிறார்.) இந்த "இத்தா" காலமென்பது மூன்று மாதவிடாய் காலம் அல்லது அவள் கருத்தரித்திருந்தால் குழந்தை பெறும் நாள் வரை ஆகும்.

இப்படி "இத்தா இருக்கும் காலத்தில், கணவனிடமிருந்து பொருளாதார உதவி பெற அவளுக்கு உரிமை உண்டு. சமாதானம் செய்து கொள்ளவும் இந்தக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இது சம்பந்தமாக திருக்குர்ஆன் கூறுவதாவது:-

> நபியே (முஹம்மதே) பெண்களை நீங்கள் விவாகரத்துச் செய்தால் அவர்கள் இத்தாவை கடைப்பிடிப்பதற்கேற்ப விவாகரத்துச் செய்யுங்கள். இத்தாவைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வை அஞ்சுங்கள். பகிரங்கமான வெட்கக்கேடான காரியத்தை அப்பெண்கள் செய்தால் தவிர அவர்களை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றாதீர்கள்! (திருக்குர்ஆன் 65:1)

தனது மனைவியை விவாகரத்துச் செய்த கணவன் அவள் மறுமணம் செய்து கொள்வதை தடுக்கவேண்டாம் எனவும், இறைவன் எச்சரிக்கிறான்.

> பெண்களை விவாகரத்துச் செய்தபின் அவர்கள் தங்கள் காலக்கெடுவை நிறைவு செய்து விட்டால் அவர்கள் (தமக்குப் பிடித்த) கணவர்களை விருப்பப்பட்டு நல்ல முறையில் மணந்து கொள்வதைத் தடுக்காதீர்கள். உங்களில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புவோர்க்கு இவ்வாறு அறிவுரை கூறப்படுகிறது. (குர்ஆன் 2:232)

# பத்வா

இஸ்லாமியச் சமய சட்டங்களின் அடிப்படையில் வழங்கப்படும் கருத்திற்கு "பத்வா" என்று பெயர். ஆனால் பலர் இது ஒரு சமய நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு எனத் தவறாகக் கருதுகின்றனர். இதற்குச் சில கேலிக்கூத்தான பத்வாக்களுக்கு ஊடகங்கள் கொடுக்கும் முக்கியத்துவமும் ஒரு காரணமாகும். இது போன்று வழங்கப்படும் பத்வாக்களின் அடிப்படையிலேயே முஸ்லிம்கள் வாழ்கிறார்கள் என்ற ஒரு தவறான நம்பிக்கை பொது மக்கள் மனதில் ஏற்பட இது வழி வகுக்கிறது. ஆனால் ஒரு சாதாரண முஸ்லிம் இது போன்ற சட்டரீதியான ஒரு கருத்தினைப் பெற சமய அறிஞர்களை அணுகுவது மிகவும் அரிதானதே. சில பத்வாக்கள் விநோதமாகவும், நீதி நெறிமுறைக்கு புறம்பான முறையில் இருந்தாலும் தற்போது செய்யப்பட்டு வரும் வாதப்பிரதி வாதங்களுக்கு அவை வழி வகுக்கக் கூடாது. இது போன்ற பத்வாக்கள் வழங்கப்படும் போது, ஊடகங்கள் இஸ்லாமிய வழி முறைகளைப் பற்றி தவறான பிரச்சாரங்களில் ஈடுபடுகின்றன.

நமது நாட்டில் ஆயிரக்கணக்கான மத்ரஸாக்கள் உள்ளன. இம் மத்ரஸாக்களில் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும் குழுக்களும் உள்ளன. இதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி பல தரப்பட்ட சமயக்கருத்துக்கள் வழங்கப்பட வாய்ப்புகள் உள்ளன. இதனால் சில பத்வாக்கள் ஊடகங்களின் கவனத்தை ஈர்த்து, அவை சமயச் சட்டங்கள் என்று முத்திரை குத்தப்பட்டு பின்னர் மத வெறியின் அடையாளங்களாகப் பிரச்சாரம் செய்யப்பட்டுகிறது . ஒரு ஒரு மிகவும் மோசமான செயலாகும். இது போன்ற கருத்துக்களுக்கு முஸ்லிம்கள் பெரிதும் மதிப்பளிக்கின்றனர் என்ற அவர்களின் சிந்தனை இன்னும் மோசமானதாகும்.

சரியாகச் சொல்ல வேண்டுமானால், பத்வா என்பது ஒரு நீதி மன்றம் வழங்கும் தீர்ப்பு போன்றதல்ல. அது ஒரு சட்ட ரீதியான கருத்தேயாகும். ஒரு நீதிபதியாலோ அல்லது ஒரு தனி மனிதராலோ எழுப்பப்படும் சமய ரீதியிலான கேள்விக்கு ஒரு மார்க்க அறிஞரோ அல்லது ஒரு சமய வழக்கறிஞரோ

வழங்கிடும் கருத்திற்கு "பத்வா" என்று பெயர் என இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் குறிப்பிடுகிறது.

பத்வாக்கள் கருத்துக்களே. அவை யாரையும் கட்டுப்படுத்தக் கூடியவை அல்ல. அவற்றை ஏற்கவும் செய்யலாம். அல்லது நிராகரிக்கவும் செய்யலாம். "பத்வா" வழங்கியவர்கள் கூட அதனை ஏற்றுத்தான் தீர வேண்டுமென வலியுறுத்துவதில்லை. நீங்கள் விரும்பியவாறு ஏற்கவோ, நிராகரிக்கவோ செய்யலாம் என்று தான் கூறுகிறார்கள். சிக்கலான பிரச்னைகளை சந்திக்கும் மக்கள் அவற்றின் தீர்விற்காகப் பலதரப்பட்ட சமய அமைப்புகளை நாடி அவற்றின் கருத்தைப் பெற முயற்சிக்கிறார்கள். அதே நேரத்தில், முரண்பட்ட கருத்துக்கள் வழங்கப்படும் போது அவர்கள் அது பற்றி வியப்படைவதில்லை.

முறைகேடான பத்வாக்களுக்கு ஊடகங்களில்அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. அதே நேரத்தில் அத்தகைய பத்வாக்களை முஸ்லிம்கள் கண்டிக்கும் போது அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. 1989ஆம் ஆண்டு எழுத்தாளர் சல்மான் ருஸ்திக்கு எதிராக ஈரானின் இமாம் அயோத்துல்லா குமைனி வழங்கிய பத்வாவிற்கு நீதிபதிகளிடமிருந்து பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. சவூதி அரேபியாவிலுள்ள சமய அறிஞர்களும் கெய்ரோவிலுள்ள புகழ்பெற்ற அல் அஜ்ஹர் பள்ளிவாசலின் ஷெய்க்குகளும் குமைனியின் பத்வா சட்ட விரோதமானது என்றும், இஸ்லாத்திற்குப் புறம்பானது என்றும் கண்டித்தனர். எந்த விதமான விசாரணையு மின்றி ஒரு மனிதனைக் கொல்ல இஸ்லாமியச் சட்டங்கள் அனுமதி அளிக்கவில்லை. முஸ்லிம் உலகத்தைத் தாண்டி இச் சட்டங்களுக்கு இடமுமில்லை. 1989ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நடைபெற்ற இஸ்லாமிய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட 45 நாடுகளில் 44 நாடுகள் இமாம் குமைனியின் பத்வாவை நிராகரித்தன. ஆனால் இச் செய்தி ஊடகங்களிலும், பத்திரிகைகளிலும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்படவில்லை. இதனால் ஒட்டு மொத்த முஸ்லிம் உலகமும், ருஸ்தியின் இரத்தத்தைக் குடிக்க முனைகின்றது என்ற தவறான கருத்து ஏற்பட வழிவகுத்தது.

# *குப்ர் - காபிர்*

*"காபிர்" என்ற வார்த்தை பற்றியும் ஆட்சேபனைகள் எழுப்பப்படுகின்றன. முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதாரை அவதூறு செய்யும் விதத்தில் உபயோகிக்கப்படும் ஒரு வார்த்தை இது என சில ஊடகங்கள் பிரச்சாரம் செய்கின்றன. ஆனால் இந்த வார்த்தையும், அதனுடைய பயன்பாடும் முழுவதுமாக தவறாகப்புரிந்து கொள்ளப்பட்டுள்ளது என்பதே உண்மை.*

*காஃபிர் என்ற வார்த்தையின் வேர்ச்சொல் குஃப்ர் ஆகும். குஃப்ர் என்பதற்கு மூடுதல் அல்லது மறைத்தல் என்று பொருள். இரவு "காஃபிர்" என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் இரவு தெரிகின்றவற்றை மறைக்கிறது. கருமையான அடந்த மேகங்கள் சூரியனையும், வெளிச்சத்தையும் மறைப்பதால் அவையும் கூட காஃபிர் என்றே அழைக்கப்படுகின்றன. நிலத்தினுள் விதைகளை ஊன்றி அதனை மூடுவதால் விவசாயியும் காஃபிர் என்றே அழைக்கப்படுகிறார்.*

*"காஃபிர்" அல்லது "குஃப்ர்" என்ற வார்த்தைகளுக்கு எதிர் மறையான விளக்கம் ஒன்றும் இல்லை. எனவே இந்த வார்த்தை யாரையும் புண்படுத்தாது. முஸ்லிமல்லாதவர் என்ற வார்த்தைக்குப் பதிலாக காஃபிர் என்ற வார்த்தை பயன்படுத் தப்படுவதில்லை. அல்லது முஸ்லிமல்லாதவர்கள் அனைவரும் "காஃபிர்கள்" என்று அழைக்கப்படுவதுமில்லை. இஸ்லாமிய சமய மொழியில் ஒரு பொருளை ஏற்றுக் கொள்ள மறுக்கிற அல்லது நிராகரிக்கின்ற ஒருவருக்கு "காஃபிர்" என்று பெயர். எனவே ஒரு சமயத்தை ஏற்றுக் கொண்டவர்கள் பிற சமயத்தினருக்கு "காஃபிர்" ஆவார்கள். கம்யூனிஸ்ட்டுகளும் முதலாளித்துவ வாதிகளும் ஒருவருக்கொருவர் காஃபிர்களே! இஸ்லாமிய சமய மொழியில் அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த ஒரு கடவுளையும் வணங்கிட மறுப்பவர் நம்பிக்கையாளர் எனப்படுவார். "காஃபிர்" என்ற வார்த்தைக்கு "மறுப்பாளர்" என்று பொருளே தவிர அது அவதூறு செய்யும் ஒரு*

வார்த்தையாகாது.

சமயத்தைப் பொறுத்த அளவில், இறைவன் அதனை மக்களின் விருப்பத்திற்கே விட்டுள்ளான். திருக்குர்ஆன் குறிப்பிடுவதாவது:-

> இஸ்லாத்தில் எந்த வற்புறுத்தலும் இல்லை. வழி கேட்டிலிருந்து நேர் வழி தெளிவாகிவிட்டது. தீயசக்திகளை மறுத்து அல்லாஹ்வை நம்புகிறவர் அறுந்து போகாத பலமான கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். அல்லாஹ் செவியுறுபவன், அறிந்தவன் (குர்ஆன் 2:256)

எனவே ஓரிறைக் கொள்கைமீதும், இறைவனின் தூதர்களின் மீதும் நம்பிக்கை கொள்ளாதவர்களைப்பற்றி இஸ்லாத்திற்கோ அல்லது முஸ்லிம்களுக்கோ எந்த விதமான வெறுப்பும் இல்லை.

# முஸ்லிம்கள் ஏன் அசைவ உணவை உட்கொள்கிறார்கள்

மக்கள் தங்களுக்குத்தேவையான உணவுப் பொருட்களை பாரம்பர்யமான வழி முறைகளில் பெறுகின்றனர். ஒன்று வயல்களிலும், தோட்டங்களிலும், பண்ணைகளிலிருந்தும் கிடைத்திடும் தானியங்கள். இரண்டாவது விலங்குகள் மற்றும் கடல் வாழ் உயிரினங்கள். தானியங்கள் போன்ற தாவர உணவுப் பொருட்களை உண்பவர்கள் சைவர்கள் என்றும், தாவர உணவுப் பொருட்களோடு விலங்குகளின் இறைச்சியையும் உண்போர் அசைவர்கள் என்றும் அழைக்கப் படுகின்றனர். கால் நடைகள் மற்றும் பிற உயிரினங்களிலிருந்து பெறப்படும் பால் பொருட்கள், முட்டை தேன் ஆகிய பொருட்களைத் தவிர்த்து பிற உணவுப் பொருட்களை உண்போர் வேகன் எனப்படும் மூன்றாவது வகையினராவர்.

தாவர உணவுகள் பற்றி தற்போது உலகளாவிய அளவில் பல இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. விலங்குகளின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற வகையிலும் அவை கொல்லப்படுவதைத் தவிர்க்க வேண்டுமென்ற அடிப்படையிலும் இந்த இயக்கங்கள் செயல்படுகின்றன.

கிறிஸ்துவ, யூத சமயங்களைப் போலவே இஸ்லாமும் ஒரு கிராமம்புற மேய்ச்சல் நிலப் பகுதியில் உருவான சமயமாகும். அதிக எண்ணிக்கையிலான நபிமார்கள் பாலஸ்தீனத்திலேயே தோன்றி தங்களது சமய நம்பிக்கைகளைப் போதித்துள்ளனர். இந்த வறண்ட பகுதியில் வாழ்ந்த மக்களின் முக்கியத் தொழில் கால் நடைகளை வளர்த்தலும், அவற்றை விருத்தி செய்வது மேயாகும். எனவே இந்த மூன்று பெரிய சமயங்களைப்

பின்பற்றியவர்களும் விலங்குகளின் இறைச்சியை உண்டே தாங்கள் உயிர் வாழ்வதற்குரிய சக்தியைப் பெற்றனர். ஆனால் விலங்குகளைக் கொன்று அல்லது வேட்டையாடி அவற்றின் இறைச்சியை உண்டு தான் வாழ வேண்டும் என்று இந்த சமயங்கள் மக்களைக் கட்டாயப்படுத்தவில்லை.

இரண்டாவதாக, உணவுத் தேவைக்காக விலங்குகளைக் கொல்வது இந்த சமயங்களின் கொள்கைகளின் படி ஏற்புடையது தான். ஆனால் சிலர் இது அறநெறிகளுக்கு முரணானது என்று கருதுகின்றனர். அன்பும், கருணையும், உணவுப் பழக்கங்களோடு தொடர்புடைய விஷயங்கள் அல்ல. அசைவ உணவு உட்கொள்ளும் ஒருவர் அன்பும், கருணையும் உடையவராக இருக்க முடியும். அதே நேரத்தில் முழுக்க சைவ உணவு உட்கொள்ளும் ஒருவர் அன்பற்றவராகவோ கருணையற்றவராகவோ இருக்க வாய்ப்புண்டு.

மூன்றாவதாக, தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்றும் அவை வேதனைகளை உணர்கின்றனவென்றும் இசையை செவி மடுக்கின்றன என்றும், பிற வெளித்தாக்கங்களால் பாதிக்கப்படுகின்றன என்றும், தண்ணீர் வேண்டிகுரல் கொடுக்கின்றன என்றும் நவீன விஞ்ஞான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தண்ணீர் தேவை இருக்கும் போது தாவரங்கள் எழுப்புகின்ற குரலின் ஒலியை அதிகரித்துக் காட்டும் எந்திரங்களை அமெரிக்க விவசாயிகள் கண்டு பிடித்துள்ளனர். இதன் அடிப்படையில் புதிய விவசாய முறைகளை அவர்கள் கையாளுகின்றனர்.

இஸ்லாமியக் கொள்கையின் படி மனிதனே உலகின் மிக உயர்ந்த படைப்பினமாவான். எனவே பூமியில் உள்ள வளங்கள் அனைத்தையும் தனது தேவைக்காகப் பயன் படுத்திடும் உரிமை அவனுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த வளங்களை வீணாக்காமல் பயன்படுத்தும்படி அவனுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. இயற்கை தனது வளங்களை இயல்பான வழியில் மீண்டும் தானே உற்பத்தி செய்யத்தக்க வகையில் இதனை மனிதர்கள் பயன்படுத்த வேண்டும். தொடர்ந்து நிலைத்திருக்கச் செய்தல் என்று இதனை நவீன முறையில் சொல்லலாம்.

இந்த பூமியில் உள்ள அனைத்துப் பொருட்களின்

பாதுகாவலனாக மனிதன் இருந்திட வேண்டுமே தவிர அவற்றின் உரிமையாளனாக அவன் ஆக முடியாது என்பது இஸ்லாத்தின் கொள்கையாகும். இறைவனே அவற்றின் உரிமையாளன். பாதுகாவலன் ஆவான். தனது தேவைகளுக்கு மட்டுமே நியாயமான முறையில் இந்த இயற்கை வளங்களை மனிதன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவனது பேராசையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் அவனது செயல்பாடுகள் அமைந்திடக் கூடாது இது பற்றிக் குர்ஆன் கூறுவதாவது:-

> நம்பிக்கை கொண்டோரே ! ஒப்பந்தங்களை நிறைவேற்றுங்கள். உங்களுக்கு (பின்னர்) கூறப்படுவதைத் தவிர தாவரத்தை உண்ணும் கால்நடைகள் உங்களுக்கு அனுமதிக்கப் பட்டுள்ளன. (குர்ஆன் 5:1)

இது பற்றி மேலும் குர்ஆன் குறிப்பிடுவதாவது...

> நிச்சயமாக உங்களுக்கு (ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) பிராணிகளில் ஒரு படிப்பினை இருக்கிறது. அவற்றின் வயிறுகளிலிருந்து (சுரக்கும் பாலை) நாம் உங்களுக்கு புகட்டு கிறோம்; இன்னும் அவற்றில் உங்களுக்கு அநேக பயன்கள் இருக்கின்றன. அவற்றி(ன் மாமிசத்தி) லிருந்து நீங்கள் புசிக்கின்றீர்கள். (குர்ஆன் 23:21)

ஊட்டச்சத்து இயலாளர்கள் விலங்குகளின் இறைச்சியில் உள்ள புரோட்டீன் சத்து காரணமாக அதனை ஒரு நிறைவான உணவு எனக் கூறுகின்றனர். உடலுக்குத் தேவையான எட்டு வகை அமினோ அமிலங்கள் இறைச்சியில் உள்ளன. எனவே உணவில் அவற்றை அவசியம் சேர்த்துக் கொள்ள வேண்டும். இறைச்சியில் இரும்புச் சத்து, வைட்டமின், நியாசின் ஆகிய சத்துக்களும் உள்ளன. தாவர உணவுப் பொருட்களில் புரோட்டீன் சத்து மிகக் குறைவாகவே இருப்பதால் அவ்வகை உணவுப் பொருட்களை மட்டும் உட்கொள்வோர்க்கு அனிமியா என்ற நோய் ஏற்படுகிறது. தாவர உணவுகள் உட்கொள்ளும் இந்திய மக்களின் பெரும்பாலோருக்கு புரோட்டீன் சத்துக் குறைவு காரணமாக இந்த நோய் ஏற்படுகிறது.

மனிதனின் பற்கள் கடிக்கவும், மெல்லவும் பயன்படும் விதத்திலேயே அமைந்துள்ளன. என்பதை மனித உடற் கூறு நமக்கு உணர்த்துகிறது. எனவே மனிதன் இயற்கையிலேயே சைவ உணவு, அசைவ உணவு என இரு வகை உணவுப் பொருட்களையும் உண்ணத்தக்க விதத்திலேயே படைக்கப் பட்டுள்ளான். கால் நடைகளுக்கு மெல்வதற்கு ஏதுவாக தட்டையான பற்கள் இருப்பதையும், பிற மிருகங்களுக்கு கடித்து, கிழித்து, மென்றிட கூர்மையான பற்கள் அமைந்திருப்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே மனிதர்கள் தாவர உணவுகளையும், விலங்குகளின் இறைச்சி ஆகிய இருவகை உணவுகளையும் உட்கொள்ளலாம் என்ற முடிவிற்கே நாம் வர இயலும். அது போலவே மனிதர்களின் செரிமான உறுப்புக்களும் இந்த இருவகை உணவுப் பொருட்களையும் செரிக்கச் செய்து ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்திலேயே அமைந்துள்ளன.

## அசைவ உணவு மனிதர்களை வன்முறையாளர்களாக மாற்றுகிறதா?

உணவுப் பொருட்களை உண்பதற்கு இஸ்லாம் சில நியதிகளை வகுத்துள்ளது. தானியங்களை உண்டு வாழ்கின்ற நான்கு கால்களையும் கொண்ட பாலூட்டிகளின் இறைச் சியினை உண்ண இஸ்லாம் அனுமதி அளித்துள்ளது. அதே நேரத்தில் மாமிச உணவை உட்கொள்ளும் விலங்குகளின் இறைச்சியை உட்கொள்ளத் தடை விதித்துள்ளது. பசு, வெள்ளாடு, செம்மறியாடு (ஆண்-பெண்) ஒட்டகம், எருமை மாடு ஆகிய விலங்குகளின் இறைச்சியை உண்ண அனுமதியுண்டு. இந்த அனுமதிக்கப்பட்ட விலங்குகளும் ஹலால் முறையில் அறுக்கப்பட்டால் தான் அவற்றின் இறைச்சியை உண்ணலாம். நான்கு கால்களையுடைய விலங்குகளில் பன்றி இறைச்சியை உண்பது முஸ்லிம்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது (யூதர்களுக்கும் இந்தத்தடை உள்ளது)

மாமிச உணவு அதனை உண்பவர்களை வன்முறை யாளர்களாக மாற்றும் என்பதற்கு எந்த விதமான விஞ்ஞான

பூர்வமான ஆதாரமும் இல்லை. ஒரு மனிதன் வளரும் விதமும், உலகைப் பற்றிய அவனது கருத்தோட்டமும்தான் அவனை வன்முறையாளனாகவோ அல்லது அமைதியை விரும்புவனாகவோ மாற்றுகிறது. உதாரணமாக, ஜெர்மனியின் அதிபராக இருந்த ஹிட்லர் ஒரு சைவன். ஆனால் அவன் அண்டை நாடுகளை அடிபணிய வைக்க வேண்டும்மென்ற கொடூர எண்ணம் கொண்டிருந்தான். இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தான். எனவே மாமிச உணவு உண்பவன் வன்முறையாளனாக மாறுவான் என்ற இது போன்ற பொய்யான கருத்துக்களைப் புறக்கணிக்க வேண்டும். அன்பும், கருணையும், வெறுப்பும், பகைமையும் ஒரு மனிதனின் உணவுப் பழக்கத்துடன் தொடர்புடைய விஷயங்கள் அல்ல. இந்தியாவில் வசிக்கும் ஆதிவாசிகள் பலவிதமான விலங்குகளின் இறைச்சியை உண்டு வாழ்கிறார்கள். ஆனால் அவர்கள் எந்த விதமான கொடூரச் செயல்களிலும் ஈடுபட்டதாகச் சான்றுகள் இல்லை.

# ஹலால் - அனுமதிக்கப்பட்டது<br>ஹராம் - தடுக்கபட்டது

தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு இஸ்லாம் சில வாழ்க்கை நெறிமுறைகளை வகுத்தளித்துத் தந்துள்ளது. உண்பதற்கோ அல்லது ஒரு செயலைச் செய்வதற்கோ வழங்கப் பட்டுள்ள அனுமதி "ஹலால்" எனப்படும். செய்யக் கூடாது என்று சமயத்தால் தடுக்கப்பட்டுள்ள விஷயங்கள் "ஹராம்" எனப்படும். ஹராமான (தடுக்கப்பட்டுள்ள) பொருட்களை உண்பது அல்லது செயல்களைச் செய்வது திருக்குர்ஆனின் கோட்பாடுகளின்படி இறைவனுக்கு உவப்பான செயல்களாகக் கருதப்படமாட்டாது. இவை பாவமாகும். இவற்றை முஸ்லிம்கள் தவிர்க்க வேண்டும். உதாரணமாக பன்றியின் இறைச்சியை உண்பதும், போதை தரும் மது பானங்களை அருந்துவதும் தடை செய்யப்பட்டுள்ளன.

முஸ்லிம் ஆண்கள் பளபளப்பான ஆடை அணிவது விரும்பத்தகாதது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில்

பருத்தி அல்லது உல்லன் துணியுடன் சில்க்கும் கலந்திருந்தால் அத்தகைய துணியால் தைக்கப்பட்ட உடைகளை அணியலாம். ஆனால் தங்க நகைகளை அணியக்கூடாது. இதற்குத் தடை உள்ளது. பொருள் ஈட்டுவதற்கும், நடத்தைக்கும் கூட ஹலால்-ஹராம் உண்டு. ஒரு முஸ்லிம் வாழ்க்கை நடத்துவதற்காக திருடுதல், ஏமாற்றுதல், லஞ்சம் வாங்குதல், பணம் பறித்தல், பிறர் சொத்தை அபகரித்தல், வட்டி வாங்குதல் போன்ற தவறான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. இது போன்ற தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு பொருள் ஈட்டினால் அவன் பாவியாகிவிடுவான். அது போல ஒரு முஸ்லிம் விபச்சாரத்திலோ, புறங்கூறுவதிலோ, பொய்யுரைப் பதிலோ, ஒரு பால் காமஉறவுகளிலோ, பிறரை உளவு பார்ப்பதிலோ ஈடுபடக்கூடாது. இச் செயல்களும் தடுக்கப்பட்டுள்ளன.

# இஸ்லாமிய முறைப்படி விலங்குகளை அறுப்பது

உண்ண அனுமதிக்கப்பட்டுள்ள விலங்குகளின் கழுத்தின் கீழ் பகுதியில் கத்தியை வைத்து அறுக்குமாறு முஸ்லிம்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (யூதர்களுக்கும் இந்த முறை பொருந்தும்) அதன் மூலம் அறுக்கப்பட்ட பிராணியின் உடலிலிருந்து இரத்தம் முழுவதும் வெளியேறிவிடும். அறுக்கப்பட்ட பிராணிகளின் இரத்தக் குழாய்களில் இரத்தம் தங்கி விடாமலிருப்பதை இது உறுதி செய்கிறது. இதனால் இறைச்சி சுத்தமாக இருக்கும். முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் இந்த முறையில் அனுமதிக்கப்பட்ட பிராணிகளை அறுத்து அவற்றின் இறைச்சியை உண்பதே ஹலாலாகும். அதாவது அனுமதிப்பட்டதாகும்.

விலங்குகளின் கழுத்தின் கீழ் பகுதியில் கத்தியைக் கொண்டு அறுப்பதே இஸ்லாமிய வழிமுறையாகும். கழுத்தின் மேல் பிடரிப் பகுதியை அல்ல. இந்த முறையின் மூலம் பிராணிகளின் உடலுக்கும், மூளைக்குமான தொடர்பு

உடனடியாக அறுபட்டுப் போகாது. ஆகையால் மூளை உடம்பிலிருந்து இரத்தம் முழுவதும் வெளியேற அனுமதிக்கிறது. இதன் காரணமாக மாமிசத்தில் இரத்தம் தங்குவதில்லை. இரத்தம் இல்லாத இறைச்சி சுகாதாரமானது. நீண்ட நேரம் கெடாமல் இருக்கும். இப்படி அறுக்கும் போது மூச்சுக்குழாய், இரத்தக் குழாய்கள், தொண்டை ஆகியன அறுபடுகின்றன. ஆனால் டார்சல் நாளங்கள் கடைசி வரை செயல்பட்டு கடைசிச் சொட்டு இரத்தத்தையும் உடலிலிருந்து வெளியேற்றுகிறது. பிராணி முற்றாக இறந்த பிறகு அமைதியடைகிறது. மாமிசப் பிண்டதிலிருந்து தலையை துண்டித்து எடுத்த பின்னர் இறைச்சியை எடுக்கும் பணி துவங்குகிறது.

உடலில் ஜீவ அணுக்களும், வியாதிக் கிருமிகளும் உள்ளன. எனவே மற்ற அறுப்பு முறைகளைக் காட்டிலும், முஸ்லிம்கள் பிராணிகளை அறுக்கும் முறை சுத்தமானது, சுகாதாரமானது கிருமிகள் இல்லாதது.

# ஹராம்
# மதுபானங்கள் - சூதாட்டம் - தடை

போதை தரும் மதுபானங்களைக் குடிப்பதினின்றும், சூதாட்டங்களில் ஈடுபடுவதினின்றும் முஸ்லிம்களை திருக்குர்ஆன் தடுத்துள்ளது. ஆல்கஹால் அதனை உட்கொள்பவனின் அறிவுத்திறனை சீர்குலைப்பதாலும் அவனது நடத்தையில் எதிர்மறையான பாதிப்புகளை ஏற்படுத்துவதாலும் அது சேர்ந்துள்ள மது பானங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. போதை தரும் பொருட்கள் குறிப்பாக ஆல்கஹால் பல சமூகக் கேடுகளுக்கு முழு முதற்காரணமான ஒன்று என்று கருதப்படுகிறது. போதை தரும் ஆல்கஹாலைக் குடித்து விட்டு வாகனங்கள் ஓட்டுவதாலேயே பெருமளவு விபத்துக்கள் நடைபெறுகின்றன. தெருச்சண்டைகளுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எதிரான குடும்ப வன்முறைகளுக்கும் குடிப்பழக்கம் கொண்ட ஆண்களே காரணம் என அறியப்பட்டுள்ளது. போதை தரும்

மதுபானங்களை அருந்தி அதன் தாக்கம் காரணமாகவே ஆண்களில் பலர் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளில் ஈடுபடுகிறார்கள். மது அதைக் குடித்தவர்களின் அறிவை மழுங்கச் செய்து அவனுக்கு எந்த விதமான ஒரு சமூகப் பண்போ, மரியாதையோ இல்லாமல் ஆக்கி விடுகிறது. அமெரிக்காவில், மதுவின் போதைக்கு அடிமையானவர்களே பொது இடங்களில் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் ஈடுபடுகிறார்கள். போதை தரும் மதுபானங்களை அருந்தக்கூடாது என்றும், சூதாட்டங்களில் ஈடுபடக்கூடாது என்றும் குர்ஆன் முஸ்லிம்களைத் தடுத்துள்ளது. இது பற்றி இறைவன் தனது மறையான திருக்குர்ஆனில் கூறுவதாவது...

> *இறை நம்பிக்கை கொண்டவர்களே ! மது சூதாட்டம், பலி பீடங்கள், குறிபார்க்கும் அம்புகள் ஆகியவை அருவெறுக்கத்தக்க ஷைத்தானியச் செயல்களாகும். அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். (குர்ஆன் 5:90)*

மதுப் பழக்கம் உடல் நலத்தைக் கெடுத்துப் பொருளா தாரத்தைச் சீர்குலைக்கிறது. போதை தரும் மதுவின் தாக்கத்தில் இருப்போர் வக்ர உணர்விற்கு உள்ளாகி பெண்களை மானபங்கம் செய்தல், கற்பழித்தல் போன்ற பாலியல் வன்செயல்களில் எளிதில் ஈடுபட்டு விடுகின்றனர்.

சூதாட்டமும் இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. அந்தப் பழக்கத்திற்கு அடிமையாகும் ஒருவனுக்குக் கிடைக்கும் லாபத்தை விட நட்டமே அதிகம். அது குடும்பப் பொருளா தாரத்தைச் சீர் குலைக்கிறது. லாட்டரி, குதிரைப் பந்தயம் எதுவாக இருந்தாலும் சூதாட்டமென்பது அதில் கலந்து கொள்ளும் பெரும்பாலோருக்கு நிச்சயம் நட்டத்தையே ஏற்படுத்துகிறது. அதிஷ்டம் கிடைப்பது கூட சந்தேகம்தான். இது போன்ற சூதாட்டங்களில் ஈடுபடுவோருக்கு உழைக்க வேண்டுமென்ற மனப்பான்மை போய் குருட்டு அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை ஏற்பட்டு விடுகிறது. விதி அவர்களை நோக்கி புன்னகை புரிகிறது. சூதாட்டம், படிப் படியாக அதில் ஈடுபடுபவனின் பொருளாதார வசதியைக் குறைத்து அவனை திவாலாக்கி கடனிலும், துயரத்திலும் தள்ளுகிறது.

அமெரிக்க நீதித்துறையின் நீதிப்பிரிவு நடத்திய தேசிய குற்றங்கள் பற்றிய ஆய்வில், 1996 ஆம் ஆண்டில் மட்டும் ஒவ்வொரு நாளும் சராசரியாக 2713 கற்பழிப்புக் குற்றங்கள் அந்த நாட்டில் நடைபெற்றுள்ளதாகவும் இந்தக் குற்றங்களில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலோர் போதைப் பழக்கங்களுக்கு அடிமையானவர்களே என்றும் தெரிய வந்துள்ளது. பெண்களை மானபங்கப்படுத்தப்படுவதும் இவர்களால் தான்.

# கற்பழிப்பு
# பாலியல் பயங்கரவாதம்

இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தில், கற்பழிப்பு ஒரு தனிக்குற்றமாக வகைப்படுத்தப்படவில்லை. அதன் காரணமாக அதற்கான தண்டனை என்ன என்பதிலும் சிறு குழப்பம் நிலவுகிறது. சிலர் தவறாக விபச்சாரத்துடன் கற்பழிப்புக் குற்றத்தையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கிறார்கள். ஆனால் உண்மையில், கற்பழிப்பு "ஹிராபா" எனப்படும் குற்றப் பிரிவுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதனை ஒரு கடுமையான குற்றம் என்றும் கூறலாம்.

"ஹிராபா" என்பதற்கு, மக்களைத் திடீரென்று தாக்கி, ஆயுதங்களைக் கொண்டு பயமுறுத்தி அல்லது பலப்பிரயோகம் செய்து அவர்களைக் கொல்வது, அவர்களது செல்வங்களை வன்முறைகள் மூலம் கைப்பற்றுவது என்று பொருளாகும். "செல்வம்" என்று குறிப்பாக சொல்லப் படுவதற்குக்காரணம் ஹிராபா என்ற இந்த வார்த்தை கொள்ளையுடன் தொடர்புடையது. ஆனால் கற்பழிப்பதற்காக பிறரைப் பயமுறுத்துபவர்களுக்கும் இந்த வார்த்தை பொருந்தும்.

இஸ்லாத்தில், ஹிராபா மிக மோசமான ஒரு பாவச் செயலாகும். திருக்குர்ஆனும், இஸ்லாமிய ஷரீஅத்தும் இதனைத் தடைசெய்துள்ளன. இந்தக் குற்றங்களுக்கான தண்டனை பற்றி இறைவன் குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

> எவர்கள் அல்லாஹ்வோடும் அவனுடைய தூதரோடும் போரிடுகின்றார்களோ, மேலும் கலகம் விளைவிக்க தீவிரமாக முயற்சி

செய்கிறார்களோ அவர்களுக்குரிய தண்டனை இதுதான். அவர்கள் கொல்லப்படவேண்டும் அல்லது தூக்கில் ஏற்றப்படவேண்டும். அல்லது அவர்களுடைய மாறுகை மாறுகால்கள் வெட்டப்பட வேண்டும். அல்லது அவர்கள் நாடு கடத்தப்படவேண்டும். இது அவர்களுக்கு உலகில் கிடைக்கும் இழிவாகும். மேலும், மறுமையில் அவர்களுக்கு இதை விடக்கடு மையான தண்டனை இருக்கிறது. எனினும் உங்கள் பிடியில் நீங்கள் அவர்களைக் கொண்டு வருவதற்கு முன்பு எவர்கள் பாவமன்னிப்புக் கோரினார்களோ நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். திண்ணமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பு வழங்கு பவனும் மிகுந்த கருணை உள்ளவனுமாவான்.

(குர்ஆன் 5:33-34)

## இஸ்லாமிய சட்டப்படி கற்பழிப்புக்கும் விபச்சாரத்திற்குமுள்ள வேறுபாடு

அல் தஸூகி என்ற இஸ்லாமிய மார்க்க அறிஞரும், இப்னு அல் அரபி என்ற நீதிபதியும், கற்பழிப்பை "ஹிராபா" (கொள்ளையடித்தல்) வுக்கு இணையாகக்கருத வேண்டும் என்பதற்குத் தக்க விளக்கங்கள் கொடுத்துள்ளனர். ஒரு குழுவினர் தாக்கப்பட்டு, அக்குழுவைச் சார்ந்த பெண்ணொருவர் கற்பழிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியை இப்னு-அல்-அரபி கூறிய போது, அங்கிருந்த சிலர் இந்தக் குற்றம் ஹிராபாவின் கீழ் வராது. ஏனெனில் இதில் ஆயுதம் எதுவும் பயன்படுத்தப்படவில்லை. பணம் பறிக்கப்படவில்லை என வாதம் செய்தனர். இதற்குப் பதிலளித்த இப்னு-அல்-அரபி "அந்தரங்க உறுப்புகளின் மீது புரியப்படும் "ஹிராபா" கொள்ளையடிப்பதை விட மோசமானது. எந்த பெண்ணும், கொள்ளையா அல்லத கற்பழிப்பா என்ற நிலை வரும்போது கொள்ளையே பரவாயில்லை என்று தான் நினைப்பாள்" எனக்

குறிப்பிட்டார். கற்பழிப்புக் குற்றங்களில் பெண்களின் கௌரவமும், பாதுகாப்பும் பறிக்கப்படுகிறது. எனவே இதனையும் கொள்ளையுடன் தான் ஒப்பிட வேண்டும் என்பதே சரியான விளக்கமாகும்.

எனவே கற்பழிப்பு ஒரு வன்முறைக் குற்றமாகும். பாலியல் வல்லுறவே இதில் பயன்படுத்தப்படுகின்றது ஆயுதமாகும். இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டவர்களின் நோக்கமும், உடல் ரீதியான நடவடிக்கைகளும் தான் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டுமே தவிர, கற்பழிக்கப்பட்டவர் சம்மதம் தெரிவித்ததாக யூகம் கொள்ளக் கூடாது. கற்பழிப்புக் குற்றத்தை நிரூபிக்க நான்கு சாட்சிகள் தேவையில்லை. ஆனால் பாகிஸ்தான், நைஜீரியா போன்ற நாடுகளிலுள்ள சில பழமை வாத ஷரீஅத் ஆலோசனை சபைகள் தவறான புரிதல் காரணமாக இந்தக் குற்றத்தை நிரூபிக்க நான்கு சாட்சிகள் தேவை என்று கருத்துத் தெரிவிக்கின்றன. அதற்கு மாறாக சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்கள், மருத்துவ ஆய்வுகள், ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே குற்றம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

கற்பழிப்பு போன்ற கிரிமினல் குற்றங்களை நிரூபிப்பது மிகவும் சிக்கலான ஒரு பணியாகும். இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டவர்கட்கு வாழ்வா அல்லது சாவா என்பது பிரச்னையாக இருப்பதால் இஸ்லாமிய நீதி மன்றங்கள் கவனமாகப் பரிசீலித்துத் தீர்ப்பளிக்க வேண்டும். எனவே குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையிலேயே குற்றச் செயலில் ஈடுபட்டாரா என்பதை நன்கு ஆய்வு செய்ய வேண்டும். பாலியல் உறவு இருவரது சம்மத்தில் அடிப்படையில் தான் நிகழ்ந்தது என்று நிரூபணம் ஆனால் அவர்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டதாகவே கருதப்பட்டு அதற்குரிய தண்டனை அவர்கட்கு வழங்கப்படவேண்டும்.

# இஸ்லாமிய அரசு - முஸ்லிம் நாடு வித்தியாசம் என்ன?

முஸ்லிம் நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகளில் தனி நபர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலும், அரசு நிர்வாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலும் இஸ்லாமியச் சட்டங்களே நடைமுறையில் உள்ளன என்ற தவறான நம்பிக்கை பெரும்பாலான மக்களிடையே நிலவி வருகிறது.

இதன் காரணமாக "முஸ்லிம் நாடுகளில்" நடக்கின்ற விஷயங்களை இஸ்லாத்துடன் தொடர்புபடுத்தி ஒப்பிடும் போக்கு இருந்து வருகிறது. இது உண்மைக்குப் புறம்பானதாகும்.

எனினும், விடுதலை பெற்ற "முஸ்லிம் நாடுகளில்" இஸ்லாமிய அரசுகளை நிறுவிட பல இஸ்லாமிய இயக்கங்கள் பாடுபட்டு வருகின்றன. இஸ்லாமிய மார்க்க அறிஞர்களும், இஸ்லாமிய இயங்கங்களும் பங்கு வகிக்கின்ற அல்லது அரசியல் அதிகாரம் முழுவதையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்ற நாடுகளே இஸ்லாமிய நாடுகள் எனப்படும்.

அண்மைக் காலமாக, சில முஸ்லிம் நாடுகள் தங்களை இஸ்லாமிய அரசுகள் என்று அறிவித்து ஷரிஅத் சட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளன. ஆனால் இஸ்லாமிய ஷரிஅத் சட்டங்கள், தண்டனைகள், பெண்களின் நிலை, மற்றும் வேறு சில சட்ட சம்பந்த விஷயங்களில் மட்டுமே நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இஸ்லாமியத் தண்டனைகள் என்ற பெயரில் கசையடி, கை கால்களை வெட்டுவது ஆகியன பெரிதும் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

சமூக நீதி, செல்வப் பங்கீடு, குடிமக்களின் மீதான அரசின்

பொறுப்புணர்வு, இரக்கம், கருணை போன்ற விஷயங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னரே, இது போன்ற தண்டனைகள் மிகவும் அரிதான சூழ்நிலைகளில் வழங்கப்பட வேண்டும். திருக்குர்ஆனின் போதனைகளுக்கும், இஸ்லாத்தின் கொள்கைகளுக்கும் முற்றிலும் மாறான, இது போன்ற தெளிவற்ற கடுமையான சட்டங்களை இந்த அரசுகள் நடைமுறைப்படுத்துவதோடு, அடக்கு முறை நடவடிக்கைகளை இஸ்லாத்தின் பெயரால் நியாயப்படுத்தவும் செய்கின்றன. இஸ்லாமிய அரசுகள் என்று தங்களை அறிவித்துக் கொண்ட இந்த நாடுகள், ஒரு குறிப்பிட்ட வகுப்பு, குடும்பம் அல்லது இராணுவ ஆட்சியை நியாயப்படுத்திடச் செய்கின்ற உபாயங்களே இவை என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

பெரும்பாலான இந்த முஸ்லிம் நாடுகளில் கொடுங்கோன்மை மிக்க மக்களை அடக்கியாளும் சர்வாதிகாரிகள் ஆட்சிப் பொறுப்பில் உள்ளனர். ஈராக்கிலிருந்த சதாம் ஹுஸைனை விடவும் இவர்கள் மோசமானவர்களாக உள்ளனர். அல்ஜீரியா, சிரியா, ஜோர்டான், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் உள்ள அதிபர்கள் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கட்டுப் படுத்துவதிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபடுகின்றனர். இந்த நாடுகளிலுள்ள சர்வாதிகாரிகள் தேர்தல்களில் மோசடி செய்தும், எதிர்கட்சித் தலைவர்களையும், அவர்களைப் பின் பற்றுபவர்களையும், அவர்களது குடும்பத்தினர் அனைவரையும் கைது செய்து சட்டரீதியான வாய்ப்புகளை அவர்களுக்கு அளிக்காமல் நீண்ட காலம் சிறையில் வைத்து சித்திரவதை செய்தும் மனித உரிமை மீறலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மாதிரியான அடக்கு முறைகள் அந்த நாடுகளில் நிலவுவதற்கு இஸ்லாம்தான் காரணம் என்ற தவறான முடிவுக்கு யாரும் வந்து விடக்கூடாது. இந்த நாடுகளில் தற்போது நடந்து வரும் சம்பவங்கள் இஸ்லாத்திற்கு முற்றிலும் விரோதமானவை என்பதை அடிப்படை இஸ்லாமியச் சட்டங்களைப் புரிந்து கொண்டாலே தெரியவரும்.

# முஸ்லிம்கள் அல்லது முஹம்மதியர்கள்

முஸ்லிம்கள், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை வணங்குவதில்லை. அவர்கள் இறைவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட இறுதித் தூதர் என்றும், மற்ற இறைத் தூதர்களுக்கு ஒப்பானவர்களென்றும் அவர்களும் ஒரு மனிதர் தான் என்றும் முஸ்லிம்கள் நம்புகின்றனர். ஆனால் மக்களில் சிலர் முஸ்லிம்கள், முஹம்மது நபியை (ஸல்) வணங்குகிறார்கள் என்று தவறாகக் கருதிக் கொண்டு முஸ்லிம்களை முஹம்மதியர்கள் என்று அழைக்கிறார்கள்.

இயேசு நாதரைப் போல (ஜீசஸ்) முஹம்மது நபி(ஸல்) அவர்கள் தாம் ஒரு போதும் இறை "அந்தஸ்து பெற்றவர்" என்று உரிமை கொண்டாடியதில்லை. எல்லாம் வல்ல இறைவன் ஒருவனையே வணங்குமாறு அவர்கள் மக்களை வேண்டிக் கொண்டார்கள். அதனையே தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். தாங்கள் மக்களால் கடவுளாகக் கருதப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே, நபிகள்நாயகம்(ஸல்) அவர்கள் எப்போதும் தன்னை இறைவனின் அடிமை என்றும் தூதர் என்றும் கூறிக் கொண்டேயிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவை கிறிஸ்துவர்கள் சித்தரித்தது போன்று என்னைச் சித்தரிக்காதீர்கள் என்றும் கூறினார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இறைவனால் தேர்வு செய்யப்பட்ட இறுதி நபியாவார்கள். இறைவன் தனது செய்தியை மக்களிடையே எடுத்துச் சொல்ல அவர்களை இவ்வுலகிற்கு அனுப்பினான். அவர்கள் சொல்லில் மட்டுமல்ல, செயலிலும் மக்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கொண்டிருந்த குறைகாண இயலாத நேரிய அற நெறிப்பண்புகள் காரணமாகவும் இறைவனின் உண்மைச் செய்தியை மக்களிடம் கொண்டு சென்றதன் காரணமாகவும்,

இஸ்லாத்தின் ஓரிறைக் கொள்கையை பிரச்சாரம் செய்ததன் காரணமாகவும் மக்கள் அவர்களைப் பெரிதும் நேசித்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பின்பற்றிட அனைத்து விதமான முயற்சிகளிலும் ஈடுபடுகின்ற முஸ்லிம்கள் அவர்களை எந்த முறையிலும் வணங்குவது இல்லை. இறைவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட எல்லாத் தூதர்களையும் மதித்திடுமாறு திருக்குர்ஆன் முஸ்லிம்களை அறிவுறுத்துகிறது. எனினும், மதிப்பளிப் பதையும் அன்பு செலுத்துவதையும் அவர்களை வணங்குவதாகக் கருத முடியாது. தொழுகையும் (வணக்கமும்) பிரார்த்தனையும் இறைவன் ஒருவனுக்கு மட்டுமே உரியதாகும் என்பதை முஸ்லிம்கள் தெளிவாக உணர்ந்தேயிருக்கிறார்கள்.

உண்மையில், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களையோ அல்லது வேறு யாரையோ இறைவனுக்குப் பதிலாக வணங்குவதை இஸ்லாம் மன்னிக்கமுடியாத செயலாகக் கருதுகிறது. ஒருவன் முஸ்லிம் என்று சொல்லிக் கொண்டு இறைவன் ஒருவனைத் தவிர வேறு யாரையாவது வணங்கினால் அவன் முஸ்லிம் என்ற தகுதியை இழந்து விடுவான். முஸ்லிம்கள் அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும் என்பதே நம்பிக்கையின் முழுப் பரிமாணமாகும்.

இஸ்லாம், முஸ்லிம் என்ற வார்த்தைகள் குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள வார்த்தைகளாகும். திண்ணமாக அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாமே (3:19) என்று குர்ஆன் கூறுகிறது. இதற்கு முன்னரும், இதிலும் அவனே உங்களுக்கு முஸ்லிம் எனப் பெயரிட்டான் (22:78) எனவும் குர்ஆன் கூறுகிறது. அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் கீழ்ப்படியாதீர்கள் என்றே ஆதம் நபி(அலை) முதல் முஹம்மது நபி(ஸல்) வரையுள்ள அனைத்து தீர்க்க தரிகளும் வழங்கிய செய்தியாகும். நபித்துவத்தின் இறுதியில் வந்த முஹம்மது நபி(ஸல்) அவர்களின் காலத்தில் தான் இந்தச் செய்தி முழுமை பெற்றது. இது பற்றி குர்ஆனில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

> இன்றைய தினம் உங்கள் மார்க்கத்தை உங்களுக்காக நிறைவு செய்து விட்டேன். எனது

*அருளை உங்களுக்கு முழுமைப்படுத்தி விட்டேன். இஸ்லாத்தை உங்களுக்கான வாழ்க்கை நெறியாகப் பொருந்திக் கொண்டேன்.*

*(குர்ஆன் 5:3)*

எனவே இஸ்லாத்தை முஹம்மதானிஸம் என்றும் முஸ்லிம்களை முஹம்மதியர்கள் என்றும் அழைப்பது தவறாகும். முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இஸ்லாத்தைத் தோற்றுவித்தவர்கள் அல்ல. மாறாக அவர்கள் இஸ்லாத்தின் இறுதித் தூதராவார்கள் என்பதே உண்மையான நிலையாகும்.

# ஷியா - சுன்னி முஸ்லிம்கள்

முஸ்லிம்களிடையே உள்ள ஷியா - சுன்னிப் பிரிவுகள் முஸ்லிமல்லாதவர்கள் மத்தியில் சில சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளன. இந்தக் கேள்விகளுக்கு சரியான விளக்கங்கள் அளிக்கப்படாமலேயே உள்ளன. இதற்கு முக்கியக் காரணம் இந்தப் பிரிவுகளுக்கான வரலாற்று ரீதியான காரணங்களை முஸ்லிம்களே தெளிவாக அறிந்திருக்க வில்லை அல்லது சரியான வரலாற்று ரீதியில் இதுபற்றி விளக்கம் அளித்திடும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை என்பதேயாகும்.

ஷியா - சுன்னி என்ற இரு பிரிவு முஸ்லிம்களுக்கு மிடையில் இஸ்லாத்தின் அடிப்படை கடமைகளான நம்பிக்கை, விசுவாசம், தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் புனிதப்பயணம் ஆகியவற்றில் எந்த விதமான வித்தியாசமும் இல்லை. இஸ்லாத்திலுள்ள இந்த இரு பிரிவுகளுக் கிடையிலான வேறுபாடுகளுக்கு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறந்த இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் பிரச்னைகளே காரணங்களாகும். பல நூற்றாண்டுகளாக இந்த வேறுபாடுகள் சமயத்தின் பல்வேறு நிலைகளிலும் அம்சங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தி இப்பிரிவுகளைப் பின்பற்றுவோர்க்கு ஆன்மீக முக்கியத் துவத்தையும் ஏற்படுத்திவிட்டது.

## ஆரம்பம்–தலைமை பற்றிய பிரச்னை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் மறைவிற்குப் பின்னர் வாரிசாக வருவதற்கு யார் சட்டரீதியான தகுதியுடையவர்கள் என்பதில் ஏற்பட்ட பிரச்னை தான் ஷியா–சுன்னி பிரிவுகள் தோன்றிடக் காரணமாக இருந்தது. தகுதியான ஒருவர் தாம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற பெரும்பாலான நபித்தோழர்களின் முடிவினை சுன்னி முஸ்லிம்கள் ஏற்றுக் கொண்டனர். அதன்படியே, நபிகள்

நாயகம்(ஸல்) அவர்களின் உற்ற நண்பரும், ஆலோசகருமான ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்கள் இஸ்லாமியப் பேரரசின் முதலாவது கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். "சுன்னி" என்ற அரபிச் சொல்லுக்கு "நபிகளாரின் வழி முறையைப் பின்பற்றக் கூடியவர்கள்" என்று பொருளாகும்.

ஆனால் இதற்கு மாறாக வேறு சிலர் இஸ்லாமிய அரசின் தலைமை நபிகளாரின் குடும்பத்தைச் சார்ந்தவர்களிடம், அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்களிடம் அல்லது இறைவனால் நியமிக்கப்பட்ட இமாம்களிடம் இருக்க வேண்டுமென வாதிட்டார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் இறப்பிற்குப் பின்னர், தலைமைப் பொறுப்பினை அவரது மருமகனான ஹழ்ரத் அலீ(ரலி) அவர்களிடமே ஒப்படைக்க வேண்டுமென்று இவர்கள் வலியுறுத்தினார்கள். வரலாற்று காலம் முழுமையும் இந்த முஸ்லிம்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீபாக்களை அங்கீகரிக்கவில்லை. அதற்குமாறாக, நபிகள் நாயகம்(ஸல்) அவர்களாலும், இறைவனாலும் நியமிக்கப்பட்டதாகத் தாங்கள் நம்பிய இமாம்களையே அங்கீகரித்தார்கள். "ஷியா" என்ற அரபி வார்த்தைக்கு மக்கள் ஆதரவு பெற்ற கட்சி அல்லது குழு" என்று பொருளாகும். "ஷியா அத் அலி" அல்லது அலியின் கட்சி என்ற வார்த்தைகளின் சுருக்கமே "ஷியா" என்பதாகும். அவர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் குடும்பத்தினரைப் பின்பற்று பவர்கள் (அஹ்ல்-அல்-பைத்) என அழைக்கப்பட்டனர்).

## பரவல்

உலகிலுள்ள முஸ்லிம்களில் 85 சதவிகிதத்தினர் "சுன்னி" பிரிவைச் சார்ந்தவர்களே! முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் 56 நாடுகளில் ஈரான், ஈராக், பஹ்ரைன் அஸர்பைஸான் ஆகிய நான்கு நாடுகளில் மட்டுமே ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். மேலும், இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஏமன், சிரியா, லெபனான் ஆகிய நாடுகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக் கையில் ஷியா முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

## சமய மரபுகளில் காணப்படும் வேறுபாடுகள்

ஆரம்ப காலங்களில் ஏற்பட்ட அரசியல் தலைமைத்துவம் பற்றிய பிரச்சினைகள் மட்டுமின்றி சமய மரபுகளையும், சடங்குகளையும், கிரியைகளையும் கடைப்பிடிப்பதிலும் இரு பிரிவுகளுக்குமிடையே வேறுபாடுகள் உள்ளன. இந்த வேறுபாடுகளுக்கிடையிலும், ஷியா மற்றும் சுன்னி பிரிவு முஸ்லிம்கள் இஸ்லாமிய அடிப்படைக்கொள்கைகளில் ஒத்த கருத்தையே கொண்டுள்ளனர். இஸ்லாமிய நம்பிக்கையின் அடிப்படையில் அனைவரும் சகோதரர்களாகவே கருதப்படு கின்றனர். உண்மையில், முஸ்லிம்கள் யாரும் தாங்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்கள் என்று அடையாளம் காட்டிக் கொள்வதில்லை. முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுவதையே விரும்புகின்றனர்.

இமாம் என்பவர் இயற்கையிலேயே பாவமற்றவர் என்றும், இறைவனின் நேரடியான அதிகாரத்தை அவர் பெற்றிருப்பதால் அவர் தவறிழைக்கமாட்டார் என்றும் ஷியாக்கள் நம்புகின்றனர். எனவே ஷியா முஸ்லிம்கள் இமாம்களை ஞானிகள் என்று கருதி அவர்கள் தங்களுக்காக இறைவனிடம் வேண்டுவார்கள் என்று நம்பிக்கை கொண்டு அவர்களது அடக்கஸ்தலங்களுக்கும் நினைவிடங்களுக்கும் புனிதப் பயணம் மேற்கொள்கிறார்கள்.

பரம்பரை அடிப்படையில் வந்த ஆன்மீகத் தலைவர் களுக்கோ அல்லது சமயத் தலைமைக்கோ இஸ்லாத்தில் இடமில்லை என்று சுன்னி முஸ்லிம்கள் வாதம் புரிகின்றனர். ஆகவே ஞானிகளைப் பூஜிப்பதற்கோ அல்லது அவர்கள் பொருட்டால் இறைவனிடம் வேண்டுதற்கோ இஸ்லாத்தில் வழியில்லை என்பதும் அவர்களின் நிலைப்பாடாகும். சமூகப் பொறுப்புக்கு வருவதென்பது ஒருவரது பிறப்புரிமை அல்ல. மாறாக ஒரு பொறுப்புக்கு வருவதும், பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவதும் அவர் மக்களிடம் பெற்ற நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்ததாகும் என்பது சுன்னி முஸ்லிம்களின் கருத்தாகும்..

## மோதல்களும், போராட்டங்களும்

ஷியா – சுன்னி முஸ்லிம்களுக்கிடையிலான இந்தப்பிரிவு பாகிஸ்தான், இந்தியா, சவூதிஅரேபியா போன்ற பல நாடுகளின் சமூக, அரசியல் தளங்களிலும் விரிவடைந்துள்ளது. லெபனான், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ஜனநாயகப் பூர்வமான முறையில் தேர்தல்கள் நடைபெறும் போது இந்தப் பிளவுகள் பல தரப்பட்ட வடிவங்களிலும், முறைகளிலும் வெளிப்படுகிறது. சவூதி அரேபியா, சிரியா போன்ற நாடுகளில் இந்த இரு பிரிவுகளுக்கிடையே எப்போதும் மோதல் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. பத்தாண்டுகளுக்கும் மேலாக போரில் ஈடுபட்டிருந்த ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் இரு பிரிவினருக்குமிடையில் ஆயுதம் தாங்கிய மோதல்கள் நிகழ்ந்துள்ளன. இந்தமோதல்களை மையமாக வைத்து அரசியல் ஆதாயம் தேடும் முயற்சிகளும் அந்நாடுகளில் நடைபெற்று வருகின்றன. இந்தியாவிலுள்ள லக்னோ போன்ற இடங்களில் முஹர்ரம் ஊர்வலம் செல்லும் பாதை பற்றிய மிகச் சிறிய பிரச்னைக்குக் கூட மோதல்கள் நடைபெற்றுள்ளன. சில சுயநல சக்திகள் இந்த மோதல்களைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

மிக அதிகமான மக்களால் கடைப்பிடிக்கப்படும் இஸ்லாத்தில் இது போன்ற வேற்றுமைகள் உருவாகிட வாய்ப்புகள் உள்ளன. இஸ்லாம் பிற நம்பிக்கைகளை ஒடுக்குகின்ற ஒரே கல்லில் வார்த்தெடுக்கப்பட்ட ஒரு இறுக்கமான சமயமல்ல. மாறுபட்ட இன, மொழி, சமூக அரசியல் சூழ்நிலைகளில் தன்னை உட்படுத்திக் கொண்டு வளர்ந்த இஸ்லாம், மாறுபட்ட கலாச்சாரங்களின் ஒரு தொகுப்பாகவே உருவாகி வந்துள்ளது. இதில் வியப்படைய ஒன்றுமில்லை. மத்தியதரைக் கடலிலுள்ள கஸபிளாங்காவிலிருந்து பசிபிக்கிலுள்ள புருணை வரை பரவியுள்ள இஸ்லாம் இவ்வளவு பெரிய பூகோளப்பரப்பில் ஒரே மாதியான சமூகக் கலாச்சாரத்தைக் கொண்டிருக்க முடியாது. இஸ்லாம் அப்படி இருப்பதாக உரிமை பாராட்டவும் இல்லை. முஸ்லிம்களை இணைக்கும் ஒரே கயிறு இஸ்லாமியக் கொள்கையேயாகும். இந்த அடிப்படையில்தான் ஷியா – சுன்னி வேறுபாடுகளைப் பார்க்க வேண்டும்.

# உருது ஒரு அந்நிய மொழியா?

உருது மொழியின் மேம்பாட்டிற்காகச் செய்யப்படும் நடவடிக்கைகள் ஒரு அன்னிய மொழிக்கு வழங்கப்படும் சலுகை என்று பலர் கருதுகின்றனர். இதுவும் ஒரு கற்பனையான குற்றச்சாட்டேயாகும். இந்தியாவின் கங்கைச் சமவெளியில் வசிக்கும் முஸ்லிம்களின் அடையாளத்தை வெளிப்படுத்தும் சில அடிப்படை அம்சங்கள் உருது மொழியில் இருக்கக் கூடும். அது ஒரு தூய்மையான சமஸ்கிருத இலக்கணத்தைக் கொண்ட ஒரு இந்தோ ஆரிய மொழியாகும். ஹிந்தி, சமஸ்கிருதம், பிரஜ்பாஷா, பிரக்ரித், பாலி ஆகிய மொழிகளுடன் தொடர்புடைய உருது மொழி, பல இனக் குழு மக்களைக் கொண்டிருந்த மொகலாய இராணுவப் பாசறைகளில் உருவான ஒரு மொழியாகும்.

இந்தியாவில் வாழும் அனைத்து முஸ்லிம்களும் உருது மொழி பேசுபவர்களாக இல்லை. அது போல் அம் மொழியினைப் பேசுகின்ற அனைவரும் முஸ்லிம்கள் அல்ல. (கடந்த காலங்களில் அம்மொழியின் வளர்ச்சிக்காகத் தங்களது பங்களிப்பைச் செய்திட்டோர் உட்பட) உருது மொழிக்கு ஒரு வலுவான சமயச் சார்பற்ற இலக்கிய மரபு உண்டு. ஏராளமான ஹிந்துக்கவிஞர்களும், எழுத்தாளர்களும், நாடக ஆசிரியர்களும், கட்டுரையாளர்களும் மிகப் பெரிய அளவில் அம் மொழிக்கு தங்களது பங்களிப்பைச் செய்துள்ளனர். பிற இந்திய மொழிகளைக் காட்டிலும், உருது மொழியில் தான் பகவத்கீதை அதிக எண்ணிக்கையில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. முன்னணி உருது எழுத்தாளர்களான ஆனந்த நாராயணன் முல்லா, மாலிக்ராம், கிருஷன் ஷந்தர், பிஷேஷர் பிரதீப், மனோரமாதிவான், பிரேம்சந்த், ரகுபதிஃசஹாய் பிராக், கோராக்புரி, ராஜ் நாராயண் ஷக் பாஸ்ட், கோபிசந்த் நாரங் ஆகியோர் ஹிந்து சமயத்தைச் சார்ந்தவர்களேயாவர்.

மத்திய கிழக்கு நாடுகளுடனோ அல்லது அரபி மொழியுடனோ உருது மொழிக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை. பாகிஸ்தானில் அம்மொழி தேசிய மொழியாக உள்ளது என்பது உண்மையே. ஆனால் அங்குள்ள பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான் மற்றும் எல்லைப் புற மாகாணங்களில் அந்தந்த மாநில மொழிகளையே மக்கள் பேசுகின்றனர். தவிரவும், பாகிஸ்தானின் வட்டார மொழிகளில் ஒன்றான சிந்தி மொழி, இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது. ஒருவருக்கொருவர் சந்தேகம் கொள்வதற்கு காரணமாக இருப்பதை விடவும் பரஸ்பரப் புரிந்துணர்வே நமது பொதுவான பரம்பரைக் கொள்கை யாகும். உருது மொழியின் பாரசீக லிபியும் கூட அந்நியமான ஒன்றல்ல. சிந்தி, பஞ்சாபி, காஷ்மீரி ஆகிய மூன்று இந்தி மொழிகளும் பாரசீக லிபியையே கொண்டுள்ளன. இதற்கு ஏதேனும் ஆதாரம் தேவைப்படுபவர்கள் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள நூறு ரூபாய் நோட்டில் காணப்படும் பல்வேறு மொழிகளின் வரி வடிவங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

நூறாண்டுகள் பழைமையான இன்றைக்கும் வெளி வந்து கொண்டிருக்கிற உருதுப் பத்திரிகையான "மஸ்தானா ஜோகி"யின் உரிமையாளர் ஒரு ஹிந்துவே. தற்போது அதிக எண்ணிக்கையிலான மக்களால் படிக்கப்படும் உருதுப் பத்திகையான "ராஷ்ட்ரிய சஹாரா" வின் வெளியீட்டாளர் முஸ்லிமல்லாத ஒருவரே. இந்தப் பத்திரிகை சஹாரா குழுவினரால் வெளியிடப்படுகிறது.

## இஸ்லாத்தில் சமயத் தலைமை இல்லை

இஸ்லாத்தில் இமாம், மௌலவி, காழி, முப்தி ஆகிய பொறுப்புகள் வகிப்போரை "மதகுரு" என்று சிலர் கருதிக் கொண்டு குழப்பமடைகிறார்கள். ஒரு இமாம் என்பவர் பள்ளி வாசலில் தொழுகையினை தலைமையேற்று நடத்துகிறார். முப்தி என்பவர் இஸ்லாமிய சமய சம்பந்தப்பட்ட

பிரச்னைகளை சமய அடிப்படையின் படி ஆராய்ந்து பார்த்து தனது கருத்துக்களை வழங்குகிறார். காழி என்பவர் இஸ்லாமிய நீதி மன்றத்திற்குத் தலைமையேற்று தன்னிடம் கொண்டு வரப்பட்ட பிரச்னைகளுக்குத் தீர்ப்பு அளிக்கிறார். மௌலவி என்பவர் ஒரு மார்க்க அறிஞர். அவர் குர்ஆனை பிறருக்குப் போதிக்கிறார்.

இவர்கள் யாரும் மனிதர்களை விட உயர்ந்தவர்கள் அல்லர். இவர்கள் இறைவனுக்கும் மனிதர்களுக்குமிடையில் முகவர்களாகவோ அல்லது மத்தியஸ்தர்களாகவோ கருதப்படுவதில்லை. ஒரு இமாம் முன்னிலையில் எந்த ஒரு முஸ்லிமும் ஒப்புதல் வாக்கு மூலம் அளிப்பதில்லை.

ஒரு மனிதன் தான் செய்திட்ட பாவங்களுக்காக இறைவனிடம் தான் பிரார்த்தனை செய்து மன்னிப்பு கோர முடியும். குர்ஆனின் ஒரு பகுதியை மனப் பாடம் செய்த எந்த ஒரு முஸ்லிமும் தொழுகையை தலைமையேற்று நடத்தலாம். சுன்னத், கிரஹப் பிரவேசம் போன்ற குடும்ப நிகழ்ச்சிகளுக்கோ அல்லது புதிய வியாபாரம் துவக்க நிகழ்ச்சிகளுக்கோ இவர்கள் யாரையும் அழைக்க வேண்டியதில்லை. பள்ளி வாசல்களில் யாருக்கும் இருக்கைகள் தனியாக ஒதுக்கி வைக்கப்படுவதில்லை.

முதலில் வந்தவர்கள் முதலில் என்ற அடிப்படையிலேயே தொழுகையின் போது நின்று கொள்ள வேண்டும். புனிதமானவர் என்று இஸ்லாத்தில் யாரும் இல்லை. எல்லோரும் ஒரே இடத்தில் இருந்து கொண்டு ஒரே தட்டிலேயே உண்கிறார்கள். "உங்களில் அதிக இறையச்சம் கொண்டவரே இறைவனின் பார்வையில் அதிகக் கண்ணியம் வாய்ந்தவர்" என்று திருக்குர்ஆன் வரிகளை இங்கு நினைவு கூறுவது பொருத்தமாக இருக்கும்.

# பள்ளிவாசல் (மஸ்ஜித்)

1. பள்ளிவாசல் என்பது முஸ்லிம்கள் ஒன்று கூடித் தொழுகை நடத்தும் ஒரு இடமாகும். இங்கு தலை சாய்த்து இறைவனைத் தொழுகின்றனர்.

2. பல பள்ளிவாசல்களில் குப்பாயங்களும், மினாராக்களும், தொழுவதற்கான பெரிய அறைகளும் உள்ளன.

3. எந்த ஒரு சிலையோ, உருவமோ, புனிதச் சின்னமோ, புனித நூலோ தொழுகையில் ஈடுபட்டிருப்போரின் முன்னால் வைக்கப்பட்டிருக்கவில்லை.

4. பள்ளிவாசலில் நுழைய கட்டணம் எதுவும் இல்லை. அங்கு தொழுகை புரியும் போது தேங்காய், இனிப்புகள், நறுமணப்பத்திகள் போன்ற பொருட்கள் எதுவும் வைக்கப்படுவதில்லை.

5. பள்ளிவாசல் முஸ்லிம்கள் தொழுகை நடத்துகின்ற ஒரு இடமாக மட்டுமின்றி, ஒரு தகவல் நிலையமாகவும், கல்வி நிலையமாகவும், பிரச்சினைகளைத் தீர்க்கின்ற ஒரு இடமாகவும் பயன்படுகின்றது.

6. முஸ்லிம்கள் வரிசையாக நின்று கொண்டு தொழுகை நடத்துகிறார்கள். தொழுகை நடைபெறும் போது எந்த ஒரு மனிதருக்கும் சிறப்புச் சலுகை அளிக்கப்படுவதில்லை. ஒருவருடைய சமூக, அரசியல், பொருளாதார தகுதிக்குத் தகுந்தாற்போல் அவருக்கு முன்வரிசைகளில் இடம் எதுவும் ஒதுக்கப்படுவதில்லை.

7. வானில் சூரியன் தெரிகின்ற நிலைமைக்கு ஏற்ப பள்ளிவாசலின் தொழுகை நேரம் நிர்ணயிக்கப்படுகிறது.

அ) சூரிய உதயத்திற்குச் சிறிது நேரத்திற்கு முன்னர் காலைத் தொழுகை (பஜ்ர்) நிறைவேற்றப்படுகிறது.

ஆ) பிற்கல் தொழுகை (லுஹர்) சூரியன் சரியத் துவங்கும் போது நிறைவேற்றப்படுகிறது.

இ) மூன்றாவது தொழுகையான அஸர், பொருட்களின் நிழல் அவற்றின் நீளத்தை விட இரண்டு மடங்கு அதிகமாகத் தெரியும் போது நிறைவேற்றப்படுகிறது.

ஈ) சூரியன் மறைந்த உடன் (மாலைத்தொழுகை) மக்ரிப் தொழுகை நிறைவேற்றப்படுகிறது.

உ) ஐந்தாவது தொழுகையான இரவுத் தொழுகை (இஷா) சூரியன் மறைந்து 90 நிமிடங்களுக்குப் பிறகு முற்றிலும் இருள் சூழ்ந்த பின்னர் நடைபெறுகிறது. தொழுகை நேரம் மிகச் சரியான முறையில் பின்பற்றப்படுகிறது எந்த ஒரு முக்கிய மனிதரின் வசதிக்காகவும் நிர்ணயிக்கப்பட்ட தொழுகை நேரம் மாற்றப்படுவதில்லை.

8) இமாம் தொழுகையைத் தலைமை தாங்கி நடத்துகிறார். பள்ளிவாசலில் எந்த ஒரு அர்ச்சகரும் இல்லை. கற்றறிந்த ஒருவர் அல்லது சமூகத்தில் நன் மதிப்பைப் பெற்ற ஒருவர் தொழுகையைத் தலைமை தாங்கி நடத்தலாம்.

9. முஸ்லிமல்லாதவர்களும் பள்ளிவாசலினுள் வர அனுமதிக்கப்படுகின்றனர்.

10. விலங்குகளைப் பலியிடுவது பள்ளித் தொழுகையின் ஒரு அம்சமாக இல்லை.

11. மது பானங்கள் அருந்திவிட்டு பள்ளிக்கு வரக்கூடாது. பச்சை வெங்காயமோ அல்லது வெள்ளைப்பூண்டையோ உண்டவர்கள், சுத்தமாக வாயினைக் கழுவிய பின்னரே பள்ளிவாசலுக்குள் நுழைய முடியும்.

12. ஒவ்வொரு முறை தொழுகை புரியும் போதும் முஸ்லிம்கள் ஒலுச் செய்துவிட்டே பள்ளிவாசலுக்குள் நுழைய வேண்டும். (ஒலு என்பதற்கு தண்ணீர் கொண்டு உடலின் குறிப்பிட்ட அவயங்களைக் கழுவுதல் என்று பொருள்)

# பள்ளிவாசல் - சில முக்கிய அம்சங்கள்

## தொழுகை அறை

தொழுகை அறை "முஸல்லா" என்றும் "விரிப்புப்பகுதி" என்றும் அழைக்கப்படுகிறது. இந்தப் பகுதியில் தான் தொழுகை நடைபெறுகிறது (தலை சாய்த்து இறைவனைத் தொழுதல்)

மிஹ்ராப்: பள்ளிவாசலின் சுவரின் அரைவட்டவடிவில் அமைந்துள்ள ஒரு மாடம். மக்காவில் கஅபா இருக்கும் திசையைக் காட்டும் "கிப்லா" என்று இது அழைக்கப்படுகிறது. இதனை நோக்கியே முஸ்லிம்கள் தொழ வேண்டும். சுவரில் அமைந்துள்ள இந்த அரை வட்ட வடிவ மாடம் "கிப்லா சுவர்" என அழைக்கப்படுகிறது.

மின்பர்: மின்பர் என்பது தொழுகையைத் தலைமை தாங்கி நடத்தும் இமாம் நின்று கொண்டு உரையாற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு உயர்ந்த மேடையாகும். வெள்ளிக் கிழமைகளில் மிக அதிக எண்ணிக்கையில் மக்கள் தொழ வருகின்ற போது இந்த மின்பர் பயன்டுத்தப்படுகிறது.

## சுத்தம் செய்யும் வசதிகள்

பள்ளிவாசல்களில் தண்ணீர்த் தொட்டிகளோ அல்லது வரிசையாக தண்ணீர்க் குழாய்களோ அமைக்கப்பட்டிருக்கும். தொழுகைக்கு முன்னர் முஸ்லிம்கள் தண்ணீர் கொண்டு உடல் உறுப்புகளைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். (ஒலுச் செய்தல்) பள்ளி வாசலுக்குள் செருப்புகள் அணிந்து கொண்டு செல்ல அனுமதி இல்லை பள்ளிவாசலுக்கு தொழுகைக்காக வருபவர்களும், பார்வையாளர்களும் தங்களைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

## இந்த முழு உலகமும் ஒரு பள்ளிவாசலே

இந்த முழு உலகமும் ஒரு பள்ளிவாசல் தான் என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.அசுத்தமான இடம் என்று உலகின் எந்தப்பகுதியிலும் இல்லை. உலகின் எந்த இடத்திலும் தொழுகை புரியலாம் என நபிகளாருக்கு

இறைவன் அனுமதி வழங்கியுள்ளான். எனவே நபிகளாரின் வழியைப் பின்பற்றி முஸ்லிம்கள் உலகின் எந்த இடத்திலும் தொழலாம். முஸ்லிம்கள் பூங்காக்கள், சாலையோரங்கள், ரயில்வே பிளாட்பாரங்கள், விமான நிலைய ஓய்வுப் பகுதிகள் எனப் பல இடங்களிலும் தொழுகை நடத்துவதை நாம் பார்க்க முடியும். முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் இந்த முழு உலகமும் வணங்குவதற்குரிய இடம் தான். அவர்கள் எங்கிருந்தாலும் நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில் இறைவனை நினைவு கூர்ந்து தொழுகிறார்கள்.

இந்த சிறிய விளக்கத்திற்கு அப்பாற்பட்டு, நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அமுத மொழிகளில் (ஹதீஸ்) இதற்கு மிக முக்கியமான விளக்கமும் தரப்பட்டுள்ளது. ஒரு முஸ்லிம் பள்ளிவாசலை அமைதியான இடமாகக் கருதுகிறான். மக்கள் அதனுள் தூய்மையான நிலையிலேயே நுழைகின்றனர். அவர்களது உடலும், அணிந்துள்ள ஆடைகளும், இதயங்களும், உள்ளங்களும் தூய்மையாகவே உள்ளன. இறைவனுக்குப் பணிந்து பணியாளர்களாகவே அவர்கள் பள்ளிவாசலுக்குள் செல்கின்றனர். பள்ளிவாச லுக்குள் நுழையும் போது அஸ்ஸலாமு அலைக்கும் (உங்களு இறைவனின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) என்று ஏற்கனவே அங்கு வந்திருப்பவர்கட்கு முகமன் உரைக்கிறார்கள். புதிதாக வந்தவர்கள் அறிவிக்கும் அமைதி உறுதிமொழி இது. பள்ளிவாசல் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் பிரதிபலித்து தௌஹீது (ஓரிறைவன்) மனித சகோதரத்துவம் ஆகிய இரு செய்திகளையும் வழங்குகிறது.

இவ்வாறு உலகமே ஒரு பள்ளிவாசலாக இருக்க வேண்டுமென்று நபிகளார் விரும்புகின்றபோது இந்த உலகத்தையும் ஒரு சமாதான பூமியாக மாற்றவேண்டு மென்றும் வலியுறுத்தினார்கள். அனைத்து மக்களும், அவர்கள் உலகத்தின் எந்தப் பகுதியில் இருந்தாலும் அமைதியினைப் பெற வேண்டும் என்பதே நபித்துவத்தின் குறிக்கோளாகும். ஒரு பள்ளிவாசல் நல்லிணக்கத்தையும், மனித சகோதரத் துவத்தையும் பரப்புவது போல், இந்த உலகமும் ஒரு பள்ளி வாசலைப் போல் இருந்தால் அமைதி என்ற உயரிய கொள்கையை அடையமுடியும்.

# தொழுகை அழைப்பு

உலகெங்கிலுமுள்ள அனைத்துப் பள்ளிவாசல்களிலும் ஒரு நாளைக்கு ஐந்து தடவைகள் தொழுகை நடைபெறுகிறது. ஒரு முஸ்லிம் ஒரு நாளைக்கு ஐந்து தடவைகள் தொழுவது, அதுவும் பள்ளிவாசலிலேயே அத்தொழுகையினை நிறை வேற்றுவது சிறப்பானதாகும். மக்களுக்கிடையே சமூக பந்தங்களை வலுப்படுத்தவும், அவர்கள் ஒருவரையொருவர் அறிந்து கொண்டு மகிழ்ச்சியையும், துயரத்தையும் பகிர்ந்து கொள்ளவும் அது உதவும் என்பதால் பள்ளிவாசல்களில் தொழுகை புரிய வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மக்களைத் தொழுகைக்கு அழைக்கும் பொருட்டு பள்ளிவாசல் மினாராக்களிலிருந்து பாங்கு (அழைப்பு) சொல்லப்படுகிறது. பிற சமய அன்பர்கள் பலர் இந்தத் தொழுகை அழைப்பே வழிபாடு அல்லது தொழுகை எனத் தவறாகக் கருதி குழப்பம் அடைகிறார்கள். சிலர் முஸ்லிம்களின் தொழுகை ஒலிபெருக்கி மூலமாகத் தான் நடைபெறுகிறது எனவும் நினைக்கிறார்கள்.

இன்னும் சிலர் மாமன்னர் பாதுஷா அக்பர் ஆட்சி புரிந்து ஆண்டுகள் பல ஆன பின்னரும், அவரை ஏன் முஸ்லிம்கள் அழைக்கிறார்கள் என வியப்புடன் கேள்வி எழுப்புகின்றனர். ஒலி பெருக்கி மூலமாகச் சொல்லப்படும் அழைப்பு இரண்டு மூன்று நிமிடங்களில் முடிந்து விடுகிறது.

ஜாகர்த்தாவிலிருந்து கஸபிளங்கா வரை உள்ள பள்ளி வாசல்களின் மினாராக்களிலிருந்து ஒலிக்கப்படும் அழைப்பின் வாசகங்களை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே அமைத்துத் தந்துள்ளார்கள். கிறிஸ்துவ தேவாலயங்களில் மணி அடிப்பதைப் போன்றும், கோவில்களில் சங்கு ஊதப் படுவதைப் போன்றும் "பாங்கு" தொழுகைக்கான தனித்த ஒரு அழைப்பாகும். பாங்கின் பொருள் மக்களுக்குச் சொல்லப்பட்டால் அது இன்னும் பயனுள்ளதாக அமையும்.

# பாங்கு

| | |
|---|---|
| *1. அல்லாஹுஅக்பர்* | - *இறைவன் மிகப் பெரியவன் (நான்கு முறை)* |
| *2. அஷ்ஹது அல் லாயிலாஹ இல்லல்லாஹ்* | - *அல்லாஹ்ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று சாட்சியம் பகர்கிறேன். (இரு முறை)* |
| *3.அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்* | - *(முஹம்மது நபி அல்லாஹ்வின் தூதர் என்று சாட்சியம் பகர்கிறேன் (இரு முறை)* |
| *4. ஹய்ய அலஸ் ஸலாத்* | - *தொழுகைக்கு விரைந்து வாருங்கள் (இரு முறை)* |
| *5. ஹய்ய அலல் ஃபலாஹ்* | - *வெற்றியின் பக்கம் விரைந்து வாருங்கள். (இரு முறை)* |
| *6. அல்லாஹுஅக்பர்* | - *இறைவன் மிகப் பெரியவன் (இரு முறை)* |
| *7. லா இலாஹ இல்லல்லாஹ்* | - *அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவனே உண்மையான இறைவன்.* |

*காலைத் தொழுகைக்கான அழைப்பின் போது "ஹய்யா அலல் பலாஹ்" என்று சொல்லப்படுவதற்கு முன்பு "அஸ்ஸலாத்து கைரும் மினன் நௌம்" என்ற (தூக்கத்தை விட*

தொழுகையே சிறந்தது என்று இதற்குப் பொருள்) வார்த்தைகள் இருமுறை சொல்லப்படுகின்றன.

என்றும் மாறாமல் சொல்லப்படும் இந்த தொழுகை அழைப்பு, இறைனே மிகப் பெரியவன் (அல்லாஹு அக்பர்) என்ற நம்பிக்கையின் பாற்பட்டதாகும்.

(அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை முஹம்மது(ஸல்) அவர்கள் இறைவனின் தூதர் என்று நான் சாட்சியம் அளிக்கிறேன்)

கிட்டத்தட்ட 15 நூற்றாண்டுகளாக உலகெங்கும் முஸ்லிம்கள் வாழும் இடங்களிலெல்லாம் இந்த அழைப்பு விடுக்கப்பட்டு வருகிறது. பல்வேறு ஓசை நயங்களிலும் எதுகை மோனைகளிலும் இசை நயத்துடனும் இறைவனின் புகழ் பாடும் இந்த அழைப்பு மக்களை ஆன்மீக வழிக்கு வருமாறு அழைக்கிறது. காலையில் இது மக்களை விழிக்கச்செய்யும் அழைப்பாகவும், மாலையில் நினைவூட்டும் அழைப்பாகவும், இரவில் நிறைவு அழைப்பாகவும் அமைகிறது.

"இறைவன் ஒருவனே" என்பதை மக்களுக்கு நினை வூட்டுகிறது. தங்களது சுறுசுறுப்பான பணிகளுக்கு மத்தியிலும் மக்கள் இறைவனை நினைத்து பள்ளிவாசல்களுக்கு வந்து தொழுது பயபக்தியால் புத்தெழுச்சி பெற்று இறைவனின் பால் தங்களது நம்பிக்கையை உறுதி செய்கிறார்கள்.

# முஸ்லிம்கள் கஅபாவை வணங்குகிறார்களா??

உலகத்தின் மையப் பள்ளிவாசலாக மக்காவிலுள்ள ஹரம் பள்ளிவாசல் திகழ்கிறது. அதன் நடுவில் கஅபா எனப்படும் கன சதுரக் கட்டிடம் அமைந்துள்ளது.

கஅபா ஒரு சரணாலயமாகும். அங்கு எந்த ஒரு உயிரினத்தையும் கொல்லக்கூடாது. ஒரு ஈயையோ, கொசுவையோ கூட அடிக்கக்கூடாது. தனது தந்தையாரைக் கொலை செய்தவனை அங்கு கண்டால் கூட அவனுக்கு எந்தவிதமான தீங்கும் செய்யக்கூடாது. "ஹரம்" பள்ளிவாசலில் நுழைந்த பிறகு அங்கு பேசவோ, விவாதம் செய்யவோ, வாக்கு வாதங்களில் ஈடுபடவோ கூடாது.

முஸ்லிம்கள் ஏன் கஅபா வை நோக்கி தொழுகிறார்கள், சிரம் பணிகிறார்கள் என்று முஸ்லிமல்லாதவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இதற்கான பதில் மிகவும் எளிதானது. தொழுகையின் போது முஸ்லிம்கள் தங்களது முகத்தை மக்காவிலுள்ள கிப்லாவான கஅபாவை நோக்கி திருப்புகிறார்கள். இருந்த போதிலும் இதனை அவர்கள் வணங்குவதாகக் கருதக் கூடாது. அவர்கள் இறைவனையே வணங்குகிறார்கள. முஸ்லிம்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் தலை வணங்குவது இல்லை.

குர்ஆன் இது பற்றிக் குறிப்பிட்டிருப்பதாவது:-

(நபியே) உம்முடைய முகம்(அடிக்கடி) வானத்தை நோக்குவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதோ நீர் எந்த கிப்லாவை விரும்புகின்றீர்களோ அதன் பக்கமே நாம் உம்மைத் திருப்பி விடுகிறோம்.

*மஸ்ஜிதுல் ஹராம் (க அபா ஆலயம்) பக்கமாக உம்முடைய முகத்தைத் திருப்புவீராக! இனி நீங்கள் எங்கிருப்பினும் (தொழுகைக்காக) அதன் பக்கமாகவே உங்கள் முகங்களைத் திருப்புவீர்களாக (குர்ஆன் 2:144)*

## ஒற்றுமையைப் பேணுதல்

க அபாவை நோக்கித் தான் தொழ வேண்டும் என்று அறிவுறுத்தப்படாவிட்டால், முஸ்லிம்கள் அனைத்து திசைகளையும் நோக்கித் தொழுதிருப்பார்கள். ஓர் இறைவனைத் தொழுதிடும் விஷயத்தில் ஒற்றுமை நிலவ வேண்டுமென்பதற்காக, முஸ்லிம்கள் எங்கிருந்தாலும் ஒரே ஒரு திசையை மட்டுமே (அதாவது கஅபா இருக்கும் திசை) நோக்கித் தொழுதிட வேண்டுமென அறிவுறுத்தப் பட்டுள்ளனர். கஅபாவிற்கு மேற்குத் திசையில் வாழுகின்ற முஸ்லிம்கள் கிழக்குத் திசை நோக்கித் தொழுகை புரிகிறார்கள். கஅபாவின் கிழக்குப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் மேற்குத் திசையை நோக்கித் தொழுகிறார்கள். வான வெளியிலிருந்து தொழுகை புரிவதைப் பார்க்கின்றபோது, முஸ்லிம்கள் அனைவரும் மக்காவிலுள்ள கஅபாவை மையமாகக் கொண்ட ஒரு வட்டத்தினுள் நிற்பதைப் போன்று தோற்றமளிக்கும்.

## கஅபாவை தவாஃப் செய்தல்

மக்காவிற்கு ஹஜ்ஜுக்குச் செல்லும் முஸ்லிம்கள் கஅபாவைச் சுற்றி வலம் வருகிறார்கள். இதற்கு தவாஃப் என்று பெயர். இது முஸ்லிம்கள் ஓரிறைவன் பால் கொண்டுள்ள நம்பிக்கையையும் வணக்கத்தையும் புலப்படுத்துகிறது. ஒவ்வொரு சுற்றுவட்டத்திலும் ஒரு மையம் உள்ளது. எனவே வணங்கத்தக்கவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே என்பதை இது உணர்த்துகிறது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் காலத்தின் போது முஸ்லிம்கள் கஅபாவில் நின்று "பாங்க்" (அதான்) சொல்வார்கள் இந்த நிகழ்வு மூலம் நபிகளார் கஅபாவை வணங்கவில்லை. அதனை நோக்கியே தொழுதுள்ளார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

# முஸ்லிம்கள் கருங்கல்லை வணங்குகிறார்களா?

*அந்தக் கருங்கல்லில் என்ன முக்கியத்துவம் உள்ளது. முஸ்லிம்கள் ஏன் அதனை முத்தமிடுகிறார்கள்?*

கஅபாவின் கிழக்கு மூலையில் இருக்கக் கூடிய கல் கருங்கல் என அழைக்கப்படுகிறது. முஸ்லிம்களின் பாரம்பரிய மரபுப் படி இந்தக் கருங்கல் இஸ்லாமியச் சின்னமாகக் கருதப்படுகிறது. இதன் வரலாறு ஆதம், ஹவ்வா காலத்திலிருந்து தொடங்குகிறது. இறைவனின் இல்லமான கஅபாவை எங்கு கட்டவேண்டுமென்று ஆதம் - ஹவ்வாவிற்குக் காட்டுவதற்காக இந்தக்கல் வானத்திலிருந்து விழுந்ததாக முஸ்லிம்கள் நம்புகின்றனர். இன்னொரு இஸ்லாமிய மரபின்படி, கருங்கல் கஅபாவில் உள்ள கற்களில் ஒன்று தான் என்றும் கருதப்படுகிறது. நபி இப்ராஹிம்(அலை) நபி இஸ்மாயில்(அலை) ஆகியோரின் காலத்தில் கட்டப்பட்ட கஅபாவில் மிஞ்சியிருக்கக்கூடிய கல் இது ஒன்று தான் என்றும் சொல்லப்படுகிறது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பிறப்பிற்கு முன்னர் கஅபா பல தடவைகள் தாக்குதல்களுக்கு உள்ளாகி அழிக்கப்பட்டு பின்னர் பலமுறைகள் கட்டப் பட்டுள்ளது. நபி இப்ராஹிம்(அலை), இஸ்மாயில் (அலை) காலத்திற்குப் பிறகு பல்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட பல அழிவுகளிலிருந்து இந்தக் கருங்கல் மட்டுமே தப்பி எஞ்சி நிற்கிறது. மக்காவை விட்டு மதினாவிற்குச் சென்று அங்கு பல ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் மக்கா திரும்பிய நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், இந்தக் கருங்கல்லை முத்தமிட்ட பின்னர் தான் கஅபாவைச் சுற்றி வலம் வந்தார்கள். பல ஆண்டுகள் தாங்கள் நேசித்த நகரான மக்காவை விட்டு விட்டு மதினா நகர் சென்று பின்னர் மக்கா நகருக்குத் திரும்பி வந்தது

நபிகளாருக்குச் சொந்த வீட்டிற்கு வந்தது போன்ற ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

புனித பயணத்திற்குத் தலைமை வகித்துச் சென்ற கலீபா உமர்(ரலி) அவர்கள் மக்களுக்கு இதனைத் தெளிவு படுத்தினார்கள். கஅபாவை வலம் வரும் போது, கருங்கல்லை முத்தமிட்ட அவர்கள் அதனை நோக்கி "நீ ஒரு கல்தான், வேறொன்றுமில்லை. நீ யாருக்கும் உதவிடவோ அல்லது தீங்கு இழைத்திடவோ முடியாது. இந்தக் கல்லை நபிகளார் முத்தமிட்டதை நான் பார்க்க வில்லையென்றால், நான் உன்னை ஒரு போதும் முத்தமிட்டிருக்கமாட்டேன்" என்று கூறினார்கள்.

கருங்கல்லைப் பற்றி பல தப்பெண்ணெங்கள் இருக்கின்ற காரணத்தால், அதனைப் பற்றி குறிப்பாக விளக்கிச் சொல்ல வேண்டியதிருக்கிறது. அது எரி நட்சத்திரக்கல் அல்ல, சாதாரணக் கல் தான், இதிலிருந்து துவங்கி தான் முஸ்லிம்கள் கஅபாவை வலம் வருகிறார்கள் என்பது இதன் முக்கியத் துவத்தை உணர்த்துகிறது. அதன் நிறம் காரணமாக கல் வெளிப்படையாகத் தெரிகிறது. இந்தக் கல்லை முஸ்லிம்கள் வணங்குவதில்லை. அது இருக்கும் திசையை நோக்கி தலை பணிவதில்லை. கஅபாவில் உள்ள எந்தக் கட்டிடத்தை நோக்கியும் முஸ்லிம்கள் தலை பணிவதில்லை. இது இந்தக் கருங்கல்லுக்கும் பொருந்தும். ஒரு முறை கராமித்துகள் கஅபாவைத் தாக்கி இந்தக் கருங்கல்லைத் தங்களது நாட்டிற்கு எடுத்துச் சென்று அதனைப் பல ஆண்டுகள் தங்கள் வசமே வைத்திருந்தனர். அந்தக் கல் இல்லாத போது முஸ்லிம்கள், அது இருந்த இடத்தின் பக்கம் செல்லவே இல்லை. மாறாக கஅபாவை நோக்கியே சென்றனர். "கஅபா" கட்டிடம் கூட முக்கியமானதல்ல. அவசியத் தேவையானதுமல்ல. அது மராமத்துப் பணிகளுக்காகவோ அல்லது புதிய கட்டிடம் கட்டப்படுவதற்காகவோ இடிக்கப்பட்டால் கஅபாவும் கருங்கல்லும் இருந்த இடத்தை நோக்கியே முஸ்லிம்கள் செல்வார்கள் (அது இருந்தாலும் இல்லாவிட்டாலும்) ஏற்கனவே விளக்கிச் சொல்லியபடி கருங்கல்லின் முக்கியத்துவம் என்ன வென்றால், அதிலிருந்து தான் முஸ்லிம்கள் வலம் வர ஆரம்பிப்பார்கள் என்பதேயாகும்.

# ஏன் முஸ்லிமல்லாதவர்கள் மக்காவில் அனுமதிக்கப்படுவதில்லை?

இஸ்லாமியர்களின் புனித இடங்களான மக்காவிற்கும், மதினாவிற்கும் செல்ல முஸ்லிம்மல்லாதவர்கட்கு அனுமதி மறுக்கப்படுவதை சிலர் குறை கூறி வருகின்றனர். இது உண்மைதான். முஸ்லிமல்லாதவர்கள் மக்கா மற்றும் மதினா நகரங்களுக்குள் நுழைய அனுமதியில்லை. இந்தத் தடைக்கான காரணங்கள் என்ன என்பதை இனி பார்ப்போம். குறை கூறுவோர் விளக்கம் பெற்றிட இது உதவும்.

மக்காவும், மதினாவும் முஸ்லிம்களின் புனிதத் தலங்கள் ஆகும். முஸ்லிம்கள் அந்த நகரங்களுக்குப் புனிதப் பயணம் மேற்கொள்கிறார்கள். சுற்றிப் பார்க்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது பொழுது போக்கிற்காகவோ மகிழ்ச்சிக்காகவோ முஸ்லிம்கள் அந்த நகரங்களுக்குச் செல்வதில்லை. முஸ்லிம்கள் தங்களது சமயக் கடமைகளில் ஒன்றான ஹஜ் கடமையை நிறைவேற்ற அங்கு செல்லுகிறார்கள். எனவே முஸ்லிம்கள் மட்டுமே அந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

பிற சமயத்தினரும் இது போன்ற தடைகளை விதித்துள்ளனர். திருப்பதி-திருமலை தேவஸ்தானக் கோவில் கர்ப்பக் கிரகத்திற்குள் (சன்னிதானம்) இந்துக்கள் மட்டுமே செல்லமுடியும். பிற சமயத்தினர் சுற்றிப் பார்ப்பதற்காகவோ அல்லது பொழுது போக்கிற்காகவோ அங்கு செல்ல முடியாது. இன்றைக்கும் பல கோவில்களில் தலித்துகள் நுழைய அனுமதி இல்லை. பெண்கள் அனுமதிக்கப் படுவதில்லை. அசைவ உணவு உண்போருக்கும் சில

கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

சொந்த நாட்டிலேயே அங்குள்ள சில பகுதிகளுக்குச் செல்ல பொது மக்களுக்கு அனுமதி இல்லை. இராணுவப் பாசறைகளுக்கு இராணுவத்தில் பணிபுரிபவர்களைத் தவிர மற்றவர்கள் செல்வதற்கு அனுமதி இல்லை. அணு உலைகள் பதற்றமான பகுதிகளில் ஆராய்ச்சிக்காக நிறுவப்பட்டுள்ள ஆய்வகங்கள், உளவுத் துறையின் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றுக்குள் சாதாரண மக்கள் செல்லமுடியாது. உண்மையிலேயே அந்த இடங்களுக்குச் செல்ல அவசியத் தேவை உள்ளவர்கள் மட்டுமே உரிய அதிகாரிகளிடம் முன் அனுமதி பெற்றுச் செல்ல முடியும். ஒரு இராணுவப் பகுதியினுள் நுழைய விதிக்கப்பட்டுள்ள தடையை ஒரு சாதாரணக் குடிமகன் ஆட்சேபிக்க முடியாது. அதைப் போலவே மக்காவிற்குள்ளும், மதினாவிற்குள்ளும் நுழைய முஸ்லிமல்லாதவர்கட்கு விதிக்கப்பட்டுள்ள தடையை யாரும் ஆட்சேபிக்க முடியாது.

அனைத்து நாடுகளுமே, வெளிநாடுகளைச் சார்ந்த குடி மக்களை தங்கள் நாடுகளில் அனுமதிப்பதற்குச் சில சட்டங்களையும் வழிமுறைகளையும் வகுத்துள்ளன. அந்த நாட்டின் சட்ட வழிமுறைகளுக்கு உட்பட்டு நடப்பதாக வாக்குறுதி அளித்தால் தான் விசாவே வழங்கப்படுகிறது. அது போலவே சவூதி அரேபிய அரசாங்கம், மக்களின் சமய நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே புனித நகரங்களினுள் நுழைய அவர்கட்கு அனுமதி வழங்குகிறது. முஸ்லிமல்லாதவர்கள் புனித நகரங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. அதே நேரத்தில் பிற சமயத்தவர்கள் வேலைக்காகவும், வர்த்தகத்திற்காகவும், சுற்றுலாவுக்காகவும், மற்ற நகரங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

# தர்கா - பள்ளிவாசல் வித்தியாசம் என்ன?

*இஸ்லாத்தில், பள்ளிவாசல் என்பது தொழுகை புரியும் இடம் முஸ்லிம்கள் ஒரு நாளைக்கு ஐந்து முறைகள் அங்கு ஒன்று கூடி தொழுகை நடத்துகிறார்கள். தர்காக்கள் என்பது முஸ்லிம் ஞானிகளும் சூபிகளும் அடங்கப்பட்டிருக்கும் நினைவிடங்கள். இந்த ஞானிகளின் சாத்வீகப் பண்புகள், அவர்கள் வழங்கிய அன்பின் செய்தி, சமூகத்திற்கு அவர்கள் ஆற்றிய பணிகள் காரணமாக மக்களின் நன் மதிப்பைப் பெற்றிருந்தனர். அவர்கள் மரணமடைந்த போது அவர்களைப் பின்பற்றியவர்கள் விசுவாசிகளாக மாறி அவர்களின் அடக்கஸ் தலங்களில் கட்டிடங்களை எழுப்பினார்கள். அவை தர்காக்கள் அல்லது நினைவிடங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அங்கு அற்புதங்கள் நிகழ்வதாகவும், அங்கு சென்றால் நோய்கள் குணமடையுமென்றும் பின்னர் கதைகள் புனையப்பட்டன. இதன் காரணமாக அந்த நினைவிடங்கள் புனிதஸ்தலங்களாக மாறின. ஆஜ்மீரில் உள்ள ஹாஜா முயினுத்தீன் சிஸ்தி தர்கா இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நினைவிடங்களில் ஒன்றாகும் (கி.பி. 1141 –1230) அன்பையும் சமாதானத்தையும் இந்தியாவில் போதித்த சூபி ஞானிகளான டில்லியிலுள்ள குவாஜா பக்தியார் காகி, பஞ்சாபிலுள்ள பாபா பரீதுத்தீன் கஞ்ஷக்ர், டில்லியிலுள்ள நிஜாமுத்தீன் அவுலியா, குல்பர்க் காவிலுள்ள குவாஜா பந்தேநவாஸ், ஹைதராபாத்திலுள்ள யூசுபைன் ஆகியோரின் நினைவிடங்களும் தர்காக்களாக மாறி அவ்விடங்களுக்கு ஏராளமான மக்கள் வருகை புரிகிறார்கள். அதிக எண்ணிக்கையிலான இந்துக்கள் இந்த நினை விடங்களுக்கு வருவதால் அவை பலரும் ஒன்று கூடும் இடங்களாகத் திகழ்கின்றன. இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளின் படி தர்காக்கள் ஏற்புடையவை அல்ல.*

எனினும் தர்காக்களில் கட்டப்பட்டுள்ள குவிந்த மண்டபம், மினராக்கள் ஆகியவற்றில் இஸ்லாமியக் கட்டிடக் கலையின் அம்சங்கள் இருப்பதாலும், சூபி ஞானிகளைப் பற்றி புகழ்ந்து எழுதப்பட்ட உருதுப் பாடல்கள் அங்கு பாடப்படுவதாலும் இஸ்லாமியக் கலாச்சாரத்தின் பின் விளைவுகளாக இந்தியத் துணைக்கண்டத்தில் இவை கருதப்படுகின்றன.

சமாதி வணக்கத்தை இஸ்லாம் அங்கீகரிக்க வில்லை என்பது மட்டுமல்ல, அதனைக் கண்டிக்கவும் செய்கிறது. ஏனெனில் அது இறைவனுக்கு இணை வைக்கும் செயலாகக் கருதப்படுகிறது. இஸ்லாம் ஓரிறைக் கொள்கையைக் கொண்ட மார்க்கமாக இருப்பதால், அக் கொள்கையை நீர்த்துப் போகச் செய்யும் எந்தச் செயலையும் அது அனுமதிக்கவில்லை. இறைத் தன்மைக்கும் ஞானிகளின் தன்மைக்குமிடையே தெளிவான எல்லைகளை இஸ்லாம் வரையறுத்துள்ளது. இவை இரண்டும் இணைவதில்லை. நபிமார்களே கூட வணக்கத்திற்குரியவர்களல்லர். நாங்களும் பிற மனிதர்களைப் போன்றவர்களே என்று நபிமார்களே அறிவித்துள்ளனர். திருக்குர்ஆனின் முதல் அத்தியாயமான அல் பாத்திஹாவிலேயே இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்கள் எப்படி இறைவனுக்கு அடிபணிய வேண்டுமென்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

> "உன்னையே வணங்குகிறோம், உன்னிடமே உதவி தேடுகிறோம்" (குர்ஆன் 1:4)

எனவே இஸ்லாம் வகுத்துள்ள எல்லைக் கோடுகளில் எந்த விதமான குழப்பமோ, மயக்கமோ இல்லை.

இரண்டாவதாக இஸ்லாமியக் கோட்பாடுகளின் படி ஒரு தனி மனிதன் இறைவனுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிட முடியும். அவன் எந்த ஒரு முகவர் அல்லது மத்தியஸ்தர் துணையில்லாமல் இறைவனிடம் தனக்கு வேண்டியதை அவன் கேட்க முடியும். இறைவனுக்கும் மனிதர்களுக்குமிடையில் மத்தியஸ்தர்கள் யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. சமாதி வணக்கம், அடங்கப்பட் டிருப்பவரை இறைவனுக்கும் மனிதருக்குமிடையிலுள்ள ஒரு மத்தியஸ்தராகச் சித்தரிக்கிறது. இந்த நடைமுறையை இஸ்லாம் ஏற்கவில்லை. உயிரோடு இருக்கின்ற ஒரு நபியோ

அல்லது ஒரு ஞானியோ மனிதனின் சார்பாக இறைவனிடம் கேட்க முடியாத போது, இறந்த ஞானிகள் எப்படி அதனைச் செய்ய முடியும்?

இது பற்றி குர்ஆன் குறிப்பிடுவதாவது

> மண்ணறைகளில் உள்ளவர்களை நீர் செவியேற்கச் செய்பவராக இல்லை (குர்ஆன் 35:22)

இந்தக் காரணத்திற்காகவே, தர்காக்கள் வணக்கஸ் தலங்களாக ஆக முடியாது. நினைவிடங்களுக்குச் சிலர் முக்கியத்துவம் கொடுத்த போதிலும், இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையை அது மாற்றுவதில்லை.

## தர்காக்களுக்குச் செல்தல்

தர்காக்களுக்கும், நினைவிடங்களுக்கும் செல்வதன் மூலம் சில முஸ்லிம்கள் ஓரிறைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாத்தை தவறாக சித்தரிக்க முயற்சிக்கிறார்கள். இஸ்லாமிய நம்பிக்கையில் ஏற்பட்டுள்ள இந்தக் குறை பாட்டிற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வாழ்ந்து மறைந்த சூபிகள் மற்றும் ஞானிகளின் கல்லறைகள் மீது நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டதே காரணமாகும். தாங்கள் வாழ்ந்திருந்த காலத்தில் இவர்கள் செய்திட்ட தன்னலமற்ற தொண்டு, சேவை காரணமாக, பல்லாயிரக்கணக்கான மக்கள் அவர்கள் பால் அன்பும், மரியாதையும் கொண்டிருந்தனர். அன்பையும், நல்லிணக்கத்தையும் போதித்த சுய நலமற்ற இந்த நல்லவர்களை மக்கள் படிப்படியாகக் கொண்டாடவும் போற்றவும் ஆரம்பித்தனர். பின்னாட்களில் இது ஒரு வணக்க வழிபாடாகவே பரிணாம வளர்ச்சி அடைந்து விட்டது. இறந்தவர்கள் துதிக்கப்படுபவர்களாக மாறி விட்டனர். அவர்களைப் பற்றி கதைகளையும், புராணங்களையும் உருவாக்கி அவர்களிடம் மனிதர்களுக்கு அப்பாற்பட்ட சக்தி இருப்பதாக மக்கள் கருதினர். ஒரே மாதிரியான நலனும், நோக்கமும் கொண்டவர்கள் அவர்களை ஒரு அரைக் கடவுள்களாக ஆக்கிவிட்டனர். அதனைப் பயன்படுத்தி பணம் சம்பாதிக்கவும் செய்கின்றனர். இந்திய துணைக்கண்டத்தில் இந்தக் கல்லறை வழிபாடு இஸ்லாமியக் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டது. ஆனால் இஸ்லாத்தில்

இம்மாதிரியான வழிபாட்டிற்குக் கிஞ்சிற்றும் இடமில்லை.

எந்த ஒரு தீர்க்கதரிசியும் தங்களது அடக்கஸ்தங்களின் மீது நினைவுச் சின்னங்களை எழுப்பி அதில் விளக்குகளை ஏற்றவோ, வாசனை தரும் பத்திகளைக் கொளுத்தவோ, நேர்ச்சைகள் வழங்கவோ, உரூஸ் எடுக்கவோ (இறப்பு தினம்) கவ்வாலி, மர்ஸியா போன்ற இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யவோ மக்களைக் கேட்டுக் கொண்டதில்லை. இத்தகைய செயல்களை இஸ்லாம் முற்றிலும் தடுத்துள்ளது. முறைகேடுகள் என்றும், திரிபுகள் என்றும் அவற்றை நிராகரிக்கிறது.

> "தங்களது நபிமார்களின் அடக்கஸ்தலங்களை வணக்கஸ் தலங்களாக மாற்றிய மற்ற சமயத்தினரைப் போல என்னுடைய அடக்கஸ் தலத்தை நீங்கள் வணக்கஸ்தலமாக்கி விடாதீர்கள்" என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

# மதரஸாக் கல்வி

இந்தியாவில் செயல்பட்டு வரும் மதரஸாக்களை சில அரசியல் உள் நோக்கம் கொண்டவர்களும், நடுநிலைதவறிய சில ஊடகங்களும் குறை கூறி வருகின்றன. மதரஸாக்களைப் பற்றியும், அதில் எத்தகைய கல்வி கற்பிக்கப்படுகின்றது என்பதைப் பற்றியும் கொஞ்சம் கூடத் தெரியாதவர்களே அவற்றிற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இவை இஸ்லாமிய நிறுவனங்களாக இருப்பதால், அங்கு ஜிகாத் பற்றியும், போர் பற்றியும் போதிக்கப்படுவதாக அவர்களாகவே யூகம் செய்து கொண்டு கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) அரசு ஆட்சியில் இருந்த போது அதில் அங்கம் வகித்த பொறுப்பான அமைச்சர்களே இது போன்ற அறிக்கைகளை வெளியிட்டனர். எனவே உண்மை நிலை பற்றி தக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது தேவையான ஒன்றாகும்.

ஆரம்பத்தில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே கேரளா வழியாக இஸ்லாம் இந்தியாவினுள் நுழைந்துவிட்டதாகவும், ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் வட இந்தியாவிலுள்ள சிந்துப் பகுதி வழியாக இஸ்லாம் வந்ததாகவும் வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இம் மக்களுக்கு இஸ்லாமியக் கொள்கைகளைப் பற்றியும், வழிமுறைகளைப் பற்றியும் விளக்கிச் சொல்லவே மதரஸாக்கள் தோற்றுவிக்கப்பட்டன. மேலும், தொழுகை நடத்திடவும், மற்றவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூறவும் தகுதிமிக்க உலமாக்களை உருவாக்கவும் இந்த மதரஸாக்கள் தேவைப்பட்டன.

"மதரஸா" என்ற வார்த்தைக்கு கற்பித்தலும் கற்றலும் நிகழும் ஒரு இடம் என்பது சரியான பொருளாகும் ஆங்கிலத்தில் (School) பள்ளிக்கூடம் என்று சொல்லப் படுவதற்குச் சமமான பொருள் கொண்ட வார்த்தை மதரஸா ஆகும். இந்த வார்த்தை துவக்கப்பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என அனைத்திற்கும் பொருந்தக் கூடியதே. இஸ்லாமிய நாடுகளில் உயர் கல்வி நிறுவனங்கள் கூட மதரஸாக்கள் என்றே அழைக்கப்படுகின்றன. கல்கத்தாவிலுள்ள "அலியா மதரஸா" என்ற உயர் கல்வி நிறுவனத்திற்கு மேற்கு வங்க அரசாங்கம் பல்கலைக் கழக அந்தஸ்து வழங்கியுள்ளது. இந்த மதரஸாவில் பிற சமயத்தைச் சார்ந்த மாணவர்களும் பயின்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இராஜாராம் மோகன்ராய் உள்ளிட்ட பல ஹிந்து பாரசீக, அரேபிய அறிஞர்களும் இந்த மதரஸா அலியாவில் பயின்றவர்களே.

பல்வேறு வழிகளிலும் இம் மதரஸாக்கள் மக்களின் சமய மற்றும் சமயச்சார்பற்ற தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

இன்றைக்கு இந்தியாவில் சுமார் 20,000 மதரஸாக்கள் உள்ளன. இவற்றில் ஒவ்வொரு ஆண்டும் 1.5 மில்லியன் மாணவர்கள் பயில்கிறார்கள். 2006ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நீதிபதி சச்சார் குழுவின் அறிக்கையின்படி சுமார் 4 சதவிகித முஸ்லிம் குழந்தைகளே மதரஸாக்களில் கல்வி கற்கிறார்கள் கிராமப்புறங்களிலுள்ள பெரும்பான்மையான ஏழை முஸ்லிம் மாணவர்களும், நகர்ப்புறங்களிலுள்ள ஒரு குறிப்பிட்ட சதவிகித மாணவர்களும் இம் மதரஸாக்களால் பயன் பெறுகின்றனர். இந்தியாவில் வசிக்கும் பெரும்பாலான முஸ்லிம்கள் ஏழைகளாகவும் கல்வி அறிவற்றவர்களாகவும் உள்ளனர். இந்த ஏழை முஸ்லிம்கள் விரும்பினாலும் கூட தங்களது குழந்தைகளை வறுமை காரணமாக பொதுக் கல்வி தரும் பள்ளிகளுக்கு கல்வி கற்க அனுப்ப முடியவில்லை.

மேலும் முஸ்லிம்களின் சமய ரீதியான தேவைகளை மட்டும் இம் மதரஸாக்கள் பூர்த்தி செய்யவில்லை. அதற்கும் அதிகமாக இலவசக் கல்வி, உணவு, தங்குமிடம் ஆகியவற்றையும் அளிக்கின்றன. மதரஸாக்கள் அனைத்தும்

ஒரே சீரான தன்மையுடையவை என்று கூற முடியாது. அவற்றை பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கலாம் "மக்தப்" என்று சொல்லப்படும் பிரிவில் ஆரம்ப சமயக் கல்வியே கற்பிக்கப்படுகிறது. இடை நிலை மதரஸாக்களில் அரபு மொழி, குர்ஆன், குர்ஆன் விளக்கவுரை, ஹதீஸ் (நபிகளாரின் பொன்மொழிகள்) ஆகியன கற்பிக்கப்படுகின்றன. பட்டம் மற்றும் முதுகலைப்பட்டப் படிப்புகளுடன் ஒப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவில் உள்ள உயர் நிலை மதரஸாக்களில் அரபு இலக்கியம், இஸ்லாமியக் கோட்பாடு, தத்துவம், விஞ்ஞானம் ஆகியன கற்றுக் கொடுக்கப்படுகின்றன. மதரஸாக்களை நவீனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை தற்போது எழுப்பபப்பட்டு வருகின்றது. தற்போது நாட்டிலுள்ள சில மதரஸாக்கள் நவீன மயமாகியுள்ளன.

அண்மையில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசியக்குழு நடத்திய ஆய்வு ஒன்றில் பல மாநிலங்களில் உள்ள மதரஸாக்கள் (குறிப்பாக கேரளா மற்றும் கல்கத்தாவில் உள்ள) நவீன மயமாக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் போது, மத்ரஸாவின் பாடத்திட்டங்களில் எந்த விதமான தேச விரோத அம்சமும் கண்டு பிடிக்கப்படவில்லை.

முஸ்லிம்கள், மதரஸா கல்விக்கு முன்னுரிமை வழங்குவதற்கான காரணங்கள்

1. முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் நவீன பள்ளிக் கூடங்கள் இல்லாமை.

2. மாணவிகளுக்கு தனிப் பள்ளிக்கூடங்கள் இல்லாமை– இருபாலார் படிக்கும் பள்ளிகளில் கூட, பெண் ஆசிரியர்கள் இல்லாமை.

3. நவீன கல்விக்கு வசூலிக்கப்படும் கட்டணங்களைச் செலுத்த இயலாத வறுமை நிலை.

4. அரசுப் பள்ளிக் கூடங்களில் தரங்குறைந்த கல்வி வழங்கப்படுவது.

5. பள்ளிப்பாடப் புத்தகங்களில் ஹிந்து சமயச் சார்புள்ள கருத்துக்கள் இருப்பதாக முஸ்லிம்கள் கொண்டிருக்கும் உண்மையான அச்சம்.

மத்ரஸாக்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின்

*காலத்திலேயே தோன்றி விட்டன. நபிகளார் உருவாக்கிய முதல் பள்ளிவாசலில் நிறுவப்பட்ட மத்ரஸாவில் அவர்களே இஸ்லாமியக் கொள்கைகளையும், அவ்வப்போது அவர்களுக்கு அருளப்பட்டு வந்த இறைச் செய்திகளையும் மக்களுக்குப் போதித்தும் விளக்கியும் வந்தார்கள். வெகு காலத்திற்குப் பின்னர்தான் மதரஸா என்ற நிறுவனங்கள் தோன்றின. 11ம் நூற்றாண்டில், முதல் மதரஸா ஈரானிலுள்ள நிஸா பூரிலும், இரண்டாவது மதரஸா (நிஸாமியா மதரஸா) ஈராக் நாட்டின் பாக்தாத்திலும் தொடங்கப்பட்டன. எகிப்திலுள்ள புகழ் பெற்ற அல் அஸ்கர் பல்கலைக்கழகம் இதே கால காட்டத்தில் தான் "பாத்மி" சுல்தான்களின் ஆட்சிக் காலத்தின் போது துவக்கப்பட்டது.*

# ஏன் இறைவனுக்கும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கும் உருவப்படங்கள் இல்லை

பிற சமயங்களைச் சார்ந்த நம்பிக்கையாளர்களின் வழிபாட்டுத் தலங்களிலும், அவர்களது இல்லங்களின் புனித மூலைகளிலும், அவர்கள் வணங்கும் கடவுள்களின் உருவங்கள் அல்லது சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் தொழுகை புரியும் பள்ளிவாசல்களில் அல்லாஹ்வின் உருவமோ, நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் உருவமோ வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஏன் முஸ்லிம்கள் உருவப்படங்களையோ சிலைகளையோ வைப்பதில்லை என்ற கேள்வியை சிலர் எழுப்புகிறார்கள்.

மக்களுக்கு வழிகாட்டுவதற்காக அல்லாஹ்வால் அனுப்பட்ட இறுதித் தூதரான நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், இஸ்லாத்தின் மூன்று அடிப்படையான நம்பிக்கைகள் பற்றிப் போதித்தார்கள். அவையாவன(1) வல்லமை பெற்ற ஒரே இறைவனாகிய அல்லாஹ்வின் பால் நம்பிக்கை வைப்பது(2) இறைவனாகிய அல்லாஹ்வால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட ஆதம் நபி(அலை) முதல் முஹம்மது நபி(ஸல்) வரை அனைத்து நபிமார்கள் பால் நம்பிக்கை கொள்வது (3) இறுதித் தீர்ப்பு நாளின் பால் நம்பிக்கை கொள்வது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், மற்றவர்களைப் போல தாமும் ஒரு மனிதரே என்றும், தம்மீது எந்த விதமான தெய்வீகத் தன்மையையும் சாட்டி விட வேண்டாமென்றும் மக்களை எச்சரித்தார்கள். எனவே இஸ்லாம் இறைவனையும், அவனது தூதர்களையும் வேறுபடுத்திப் பார்ப்பதில் மிகத் தெளிவாக உள்ளது. பிற சமய நம்பிக்கையாளர்கள் கருதுவது

போல் நபிமார்களை இறைவனின் அவதாரங்களாக ஒரு போதும் கருதக் கூடாது. அவர்கள் அவதாரங்களல்லர். மனிதர்களே! இறைவன் என்றும் நிலைத்திருப்பவன்; நீடித்திருப்பவன். ஆனால் இறை தூதர்கள் பிற மனிதர்களைப் போல மரணிக்கக் கூடியவர்கள். அவர்கள் மக்களுக்கு வழிகாட்டுவதற்காக தெய்வீகச் செய்தியைக் கொண்டு வந்தவர்களேயன்றி வேறில்லை. இதன் காரணமாக முஹம்மது நபி(ஸல்) அவர்கள், தம்மை இறைவனின் நிலைக்கு உயர்த்துவதைத் தடை செய்தார்கள். "இறைவன் எப்போதும் உயிருடனிருப்பான். இறை தூதர்கள் மரணிப்பார்கள் என்று திருக்குர்ஆன் தெளிவுபட அறிவிக்கிறது. இறைவன் தூங்குவதில்லை. அவன் இமை மூடுவதுமில்லை.

எனவே, இஸ்லாம் இறைவன் ஒருவனே, அவன் மட்டுமே வணங்கத் தக்கவன், வழிபடத்தக்கவன் என அறிவித்துள்ளது. இதனை நீர்த்துப் போகச் செய்யும் எந்த ஒரு தெய்வீகக் கோட்பாட்டையும் இஸ்லாம் ஏற்கவில்லை அனுமதிக்கவுமில்லை. இந்த அடிப்படையிலேயே இஸ்லாம் இறைவன் மற்றும் நபிமார்களின் உருவப்படங்களையோ, சிலைகளையோ உருவாக்கக் கூடாது எனத் தடை செய்துள்ளது. இந்த உருவப்படங்கள் சிலை வணக்கத்திற்கு மக்களை இழுத்துச் சென்று உண்மையான இறைவனை மக்கள் மறந்ததற்கு உலகில் பல முன்னுதாரணங்கள் இருந்திருக்கின்றன. நபி இப்ராகிம்(அலை) அவர்களால் இறைவனை வணங்குவதற்காகக் கட்டப்பட்ட கஅபா ஆலயம் வீழ்ந்ததற்கு இது போன்ற சம்பவங்களே காரணமாகும். கஅபா பல தெய்வங்களின் புகலிடமாக ஆக்கப்பட்டு ஒவ்வொரு செயலுக்கும் ஒரு தெய்வம் என கதைகள் புனையப்பட்டன. இஸ்லாம் இறைவனின் புனிதத்தை மீட்டு சிலை வணக்கத்தை முற்றிலும் தடை செய்தது.

இதுபோலவே இறை தூதரின் உருவப்படமோ அல்லது சிலையோ வைப்பதும் தடுக்கப்பட்டது. மனிதப் புனிதர்களை இறைவனின் அந்தஸ்துக்கு உயர்த்தி அவர்களை வழிபடுவது மக்களின் பொதுவான சுபாவமாகும். எனவே நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பார்த்தும் உரையாடியும் பழகிய மக்கள் அவர்களின் உருவப்படத்தை வைத்துக் கொண்டு இறைவனை மறந்து விட்டு அவர்களையே நாளாவட்டத்தில்

வழிபட ஆரம்பித்து விடுவார்கள் என்ற காரணமாகவே அவர்களின் உருவப்படத்தை வைத்துக் கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலுமுள்ள பள்ளிவாசல்களில் எந்த விதமான உருவப்படங்களோ, சிலைகளோ இல்லை. ஏக இறைவனை மட்டுமே வணங்கி அவனை மட்டுமே முன்னிறுத்தி பிரார்த்தனைகளையும், விண்ணப்பங்களையும், ஆசைகளையும், விருப்பங்களையும் அவனிடமே கேட்டுப் பெறும் இடமே பள்ளிவாசல்கள் ஆகும். தெய்வீக எல்லைக்குள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வரவில்லை. அவர்கள் இறைவனிடமிருந்து தனித்தே இருக்கிறார்கள். ஒரு நேர்வழி காட்டி; ஒரு ஆன்மீகத் தலைவர்; ஒரு முன்மாதிரி மனிதர்; ஒரு சீர்திருத்தவாதி, மகிழ்ச்சியான செய்திகளை முன்னறிவிப்புச் செய்பவர்; மக்களை எச்சரிப்பவர் என்பதே இஸ்லாமிய சமயத்தில் அவர்களுக்குரிய இடமாகும். அவர்கள் இறைவனின் பங்காளியோ அல்லது அவதாரமோ அல்ல. அவர்களை விக்கிரகமாக வடிக்கக் கூடாது. அல்லது அவர்களுடைய உருவத்தை சிலைகளாகவோ, புகைப்படங் களாகவோ, பிம்பங்களாகவோ, சிற்பங்களாகவோ வடிக்கக்கூடாது. நிலைமை இப்படி இருக்கும்போது. இறைவனின் தூதர்களை கருத்துப்படம் போடுவதோ அல்லது கேலிச்சித்திரம் வரைவதோ அவர்களை அவமரியாதை செய்வதாகவும் இழிவுபடுத்துவதாகவுமே அமையும்.

அடிக்கடி ஊடகங்களில் நபிகளாரின் "உருவப் படம்" பிரசுரிக்கப்படுவது பெருத்த எதிர்ப்பை ஏற்படுத்துகிறது. அண்மையில் "ஜில்லேண்ட் போஸ்டன்" என்ற ஒரு டச்சு செய்தித் தாளில் வெளியான நபிகளாரைப் பற்றிய கருத்துப்படம் முஸ்லிம்களிடையே பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது இது போன்ற செயல்களை தங்களைக் கோபமூட்டும் செயல்களாகவே முஸ்லிம்கள் கருதுகின்றனர். மேற்கத்திய நாடுகளில் இயேசு கிறிஸ்து போன்ற புனித மிக்கவர்களை அவமரியாதை செய்வதை எப்படி தெய்வ நிந்தனைச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்கிறார்களோ அதுபோல் தான் நபிகளார் "உருவப்படம்" என்று சொல்லி படத்தைப் போடுபவர்களையும் தண்டிக்க வேண்டும். மேற்கத்திய நாடுகள் இந்த விஷயத்தில் இரட்டை

நிலைப்பாட்டையே மேற்கொள்கின்றன. இயேசு கிறிஸ்துவை கேலி செய்து போடப்படும் பல நாடகங்கள் மேற்கத்திய நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளன. இவை கட்டுப் பாடுகளாகவோ அல்லது கருத்து சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்றோ கருதப்படுவதில்லை. மனிதப் புனிதர்களும், சமயங்களின் புனிதச் சின்னங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இரட்டை அளவு கோல்கள் இருக்கக் கூடாது.

கருத்து சுதந்திரம் என்ற பெயரில் தெய்வ நிந்தனை செய்வதை அனுமதிக்க முடியாது. கருத்து சுதந்திரம் ஒருவரை ஆபாசமாக, ஒழுங்கீனமாக, அவதூறாக, எழுதுவதற்கோ பேசுவதற்கோ உரிமை அளிக்கவில்லை. மனிதர்களின் அந்தரங்கத்தையும், மாண்பையும் பாதுகாப்பதற்காக அனைத்து நாடுகளுமே சட்டங்களை இயற்றியுள்ளன. இந்நிலையில் டச்சு நாட்டைச் சார்ந்த ஒருவர் எப்படி புனித நபிகளாரைப் பற்றி கேலிச்சித்திரம் வரைந்து வெளியிட முடியும்?

முஸ்லிம் உலகத்தில் எந்த ஒரு நபியின் உருவத்தையும் யாரும் வரைய முடியாது. இயேசு கிறிஸ்து தந்தை இல்லாமல் பிறந்த போதிலும், அவரது தாயாரான புனித அன்னை மேரிக்கு முஸ்லிம்கள் மிகுந்த மரியாதை அளிக்கின்றனர். பிற சமயங்களைத் தெய்வங்களை நிந்திக்கவோ, அவமரியாதை செய்யவோ அல்லது கேலி செய்யவோ கூடாது ஏனெனில் அவர்களும் திருப்பி அவ்வாறு செய்யக்கூடும் என குர்ஆன் தன்னைப் பின்பற்றுபவர்களை எச்சரித்துள்ளது.

# நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இஸ்லாத்தை வாள் கொண்டு பரப்பினார்களா?

ஒவ்வொரு நபியின் அணுகுமுறையும், செயல்படும் தன்மையும் ஒவ்வொரு விதமாகவே இருந்து வந்துள்ளது. ஏனெனில் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் பலதரப்பட் மக்களிடையே தோன்றினார்கள். ஒரு நபியை இன்னொரு நபியுடன் ஒப்பிட்டுப்பார்ப்பது சரியான அணுகுமுறை அல்ல. ஈஸா நபி அவர்கள் (ஜீஸஸ்) எந்தப் போரும் செய்யவில்லை என்பது உண்மையே. ஏனெனில் அவர்களுக்கு போர் செய்வதற்கான தேவை எதுவும் ஏற்படவில்லை. ஆனால் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைக் கொலைசெய்யத் திட்ட மிட்டார்கள் எனவே நாயகமவர்கள் சத்தியத்தை நிலை நாட்டுவதற்காகப் போர் புரிய வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் போரிட்டார்கள். முஹம்மது(ஸல்) அவர்கள் ஒரு நபியாக இறைவனால் உயர்த்தப்பட்ட பிறகு, மக்களை அமைதி வழிக்கு வருமாறு வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால் இஸ்லாத்தின் எதிரிகளான குறைஷியத் தலைவர்கள் அவர்களை எதிர்த்தனர். இழிசொல் கூறினர். தொடர்ந்து பல ஆண்டுகள் அவர்கட்கும் அவர்களதுதோழர்கட்கும் இன்னல்கள் விளைவித்தனர். அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தனர். மக்காவை விட்டு அவர்கள் வெளியேறிச் செல்லும் வண்ணம் நிர்ப்பந்தங்கள் கொடுத்தனர். நபிகளார் மதினாவுக்குச் சென்ற பின்னரும் தொடர்ந்து தொல்லைகள் கொடுத்து வந்தனர். நபிகளாரையும் அவர்களது தோழர்களையும் மதினாவை விட்டு வெளியேற்றுமாறும் அல்லது கொன்று விடுமாறும் மதினா வாசிகளை கேட்டுக் கொண்டனர். தங்களது கோரிக்கையை நிறைவேற்றா

விட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்களை எச்சரித்தனர். நபிகளாரைக் கொன்று விடுமாறும், அப்படிச் செய்யவில்லை என்றால் மதினாவைத் தாக்கி அழித்து விடுவதாகவும் மக்காவிலுள்ள குறைஷித் தலைவர்கள் மதினாவிலுள்ள தலைவர்கட்கும் அங்குள்ள சில நயவஞ்சகர் களுக்கும் செய்திகள் அனுப்பினர். ஒன்று மரணத்தை எதிர் நோக்க வேண்டும்; இல்லையேல் இஸ்லாமிய நம்பிக்கையை பாதுகாப்பதற்காக எதிர்த்துப் போராட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது நபிகள் நாயகம்(ஸல்) போரிட முடிவு செய்தார்கள்.

எனவே சத்தியத்தைப் பிரச்சாரம் செய்வதை எதிர்த்த எதிரிகளோடு அவர்கள் போரிட வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது. ஒரு பரந்துபட்ட வரலாற்றுக் கண்ணோட் டத்துடன் தான் அவர்கள் புரிந்திட்ட போர்களை அணுக வேண்டும். மக்கள் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்திட்ட தனக்குப் பின்னால் வரவிருக்கின்ற தலைமுறை யினருக்கும் ஒரு முன்மாதிரி ஆட்சியாளராகவும், இராணுவ தளபதியாகவும் திகழ்ந்திட்ட ஒரு இறை தூதர், இராணுவ ரீதியிலான இது போன்ற பயமுறுத்தல்களை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. எனினும் இறைவனின் ஆணைக்கிணங்க, அவனின் தூதரான நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் போர்களின் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை வகுத்துத் தந்தார்கள். இந்த விதிமுறைகள் சமாதானத்தை ஊக்குவிப் பதாகவும் போர்களின் போது மனிதாபி மானத்துடன் நடந்து கொண்டு உயிர்ச் சேதத்தை குறைக்கும் வகையிலும் வகுக்கப்பட்டிருந்தன.

இஸ்லாமிய எதிரிகளும், ஒரு சார்பு எண்ணம் கொண்டவர்களும் நபிகளார் இஸ்லாத்தை வாள் மூலம் பரப்பியதாகவும், போர் புரிவதே அவர்களின் முக்கியத் தொழில் என்பது போலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். ஆனால் உண்மை என்னவெனில், மதினாவில் இருந்த பத்து ஆண்டுகளில் நபிகளார் வெறும் 95 நாட்களில் மட்டுமே போர்களிலும், போர் ஆயத்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள். பெரும்பாலான போர்களில் ஒரு நாளைக்குள்ளாகவே நபிகளார் வெற்றி பெற்று விட்டார்கள். இந்த நாட்கள் போக, தமது பத்து

ஆண்டுகள் கால எஞ்சிய வாழ்க்கையை (3555 நாட்கள்) அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்த மக்களின் வாழ்க்கை முறையில் புரட்சிகரமான மாற்றங்கள் கொண்டு வரச் செலவிட்டார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நிகழ்த்திய அனைத்துப் போர்களிலும் இறந்தவர்கள் மொத்தம் எண்ணிக்கை வெறும் 1014 மட்டுமே. நபிகளார் தரப்பில் இறந்தவர்கள் 255. எதிரிகளின் தரப்பில் இறந்தவர்கள் 759. இப்போர்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையோடு இறந்தவர்களின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது அது வெறும் 1.5 சதவிகிதம் ஆகும். இந்த உயிர் சேத எண்ணிக்கையை பிற போர்கள் அல்லது புரட்சிகளோடு ஒப்பிட்டுப் பார்த்திடுங்கள். பல ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்ற இப் போர்களில் லட்சக் கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். உதாரணமாக இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது, கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கைக்கும் (பொது மக்கள் உட்பட) போரில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக் கைக்கும் இடையே உள்ள விகிதாச்சாரம் 517சதவிகிதமாகும். அதாவது போரில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே அறுபது லட்சம் ஆகும். ஆனால் இறந்தவர்களின் எண்ணிக்கையோ 5 கோடியே 48 லட்சமாகும்.

மேற்கத்திய நாடுகளின் வரலாற்றில், கிறிஸ்துவ சமயம் நிகழ்த்தியுள்ள வன்முறைகளையும், போர்களையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு பார்த்தால், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பற்றிக் குறை கூறிட மேற்கத்திய அறிஞர்களுக்கு எந்த விதமான தார்மீக உரிமையும் இல்லை. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் குறிக்கோள் போர்கள் இல்லாமலேயே நிறைவேறியிருக்க முடியாதா என்ற கேள்வி எழக்கூடும். தங்களது தூதுத்துவ வாழ்க்கையின் ஆரம்பக் காலத்தில் நபிகளார் மோதல்களை கூடுமான வரை தவிர்த்ததே வந்தார்கள்.அவர்களது சமூகத்திற்குப் போரில் ஈடுபடு வதற்கான வலிமையோ அல்லது வாய்ப்பு வசதிகளோ இல்லை. ஹிஜ்ராவுக்குப் பின்னர் தான் (மக்காவிலிருந்து மதினாவுக்குச் சென்ற பிறகு) போர்முறையைக் கையாண்டார்கள்

இஸ்லாத்திற்கு முந்தைய அரேபியச் சமூகத்தில் தாக்குவதும், கொள்ளையடிப்பதும், சூறையாடுவதுமே

வீரர்களின் கலாச்சாரமாக இருந்தது. வாழ்வதற்காக முஸ்லிம்கள் தற்காப்புப் போரில் ஈடுபட வேண்டியதிருந்தது. போர்ச் சட்டங்கள் பற்றி ஜெனீவா மாநாட்டில் குறிப்பிடப் பட்டுள்ள அம்சங்களைப் போன்று, திருக்குர்ஆனிலும் இது பற்றிய தெளிவான எச்சரிக்கை காணப் படுகின்றது. தற்காப்புக்காகவே போரிடவேண்டும். சாதாரணப் பொதுமக்கள், பெண்கள். குழந்தைகள், முதியோர் ஆகியோர் தாக்கப்படக் கூடாது. தேவாலயங்கள், கோவில்கள், பள்ளிவாசல்கள், யூதக் கோவில்கள் போன்ற வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படக் கூடாது. மிருகங்கள், நீர் நிலைகள், தானியங்கள் அழிக்கப்படக் கூடாது என்று குர்ஆன் தெளிவுபடக் கூறியுள்ளது. மேலும் எதிரி சமாதானத்திற்கு வந்தால், அதனை உடனே ஏற்றுக் கொண்டு போரை நிறுத்த வேண்டும். சமாதானத்துடனும் சகிப்புத் தன்மையுடனும், ஒன்று சேர்ந்து வாழ்வதில் பிற சமயத்தினரை விடவும் முஸ்லிம்கள் மிக நல்ல முன்னுதாரணமாக திகழ்ந்துள்ளார்கள்.

இந்த வரலாற்று உண்மையை நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைக் குறை கூறுபவர்கள் வேண்டுமென்றே மறைத்து விடுகிறார்கள்.

# இஸ்லாம் வன்முறை மூலம் பரப்பப்பட்டதா?

இஸ்லாம் வன்முறையால் பரப்பப்பட்டதா என்ற கேள்விக்கு திருக்குர்ஆன் "இல்லை" என்று அறுதியிட்டுக் கூறுகிறது

> தீனில் இறைநெறியை மேற்கொள்வதில் யாதொரு கட்டாயமோ நிர்பந்தமோ இல்லை. தவறான வழியிலிருந்து நேரான வழி தெளிவாகப் பிரிக்கப்பட்டு விட்டது. (திருக்குர்ஆன் 2:256)

வாள் முனையில் இஸ்லாம் பரப்பப்பட்டதாக உலக மெங்கும் தவறான முறையில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. வரலாற்றுப் பாட நூல்களிலும், நடுநிலை தவறிய சில ஊடகங்களிலும் இந்தப் பிரச்சாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் வகுப்புவாத அடிப்படையில் மக்களைப் பிரித்து வாக்குகளைப் பெற விரும்புகின்ற சில அரசியல் கட்சிகளுக்கும், தீவிரவாத இயக்கங்களுக்கும் இத்தகைய பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றன. எனவே வெறுப்பை விதைத்திட, வரலாற்றைத் தோண்டி எடுத்து அதிலிருந்து தங்களுக்குத் தேவையான சிலவற்றை எடுக்கும் முயற்சியிலும் ஈடுபடுகின்றனர்.

வேற்றுமையில் ஒற்றுமை நிலவிய இந்தியாவில் பிரித்தாளும் சூழ்ச்சியை மேற்கொண்ட ஆங்கிலேய காலனி ஆதிக்க வரலாற்று ஆசிரியர்களைப் பின்பற்றியே இவர்களும் இந்தப் பிரச்சாரத்தை மேற்கொள்கிறார்கள். முஸ்லிம்கள் இந்தியாவை 650 ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளனர். நாட்டில் வாழ்ந்து வந்த ஒவ்வொரு முஸ்லிமல்லாதவரையும் கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்யவல்ல சக்தியும் அதிகாரமும் அவர்களிடம் இருந்தது. ஆனால் அவர்கள்

அப்படிச் செய்யவில்லை. இந்திய மக்களில் 80 சதவிகிதம் பேர் இந்துக்கள் என்ற உண்மை இந்தப் பொய்ப் பிரச்சாரத்தை (இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்ற) முறியடிக்கும் தக்க சான்றாகத் திகழ்கிறது.

இன்றைய உலக மக்கள் தொகையான 7 பில்லியனில் (700கோடி) 1.7 பில்லியன் (170 கோடி) முஸ்லிம்கள் உள்ளனர். இதில் அரபுகளின் எண்ணிக்கை மட்டும் 22 சதவிகிதமாகும். உலகிலேயே அதிக முஸ்லிம் மக்கட் தொகை கொண்ட நாடான இந்தோனிஸியா இஸ்லாம் தோன்றிய அரேபியா விலிருந்து வெகு தொலைவில் உள்ளது. தென்கிழக்காசிய நாடுகளில் மட்டும் 400 மில்லியன் முஸ்லிம்கள் உள்ளனர் (40 கோடி). இந்தியாவில் மட்டும் 150 மில்லியன் முஸ்லிம்கள் உள்ளனர். (15 கோடி) இந்து - சமஸ்கிருத மரபுடைய பங்களாதேஷில் 120 மில்லியன் (12கோடி) முஸ்லிம்கள் உள்ளனர்.

இந்தியா, அமெரிக்கா. இங்கிலாந்து ரஷ்யா ஆகிய நாடுகளில் சிறுபான்மையினராக முப்பது சதவிகிதம் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் ஒருபோதும் இருந்திராத பல ஆப்பிரிக்க நாடுகளில் முஸ்லிம்கள் கணிசமாக உள்ளனர். ஆனால் அதே நேரத்தில் முஸ்லிம்கள் ஒரு காலத்தில் ஆட்சி செலுத்திய ஸ்பெயின், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் முஸ்லிம்கள் தற்போது மிகக் குறைவாகவே உள்ளனர். வியப்பூட்டும் வண்ணம் மேற்கிலுள்ள அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும், ஸ்காண்டிநேவியன் நாடுகளான பிரான்ஸ், ஜெர்மனியிலும் இஸ்லாம் வெகுவேகமாக வளர்ந்து வரும் மார்க்கமாக தற்போது உள்ளது.

இந்தோனிஷியா, மலேசியா போன்ற நாடுகளுக்கு இஸ்லாமியப் படைகள் ஒரு போதும் சென்றதில்லை. கடல் மார்க்கமாக வணிகர்கள் மூலமாக இந்த நாடுகளுக்குச் சென்ற இஸ்லாம், அந்நாடுகளில் கலாச்சாரத்திலும், மரபுகளிலும் ஊடுருவி மக்களின் மனத்தில் இடம் பிடித்தது. எனினும் இஸ்லாம்அந்த நாட்டு மக்களின் கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், உடைகள், உணவு, மொழி ஆகியவற்றை மாற்றும் முயற்சிகளில் ஈடுபடவில்லை.

படையெடுப்பு நடத்தி வெற்றி கொண்ட பெரும்பாலான

நாடுகளெல்லாம் இஸ்லாத்தின் பக்கம் திரும்பின. இன்றைக்கும் அவை இஸ்லாமிய நாடுகளாகத் திகழ்கின்றன. இஸ்லாம் அந்த நாடுகளை மட்டும் வெற்றி கொள்ளவில்லை. அங்கு வாழ்ந்த மக்களின் மனங்களையும் வெற்றி கொண்டது. அந்த நாடுகளில் இஸ்லாத்தைத் தழுவாத மக்களுக்கு அவர்களது சமயக் கடமைகளை நிறைவேற்றிடும் சுதந்திரத்தை அளித்தது. எகிப்திலுள்ள காப்டிக் கிறிஸ்துவர்களையும், லெபனானிலுள்ள மாரோனைட்ஸ்களையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். அவர்களின் நலன்களையோ, கலாச்சாரங்களையோ, செழுமிய மரபுகளையோ அழிக்கும் எவ்வித முயற்சிகளிலும் இஸ்லாம் ஈடுபடவில்லை. அபூசிம் பலிலுள்ள ஸ்பினிக்ஸ் மற்றும் பாரோனிக் கோவில் களும், பிரமிடுகளும் வரலாற்றில் இதற்கான சான்றுகளாகத் திகழ்கின்றன. ஈரானிலுள்ள பெர்சிபோலிஸ் இன்றைக்கும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்தோனிஷியாவில் போர் புடோரிலும், பாலியிலும் உள்ள ஹிந்துக் கோவில்கள் இன்றைக்கும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களாக உள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்தை எடுத்துக் கொள்வோம். அதன் வடமேற்கு எல்லைகள் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கின்ற மத்திய கிழக்கு நாடுகளை ஒட்டியுள்ளன. முதன் முதலில் போர் மூலமாகவே இஸ்லாம் சிந்துப்பகுதியில் நுழைந்தது என்பது உண்மையே! ஆனால் கேரளாவில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே இஸ்லாம் நுழைந்து விட்டது. தீபகற்ப இந்தியாவின் கடற்கரைப் பகுதிகளில் கி.பி.11, முதல் 13 நூற்றாண்டு வரை முஸ்லிம்கள் வளர்ந்து வரும் ஒரு சமூகமாகத் திகழ்ந்ததாக இந்தப் பகுதிகளைப் பார்வையிட்ட புகழ்பெற்ற பயணி இப்னு பாதுதா குறிப்பிடுகிறார். டெல்லியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த மொகலாய மன்னர்களுக்குக் கூட இப் பகுதிகளில் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தது பற்றித் தெரிய வில்லை. அதனால் தான், கடற் கொள்ளையர்கள் என்று போர்த்துக்கீசியர்களால் சித்தரிக்கப்பட்ட முஸ்லிம்களை அடக்க அவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தனர். அரபு வணிகர்கள் மூலமாகவே இஸ்லாம் கேரளாவிற்கு வந்தது. இந்து சமய மரபுகளின் அடிப்படையில் தடை செய்யப் பட்டிருந்த கடல் வாணிபத்தில் முஸ்லிம்கள் உன்னத நிலையில்

இருந்ததால் இந்து மன்னரான திருவாங்கூர் மகாராஜா முஸ்லிம்களுக்கு உதவிகள் புரிந்தார். அந்தக் கால கட்டத்தில் நாட்டின் பொருளாதார வளம் கடல் வாணிபத்தைச் சார்ந்திருந்த காரணத்தால் மகாராஜா அவர்களுக்கு அனைத்து விதமான உதவிகளையும் செய்தார். உள்ளூர் மீனவர்கள் சிறந்த மாலுமிகளாக உருவாக வேண்டும் என்பதற்காக அவர்களை இஸ்லாத்தில் சேரும்படி தூண்டினார். ஒவ்வொரு மீனவக் குடும்பத்தினரும் தங்களது புதல்வர்களுள் ஒருவரை இஸ்லாத்தில் சேர்த்திட வேண்டுமென்று உத்தரவே பிறப்பித்தார். இந்தியாவிற்கு வந்த பயணி இப்னு பாதுதா, கி.பி.எட்டாம் நூற்றாண்டிலேயே மலபார் கடற்கரைப் பகுதிகளில் இஸ்லாமியக் குடியிருப்புகள் இருந்ததைத் தான் பார்த்ததாகக் குறிப்பிடுகிறார்.

வட இந்தியாவில் ஏராளமான மக்கள் இஸ்லாத்தைத் தழுவினர். இது கட்டாய மதமாற்றமல்ல. சிந்துப் பகுதியை வெற்றி கொண்ட முஹம்மது பின் காசிம் அப்பகுதி மக்களால் பெரிதும் நேசிக்கப்பட்டார். ராஜா தாஹிரின் கொடுங் கோன்மை ஆட்சியில் சிக்கித் தவித்திருந்த அம்மக்கள் அவரை வரவேற்றனர். கலிபா சுலைமான் இப்னு மர்வானின் ஆணையின்படி முவாவியா பின் முஹல்லப்புடன் முஹம்மது பின் காசிம் சிறைக்கைதியாக டமாஸ்கஸ்ஸுக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது சிந்துப் பகுதி மக்கள் அழுது கண்ணீர் வடித்தனர். அவரது நினைவாக கிராஜ் என்ற இடத்தில் அவருக்குச் சிலை எழுப்பினர் (ஆதாரம்.வில்லியம் ஜாக் ஜன் ஏ.வி.எழுதிய இந்திய வரலாறு என்ற நூல். பாகம் ஐந்து . வெளியீடு குரோலியர் சொசைட்டி லண்டன். பக்கம்: 14) முஹம்மது பின் காசிம் தனது இராணுவத்தில் ஜாட், மெய்திஸ் இனத்தினரையும் சேர்த்துக் கொண்டார். தாஹிரின் ஆட்சியின் பால் வெறுப்படைந்திருந்த இம்மக்கள் முற்றிலும் புதியவரான காசிமின் இராணுவத்தில் சேரத் தயக்கம் காட்டவில்லை. தாஹிரின் ஆட்சியின் போது இவர்கள் மோசமாக நடத்தப்பட்டு அவமானப் படுத்தப்பட்டனர். அவர்கள் குதிரைச் சவாரி செய்வதினின்றும், தலைப்பாகை மற்றும் அங்கி அணிவதினின்றும் தடுக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மரம் வெட்டும் பணிகளிலும், தண்ணீர் கொண்டு வரும் பணிகளிலும் அமர்த்தப்பட்டிருந்தனர். (மத்திய கால

இந்திய வரலாறு, பேராசிரியர் ஈஸ்வர் பிரசாத் பக்கம் 55 – 56)

பௌத்த சமயம் பரவலாக அனுஷ்டிக்கப்பட்ட இந்தப் பகுதிகளில் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. சிந்துவிலும் மக்கள் பெரும்பாலும் பௌத்த சமயத்தினராக இருந்தனர். அப்போது ஆட்சி செலுத்திய பிராமண அரசர்பால் அதிருப்தி கொண்டிருந்தனர். அது போல் வங்காளம், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பஞ்சாப் ஆகிய பகுதிகளில் பெரும் பான்மையினராக இருந்த பௌத்தர்கள் பிராமண சமயத் தினரால் இன்னல்களுக்கு ஆளாகியிருந்தனர். பௌத்த சமயம் இந்தியாவில் மர்மமான முறையில் அழிந்து போகவில்லை. பிராமணர்களின் தொல்லைகள், இன்னல்கள் காரணமாக பௌத்தர்கள் நாட்டைவிட்டு வெளியேறினர். அல்லது வாய்ப்புக்கிடைத்த போது இஸ்லாத்தில் தஞ்ச மடைந்தனர். உமையா கலீபாவான உமர் பின் அப்துல்லா அஜீஸ் சிந்து விலிருந்த அரசர்களுக்கும், அரசியர்களுக்கும் இஸ்லாத்தில் இணையும்படி வேண்டுகோள் விடுத்து கடிதங்கள் எழுதினார். ராஜா தாஹிரின் மகனான ஜெய்ஸியா இஸ்லாத்தின் சிறப்பு களைப் பற்றி கேள்வியுற்றும் கலீபாவின் வேண்டுகோளை ஏற்றும் இஸ்லாத்தில் சேர்ந்தார். (ஆதாரம்: வில்லியம் ஜாக்ஸன் ஏ.வி.இந்திய வரலாறு ஐந்தாம் பாகம். பக்கம் – 15)

டெல்லி சுல்தான்கள் இந்துக்களைக் கட்டாயப்படுத்தி முஸ்லிம்களாக மதம் மாறச் செய்தனர் என்று பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. உண்மை என்னவெனில் அலாவுதீன் கில்ஜி மதமாற்றத்தை தடை செய்தார். அவர் சமய சார்பற்றவராக விளங்கினார். ஏராளமான பனியாக்கள் இஸ்லாத்தைத் தழுவியதால் ஜிஸ்யா வரி வசூல் குறைந்து அரசாங்க வருமானம் குறைந்து போனதே அவர் இந்தத் தடை சட்டம் போட்டதற்குக் காரணமாகும்.

அக்பர் போன்ற மாமன்னர்கள், மக்களை இஸ்லாத்திற்கு மாற்றும் முயற்சியில் ஈடுபடவில்லை. மாறாக இந்து சமயத்திலுள்ள சில கடுமையான பழக்க வழக்கங்களை மாற்றிச் சீர் படுத்திட முயற்சிகள் மேற்கொண்டார். அவர் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். எனினும் அவை இந்து சமய பழக்கவழக்கங்களில் தலையிடும் முயற்சி என்று கருதப்பட்டது. மனித உணர்வுகளைப் புண்படுத்தும் செயல்கள் என்று அவர் கருதியவற்றையெல்லாம் மாற்றிட முயற்சித்தார்.

குழந்தைத் திருமணம், நெருப்பின் மீது நடப்பது, மிருக பலி போன்றவற்றைத் தடை செய்தார். விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்வதை அனுமதித்தார். பெருமளவு எதிர்ப்பு வரும் என்று கருதியதால் உடன் கட்டை ஏறும் பழக்கத்தை அவர் தடை செய்யவில்லை. எனினும் கணவனை இழந்த பெண் தனது விருப்பப்படி நடந்து கொள்ள அனுமதித்தார். திருமணத்திற்கு மணமகள், மணமகன் இருவரின் சம்மதமும் அவசியம் என்று சட்டம் கொண்டு வந்தார். (ஆதாரம்: ஏ.வி.வில்லியம் ஜாக்ஸன் எழுதிய இந்திய வரலாறு நூல் பாகம் 6. பக்கம் 15, 18)

மாமன்னர்களாலும், ஆட்சியாளர்களாலும், இராஜ தந்திரத்தின் மூலம் மக்களிடம் அன்புப்பிணைப்பை ஏற்படுத்த இயலவில்லை. முஸ்லிம் மன்னர்களால் மக்களை இஸ்லாத்திற்குக் கொண்டு வர இயலவில்லை. இஸ்லாமிய சூபிகளும், ஞானிகளுமே மக்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். அவர்களின் தவச் சாலைகளில் நோயாளிகள், ஏழைகள், ஆதரவற்றவர்கள், விரக்தியடைந்தவர்கள் என அனைவரும் அடைக்கலம் அடைந்தனர். அஜ்மீர், மஹ்ரோலி, பஸ்டி நிஜாமுத்தீன் ஆகிய தர்காக்கள் ஏராளமான மக்களின் உள்ளங்களில் அன்பையும்,மரியாதையையும் ஏற்படுத்தியது. இந்த ஞானிகள் எளிய முறையில் வாழ்ந்தனர். ஒரு நாளின் முடிவில் எந்த விதமான உணவுப் பொருட்களும் மிஞ்சாத அளவிற்கு ஏழைகளுக்கு உணவளித்தனர். வைத்தியர்களை நியமித்து ஏழைகளுக்கு இலவச சிகிட்சை அளித்தனர். ஹஸரத் நிஜாமுதீன் அவுலியா வாழ்ந்த காலத்தில் டெல்லியை ஆண்ட சுல்தான்கள் மீது எதிரிகள் பல முறை போர் தொடுத்தனர். ஆனால் ஒரு முறை கூட அவர்கள் ஹஸ்ரத்தின் தவச்சாலையைத் தாக்க வில்லை.

மத்திய ஆசியாவைச் சார்ந்த சூபி ஞானிகளின் பிரச்சாரம் காரணமாகவே காஷ்மீர் மாநிலத்திலுள்ள மக்கள் இஸ்லாத்தைத் தழுவினர். முஸ்லிம்கள் இம் மாநிலத்தில் பெரும்பான்மையினராக இருந்த போதிலும், பல நூற்றாண்டுகளாக அங்கு இந்து மன்னர்களே ஆட்சியில் இருந்தனர். நான்கு நூற்றாண்டுகளாக முஸ்லிம் நிஜாம்களின் ஆட்சியின் கீழ் இருந்த ஹைதராபாத்தில் 12 சதவிகித முஸ்லிம்களே உள்ளனர். இந்த சமஸ்தானம் 1948ஆம் ஆண்டு

இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டது.

ஜலந்தரிலுள்ள இந்து ஜாட் சாதியினரிடையே "சுல்தானி ஜாட்" என்ற பிரிவினர் உள்ளனர். இவர்கள் சுல்தான் ஷாஹி சர்வார் என்ற முஸ்லிம் சூபி ஞானியின் பக்தர்களாவர். இந்த ஞானியின் சமாதி தற்போது பாகிஸ்தானிலுள்ள "ஷாகோட்" என்ற இடத்தில் உள்ளது. இந்த சுல்தான் ஜாட்பிரிவினர் இன்றைக்கும் ஹலால் உணவுகளையே உண்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் விவசாயிகள். அவர்கள் ஹுக்கா புகைக்கிறார்கள். தாங்கள் வசிக்கும் கிராமப்புறங்களுக்கு வெளியே அவர்கள் ஒவ்வொரு வியாழக்கிழமையும் சுல்தான் பெயரில் ஜியாரத் செய்து விளக்கேற்றுகிறார்கள். ஷாகோட்டிலுள்ள சுல்தான் தர்காவிற்கு மலர் போர்வை சாத்துகிறார்கள்.

சீக்கியர்கள் ஆட்சியின் போது மூல்டான் கவர்னராக இருந்த சாவன்மால் இந்த ஜாத்ராவை நிறுத்திட முயற்சிகள் மேற்கொண்டார். சுல்தானின் தர்காவுக்குச் சென்று இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் ரூ.100/- அபராதம் விதித்தார். ஆனால் அம்மக்கள் 19ம் நூற்றாண்டின் இறுதி வரை அதனைக் கைவிடவில்லை. இது இந்தியாவைப் பற்றிய நிலவரமாகும்.

கென்யா, தன்ஸானியா, மடகாஸ்கர் போன்ற நாடுகள் ஒருபோதும் முஸ்லிம்களால் ஆளப்படவில்லை. எனினும் இந்த நாடுகளில் கணிசமான எண்ணிக்கையில் முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

1. தன்ஸானியாவில் 70 சதவிகித முஸ்லிம்கள் உள்ளனர். ஆனால் இந்நாடு எப்போதும் கிறிஸ்துவ மன்னர்களாலேயே ஆளப்பட்டு வந்தது.

2. ஐரோப்பாவிலும் இஸ்லாம் ஆழமாக ஊடுவியது. கிழக்கு ஐரோப்பாவிலிருந்த பால்கன் நாடுகள் ஐந்து நூற்றாண்டுகளாக துருக்கி உதுமானிய சுல்தான்களின் ஆட்சியின் கீழ் இருந்தன. எனினும், அல்பேனியா, போஸ்னியா, ஹெக்ஸகோவினா ஆகிய நாடுகளைத் தவிர பிற நாடுகளில் இஸ்லாம் பரவவில்லை. அல்பேனியாவில் 90 சதவிகித முஸ்லிம்கள் உள்ளனர். சமீப காலம் வரை யுகோஸ்லேவியா குடியரசின் கீழ் இருந்த போஸ்னி

யாவிலும், ஹெக்ஸகோவினாவிலும் கணிசமான எண்ணிக்கையில் முஸ்லிம்கள் இருந்தனர். யுகோஸ்லேவியா சிதறுண்ட பிறகு போஸ்னியா தனி நாடாகியது.

3. மாறாக, கிட்டத்தட்ட எட்டு நூற்றாண்டுகள் முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் இருந்த ஸ்பெயினில் (கி.பி.712முதல் 1492 வரை) ஒரு போதும் முஸ்லிம்கள் பெரும் பான்மையினராக இருந்ததில்லை. முஸ்லிம்களின் ஆட்சியின்போது கிறிஸ்துவர்களுக்கும், யூதர்களுக்கும் அவர்களது சமயங்களை அனுஷ்டிக்க எல்லாவிதமான உரிமைகளும் வழங்கப்பட்டிருந்தன. இது வரலாற்றுப் பூர்வமான உண்மையாகும். அங்கு கிறிஸ்துவர்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகு, முஸ்லிம்களும், யூதர்களும் கட்டாயமாக மதமாற்றப்பட்டனர். மதம் மாற மறுத்தவர்கள் நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். அல்லது வெளியேற்றப்பட்டனர். அதுபோல், பல அரபு நாடுகளில் கணிசமான அளவில் கிறிஸ்துவர்கள் வசிக்கின்றனர். இஸ்லாம் கட்டாய மத மாற்றத்தை ஊக்குவிக்கவில்லை என்பதற்கு இது சிறந்த உதாரணமாகும்.

4. எகிப்தில் 10 சதவிகித காப்டிக் கிறிஸ்துவர்கள் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

உலகிலேயே முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் நாடு இந்தோனிஷியா. இங்குள்ள பாலித்தீவில் இந்துக்களே அதிக அளவில் வசிக்கின்றனர். பழமையான இந்துக் கோவில்கள் இந்தோனிஷியாவில் இன்றைக்கும் உள்ளன.

6. மலேசியாவின் பெரும்பான்மை மக்கள் முஸ்லிம்களே. ஆனால் இந்த நாட்டின் மீது எந்த ஒரு முஸ்லிம் இராணுவமும் படையெடுத்தது இல்லை. போர் மூலமாக இங்கு இஸ்லாம் பரவவில்லை. மாறாக, அதனுடைய அற நெறிச் செய்தி மூலமாகவே பரவியது. மலேசியாவில் 45 சதவிகித மலேயா அல்லாத இன மக்கள் உள்ளனர். அந்த நாட்டில் மண்ணின் மைந்தர்களுக்கு (பூமிகார்) இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள போதிலும், அங்குள்ள மலேயா அல்லாத இனமக்கள் வர்த்தகத்திலும், கல்வியிலும், அரசிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

7. லெபனானில் முஸ்லிம்களே பெரும்பான்மையினர்

எனினும் அந்நாட்டின் சட்டப்படி எப்போதும் ஜனாதிபதியாக மரோனைட் கிறிஸ்துவப் பிரிவினைச் சார்ந்தவரும், பிரதமராக முஸ்லிமும், சபாநாயகராக ஷியா பிரிவைச் சார்ந்தவரும் உள்ளனர். அங்கு வாழும் பல்வேறு மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அரசின் உயர் பதவிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

8. கிறிஸ்துவ சமயத்தின் பழம் பெரும் சமூகங்கள் பல இன்னமும் சிரியா, ஜோர்டான், ஈராக் ஆகிய நாடுகளில் உள்ளன.

9. துனிஷியாவிலும், ஈரானிலும் யூதர்கள் உள்ளனர். துனிஷியாவில் வர்த்தகத்திலும், தொழிலிலும் யூதர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

10. பங்காள தேசத்தில் 12 சதவிகிதம் உள்ள இந்துக்கள் அந்த நாட்டில் கலை, இலக்கியம், ஊடகம், சினிமா ஆகிய துறைகளில் முன்னணிப் பங்கு வகிக்கின்றனர். நாட்டின் தலைநகரான டாக்கா அங்குள்ள புகழ்பெற்ற டாக்கேஸ்வரி கோவிலின் பெயராலேயே வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பெயரை மாற்றிட அங்குள்ள அரசு முயற்சிக்கவில்லை. பங்களா தேசத்தில் உள்ள முஸ்லிம்கள் இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளுக்கு முரண்படாத சில இந்துப் பழக்க வழக்கங்களை இன்றைக்கும் கடைப்பிடிக்கின்றனர். வங்காள மொழியே ஒரு சமஸ்கிருத மயமாக்கப்பட்ட மொழி தான். ஒரே சீரான உடையைத் தான் மக்கள் அணிய வேண்டுமென இஸ்லாம் எந்த விதமான நிபந்தனையையும் விதிக்கவில்லை. அது பன்முகக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்கிறது.

11. மங்கோலியர்கள் இஸ்லாமியப் பேரரசின் மீது படையெடுத்து அதன் பல பகுதிகளை வெற்றி கொண்ட போதிலும் இஸ்லாத்தை அழிப்பதற்காக முயற்சிகளில் ஈடுபடவில்லை. மாறாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இது வரலாற்றில் நிகழ்ந்த ஈடு இணையற்ற ஒரு சம்பவமாகும். வெற்றியாளர், வெற்றி கொள்ளப்பட்டவரின் சமயத்தை ஏற்றுக் கொள்கிறார். என்னே விசித்திரம்! அவர்கள் வெற்றியாளர்கள் என்பதால் நிச்சயமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி அவர்களை யாரும் கட்டாயப்படுத்தியிருக்க முடியாது. தற்போது உலகில் வசித்துவரும் 170 கோடி

முஸ்லிம்களிடம் நீங்கள் கட்டாயப்படுத்தப்பட்டா மதம் மாறினீர்கள்? என்று கேட்டுப்பாருங்கள். உலகில் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் நாடு இந்தோனிஷியா. அங்கு எந்தப் போரும் நிகழ்ந்ததாக வரலாறு இல்லை. நிலைமை இப்படி இருக்க "வாள்" எங்கிருந்து வந்தது? இஸ்லாத்தைப் போன்ற ஆன்மீக நோக்கும், அறநெறிகளை வலியுறுத்தும் போக்கும் கொண்ட ஒரு சமயத்தை ஏற்கும்படி யாரையாவது கட்டாயப்படுத்த முடியுமா? சிந்திக்க வேண்டும்.

இப்படி வரலாற்றில் கூறப்படும் முரண்பட்ட செய்திகளைப் பற்றிக் குறிப்பிடும் "சர் தாமஸ் ஆர்னால்டு" என்பார் பொதுவாகக் கூறப்படும் "ஒரு கையில் வாள், ஒரு கையில் குர்ஆன்" என்ற ரீதியில் இஸ்லாம் பரப்பப்பட வில்லை. மாறாக ஒரு கையில் குர்ஆனின் போதனைகள், மறுகையில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் உயரிய அறப்பண்புகள்" என்ற இரு வலிமை மிக்க ஆயுதங்கள் மூலமாகவே பரவியது" என்று குறிப்பிடுகிறார் (ஆதாரம்: இஸ்லாத்தின் போதனைகள் என்ற நூல்)

மேற்கு நாடுகளில் வாழும் மக்களை இஸ்லாம் வெகுவாக ஈர்த்து வருகிறது. 9/11 நிகழ்ச்சிக்குப்பிறகு, தாங்களாகவே கற்றுணர்ந்து இஸ்லாத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் இணைந்து வருகின்றனர். இஸ்லாம் வாளால் பரப்பப்படுகிறது என்ற பொய்ப்பிரச்சாரத்தை இது முறியடிக்கிறது. இஸ்லாத்தைப் பற்றி மிக மோசமாகப் பிரச்சாரம் செய்யப்படும் இன்றைய கால கட்டத்தில், இஸ்லாத்திற்கு எதிரான போக்கே அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் அப்படி இல்லையே ! இஸ்லாத்தின் பால் வெறுப்புக் காட்டுபவர்கள் இப்போதாவது உண்மை நிலையை உணர்ந்து இஸ்லாமிய எதிரிகளால் பரப்பப்பட்டு வரும் பொய்ப் பிரச்சாரத்தை நம்பாதிருக்க வேண்டும்.

# பழைய பகை - புதிய வெறுப்பு

இஸ்லாத்திற்கும் கிறிஸ்துவ ஐரோப்பிய நாடுகளுக் கிடையிலான மோதல்களுக்கும் மிக நீண்ட வரலாறு உண்டு. ஆயிரம் வருடங்களாக இந்த மோதல் நீடித்து வருகிறது. அரேபிய தீப கற்பத்தில் இஸ்லாம் தோன்றிய நூறு ஆண்டுகளுக்குள்ளாகவே ஐரோப்பிய நாடுகளின் வாசற் கதவுகளை அது தட்டியது. கி.பி. 712ல் உமையாக்களின் தளபதியான தாரிக் பின் ஸைது ஸ்பெயினை வெற்றி கொண்டார். அதிலிருந்து ஐபீரிய தீபகற்பம் ஏறத்தாழ 800 ஆண்டுகள் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இருந்தது. இங்கு தான் இஸ்லாம் சமய ரீதியிலும் அரசு ரீதியிலும் சிறப்பான வளர்ச்சி பெற்று ஒரு சிறந்த நாகரீகமாகப் பரிணமித்தது. அன்றைய உலகில் ஈடு இணையற்ற ஒரு மென்மையான சக்தியாக அது வளர்ந்தது. கார்டோபாவிலும் கிரனடாவிலுமிருந்த பல்கலைக் கழகங்களையும் பரிசோதனைச் சாலைகளையும் மத்திய கிழக்கு மற்றும் ஆப்ரிக்கா ஐரோப்பா நாடுகளைச் சார்ந்த அறிஞர்களும் மருத்துவர்களும் வானியல் வல்லுநர்களும் விஞ்ஞானிகளும் தத்துவ ஞானிகளும் வந்து பார்வையிட்டுச் சென்றனர்.

இஸ்லாமியத் தத்துவமான தௌஹீது அல்லது இறை ஒற்றுமை கிறிஸ்துவ சமயக் கொள்கைகளை விடவும் வலுவான அடித்தளம் கொண்டதாக அமைந்திருந்தது. (பிதா மகன் - பரிசுத்த ஆவி கிறிஸ்துவ சமயக் கொள்கையாகும்) திருக்குர்ஆன் அதன் அசலான தூய வடிவில் பாதுகாக்கப்பட்டு வந்தது. இதுவும் அவர்கட்கு ஒரு சவாலாக இருந்தது. அனைத்திற்கும் மேலாக சமயத் தலைமையிலிருந்து சுதந்திரமாகச் செயல்பட இஸ்லாம் வழிவகைகள் செய்து கொடுத்திருந்தது. இந்த அதிகமான சுதந்திரம், ஸ்பெயின் முஸ்லிம்களின் அறிவு வளர்ச்சியிலும் விஞ்ஞான முன்னேற்

றத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த சூழ்நிலை தங்களது இருப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளதாக கிறிஸ்துவ உலகம் கருதியது. இஸ்லாத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்திட அவர்கள் புதிய யுக்திகளைக் கையாண்டிட முயற்சித்தனர். மேற்குலகம் சமய ரீதியான மற்றும் கொள்கை ரீதியான தாக்குதல்களை இஸ்லாத்தின் மீது தொடுத்தது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மீதே குறிவைத்து இந்தத் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. நபிகளார் செய்திட்ட பலதார மணங்களும் அவர்கள் புரிந்திட்ட போர்களும் மேற்குலகின் பொய்ப் பிரச்சாரங்களுக்கு ஏதுவாக அமைந்திருந்தன. சிலுவைப் போர்களில் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் அழிவு காரணமாகவும், புனித ஸ்தலங்கள் (ஜெரூசலம்) சுல்தான் சலாஹுத்தீன் ஐயூபியால் கைப்பற்றப் பட்டதன் காரணமாகவும், பின்னர் கான்ஸ்டாண்டி நோபிளின் வீழ்ச்சி காரணமாகவும் (தற்போது இஸ்தான்புல் என அழைக்கப்படும் இந் நகரம் கிழக்கு ரோமானிய அல்லது பைஸாண்டியப் பேரரசின் தலைநகராக விளங்கியது) ஐரோப்பாவின் கிழக்குப் பிராந்தியத்தில் உதுமானிய பேரரசு நுழைந்ததன் காரணமாகவும் ஐரோப்பியர்கள் தாங்கள் வீழ்த்தப்பட்டதாக உணர்ந்தனர்.

இன்றைக்கு, இஸ்லாம் தனது முந்தைய நிலையின் வெளிறிப்போன நிழலாக இருக்கின்றது முஸ்லிம்கள் தங்களுக்குள் பல குழுக்களாகப் பிரிந்து கிடக்கின்றனர். மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவதற்கு மேற்கு நாடுகள் போர்களில் ஈடுபடுகின்றன. அண்மைக் காலமாக புகைந்து கொண்டிருக்கின்ற வெறுப்புத்தீயை கிளறி விடும் முயற்சிகள் வேகமடைந்துள்ளன. மேற்கத்திய ஊடகங்களும், அங்குள்ள அரசு நிர்வாகங்களும் இது போன்ற சதிச்செயல்களில் ஈடுபட்டுள்ளன என்பதை விளக்கத் தேவையில்லை. வெறுப்பைக் கோபமாக மாற்றிடுவதே அவர்களின் தற்போதையத் தேவையாக உள்ளது. மேற்குலகில் நடந்து வருகின்ற பாஸ்கீயூஸ் மற்றும் ஐரிஸ் தேசிய இனங்களின் போராட்டங்களைத் திசைதிருப்ப அவர்களுக்கு ஒரு புதிய எதிரியை அடையாளம் காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு அடிக்கடி

இலக்காகி வரும் பாலஸ்தீனம், ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து வரும் அகதிகளை "மேற்குலகிற்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்" என்ற எண்ணம் கொண்ட சில சக்திகள் பயன்படுத்திக் கொள்கின்றன.

இஸ்லாத்திற்கும், மேற்குலகிற்குமான உறவுகளை தீர்மானிக்கின்ற வரலாற்று ரீதியான மோதல்களைப் பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும். மார்க்க அறிஞர் ஜியாவுத்தீன் சர்தார் எழுதியுள்ள கீழ்க்கண்ட கட்டுரை அதனைத் தெளிவாக விளக்குகிறது.

இஸ்லாம் தோன்றிய நாளிலிருந்தே அது மேற்கத் தியர்கட்கு ஒரு பிரச்னையாகவே இருந்து வந்துள்ளது. முதல் பிரச்னை சமயம் சார்ந்ததாகும். இறைவனின் குமாரர் சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த பின்னர், 600 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த அரேபிய தீர்க்கதரிசி வந்ததன் நோக்கம் என்ன? இரண்டாவது, இஸ்லாம் தோன்றி சில ஆண்டுகளுக்குப் பின்னர் அது ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை அடைந்த போது அது ஒரு அரசியல் பிரச்னையாக உருவெடுத்தது. மூன்றாவதாக, இஸ்லாமிய நாகரீகத்தின் அறிவார்ந்த சாதனைகள் அவர்களுக்கு அறிவுசால் பிரச்னையாகவும் உருவெடுத்தது. இந்தப் பிரச்னைகள் ஒவ்வொன்றையும் குறிப்பிட்ட வழிமுறைகளில் அவர்கள் அணுகினர்.

சமய அடிப்படையில், ஐரோப்பியர்கள் இஸ்லாத்தையும், அதனுடைய தூதரையும், அவர்களைப் பின்பற்றியவர்களையும் கண்டனம் மட்டுமே செய்ய முடிந்தது. அரசியல் ரீதியில் அவர்கள், முஸ்லிம்கள் மீது பல சிலுவைப்போர்களைத் தொடுத்தனர். இந்த வழிமுறைகள் தோல்வியுற்ற பின்னர் இஸ்லாமிய நாடுகளைத் தங்களது காலனி ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். அறிவார்ந்த ரீதியில் முஸ்லிம்களின் சிந்தனையையும், வரலாற்றையும் கட்டுப்படுத்த பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

## 1. பயமுறுத்தல் (கண்டனம் செய்தல்)

ஆரம்ப கட்டத்திலேயே இஸ்லாத்தையும், அதன் தூதரையும் கண்டனம் செய்தனர். பால் ஆல்வாரஸ் என்பார் டேனியல் புத்தகத்தை மேற்கோள்காட்டி, ஏசு கிறிஸ்து எதிர்ப்பாளர் என்ற பெயருக்கு முஹம்மது பொருத்தமானவர் என்றும், அவரது உருவ அமைப்பு அதில் குறிப்பிடப்பட்டுள்ள பேய் 666 ஐ ஒத்திருப்பதாகவும் (666 நபிகள் நாயகம் (ஸல்) இறந்த ஆண்டாகக் கருதப்படுகிறது) எழுதினார். நபிகளாரை இழிவுபடுத்தும் இந்தப் படம் "ஸான்சன்ஸ் டி ஜெஸ்டி" எனப்படும் புகழ்பெற்ற நாடக இலக்கியத்தில் இடம் பெற்றது. அதில் பிசாசு என்று பொருள்படும் "மோஹந்த" என்ற பெயர் நபிகளாருக்குச் சூட்டப்பட்டிருந்தது. அதிலிருந்து பல நாடகங்கள் பின்னாட்களில் உருவாக்கப்பட்டன. மத்திய காலம் முழுவதும் அவை இத்தாலி, ஜெர்மென், பிரெஞ்ச், ஆங்கில இலக்கியங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இது 17ம் நூற்றாண்டுவரை பல்வேறு வடிவங்களில் தொடர்ந்தது. இந்த அவதூறுப் பிரச்சாரம் 19ம், 20ம் நூற்றாண்டுகளில் மீண்டும் தலையெடுத்தது. இதற்குத் தற்போதைய உதாரணம் சல்மான் ருஸ்தி எழுதிய "சாத்தனிக் வெர்ஸஸ்" என்ற நூலாகும். இந்த நூலில் "ஸான்ஸன்ஸ் இலக்கிய" வழியில் நபிகளாரை இழிவுபடுத்தும் வகையில் அவர்களது வாழ்க்கை வரலாறு எழுதப்பட்டுள்ளது.

## 2. சிலுவைப்போர்கள்

"பேய்க்குணம் கொண்ட விசுவாசமற்ற எதிரி" என்று இஸ்லாத்தை முத்திரை குத்திய பிறகு, அதனுடன் போரில் ஈடுபட்ட மேற்கத்தியர்கட்கு அதனை நியாயப்படுத்துவது எளிதாகவே இருந்தது. 1095ஆம் ஆண்டு நவம்பரில் புகழ்வாய்ந்த கிளர் மண்ட் "இறைவனின் அமைதிக்" குழுக் கூட்டத்தில் போப்பாண்டவர் இரண்டாம் அர்பன் சிலுவைப் போர்களைத் தொடங்கி வைத்தார். இந்தக் குழு இதனை இஸ்லாத்திற்கு எதிராக இறைவன் நடத்தும் போர் என்றும் அதன் மூலம் ஜெரூசலத்தை விடுவிக்கப் போவதாகவும் அறிவித்தது.

இந்த சிலுவைப் போர்கள் ஐரோப்பாவிலிருந்த

யூதர்களைக் கொன்று குவிப்பதிலிருந்து தொடங்கியது. 40 நாட்கள் முற்றுகைக்குப் பின்னர் 15.7.1099 அன்று சிலுவை வீரர்கள் ஜெரூசலம் நகரினுள் நுழைந்தனர். முஸ்லிம் வரலாற்று ஆசிரியர் இப்னு அல் ஆதிரின் கூற்றுப்படி அவர்கள் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் உள்ளிட்ட 70,000 பேரைக் கொன்றனர். இதனை நேரில் பார்த்த ரேமண்ட அக்கில்ஸ் என்பார் குறிப்பிடுவதாவது:-

ஆச்சரியமிக்க பல காட்சிகளை நான் பார்க்க நேர்ந்தது. எங்கள் ஆட்களில் சிலர் எதிரிகளின் தலைகளைக் கொய்தனர். மற்ற சிலர் அவர்கள் மீது அம்புகள் எய்தனர். அதனால் அவர்கள் கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே விழுந்தனர். மற்றவர்கள் அவர்களை எரிந்து கொண்டிருந்த தீயில் போட்டு வதைத்தனர். தலைகள், கைகள், கால்கள் குவியல் குவியலாகத் தெருக்களில் கிடந்தன. இறந்த மனிதன் மற்றும் குதிரைகளின் சடலங்களின் மீது நடந்துதான் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல வேண்டியதிருந்தது. ஆனால் சமயக்கடமைகள் நிறைவேற்றப்படுகின்ற சாலமன் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுடன் ஒப்பிடும்போது இவை சாதாரண விஷயங்களே எனலாம். அங்கு என்ன நிகழ்ந்தது? நான் உண்மையைச் சொன்னால் நீங்கள் நம்ப மறுப்பீர்கள். சாலமன் கோவில் தாழ்வாரத்தில் முழங்கால் ஆழத்திற்கும் குதிரைகளின் கடிவாளம் வரைக்கும் இரத்தம் தேங்கி கிடந்தது. அதன் வழியாகத்தான் நடந்து செல்ல வேண்டியதிருந்தது. இதற்கு மேல் இதனை விவரிக்க வேண்டியதில்லை. பல ஆண்டுகளாக இறை நிந்தனையாளர்களின் கட்டுப்பாட்டில் இந்த ஆலயம் இருந்ததால், அத்தகைய விசுவாசமற்றவர்களின் இரத்தத்தால் இந்த ஆலயம் நிரப்பப்படவேண்டும் என்பது இறைவனின் விநோதமான தீர்ப்பு போலும்.

புனித ஸ்தலத்தின் பிற பகுதிகளில் சிலுவை வீரர்கள் முஸ்லிம்களை சமையல் பானைகளில் போட்டு வேகவைத்தனர். கூரான குத்துக் கம்பி கொண்டு குழந்தைகளை வறுத்தனர். கிராமப்புறங்களில் சுற்றித் திரிந்த முஸ்லிம்களை வேட்டையாடினர்.

இதற்கு நேர்மாறாக, இஸ்லாமியப் பேரரசின் இரண்டாம் கலீபாவான ஹழ்ரத் உமர்(ரலி) அவர்கள் கி.பி.638ல் ஜெரூசலத்தைக் கைப்பற்றிய போது

கிறிஸ்துவர்களையும் யூதர்களையும் மிகுந்த மரியாதையுடன் நடத்தினார். யாருக்கும் தீங்கு விளைவிக்கவில்லை. கிறிஸ்துவ குருமார்களை உமர்(ரலி) சந்தித்தபோது அவர்களிடம் நகரத்தில் வசிக்கும் அனைத்து மக்களின் உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று உறுதி அளித்தார். பின்னர் அவர்களிடம் தம்மை கிறிஸ்துவ சமயப் புனித இடங்களுக்கு அழைத்துச் செல்லுமாறு வேண்டுகோள் விடுத்தார். அதனை ஏற்றுக் கொண்ட கிறிஸ்துவ குருமார்கள் ஹழ்ரத் உமர்(ரலி) அவர்களை நகரிலுள்ள பல்வேறு தேவாலயங்களுக்கும் அழைத்துச் சென்றனர். அவர் புனித செபுல்சீரி தேவாலயத்தைப் பார்த்துக் கொண்டிருந்த போது தொழுகைக்கான நேரம் வந்து விட்டது. தொழுகை புரிய அனுமதிக்குமாறு அங்கிருந்த கிறிஸ்துவ குருமார்களிடம் உமர்(ரலி) கேட்டார். நீங்கள் நின்று கொண்டிருக்கும் இடத்திலேயே தொழுகையை நிறைவேற்றுங்கள் என்று அவர்கள் ஹழ்ரத் உமர்(ரலி)அவர்களிடம் கூறிய போது அதற்கு அவர் "நான் அப்படிச் செய்தால், உமர் இந்த இடத்தில் தொழுதார் என்று கூறி முஸ்லிம்கள் இந்த ஆலயத்தை தம் வசப்படுத்த பின்னாட்களில் முனையக்கூடும் என்று கூறினார். பின்னர் தன் கைவசம் வைத்திருந்த தொழுகைப்பாயுடன் வெளியே வந்த உமர்(ரலி) அங்குள்ள மைதானத்தில் வெட்ட வெளியில் நின்று கொண்டு தொழுகையை நிறைவேற்றினார்.

முஸ்லிம்கள் ஜெரூசலத்தை 2.10.1187அன்று மீண்டும் கைப்பற்றினர். சுல்தான் ஸலாஹுத்தீன் அயூபி, அந்த நகருக்குள் நுழைந்தவுடன் எந்த ஒரு கிறிஸ்துவரையும் தாக்கக்கூடாது என தனது படையினருக்கு உத்தரவிட்டார். கிறிஸ்துவர்களின் புனிதத்தலங்கள் பாதுகாக்கப்படும் என அறிவித்த அவர், இந்த நகரில் தங்கியிருக்க விரும்புகிறவர்கள் தங்கிக் கொள்ளலாம். வெளியேற விரும்புபவர்கள் வெளியேறிச் செல்லலாம் எனவும் அறிவித்தார். பலர் தங்களுக்குச் சொந்தமான உடமைகளை எடுத்துக் கொண்டு நகரை விட்டு வெளியேறினர். ஆனால் ஜெரூசலத்தைச் சார்ந்த குருமார்கள் புனித செபுல்சிரீ தேவாலயத்தில் நுழைந்து அங்கிருந்த தங்கம் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை போர்வைகளில் சுருட்டி எடுத்துக் கொண்டு நகரத்தை விட்டு வெளியேறினர். இந்தக் காட்சிகளை சுல்தான்

ஸலாஹுத்தினின் கருவூலர் இமாம் அல்-தின்-அல் அஸ்ஃபஹானி கடுங்கோபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் சுல்தானிடம் "இந்த குருமார்கள் 200 ஆயிரம் தினார் மதிப்புள்ள பொருட்களைத் தங்களுடன் எடுத்துச் சென்று விட்டனர். நாம் அவர்களது சொந்த உடமைகளை மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதித்திருந்தோம். ஆனால் தேவாலயங்களிலும், கான்வெண்டுகளிலுமுள்ள சொத்துக்களை அல்ல. நீங்கள் அப்படிச் செய்ய அவர்களை அனுமதிக்கக் கூடாது" என்று கூறினார். ஆனால் இதற்கு சுல்தான் ஸலாஹுத்தீன் நாம் கையெழுத்திட்டுள்ள உடன்படிக்கையின் படி நடந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் நம்பிக்கையாளர்கள் உடன் படிக்கையை மீறி விட்டார்கள் என்ற பழி நம் மீது வந்து சேராது. அதற்கு மாறாக, அனைத்துப் பகுதியிலுமுள்ள கிறிஸ்துவர்கள் நாம் காட்டிய அன்பை எப்போதும் நினைவில் வைத்திருப்பார்கள்" எனப் பதிலளித்தார்.

ஆனால் இதற்கு நேர்மாறாக கிறிஸ்துவர்கள் அனைத்து இடங்களிலும் சுல்தான் ஸலாஹுத்தீனை ஒரு விசுவாசமற்ற வன்முறையாளர் என்று சித்தரிக்க முயன்றனர். அவர் குழந்தைகளைத் தின்றதாகவும், கிறிஸ்துவ வீரப் பெருமக்களைக் கொன்றதாகவும், புனிதத்தலங்களை அழித்ததாகவும் பழி சுமத்தினர்.

சிலுவை வீரர்கள் இஸ்லாத்தைப் பற்றிய ஐரோப்பியர்களின் கண்ணோட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினர். அவர்கள் இஸ்லாத்தை ஒரு தீயசக்தி என்றும், ஐரோப்பாவின் இருண்ட பக்கம் என்றும் இனம் காட்டிட முயற்சித்தனர். முஸ்லிம்களை காட்டு மிராண்டிகளாகவும், இழிந்த நடத்தையுடையவர்களாகவும், வெறிபிடித்தவர்களாகவும், அறியாமைக்காரர்களாகவும், முட்டாள்களாகவும், தூய்மையற்றவர்களாகவும், தாழ்ந்தவர்களாகவும் சித்தரித்தனர். அவர்கள் செய்திட்ட ஒரே மாதிரியான இப்பிரச்சாரம் ஐரோப்பியர்களின் சிந்தனைகளிலும், இலக்கியங்களிலும் ஆழமாகப்பதிந்து விட்டது. காலனி ஆதிக்கத்தின் போதும் தொடர்ந்து செய்யப்பட்ட இந்தப் பிரச்சாரம் தற்போது நம்முடைய காலத்திலும் தொடர்கிறது.

## 3. கீழை நாட்டு மரபு

இஸ்லாத்தைப் பற்றிச் சித்தரிக்கப்பட்ட பொய்ப் பிரச்சாரங்களை நியாயப்படுத்திட வழிமுறைகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. பல காலனி ஆதிக்க மனிதவியல் நிபுணர்கள் எதிர்பார்த்ததைப் போலவே இஸ்லாத்தை இனவெறி அடிப்படையில் ஆய்வுகள் செய்தனர். அச்சத்தை ஏற்படுத்தி இஸ்லாத்தின் மீதான வெறுப்புணர்வை ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு அம்சமாக மாற்றிட அவர்கள் முயற்சித்தனர்.

கீழைநாட்டு எழுத்தாளர்கள் (அவர்களில் பெரும்பாலோர் மத குருமார்களாக இருந்தனர்.) 15ஆம் நூற்றாண்டிலிருந்து இஸ்லாமிய வரலாற்றை மீண்டும் எழுதத் துவங்கினர். இஸ்லாத்தின் தோற்றத்திற்கு வக்ரமான வேடிக்கையான விளக்கங்கள் அளித்து, முஸ்லிம் சமுதாயம் கொடுமையான தீய பண்புகள் கொண்டிருப்பதாகச் சித்தரித்து எழுதி திருக்குர்ஆனை முரண்பாடுகள் நிறைந்த சொல்லப் பட்டதையே திருப்பித் திருப்பிச் சொல்கின்ற வன்முறையைத் தூண்டுகின்ற நூல் என்றும் சித்தரித்தனர். முஹம்மது நபி(ஸல்) ஒழுக்கமற்றவர் என்றும், நெறிமுறைகளுக்குக் கட்டுப்படாதவர் என்றும் தொடர்ந்து எழுதி வந்தனர். இஸ்லாமியச் சிந்தனையும், கல்வி ஞானமும் மறைக்கப்பட்டு, அவை வரலாற்று நூல்களிலிருந்து அகற்றப்பட்டன.

கீழை நாட்டு மரபு என்பது கல்வி சார்ந்த ஒரு அம்சமாக இருந்திடவில்லை. அது இஸ்லாத்தைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை உருவாக்கியது. ஐரோப்பியப் பயணிகள், நாவலாசிரியர்கள், கலைஞர்கள் மிக அதிகமான நூல்களை எழுதியுள்ளனர். அதில் இஸ்லாம் வன்முறையும், பாலுணர்வும் கொண்ட ஒரு காட்டு மிராண்டித்தனமான சமயமென்றும், மாயமந்திரங்கள், மூடப்பழக்கங்கள் கொண்ட சமயமென்றும் சித்தரித்துக் காட்டியுள்ளனர். ரிச்சர்டு பர்ட்டன் இஸபெல்லா எபர்கார்ட், டி.ஈ.லாரன்ஸ் ஆகிய இவர்களைப் போன்ற பல எழுத்தாளர்கள் இஸ்லாமிய நாடுகளுக்கு உளவாளிகளாகவும் ஐரோப்பாவில் அவர்க ளுக்குக் கிடைக்காத பாலுணர்வு சுகத்தைத் தேடியும் சென்றவர்களாவர்.

## 4. முஸ்லிம்களின் கல்விஞானம் ஐரோப்பாவுக்குப் பரவுதல்

15ம் நூற்றாண்டு வரை கல்வி ஞானம் இஸ்லாத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு பாய்ந்தோடிச் சென்றது. முஸ்லிம் அறிஞர்களின் படைப்புகள் லத்தீன் மற்றும் ஐரோப்பிய மொழிகளில் தொடர்ந்து மொழிபெயர்க்கப்பட்டு அங்குள்ள பள்ளிக்கூடங்களில் பாடநூல்களாகவும், செய்முறைப் பயிற்சி ஏடுகளாகவும் வைக்கப்பட்டிருந்தன. இஸ்லாமிய கல்வி நிறுவனங்களை ஐரோப்பிய அறிஞர்களும் சிந்தனையாளர்களும் தொடர்ந்து வந்து பார்வையிட்டுச் சென்றனர். இப்போது முஸ்லிம் மாணவர்கள் மேற்படிப் புகளுக்காக ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா நாடுகளுக்குச் செல்வதைப் போல், அப்போது ஐரோப்பிய மாணவர்கள் கல்வி ஞானம் தேடி கார்டோபா, ஃபெஸ், கெய்ரோ, பாக்தாத், சாமர்கண்டு ஆகிய இடங்களுக்குச் சென்றனர். விஞ்ஞானம், கலாச்சாரம் ஆகியவற்றில் அரேபிய கல்விக்கும், சிந்தனைக்கும் முக்கியத்துவம் கொடுத்தவர்கள் முஸ்லிம்களைப் போல் உடையணிந்த கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஐரோப்பிய மறுமலர்ச்சியும், விஞ்ஞானம், தொழில் நுட்பம், மருத்துவம், கல்வி, மனிதவியல் போன்ற துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியும் முஸ்லிம் அறிஞர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் தோள்களில்தான் உருவாகி வளர்ச்சியடைந்தன.

உண்மையில் இஸ்லாமிய நாகரீகத்தின் பங்களிப்பு இல்லையென்றால் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்க வாய்ப்பே இல்லை ஆனால் இந்த உண்மை அங்கீகரிக்கப் படுவதில்லை. அதற்கு நேர்மாறாக முஸ்லிம் அறிஞர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் கருத்துக்கள் திருடப்பட்டு, திட்டமுறையில் அவர்கள் கீழ்மைப்படுத்தப்பட்டு, பலவீனப்படுத்தப்பட்டு புறம் தள்ளப்பட்டுள்ளனர்.

## இஸ்லாத்தைப் பற்றி ஐரோப்பாவின் அச்சம்

"ஐரோப்பாவில் முஹம்மது" என்ற தனது நூலில் மினவ் ரீவ்ஸ் என்பார் குறிப்பிடுவதாவது:-

இஸ்லாம், ஐரோப்பாவிற்கு இராணுவ ரீதியான பயமுறுத்தலாக மட்டுமல்லாது கொள்கை மற்றும் தார்மீக ரீதியிலும் சவாலாக விளங்கியது. ஏனெனில் அது மாற்றுக் கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தது. அறிவு மற்றும் கலாச்சார விஷயங்களில் மேற்குலகை நோக்கி பரிகாசம் செய்யும் நிலையில் அரபுலகம் இருந்தது. கிறிஸ்துவ மேற்கத் தியர்களைக் காட்டிலும் அரபுலகத்தினர் மருத்துவம், கணிதம், ஒளியியல் போன்ற பௌதீக விஷயங்களிலும், வானவியல், இரசாயனம், தாவரவியல் மற்றும் இயற்கை விஞ்ஞானம் ஆகிய துறைகளிலும்முன்னணியில் இருந்தனர். இந்திய ரிடமிருந்து பூஜ்யத்தின் பயன்பாட்டைத் தெரிந்து கொண்ட பின்னர், கணக்கு சம்பந்தப்பட்ட பயிற்சி முறைகள் எளிதாயின. அல்ஜிப்ரா, பகுமுறை வடிவியல், முக்கோணவியல் போன்ற புதிய கணித முறைகள் தோன்றின. இஸ்லாமியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த பெர்சியா நாட்டைச் சார்ந்த தத்துவ ஞானியும், விஞ்ஞானியுமான 11ம் நூற்றாண்டைச் சார்ந்த அவிசென்னாவின் "CANON OF MEDICINE" என்ற நூல்தான் ஐரோப்பாவில் மாணவர்கட்குப் பாடப்புத்தகமாக வைக்கப் பட்டிருந்தது. அரேபியர்கள் ஸ்பெயினிலும், சிலிலியிலும் மொழி பெயர்ப்புக் கல்லூரிகளை நிறுவியிருந்தனர். இக் கல்லூரிகளில் கிரேக்கம், சிரியாக், பாரசீகம், சமஸ்கிரும் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டிருந்த அறிவுக் களஞ்சியங்களை அரபியில் மொழி பெயர்க்கும் பணிகள் நடைபெற்றன. பின்னர், அவை லத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப் பட்டன. மொழி பெயர்ப்புக் கல்லூரிகளுக்கு அருகிலேயே ஆய்வுகளை மேற்கொள்வதற்காக நூலகங்களும், வானியல் ஆய்வகங்களைக் கொண்ட விஞ்ஞானக் கூடங்களும் நிறுவப் பட்டிருந்தன. மேற்குலகும், கிழக்கு நாடுகளும் அறிவார்ந்த கொள்கைகளையும் விஞ்ஞானக் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ளும் முக்கிய மையங்களாக ஸ்பெயினும், சிலிலியும் உருவெடுத்தன. இதன் விளைவாக ஐரோப்பாவில் புதிய மானுடவியலும், மறுமலர்ச்சியும் தோன்றின.

மலைஜாதி நாகரீகத்தைக் கொண்டிருந்த பாலை வனத்தைச் சார்ந்த இந்த பதூயின்கள் எப்படி ஒரு குறுகிய காலத்திற்குள் இத்தகைய நவீனத்தையும், அறிவையும் பெற்றனர்?. பதில் மிக எளிதானது. புதிய இஸ்லாமிய

சமயத்தைத் தழுவியதன் காரணமாக அரேபியர்கள் பெற்ற புத்தெழுச்சி, அரேபிய தீபகற்பத்தின் எல்லைகளையும் தாண்டி அப்போது மிக உயர்ந்த நிலையில் இருந்த பாரசீக, கிரேக்க, பைஸாண்டிய நாகரீகங்களுக்குள்ளும் ஊடுவிச் சென்றது. மிகவும் செழுமை வாய்ந்த பாரசீக, கிரேக்க தத்துவங்களையும் பாரசீகர்களின் உன்னத பழக்கங்களையும், மரபுகளையும் உள்வாங்கி அவற்றை தெற்கு ஐரோப்பாவிற்கு அரபிகள் அறிமுகம் செய்தனர். இதன் மூலம் இஸ்லாமியக் கலாச் சாரத்தின் மேன்மையை உணர்ந்து கொண்ட ஐரோப்பியர்கள் பொறாமையும் ஆத்திரமும் கொண்டனர். இதற்கு மூல காரணமாகவும், உந்து சக்தியாகவும் விளங்கிய நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அடைந்திட்ட தொடர் வெற்றிகள் ஐரோப்பியர்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் அதிர்வை ஏற்படுத்தியது (ஐரோப்பிய வரலாற்றின்படி, மத்திய காலம் கி.பி.5ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டுவரை நீடித்தது. மேற்கு ஐரோப்பிய ரோம சாம்ராஜ்ய வீழ்ச்சியுடன் இது தொடங்கியது) மத்திய கால ஐரோப்பாவின் இஸ்லாத்தைப் பற்றிய அச்சமானது நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் நிலைக்கு ஐரோப்பியர்களை இட்டுச்சென்றது.

தங்களிடமிருந்து எல்லாவற்றையும் கடனாகப் பெற்ற ஐரோப்பியர்கள் முன்னேற்றம் அடைந்திருக்கும் போது தாங்கள் மட்டும் ஏன் தேக்க நிலையில் இருக்கிறோம் என்பதை முஸ்லிம்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். வரலாற்று ரீதியில் மேற்கத்திய நாடுகளின் காலனியாதிக்கத்திற்கு உள்ளாகும் முன்னரே, முஸ்லிம் உலகில் அறிவுத் தேக்க நிலை ஏற்பட்டு அதன் பயணம் தடைபட்டது. முஸ்லிம் உலகம் மீண்டும் எழுச்சி பெறுவதற்கு முன்பே மேற்குலகத்தினர் இஸ்லாத்தைப் பற்றியும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பற்றியும் அவதூறுப் பிரச்சாரத்தைத் துவக்கி விட்டனர். ஐரோப்பியர்கள் உச்சநிலையில் இருந்ததால் இந்தப் பிரச்சாரம் தொடர்ந்தது. அதன் முனைகள் மீண்டும் கூர்மையும் வலிமையும் பெற்றன. இதன் காரணமாக அவர்கள் முஸ்லிம்களின் கோபத்திற்கு எண்ணெய் வார்த்தனர்.

*(மினவ் ரீவ்ஸ் எழுதிய ஐரோப்பாவில் முஹம்மது; ஆயிரம் ஆண்டுகால பொய்யுரைகள்: என்.ஒய்.யு.பிரஸ் 2001)*

## 5. காலனியாதிக்கம்

இஸ்லாமிய உலகத்தை அடிமைப்படுத்திய இங்கிலாந்து பிரான்ஸ், ஹாலந்து ஆகிய நாடுகள் சிறு சிறு வித்தியாசங்களுடன் ஒரே விதமான அணுகுமுறையையே மேற்கொண்டன. பிரித்தாண்டு வெற்றி கொள்ளல் என்பதே அவர்களின் ஆக்ரமிப்புக் கொள்கையாக இருந்தது. உதாரணமாக, இந்தியாவில் ஒரு மன்னருக்கு எதிராக இன்னொரு மன்னரைத் தூண்டிவிட்டு அதன் மூலம் ஆங்கிலேயர்கள் வெகு எளிதில் மொகலாயப் பேரரசைக் கபளீகரம் செய்தனர். 1857ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் சுதந்திரப் போராட்டம் (சிப்பாய்க் கலகம்) ஆங்கிலேயர்களைத் தூக்கி எறிந்திட இந்திய மக்கள் மேற்கண்ட கடைசி முயற்சியாக அமைந்திருந்தது. ஆனால் இந்தப் போராட்டம் தோல்வி அடைந்தது. மொகலாயப் பேரரசின் கடைசி மன்னரான பகதூர்ஷா ஜாபர் தடையற்ற வர்த்தகத்தில் ஆர்வம் காட்டவில்லை. ஆங்கிலேயர்களின் உண்மையான நோக்கம் பற்றி அவருக்கு சந்தேகம் ஏற்பட்டதால் அவர்களுக்கு வர்த்தகச் சலுகைகள் அளிக்க மறுத்துவிட்டார் அவரது சந்தேகம் பின்னர் சரி என நிரூபணம் ஆனது.

ஆங்கிலேயர்கள் பகதூர்ஷாவின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் தலைகளையும் கொய்து அவற்றை வெள்ளி தட்டில் வைத்து வழங்கினர். முடிவில் அவர் ரங்கூனுக்கு நாடுகடத்தப்பட்டார். அங்கு மிக வறிய நிலையில் மரணமடைந்தார். அப்போது அவர் உருதுவில் மிகச் சிறந்த கவிதை ஒன்றையும் எழுதினார். அது உருது இலக்கியத்தில் மிகச்சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

முஸ்லிம் நாடுகளைத் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பிறகு காலனி அரசுகள் முஸ்லிம் சமூகத்தின் அனைத்து கல்வி ஞானங்களையும் நிபுணத்துவத்தையும் அபகரித்துக் கொண்டனர். முதலில் முஸ்லிம் சமூகத்தின் கல்வி மற்றும் அறிவு சார்ந்த அனைத்து செயல்பாடுகளுக்கும் தடை விதித்தனர்.

உதாரணமாக கி.பி. 1595ஆம் ஆண்டு இந்தோனிஷியாவைக் கைப்பற்றிய போது, டச்சுக்காரர்கள்அந்த நாட்டிலிருந்த அனைத்து கல்லூரிகளையும் மதரஸாக்

களையும், நூல்நிலையங்களையும் மூடினர். மக்கள் கல்வி கற்பதைத் தடை செய்தனர். 1850 ஆம் ஆண்டில் அவர்கள் தங்களது பயன்பாட்டுக்கென்று நிறுவியிருந்த நூல்நிலை யங்களுக்கு உள்ளூர் மக்கள் சென்றிட தடை விதித்தனர். உள்ளூர் மக்களுக்கு ஆரம்பக் கல்வி மட்டுமே வழங்கப்பட்டது. இடைநிலைக்கல்வி கற்க அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட வில்லை. இஸ்லாமிய மருத்துவ முறையையும் படிப்படியாக அழித்தனர்.

9ம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் துனிஷியாவில் ஒரு பிரெஞ்சு மருத்துவர் நோயாளிகளுக்கு சிகிட்சை அளிக்க வேண்டுமென்றால்அவர் அங்குள்ள முஸ்லிம் தலைமை மருத்துவரிடம் அனுமதி பெறவேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால் அந்த நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில், பிரெஞ்சு காலனி ஆதிக்க அரசு இஸ்லாமிய மருத்துவ முறையை இரண்டாம் தரமானது என்று அறிவித்தது. அந்த மருத்துவ முறையை அடக்குமுறைகள் மேற்கொண்டு ஒழித்தது. முடிவில் இஸ்லாமிய மருத்துவ முறை சட்டத்திற்கு புறம்பானது என்று அறிவித்தது.

## காலனி ஆதிக்கத்தை உருவாக்குதல்

காலனி அரசுகள் தாங்கள் வசப்படுத்திய முஸ்லிம் நாடுகளிலுள்ள அனைத்து வளங்களையும் கொள்ளை யடித்தனர். அந்நாடுகளிலுள்ள அனைத்து மூலப்பொருட் களையும் தங்களது நாடுகளுக்குக் கொண்டு சென்றனர்.

உதாரணமாக இந்தியாவின் ஜவுளித் தொழிற்சாலைகளை அழித்துத்தான் வட இங்கிலாந்திலுள்ள துணி ஆலைகள் நிறுவப்பட்டன. காலனி ஆதிக்கமும் தொழிற் புரட்சியும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையாக இருந்தன.

ஐரோப்பிய ஆட்சியாளர்கள் தங்களது உள்ளூர் பிரதிநிதிகளாக சிவில் ஊழியர்கள் (அரசு ஊழியர்கள்) என்ற புதிய வர்க்கத்தை உருவாக்கினர். கி.பி.1835ல் லார்டு மெக்காலே உருவாக்கிய இந்தியக் கல்விக் கொள்கை காலனி ஆட்சியாளர்களின் கருத்தையே பிரதிபலித்தது. "இப்போது ஒரு புதிய வர்க்கத்தை உருவாக்க நாம் அனைத்து முயற்சி களையும் மேற்கொள்ள வேண்டும். இவர்கள் நமக்கும், நம்மால் ஆளப்படுகின்ற கோடிக்கணக்கான இந்திய

மக்களுக்குமிடையில் தொடர்பாளர்களாக இருப்பார்கள். இந்த வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் (நிறம், இரத்தம் ஆகியவற்றால்) இந்தியர்களாக இருப்பார்கள். ஆனால் சுவையில், கருத்தில், நெறிமுறைகளில், அறிவில் ஆங்கிலேயர்களாக இருப்பார்கள் என்று குறிப்பிட்டார் லார்டு மெக்காலே

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியும், டச்சு கிழக்கு இந்தியக் கம்பெனியும் முஸ்லிம் உலகில் தடையற்ற வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. அவர்களுக்கு முஸ்லிம் மன்னர்கள் பல்வேறு சலுகைகளை அளித்திருந்தனர். ஆனால் அவர்களது வர்த்தகம் போர் வெற்றிகளையும் நாடுபிடிக்கும் ஆசைகளையும் உள்ளடக்கியதாக இருந்தன.

முஸ்லிம் சமூகங்கள் புதிய சோதனைக் களங்களாக மாற்றப்பட்டன. அனைத்து வகையான புதிய சிந்தனைகளும் புதுமையான கல்வி, சமூக, கலாச்சாரக் கொள்கைகளும் அங்கு பரிசோதிக்கப்பட்டன.

காலனியாதிக்கம் இஸ்லாமிய நாகரீகத்தை படிப்படியாகச் சிதைத்தது. அது முஸ்லிம்களின் உடலை மட்டுமல்ல உள்ளங்களையும் ஆக்ரமித்துக் கொண்டது. இஸ்லாத்தின் அனைத்து அம்சங்களையும்அது தாழ்ந்தது என்றும், அறநெறியற்றது என்றும் கூறி நிராகரித்தது. முஸ்லிம் சமூகங்களில் கலாச்சார முன்னுரிமைகளை அது மாற்றியமைத்தது. முஸ்லிம் நாடுகளின் வளங்கள் அனைத்தையும் அது வற்றச் செய்தது. முஸ்லிம்களை வறுமையின் பிடியில் சிக்க வைத்தது.

## நவீன வெறுப்புணர்வு

மேற்கத்தியர்கள் இஸ்லாத்தின்பால் கொண்டிருந்த வெறுப்புணர்வை காலம் கூட அழிக்கவில்லை. தணிக்கவில்லை. அது நவீன முறைகளில் உருமாற்றம் பெற்றது. செப்டம்பர் 11ஆம் தேதி நிகழ்ந்த சம்பவம், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் நாடுகளின் மீது போர் தொடுக்கவும், அந்நாடுகளிலுள்ள அனைத்து அடிப்படைக்கட்டுமான வசதிகளையும் சீர்குலைக்கவும், இலட்சக்கணக்கான அப்பாவி மக்களைப் கொன்று குவிக்கவும் மேற்கத்திய நாடுகளுக்கு ஒரு வாய்ப்பாக

அமைந்து விட்டது. இஸ்லாத்திற்கும் முஸ்லிம் களுக்கும் எதிராக புதிய அவதூறுப் பிரச்சாரத்தைத் தொடர்ந்திட அது ஊக்குவித்தது. ஆனால் அதே நேரத்தில் மேற்கத்திய நாடுகளின் வன்முறை காரணமாக பாதிக்கப்பட்ட புதிய தலைமுறையைச் சார்ந்த முஸ்லிம்களிடையே தீவிரவாத மனப்பான்மையை அது ஏற்படுத்தியது இந்தப் போக்கு இஸ்லாத் திற்கோ உலகத்திற்கோ நல்லதல்ல. வெறுப்புணர்வை வெறுப்புணர்வு கொண்டு எதிர்ப்பது எந்தப் பிரச்னையையும் தீர்க்க உதவாது. பதின்மூன்று நூற்றாண்டுகளாக மேற்கத்தியர்கள் முஸ்லிம்கள் பால் கொண்டிருந்த தவறான எண்ணத்தின் மிச்ச சொச்சங்கள் இன்றைக்கும் இந்தியா, பர்மா போன்ற நாடுகளில் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் இந்தப் பகுதிகளை ஆண்ட போதே இது போன்ற தவறான எண்ணங்கள் அங்கு ஆழமாக வேரூன்றியிருந்தன.

கொள்ளை ரீதியிலும், அறிவார்ந்த ரீதியிலும் இஸ்லாத்தைச் சந்திப்பதை மேற்குலகம் தவிர்த்தே வந்துள்ளது. அதே நேரத்தில் மேற்கத்திய நாட்டுப் பார்வையாளர்களுக்கு இஸ்லாத்தை நிந்தனை செய்வது மிக எளிதாக இருந்தது. ஆனால் அப்படிச் செய்வது கிறிஸ்தவ சமயத்தின் மோசமான மாற்ற இயலாத கொள்கைகளுக்கு எதிரான பிரச்சாரத்திற்கு வழி வகுத்து விடும் என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். தங்களது சமயக் கொள்கையில் குறைபாடு இருந்த காரணத்தால் மேற்குலகினர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மீதும் சுல்தான் சலாஹுத்தீன் ஐயூபி போன்ற சில தனிப்பட்ட நபர்கள் மீது தாக்குதல்களைத் தொடுத்து அவர்களைப் பேய்கள் என்றும் பிசாசுகள் என்றும் சித்தரிக்க முயன்றனர். சமாதானத்திற்கும் சமரசத்திற்குமான வழிகள் புரிந்துணர்விலும், நல்லுணர்விலும் தான் உள்ளனவே தவிர, தவறான எண்ணப் போக்கிலும் கூறியதையே மீண்டும் மீண்டும் கூறுவதிலும் அல்ல.

# விஷம் கக்கும் வகுப்புவாத அரசியலிலிருந்து விடுபடுவோம்

## (மார்க்கண்டேய கட்ஜு)

சமய வெறுப்பை ஊட்டுகின்ற அதனை வளர்க்கின்ற அனைத்து சக்திகளையும் இந்தியர்கள் ஒன்று சேர்ந்து முறியடிக்க வேண்டும். இந்தியாவில் தற்போது வசித்து வரும் இந்துக்களும், முஸ்லிம்களும் வகுப்பு வாதம் என்ற விஷக் கிருமியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற போதிலும், 1857 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெரும்பாலான இந்தியர்களிடையே வகுப்புவாத எண்ணம் இருந்ததில்லை. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் சில பிரச்னைகள் இருந்தது உண்மையே. ஆனால் அவர்களிடையே பகையுணர்வு இருந்ததில்லை. முஸ்லிம்களின் பண்டிகைகளான ஈதுப் பெருநாளின் போது இந்துக்கள் அதில் கலந்து கொள்வதும், இந்துக்களின் பண்டிகைகளான ஹோலி, தீபாவளி ஆகியவற்றில் முஸ்லிம்கள் கலந்து கொள்வதும் வாடிக்கையாக இருந்தன. அவர்கள் சகோதர, சகோதரிகள் போல் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர்.

இந்த 150 ஆண்டுகள் காலகட்டத்தில் எப்படி நமது துணைக் கண்டத்தில் வாழும் இந்த இரு பெரும் சமூகங்களுக்கிடையில் சந்தேக உணர்வுகள் தோன்றின? இன்றைக்கு இந்திய முஸ்லிம்களுக்கு இந்துக்களிடமிருந்து வாடகைக்கு வீடு பெறுவதில் கூட சிரமங்கள் உள்ளன. ஒரு குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்கின்றபோது, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க இயலாத காவல் துறையினர் அரை-டஜன் முஸ்லிம்களைக் கைது செய்து பிரச்னையைத் தீர்த்து விடுகின்றனர். (ஏனெனில் விஞ்ஞானப் பூர்வமான விசாரணைகளை மேற்கொள்ள அவர்கட்குப் போதிய பயிற்சி இல்லை) அப்படி கைது செய்யப்பட்டவர்களில் பலர் பல ஆண்டுகள் கால சிறைவாசத்திற்குப் பிறகு குற்றமற்றவர்கள்

என்று தீர்ப்பளிக்கப்பட்டு நீதிமன்றங்களால் விடுவிக்கப் படுகின்றனர். இந்தப் போக்கு இந்தியாவில் உள்ள முஸ்லிம்களைத் தனிமைப்படுத்தவே உதவுகிறது. பாகிஸ்தானில் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது. அங்குள்ள சிறுபான்மையினர் தீவிரவாதிகளுக்கும், சமய வெறியர்களுக்கும் பயந்து வாழ வேண்டிய நிலையிலுள்ளனர்.

## திருப்பம்

1857ஆம் ஆண்டு, இந்திய சமூகங்களின் உறவில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய ஆண்டாகும். 1857க்கு முன்னர் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையில் வகுப்பு மோதல்கள் இல்லை. இந்துக்களுக்கும், முஸ்லிம் களுக்குமிடையில் சில பிரச்னைகள் இருந்தது உண்மை தான். ஒரே தந்தைக்குப் பிறந்த இரண்டு மகன்களுக்கும் அல்லது இரண்டு மகள்களுக்கும் இருந்த பிரச்னைகள் போன்றது தான் அது. இந்துக்களுக்கும் முஸ்லிம்களும் சுமூகமான முறையில் அமைதியாக வாழ்ந்தனர். சிரமமான நேரங்களில் ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டனர்.

இந்தியாவை ஆக்ரமித்த முஸ்லிம்கள் மன்னர்கள் ஏராளமான கோவில்களை இடித்தது உண்மையே. ஆனால் பின்னர் ஆட்சிக்கு வந்த உள்ளூர் முஸ்லிம் மன்னர்கள் சமூக நல்லிணக்கத்திற்குப் பெரிதும் உதவியுள்ளனர். இதனை அவர்கள் தங்களது நலன்களுக்காகவே செய்தனர். ஏனெனில் அவர்களின் குடிமக்களில் பெரும்பான்மையோர் இந்துக்களே. இந்துக் கோவில்களை இடித்தால், அதனால் கலவரங்களும், மோதல்களும் ஏற்படும் என்பதை அவர்கள் உணர்ந்தே இருந்தனர். அது போன்ற ஒரு நிலைமை ஏற்பட எந்த ஒரு ஆட்சியாளரும் விரும்பமாட்டார். எனவே மொகலாயர்கள், ஆவாத் முர்ஸிதாபாத் நவாப்கள், ஆற்காடு நவாப்கள், திப்பு சுல்தான், ஹைதராபாத் நிஜாம் ஆகிய முஸ்லிம் ஆட்சியாளர்கள் சமய நல்லிணக்கத்தை ஊக்குவித்தனர்.

1857ல் முதலாவது சுதந்திரப்போர் வெடித்த போது, ஆங்கிலேயர்களை எதிர்த்து இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்தே போரிட்டனர். இந்தக் கலவரத்தை இரும்புக்கரம் கொண்டு நசுக்கிய ஆங்கிலேய அரசு, இந்தியாவை ஆள

வேண்டுமென்றால் பிரித்தாளும் கொள்கையை மேற்கொள்வதே ஒரே வழி என முடிவு செய்தனர். 1862ல் இந்தியச் செயலாளராக இருந்த சர் சார்லஸ் உட் என்பவர், இந்திய வைஸ்ராயாக இருந்த லார்டு எல்கினுக்கு எழுதிய கடிதத்தில் "நாம் ஒரு சமுதாயத்தை இன்னொரு சமுதாயத்திற்கு எதிராகக் கிளப்பிவிட்டு இந்தியாவில் நமது ஆட்சியை வலுவாக நிறுவிவிட்டோம். நாம் அதனைத் தொடர்ந்து செய்ய வேண்டும். எனவே ஒரு பொதுவான உணர்வு ஏற்படுவதைத் தடுக்கும் வண்ணம் உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

## பிரித்தாளும் கொள்கை

14.1.1887ல் இந்திய அமைச்சர் விஸ்கோண்ட் கிராஸ், கவர்னர் ஜெனரல் தப்ரினுக்கு எழுதிய கடிதத்தில் கீழ் கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். "மக்களிடையே சமய உணர்வுகள் காரணமாக ஏற்பட்டுள்ள பிளவு நமக்குச் சாதகமாகவே உள்ளது. இந்தியக் கல்வி முறை பற்றியும், கற்பிப்பதற்கான வழி முறைகள் பற்றியும் ஆய்வு செய்ய அமைக்கப்பட்டுள்ள விசாரணை குழுவின் அறிக்கையில் சில நல்ல அம்சங்கள் இருக்கும் என நம்புகிறேன். அந்த அறிக்கையை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன்."

இந்தியச் செயலாளராக இருந்த ஜார்ஜ் ஹாமில்டன் என்பார் அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு கர்சனுக்கு எழுதியிருந்த கடிதத்தில் "இந்தியாவில் நமது ஆட்சி எதிர்நோக்கியுள்ள உண்மையான அபாயம் என்னவென்றால்... படிப்படியாக மேற்கத்திய எண்ணங்களை ஏற்றுக் கொண்டு கடைப்பிடிப்பது... கல்வி கற்ற இந்தியர்களை நாம் இரண்டாகப் பிரிக்க முடியுமென்றால் (இந்துக்கள், முஸ்லிம்கள் என) நமது அரசிற்கு எதிராக மேற்கொள்ளும் எந்த ஒரு தொடர்தாக்குதல்களையும் நம்மால் எதிர் கொள்ள முடியும். இந்த இரு சமூகங்களுக்கிடையிலான வேறுபாடுகளை அதிகரிக்கும் விதத்தில் நாம் பள்ளிப் பாடப்புத்தகங்களைத் தயார் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். " இவ்வாறாக 1857க்குப் பிறகு இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பகையுணர்வைத் தூண்டும் விதமாக ஒரு திட்டமிட்ட கொள்கை நடைமுறைப்

படுத்தப்பட்டது. இது பல வழிகளிலும் மேற் கொள்ளப்பட்டது.

பிற சமயங்களுக்கு எதிராகப் பேசும்படி சமயத் தலைவர்கட்கு லஞ்சம் அளிக்கப்பட்டது. ஆங்கில அரசின் கலெக்டர் ஒரு இந்து பண்டிட்ஜியை ரகசியமாக அழைத்து அவருக்குப் பணம் கொடுத்து முஸ்லிம்களுக்கு எதிராகப் பேசுமாறு கூறுவார். அதே போல் ஒரு மௌலவியையும் ரகசியமாக அழைத்துப் பேசி அவருக்குப் பணம் கொடுத்து இந்துக்களுக்கு எதிராகப் பேசும்படி தூண்டிவிடுவார்.

## சமய வெறுப்பைத் தூண்டும் வண்ணம் வரலாற்று நூல்கள் திரித்து எழுதப்பட்டன.

ஏற்கனவே கூறியிருந்தபடி ஆரம்பகால முஸ்லிம் படையெடுப்பாளர்கள் இந்துக் கோவில்களை இடித்தனர். ஆனால் அவர்களின் சந்ததியினர் (உதாரணமாக படையெடுப்பு நடத்திய பாபரின் வம்சத்தைச் சார்ந்த அக்பர்) கோவில்களை இடிக்கவில்லை மாறாக அவற்றுக்குத் தொடர்ந்து மானியம் வழங்கினர். இராம லீலா நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்தனர். ஹோலி மற்றும் தீபாவளி கொண்டாட்டங்களில் பங்கு பெற்றனர். (உதாரணமாக ஆவாத், முர்சிதாபாத், ஆற்காடு நவாபுகள்) முஸ்லிம் படையெடுப்பாளர்களின் சந்ததியினர் சமய நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாத்தனர் என்ற உண்மை வரலாற்றுப் புத்தகங்களிலிருந்து முற்றாக மறைக்கப்பட்டு விட்டது. முஹம்மது கஜினி சோமநாதபுரம் ஆலயத்தை இடித்தார் என்று தான் நமது குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறதே தவிர மொகலாய மன்னர்கள் மற்றும் திப்புசுல்தான் ஆகியோர் கோவில்களுக்கு மானியம் வழங்கியது பற்றியோ, இந்துப் பண்டிகைகளைக் கொண்டாடியது பற்றியோ கற்றுக் கொடுக்கப்படுவதில்லை. (ஆதாரம்: பி.என்.பாண்டே எழுதியுள்ள History in the service of imperialism)

## வகுப்புக் கலவரங்கள் வேண்டுமென்றே தூண்டப்படுகின்றன:

1857ஆம் ஆண்டிற்குப் பிறகே நாட்டில் வகுப்புக்

கலவரங்கள் ஏற்பட்டன. அதற்கு முன்னர் நிகழவில்லை. கோபமூட்டும் ஏஜண்டுகள் வேண்டுமென்றே திட்டமிட்டு தொழுகை நேரத்தின் போது மசூதிகளின் முன்பு இசைக் கருவிகளை இசைப்பது இந்துச் சிலைகளை உடைப்பது போன்ற செயல்களைில் ஈடுபட்டனர்.

இந்த விஷம் ஆங்கில ஆட்சியாளர்களால் திட்ட மிடப்பட்டு படிப்படியாக பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நமது அரசியலில் செலுத்தப்பட்டது. 1947ஆம் ஆண்டு நாடு பிரிக்கப்படும் வரை இது தொடர்ந்து நடைபெற்று வந்தது. இன்றைக்கும் கூட சமய வெறுப்பையும், பகையையும் தூண்டுகின்ற பல சக்திகள் செயல்பட்டு வருகின்றன.

எங்கேயாவது ஒரு குண்டு வெடிப்பு நிகழ்ந்தால் உடனே நமது தொலைக்காட்சிகள் இந்தச் சம்பவத்திற்கு இந்தியன் முஜாகிதீன், ஜெய்ஷே முஹம்மது அல்லது ஹர்கத்துல் ஜிகாத் போன்ற அமைப்புகளில் ஒன்று பொறுப்பு ஏற்று எஸ்.எம்.எஸ் அனுப்பியிருப்பதாக செய்திகளை ஒளிபரப்புகின்றன. ஒரு இ.மெயிலையோ அல்லது எஸ்.எம்.எஸையோ ஒரு விஷமி அனுப்பி விட முடியும். ஆனால் சம்பவம் நடந்த உடனேயே மின்னணு ஊடகங்களும், மறு நாள் வெளிவரும் அச்சு ஊடகங்களும் (பத்திரிகைகள்) இச் செய்திகளை ஒளிபரப்புவதும், வெளியிடுவதும் முஸ்லிம்கள் அனைவரும் தீவிரவாதிகள் என்ற எண்ணத்தை இந்து சமய மக்களிடையே ஏற்படுத்துகின்றன. (உண்மையில் 99 சதவிகித அனைத்துச் சமய மக்களும் சமாதானத்தையும் அன்பையுமே விரும்புகின்றனர்) பாபரி மஸ்ஜித்-இராம ஜென்ம பூமி பிரச்னை உச்ச கட்டத்தில் இருந்த போது, சில ஊடகங்கள் குறிப்பாக ஹிந்தி அச்சு ஊடகங்கள் கர சேவையாளர்களாகவே மாறி விட்டனர்.

இது போன்ற விஷமத்தனமான செயல்களில் ஈடுபடும் சுய நலமிகளை இந்தியர்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும். இந்தியா ஒரு பன்முகத் தன்மை கொண்ட நாடு. இந்த நாடு ஒற்றுமையுடனும் வளத்துடனும் விளங்க வேண்டுமென்றால் அனைத்து சமய மக்களையும் சமமாக நடத்துவது ஒன்று தான் அதற்கான ஒரே வழியாகும்.

# ஜிகாத்

## ஜிகாத்தின் பல பரிமாணங்கள்:

இஸ்லாத்தின் எதிரிகளுடன் புனிதப் போரில் ஈடுபடுவதே "ஜிகாத்" என தவறான முறையில் பொருள் கொள்ளப் படுகிறது. வன்முறையையும் அடக்கு முறையையும் சுட்டும் ஒரு சமமான வார்த்தையாக இது கருதப்படுகிறது. "ஜிகாத்" என்ற இந்த வார்த்தையைப் போல அதிகமான எதிர்வி னைகளை ஏற்படுத்திய வேறு ஒரு வார்த்தை அரபு மொழியில் இல்லை. இன்றைக்கு மேற்குலகினரால் இஸ்லாத்துடன் தொடர்பு படுத்திப் பேசப்படுகின்ற ஒரு விவாதத்திற்குரிய உணர்ச்சி பூர்வமான வார்த்தையாக இது ஆகிவிட்டது. இஸ்லாத்தின் எதிரிகளும் நடுநிலை தவறிய ஊடகங்களும் ஒரு நாள்கூட இந்த வார்த்தை உச்சரிக்காமல் இருந்ததில்லை.

திருக்குர்ஆனின் வழிகாட்டுதல்கள் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களின் அடிப்படையில் "ஜிகாத்"தை அணுக வேண்டும். அரபு மொழியில் "ஜிகாத்" என்ற வார்த்தையின் வேர்ச்சொல்லுக்கு "போராடுவது" அல்லது முடிந்ததைச் செய்ய முயற்சிகள் மேற்கொள்வது" என்பது பொருளாகும். இந்தப் போராட்டம் அரசியல், ஆன்மீகம், சமுதாயம், பொருளாதாரம், அரசியல் என எவை சார்ந்ததாகவும் இருக்கலாம். ஏன் உடல் சார்ந்ததாகக்கூட இருக்கலாம்.

## பெரிய ஜிகாத்

"பெரிய ஜிகாத்" என்பது ஒருவன் தனக்கு எதிராகப் போராடுவதாகும். அதாவது தன்னுடைய தன் முனைப்புக்கு பேராசைக்கு, திருப்தி செய்ய முடியாத விருப்பத்திற்கு, தீய செயல்களுக்கு எதிராகவும், சமூகத்தில் நிலவும் இது போன்ற தன்மைகளுக்கு எதிராகவும் போராடுவதாகும். அனைத்து

வகையான ஆக்ரமிப்புகள், அத்துமீறல்கள், அநீதிகள் இவற்றிக்கு எதிராகப் பேராடி நியாயமும், நீதியும் நிலைபெறுவதற்காகச் செய்யப்படும் ஒரு கூட்டு முயற்சியே ஜிகாத். இஸ்லாம் ஒரு அமைதி மார்க்க மென்றால், அந்த அமைதியை உருவாக்குவதற்கான ஒரு வழிமுறையே ஜிகாத் ஆகும்.

ஹு¯னைன் போர் முடிவுற்று திரும்பிக் கொண்டிருந்த போது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "சிறிய ஜிகாத்திலிருந்து திரும்பி (முயற்சி, தடுத்தல், சீர்திருத்தத்திற்கான போராட்டம்) நாம் இப்போது பெரிய ஜிகாத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம்" என்று அறிவித்தார்கள்.

"ஜிகாத்" அவசியம் என்பது ஒரு பொதுவான கருத்தாகும். ஆனால் அது இரண்டு குறிக்கோள்களை அடைவதற்காக இருக்க வேண்டும். ஒன்று இறை பற்றிற்கான ஒருவரது போராட்டம். இன்னொன்று நீதிக்கான சமூகப் போராட்டம். ஜிகாத் பற்றி மிக அழகான முறையில் பெய்ரூட்டைச் சார்ந்த கல்வியாளரான யூசுப் பிஸ் என்பார் கூறுவதாவது:- "பெரிய ஜிகாத் என்பது ஒருவன் தன்னுள் இருக்கும் மிருக மனப் பான்மைக்கு எதிராகப் போராடுவதாகும். அது உள் மனப் போராட்டமாகும். வெளிப்போராட்டம் அல்ல. ஒருவன் தனது மிருகத் தன்மையிலிருந்து விடுபட்டுஇறைவனின் வழியில் செல்வதற்கு முயற்சிகள் மேற் கொள்வதாகும். சில குணாதிசயங்களில் மனிதன் மிருகத்தை ஒத்திருக்கிறான். அதனை அப்படியே விட்டுவிட்டால் அவன் ஒரு பயங்கரமான மிருகமாக மாறிவிடுவான். இத்தகைய உணர்வுகளைக் கட்டுப் படுத்துவதே ஜிகாத் என்பதாகும். பிற சக மனிதர்களையும் அவர்களது சூழ்நிலைகளையும் கட்டுப்படுத்திச் சுரண்டிடும் மனப்பான்மையும் அவனிடம் உள்ளன. இது போன்ற மனப்பான்மைகளுக்கு எதிராகப் போராட ஜிகாத் அவசியமாகிறது.

ஒரு தோழர் "இறைவனின் தூதரே பெரிய ஜிகாத் என்றால் என்ன?" என்று கேட்டபோது அதற்கு நபிகளார் "தீய செயல்களைச் செய்யத் தூண்டும் மன இச்சைக்கு எதிராக ஒருவர் தனக்குள்ளே போராடுவது" என்று பதிலளித்தார்கள்.

முஸ்லிம்களாயினும் சரி,அல்லது அல்லாதவர்களாயினும் சரி அல்லது அனைத்து மனிதர்காளாயினும் சரி, உள்ளுக் குள்ளேயே போராடுவதென்பது மிகவும் சிரமமான ஒன்றாகும். ஆனால் அது மிகவும் உயர்வானது. இதற்கு மிகுந்த புரிந்துணர்வும், மன்னிக்கும் மனப்பான்மையும், நேர்மையும் ஒருவருக்குத் தேவை

## மிக உயர்ந்த ஜிகாத்

ஒரு கொடுங்கோல் ஆட்சியாளர் முன்னால் நின்று கொண்டு உண்மையை தைரியத்துடன் உரைப்பதே ஜிகாத்திலேயே மிக உயர்ந்த ஜிகாத் ஆகும். அடக்கு முறைக்கு எதிராகவும், அடக்கு முறைக்கு ஆளானவர்கட்கு ஆதரவாகவும் தங்களது குரலை உயர்த்துமாறு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் முஸ்லிம்களை வலியுறுத்தினார்கள். அடக்கு முறைக்கு உள்ளானவர்களின் நண்பனாக இருங்கள், கொடுங்கோல் ஆட்சியாளர்களின் அடக்கு முறைகளையும், அவர்களது முறை கேடான செயல்களையும் தடுத்திடுங்கள்" என திருக்குர்ஆன் முஸ்லிம்களை வலியுறுத்துகிறது.

இது பற்றித் திருக்குர்ஆன் மேலும் கூறுவதாவது:

> மேலும் பலவீனர்களாக்கப்பட்ட அடக்கி ஒடுக்கப்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோருக்காக அல்லாஹ்வின் வழியில் நீங்கள் போர் புரியாமல் இருக்க என்ன தான் காரணம்? அவர்களோ எங்கள் இறைவனே! அக்கிரமக்காரர்கள் வாழும் இவ்வூர்களிலிருந்து எங்களை வெளியேற்றுவாயாக! மேலும் எங்களைப் பாதுகாக்கக் கூடிய ஒருவரை உன்னிட மிருந்தே தோற்றுவிப்பாயாக! எங்களுக்கு உதவி செய்பவரையும் உன்னிடமிருந்து தோற்றுவிப்பாயாக! என்று பிரார்த்தனை செய்கின்றார்கள். (குர்ஆன் 4:75)

## சிறிய ஜிகாத்

இஸ்லாத்தையும், நீதியையும் பாதுகாப்பதற்காக நடத்தப்படுகின்ற தற்காப்புப் போர்களே "சிறிய ஜிகாத்" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரையறுத்துச் சொன்னார்கள்.

ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கும் எந்த ஒரு நாட்டுக்கும் தனது தற்காப்பிற்காகப் போரிடும் உரிமை உள்ளது என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒரு வழி முறையாகும். எழுத்துக்கள், ஊடகங்கள், சமாதானப் பேச்சுவார்த்தைகள், இராஜ தந்திர முயற்சிகள், உடன்படிக்கைகள், ஆகிய வழிகளிலும் ஒரு நாடு தற்காப்பு முயற்சிகளில் ஈடுபடலாம். இந்த முயற்சிகள் மேற்கொண்டும் எந்த ஒரு பலனுமில்லை இன்னும் ஆபத்து நீங்கிய பாடில்லை என்ற நிலை ஏற்படும் போது ஒரு நாடு தற்காப்பிற்காக ஆயுதம் ஏந்திப் போராடலாம். இது அந்த நாட்டின் நியாயமான உரிமையாகும்.

ஆக்ரமிப்பிற்குள்ளாகியிருக்கும் எந்த ஒரு நாடும் தற்காப்பிற்காகப் போரில் ஈடுபடலாம் என்பதை சர்வதேசச் சட்டங்களும் நியாயப்படுத்தவே செய்கின்றன.

ஆனால் ஒரு நாட்டை ஆக்ரமிப்புச் செய்வதற்காகவோ அல்லது அந்த நாட்டை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்திலோ செய்யப்படும் போர் ஜிகாத் ஆகாது. ஜிகாத் ஒரு தற்காப்புப் போராகும். இதில் ஈடுபடுபவர்கட்கு சமுதாயப் பொறுப்பு உள்ளது. இது ஒரு அறநெறி வழிமுறையாக இருப்பதால், ஜிகாத் இஸ்லாமிய வழிகாட்டுதல்களின் அடிப்படையிலேயே செய்யப்பட வேண்டும். அப்பாவி பொதுமக்கள், பெண்கள், குழந்தைகள், ஆகியோர் மீது எந்த விதமான தாக்குதலும் நடத்தப்படக்கூடாது. அவர்களது சொத்துக்களுக்கோ அல்லது பிற சமயத்தினரின் வழிபாட்டுத் தலங்களுக்கோ சேதம் விளைவிக்கக் கூடாது. சுற்றுச் சூழலுக்குக் கேடு விளைவிக்கக் கூடாது. எனவே, ஆள் கடத்தல், பிணைக்கைதிகளாகப் பிடித்தல், அப்பாவிப் பொது மக்கள் மீது சரமாரிச் சுடுதல், மக்கள் பணிபுரியும் இடங்களில் குண்டுகள் வீசுதல், அல்லது வைத்தல் ஆகிய தீய செயல்களை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. இவையனைத்தும் "பயங்கரவாதம்" "இரக்கமற்ற படுகொலைகள்" என்ற பிரிவின் கீழ் வருகின்றன.

மேலும், ஒவ்வொரு நாளும் யாரேனும் ஒருவர் தனது விருப்பப்படி ஜிகாத்தை அறிவிக்க முடியாது. உதாரணமாக ஒரு முஸ்லிம் நாடு இன்னொரு முஸ்லிம் நாட்டின் மீது "ஜிகாத்" அறிவிக்க முடியாது. அது போல் ஒரு சர்வாதிகாரி தனக்கு எதிராக அணிதிரண்டுள்ள நாடுகள் மீது "ஜிகாத்"

அறிவிக்க முடியாது. ஜிகாத்திற்கு ஒட்டு மொத்த முஸ்லிம் சமுதாயத்தின் ஒப்புதலும் தேவைப்படுகிறது. பொது மக்களை அடக்கி ஆளும் கொடுங்கோலர், ஆக்ரமிப்பாளர் யார் என்பது தெளிவாக அடையாளம் காணப்பட வேண்டும்.

தவறான முறையில் வழி காட்டப்பட்டுள்ள அல்லது சில ஒன்றுமறியாத அப்பாவி முஸ்லிம்களின் தவறான செயல் பாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு இஸ்லாத்தை எடை போடுவது நியாயமற்றதாகும்.

முன்னாள் பாப் இசைப் பாடகர் காட் ஸ்டீவன்ஸ் (அவரின் தற்போதைய பெயர் யூசுப் இஸ்லாம்) இது பற்றிக் குறிப்பிட் டிருப்பதாவது: "ஊடகங்களில் அடிக்கடி காட்டப்படும் வழி தவறிய சில முஸ்லிம்களின் செயல் பாடுகளை வைத்துக் கொண்டு இஸ்லாத்தை எடைபோடுவது தவறானதாகும். குடி போதையில் கார் ஓட்டி அதனைச் சுவரின் மீது மோதிய ஓட்டுநர் கார் மோசமானது என்று சொல்வதற்கு இது ஒப்பானதாகும்.

## சமூக ஜிகாத்

தற்போதைய நவீனச் சூழலில் சமூகத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது இன்னொரு வகையான போராட்டமாகும் (ஜிகாத்) இப்போதைய சமுதாய அமைப்பை நன்முறையில் மாற்ற வேண்டும் என விரும்புகின்ற ஒருவன் தீவிரமான சமூகச் செயல்பாடுகளில் ஈடுபடவேண்டும். இன்றைக்குப் பல சமூக நல அமைப்புகள் அப்படித்தான் செயல் படுகின்றன. மக்களின் போக்கை மாற்றிட அது ஒன்றே அமைதியான நீடித்த ஒரு போராட்டமாக இருக்கும். இந்த வகையான போராட் டங்களுக்கு கல்வி அறிவு புகட்டுதல், ஊக்க மூட்டுதல், தூண்டுதல் ஆகியன சிறந்த வழி முறைகளாகும். சமூக ஜிகாத்திற்கு நிறைய நோக்கங்களும் குறிக்கோள்களும் உள்ளன.

குழந்தைகள் மற்றும் பெண்களின் உரிமைகளை ஏற்றுக் கொள்ளல், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல், பச்சிளம் குழந்தைகளின் இறப்பைக் கட்டுப்படுத்துதல், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல், வன உயிரினங்களைப் பாதுகாத்தல், குழந்தைகள் இடையிலேயே படிப்பை விட்டு

விடுவதைக் கண்காணித்தல், மத்ரஸா கல்வித் திட்டத்தை நவீனமயமாக்கல், வழிதவறிய பெண்களைச் சீர்திருத்தி அவர்கட்கு வாழ்வளித்தல், போதைப் பழக்கங்களுக்கு அடிமையானவர்கட்கு வாழ்வளித்தல், கிராமப்புற மக்களை கடன் சுமையிலிருந்து மீட்டிடல், வேலை வாய்ப்பற்ற இளைஞர்கட்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை மக்களிடையே ஏற்படுத்துதல், பயிற்சி பெறாதவர்கட்கு தொழில் பயிற்சி அளித்தல், கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் குழந்தைகளுக்கு காப்பகங்கள் நிறுவுதல், சுரங்கத் தொழிலாளர்கட்கு பாதுகாப்பு ஏற்பாடுகளைச்செய்தல், சிறைக் கைதிகளைச்சீர்திருந்த ஆலோசனை வழங்குதல் அல்லது அவர்களின் குடும்பத்தினரைப் பாராமரித்தல், வக்ப் சொத்துக்களைப் பாதுகாத்தல், முதியோர் இல்லங்களையும் சத்திரங்களையும் பராமரித்தல், பழைய சிறைக் கைதிகளை சீர்திருத்துதல், குழந்தைக் குற்றவாளிகளுக்கு இல்லங்களை உருவாக்குதல், வீடற்ற ஏழைகட்கு குறைந்த விலையில் வீடு வழங்குதல் அல்லது ஏற்பாடுசெய்தல், ஏழைகளுக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்தல் இப்படியாக இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும். "அல்லாஹ் உங்களுக்கு நன்மை செய்திருப்பது போல் நீங்கள் மற்றவர்கட்கு நன்மை செய்யுங்கள்" என திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் சமூக சேவையின் தேவையை உணர வேண்டிய காலம் வந்து விட்டது. அவர்கள் "சமூக ஜிகாத்தை" நடத்தி வறுமை, கல்வியின்மை, நோய்கள், போதை, கடன்தொல்லை, அடிமைத்தனம், கொத்தடிமை ஆகிய சமூகக் கொடுமைகளிலிருந்து மக்களை விடுவிக்கப்பாடுபட வேண்டும்.

இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் பற்றிக் கூறப்பட்டுள்ள விளக்கங்கள் சமூக சேவை பற்றிய புதிய வெளிச்சத்தை நமக்குத் தந்துள்ளது. தொழுகை, ஜகாத், நோன்பு, ஹஜ் ஆகிய சமயக் கடமைகளைச் செய்வதோடு இஸ்லாம் நின்று விடுவதில்லை என்பதை அனைத்து முஸ்லிம்களும் நன்கறிந்தே உள்ளனர். இறைவனை நினைவு கூர்ந்து நமது அன்றாட வாழ்வில் நாம் செய்யும் ஒவ்வொரு நற்செயலும் வணக்கத்திற்கு ஒப்பானதேயாகும். குர்ஆனில்

*வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள நம்பிக்கைக்கும் செயல் களுக்குமான நெருங்கிய தொடர்பையும் நாம் அறிவோம். குர்ஆனில் அடிக்கடி வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள "யார் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகின்றார்களோ அவர்கட்கு" என்ற வசனங்கள் இதை நமக்கு உணர்த்துகின்றன. ஆகையால் நம்பிக்கை கொள்வதென்பது "நம்பிக்கை கொண்டு செயல் படுவது" என்பதேயாகும். இங்கு "செயல்" எனக் குறிப்பிடுவது பல தன்மைகள் கொண்டதாகும். ஒருவன் நேர்மையாக இருப்பது மட்டுமல்ல, தனது உறவினர்கள் பால் அவன் கொண்டிருக்கும் அன்பும் உதார குணமும் கூட சமூக சீர்திருத்தங்களில் ஈடுபடுவதற்கும் அல்லது அநியாயத்திற்கு எதிராகப் போராடுவதற்கும் ஒப்பான செயல்களாகும். இத்தகைய அனைத்து முயற்சிகளுமே ஜிகாத்தின் அம்சங்கள் தான். இது பற்றி திருக்குர்ஆன் விளக்கிக் கூறுவதாவது:-*

> *"அல்லாஹ்வின் மீதும் அல்லாஹ்வின் தூதர் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்வின் வழியில் உங்கள் பொருள் களாலும் உயிர்களாலும், ஜிகாத் செய்யுங்கள். நீங்கள் அறியக் கூடியவர்களாயின் அதுவே உங்களுக்குச் சிறந்ததாகும். (குர்ஆன் 61:11)*

*ஒரு முஸ்லிம் தன்னுடைய செல்வத்தையும், வாழ்க்கையையும் நன்மையான செயல்களுக்காகவும், திட்டங் களுக்காகவும் செலவிட வேண்டும் என வலியுறுத் தப்படுகிறது. திருக்குர்ஆனில் இறைவன் வழங்கியுள்ள செய்திகள் மற்றும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அமுதமொழிகள் (ஹதீஸ்) அனைத்திலுமே இறைவனின் வழியில் போராடுவதென்பது, மனித சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி, முயற்சிகள் அனைத்தையும் ஒரு முகப்படுத்தி அநீதி, சுரண்டல், பசி வறுமை, வேலையின்மை, கல்வி அறிவின்மை குற்றச் செயல்கள், போதைப் பொருட்களுக்கு அடிமையாதல், குடி, சூதாட்டம் போன்ற சமூகத்தீங்குகளுக்கு எதிராகப் போராடுவதே ஆகும். இதற்குத் தீவிரமான முயற்சிகளும், தொடர் போராட்டமும் தேவைப்படுகிறது. முழு ஜிகாத்திற்கு அனைவரின் பங்களிப்பும் அவசியமாகும்.*

*முஸ்லிம்களில் எத்தனைபேர் தங்களது வீடுகளைத் தாண்டி வெளியே வந்து இஸ்லாத்திற்காகப் பாடுபட உண்மை*

யிலேயே தயாராக உள்ளனர்? அவர்களிடம் இது பற்றிய சிந்தனைகள் இருந்த போதிலும் தங்களது பகுதிகளில் சுற்று வட்டாரங்களில், நகரங்களில், நாடுகளில் நல்ல நோக்கங்களுக்காக நடத்த வேண்டிய போராட்டங்களை நடத்த மறந்து வாளாவிருக்கிறார்கள். எகிப்திய மார்க்க அறிஞரான ஹஸன்-அல்-பன்னா இது பற்றிக் குறிப்பிடுவதாவது:-

"இறைவன் வழியில் உயிர் துறப்பது மிகவும் கடினமானது ஆனால் இறைவன் வழியில் வாழ்ந்து காட்டுவது அதனைவிடவும் கடினமானது"

## போரைப்பற்றி நபிகளார் கூறுவதென்ன?

அடிப்படையிலேயே யதார்த்த நிலையினைக் கொண்டிருப்பதால் குர்ஆன் போர்களை இயல்பான ஒன்றாகவே கருதுகிறது. ஆனால் அநீதியை எதிர்த்துப் போர் செய்யவே இஸ்லாம் அனுமதிக்கிறது. சுய பாதுகாப்பிற்காகவும், தற்காப்பிற்காகவும் மட்டுமே போர் அறிவிக்கப்பட வேண்டும். ஆக்ரமிப்புச் செய்வதற்காகவோ அல்லது நியாயமான காரணங்களின்றியோ போர் புரிவதை இஸ்லாம் தடைசெய்துள்ளது.

> மேலும் உங்களோடு போர் புரிபவர்களுடன் நீங்களும் அல்லாஹ்வின் பாதையில் போர் புரியுங்கள். ஆனால் நீங்கள் வரம்பு மீறாதீர்கள். ஏனெனில் வரம்பு மீறுபவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை. (குர்ஆன்2:190)

சமூகத்தின் தற்காப்புக்காக மட்டுமின்றி அநீதிக்கும், கொடுமைக்கும் எதிராகவும் போர் புரியலாம்.

> "எவர்களுக்கு எதிராகப் போர் புரியப்படுகின்றதோ அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுவிட்டது. ஏனெனில் அவர்கள் கொடுமைப் படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.... தங்களது

வீடுகளை விட்டு அவர்கள் நியாயமின்றி வெளியேற்றப் பட்டார்கள். அல்லாஹ்தான் எங்களது இறைவன் என்று அவர்கள் கூறியது தான் அவர்கள் செய்த குற்றம்" (குர்ஆன் 22:39-40)

இருந்தபோதிலும், மனிதனின் இயல்பான வன்முறைப் பாதை, ஆதிக்க உணர்வு, பழிக்குப்பழி வாங்கும் போக்கு, பொருளாசை அல்லது கொள்ளையடிக்க வேண்டுமென்ற உணர்வு ஆகிய அனைத்தும் பாவமான, மோசமான செயல்களாகும். சுருங்கக் கூறின் ஆக்ரமிப்புச் செய்வது தடுக்கப்பட்டுள்ளது.

## போர் நெறிமுறைகள்:

இறை வழியில் போர்செய்தல் (ஜிகாத்-ஃபி-சபீ-லில்லாஹ்) என்ற ஒரு புதிய கோட்பாட்டைப் புகுத்தி, சுயநலப் போக்கும், உலகாதாயப்போக்குமற்ற ஒரு பரிசுத்தமான யுத்த களத்தை நபிகளார் கட்டமைத்தார்கள். ஜிகாத் என்பதற்கு போராட்டம் அல்லது எதிர்த்தல் என்று பொருள்கள் உண்டு. அதாவது பிறரால் நிழ்த்தப்படும் அநீதிகளை எதிர்த்துப் போராடுவதாகும். இறைவனின் வழியில் போர்புரிதல் என்ற வார்த்தைகளைச் சேர்த்துள்ளதன் மூலம் சுயநலத்திற் காகவோ, கொள்ளையடிப்பதற்காகவோ, பெருமைக்காகவோ, அந்தஸ்துக்காகவோ அடக்கி ஆள்வதற் காகவோ போர் புரியக்கூடாது என நபிகளார் அறிவித்தார்கள். இந்தக் கொள்கைகள் தெளிவாக எந்தவிதமான குழப்பமுமின்றி நபிகளாரால் சொல்லப் பட்டுள்ளன.

போர் தொடர்பான இந்தப் புதிய கோட்பாட்டின் அடிப்படையில் நபிகளார் போர் செய்வது பற்றியும், அதில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றியும், அதன் அமைப்பு, உரிமைகள், கடமைகள் பற்றியும், சண்டையில் ஈடுபடுவோர், ஈடுபடாதவர்களுக்கிடையிலான வேறுபாடுகள் பற்றியும் தூதுவர்கள், போர்க் கைதிகள், வெற்றி கொள்ளப்பட்ட நாட்டைச் சார்ந்த மக்களின் உரிமைகள் பற்றியும் புதிய விதிமுறைகளை வகுத்தளித்தார்கள். இந்த விதிமுறைகள் அனைத்தும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களால் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

## பத்துக்கட்டளைகள்:

அரபுகளுக்கும் முஸ்லிம்களுக்குமிடயே மோதல்கள் துவங்கிய ஆரம்பத்திலிருந்தே, இஸ்லாமிய வீரர்கள் நம்பிக்கையற்றவர்களிடமும் அடக்கு முறைகளை மேற் கொண்டவர்களிடமும் மிகுந்த பொறுமை காட்டிவந்தார்கள். வன்முறைச் செயல்களுக்கு எந்த விதமான சட்டமோ அல்லது வரைமுறைகளோ இல்லாத அந்த நேரத்தில் ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வகுத்தளித்துத் தந்திட்ட போர் விதிமுறைகளை சேகரித்து அதனை ஒரு ஆவணமாகத் தயார் செய்து தம்முடைய இராணுவவீரர்களுக்கு வழங்கினார்கள். லாவன்ட் பகுதிக்கு (கிழக்கு அரேபியாவிற்கு) இராணுவத்தை அனுப்பிய போது கீழ்க்கண்ட கட்டளைகளை தனது இராணுவ உயர் அதிகாரிக்கு வழங்கினார்கள். வரலாற்றிலேயே இது தான் போர் நெறிமுறைகள் பற்றித் தொகுக்கப்பட்ட முதலாவது ஆவணம் என்பதும், இஸ்லாமியச் சட்டத்தின் அடிப்படையிலேயே இந்த நெறிமுறைகள் அமைந்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்களையோ, குழந்தைகளையோ, முதியவர் களையோ கொல்லாதீர்கள் என அபூபக்ர்(ரலி) அவர்கள் அவருக்கு அறிவுறுத்தினார்கள். நேரான பாதையை விட்டு விலகிச் செல்லாதீர்கள். சேதம் விளைவிக்காதீர்கள். இறை நம்பிக்கைக்கு மாறான செயல்களில் ஈடுபடாதீர்கள். மரங்களை வெட்டாதீர்கள். வீடுகளையும் வயல்களையும் தீக்கிரையாக்காதீர்கள். பழ மரங்களை வெட்டாதீர்கள். உணவுக்காகத் தேவைப்பட்டாலொழிய கால் நடைகளை கொல்லாதீர்கள் தனியாக மடங்களில் இருந்து கொண்டு இறைவனுக்குச் சேவை செய்யும் துறவிகளை ஒன்றும் செய்யாதீர்கள். அவர்களைக் கொன்று விடாதீர்கள். அவர்களின் மடாலயங்களை அழித்து விடாதீர்கள். பத்துக் கட்டளைகளைக் கொண்ட இந்த ஒரு வாக்கியத்தில் போரின் போது முஸ்லிம்கள் அப்பாவி மக்களிடமும் போரில் ஈடுபடாதவர்களிடமும் கருணையுடன் நடந்து கொள்வதோடு, மிருகங்கள் மற்றும் சுற்றுச் சூழல் விஷயத்திலும் அங்ஙனமே நடந்து கொள்ள வேண்டுமென தெளிவாகக்க கூறப் பட்டுள்ளது. இந்த கட்டளைகளை அனைத்து இராணு

வங்களும் ஏற்றுச் செயல்படுத்தினால் இந்த உலகம் மிகுந்த மனிதாபிமானம் கொண்ட உலகமாக மாறிவிடும். இன்றைக்கு நடைபெறும் போர்களின் போது ஏற்பட்டு வரும் பேரழிவுகளைத் தவிர்க்கக் கூடியதாகவும் இது இருக்கும்.

மனித சமூகத்தின் உடல் ரீதியான ஒற்றுமை உண்மையே என்பது பற்றி நபிகளார் "ஓ! இறைவனே எல்லா மனிதர்களும் சகோதரர்களே என நான் சாட்சியம் கூறுகிறேன்" என்று குறிப்பிட்டார்கள். இந்த ஒற்றுமையைக் காட்டும் பல உதாரணங்களை நாம் நபிகளாரின் வாழ்க்கையில் காணலாம். ஒரு முறை நபிகளார் தனது தோழர்களுடன் உட்கார்ந்து கொண்டிருந்த போது, அவ்வழியே ஒரு பிரேத ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. நபிகளார் அந்த இறந்த உடலுக்கு மரியாதை அளிக்கும் முகமாக எழுந்து நின்றார்கள்.இது கண்டு வியப்படைந்த தோழர்கள் "அது ஒரு யூதரின் இறுதி ஊர்வலம்" என நபிகளாரிடம் தெரிவித்தார்கள். நபிகளார் தெளிவாகவும், உறுதியாகவும் அது ஒரு மனித ஆத்மா இல்லையா? எனப்பதிலளித்தார்கள். இஸ்லாம் அத்தகைய ஒரு உயர்ந்த மரியாதையை மனித வாழ்க்கைக்கு அளிக்கிறது. இது சம்பந்தமாக குர்ஆன் கூறுவதாவது

> "எவனொருவன் ஒரு மனிதனைக் கொலை செய்ததற்குப் பகரமாக அன்றி அல்லது பூமியில் குழப்பத்தைப் பரப்பிய காரணத்திற்காக அன்றி வேறு காரணத்திற்காக மற்றவனைக் கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் எல்லோரையும் கொலை செய்தவர் போலாவான் *(குர்ஆன் 5:32)*

ஒரு போரின் போது, எதிர்த்து நின்று சண்டையில் ஈடுபட்ட இரு படைகளுக்கிடையே தற் செயலாகச் சிக்கிக் கொண்ட சில குழந்தைகள் இறந்து போயினர். இதனை அறிந்த போது நபிகளார் பெரிதும் துயறுற்றார்கள். ஒருவர் "ஓ! இறைவனின் தூதரே! அவர்கள் முஸ்லிமல்லாதவர்களின் குழந்தைகள்" என்று கூறிய போது நபிகளார் "முஸ்லிமல்லாதவர்களின் குழந்தைகள் உங்களை விடச் சிறப்பானவர்கள்; எச்சரிக்கை குழந்தைகளை கொல்லாதீர்கள் ஒவ்வொரு ஆத்மாவும் இறைவனால் படைக்கப்பட்டவை" என்று பதிலளித்தார்கள்.

இதற்கு நேர்மாறாக, அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சர் மாடலைன் ஆல்பிரைட்டிடம் "ஈராக் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடை காரணமாக ஐந்து லட்சம் குழந்தைகள் இறந்து போயுள்ளனரே, அது சரியானதுதான என்று ஒரு நிருபர் வினா எழுப்பிய போது, அதற்கவர் "அந்த விலை கொடுக்க அவர்கள் தகுதியானவர்கள் தான்" என்று ஆணவமாகப் பதிலளித்தார்.

## "ஜிகாத்" என்ற வார்த்தையின் உபயோகமும், தவறான விளக்கமும்.

"ஜிகாத்" என்ற அரபி வார்த்தையின் வேர்ச்சொல் போராட்டம் என்று பொருள்படும். ஜி.க.த என்பதாகும். ஒரு குறிக்கோளை அடைவதற்காக அதிகபட்ச முயற்சிகளில் ஈடுபடுவது என்பதே ஜிகாதின் பொருளாகும். இதே வார்த்தை பல சந்தர்ப்பங்களில் பல வழிகளில் பிரயோகம் செய்யப்படுகிறது. உருது மொழியில் ஜிகாத் என்ற வார்த்தைக்குப்பதிலாக "போராட்டம்" என்று பொருள்படும் "ஜாத்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ஒரு அரபியப் பழமொழி பின் வருமாறு குறிப்பிடுகிறது. "கடுமையாக வேலைசெய், தேவையில்லாமல் கடின உழைப்பில் ஈடுபடாதே".

தற்போது சமயச் சார்பற்ற பல செயல்களுக்கும் "ஜிகாத்" என்ற வார்த்தை அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. லஞ்சத்திற்கு எதிரான ஜிகாத், சுற்றுப்புறத்தை மாசுபடுத் துதலுக்கு எதிரான ஜிகாத், சிசுக் கொலைக்கு எதிரான ஜிகாத் பெண் உரிமைகளுக்கு ஆதரவான ஜிகாத் என பல வழிகளில் இந்த வார்த்தை தற்போது பயன் படுத்தப்பட்டு வருகிறது. நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் போது தேசத்தந்தை மகாத்மா காந்திஜி பயன்படுத்திய "அஹிம்சை" என்ற சொல்லுக்கு அரபி மொழியில் "ஜிகாத்" என்றே பொருள். துனிஷியா நாட்டின் ஜனாதிபதியான ஹபீப் போர்கியூபாவின் தேசிய பொருளாதார மேம்பாட்டிற்கான பிரச்சாரம் "ஜிகாத்" என்றே அழைக்கப்பட்டது. பெண் உரிமைக்காக பெண்ணிய

வாதிகள் நடத்துகின்ற போராட்டங்களும், சமூக அமைதிக்காக, நெறி முறைகளைப் பாதுகாப்பதற்காக பிறரால் நடத்தப் படுகின்ற போராட்டங்களும் "ஜிகாத்" என்றே அழைக்கப்படுகின்றன.

நாளாவட்டத்தில் தற்காப்பும், தாக்குதலும் முரண்பாடான முறையில் புரிந்து கொள்ளப்பட்டு முஸ்லிம்கள் நடத்துகின்ற இராணுவ ரீதியிலான செயல்கள் "ஜிகாத்" என்று அழைக்கப்பட்டு வருகிறது. பல முஸ்லிம் நாடுகள் சகோதர முஸ்லிம் நாடுகளுடனேயே போர்களில் ஈடுபடுகின்றன. (அதாவது முஸ்லிம்களுக்கிடையே நடைபெறும் போராட்டம்) இஸ்லாத்திற்கு, இதில் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

19ம் நூற்றாண்டைச் சார்ந்த சூடானின் புரட்சித் தலைவர் "மஹ்தி" என்பவர், உதுமானியப் பேரரசுக்கு எதிராக தான் நடத்திய போராட்டத்தை "ஜிகாத்" என்றே குறிப்பிட்டார். அனைத்துத் துருக்கியர்களையும் கொல்ல வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். சவூதி அரேபியாவிலுள்ள ஒரு தீவிரவாதக் குழு பிற முஸ்லிம்களுக்கு எதிராக "ஜிகாத்" தை அறிவித்திருந்தது. இதில் இன்னும் விநோதம் என்னவென்றால், இஸ்லாத்திற்குள்ளேயே சில பிரிவுகள் பிற பிரிவுகளுக்கெதிராக "ஜிகாத்" அறிவித்துப் போராடி வருகின்றன. இவை, பிற பிரிவுகளால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சமய மரபுகளை இஸ்லாத்திற்கு விரோதமானவை என்று அறிவித்துள்ளன.

இன்னும் சில தீவிரவாதக் குழுக்கள், தங்களது உள் நாட்டுப் பிரச்னைகளுக்காக இஸ்லாமிய உலகிலுள்ள தங்களது எதிரிகளுடன் போர் புரியும் போது, திருக்குர்ஆனின் வசனங்களுக்குத் தங்களுக்குச் சாதகமான முறையில் பொருள் கூறிக் கொள்கின்றன. அண்மைக் காலத்தில், சில அதி தீவிரவாதக் குழுக்கள் தங்களது நடவடிக்கைகள் அனைத்தையுமே "ஜிகாத்" என்று குறிப்பிடுகின்றன. நைஜீரியா, நைஜர், சோமாலியா, மாலி, ஆப்கானிஸ்தான், லெபனான் ஆகிய நாடுகளில் செயல்பட்டு வரும் தீவிரவாத அமைப்புகள் ஆள் கடத்தல், பிணைக் கைதிகளைப் பிடித்தல், விமானத்தைக் கடத்துதல் போன்ற தங்களது தீவிரவாதச் செயல்கள் அனைத்தும் ஜிகாதின் ஒரு அம்சமே என்று

நியாயப்படுத்தி அங்குள்ள அரசுகளுக்கு எதிராகத் தங்களது போராட்டங்களை நடத்தி வருகின்றன.

எனவே "ஜிகாத்" என்ற இந்த வார்த்தை பல நூற்றாண்டுகளாகச் சரியான முறையிலும், தவறான முறையிலும் பயன்படுத்தப்பட்டு, தற்போது முஸ்லிம் நாடுகளிலுள்ள மேற்கத்திய ஆதரவு சக்திகளை எதிர்த்துப் போராடுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பெயர் எப்படியிருந்தாலும், ஆக்ரமிப்புக்கு எதிராகவும், வெளிநாட்டுப் படைகளின் இருப்பிற்கு எதிராகவும் நடத்தப்படும் ஆயுதம் தாங்கிய போராட்டங்களை சர்வதேசச் சட்டங்கள் அனுமதிக்கவே செய்கின்றன.

மேற்கத்திய நாடுகளும் தங்களுக்கு வசதியாக ஜிகாத்திற்கு தவறான முறையில் விளக்கம் கொடுத்து வருகின்றன. கம்யூனிஸ நாடான சோவியத் ரஷ்யா ஆப்கானிஸ்தானத்தை ஆக்ரமித்தபோது அதற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டங்களின் போது இந்த வார்த்தை அதிகம் பயன்படுத்தப்பட்டது. அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ ஆயிரக்கணக்கான ஆப்கானியர்களுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் கொடுத்து தேவையான நிதி உதவிகளையும் அளித்தது. முஸ்லிம் நாடுகளிலிருந்து இதற்கான ஆதரவையும் பெற்றது. மேலும் சி.ஐ.ஏ., அல்ஜீரியா, யேமன், செசன்யா, மத்திய ஆசிய நாடுகள் ஆகியவற்றிலிருந்து பெரும் அளவிலான தீவிரவாதிகளைத் திரட்டியது. முஜாகிதீன், ஜிகாத், ஸஹீது (தியாகி) போன்ற இஸ்லாமிய வார்த்தைகள் இந்தக் கால கட்டத்தில் தான் ஊடகங்களில் பயன்படுத்தப் பட்டன. "ஆசியர்களைக் கொண்டே ஆசியர்களுக்கு எதிராகப் போரிடும்படி செய்வது" என்ற கிஸ்ஸிங்கரின் கொள்கையின் படி, போரிடுபவர்களைத் தூண்டுவதற்காக இஸ்லாமிய மரபுகள் பயன்படுத்தப்பட்டன. ஆப்கானிஸ்தானை ஒட்டிய பாகிஸ்தான் எல்லையில் இதற்கென சில மதரஸாக்கள் துவக்கப்பட்டன. அமெரிக்க அரசின் மறைமுக நிதி உதவி பெற்ற இந்த மதரஸாக்களில் கம்யூனிஸ்ட்டுகள் காபிர்கள் என்பதால் அவர்களைக் கொல்வது "ஜிகாத்" என்றும், இந்தப் போரில் கொல்லப்படுபவர்கள் நேரடியாகச் சொர்க்கத்திற்குச் செல்வார்கள் என்றும் கற்றுக் கொடுக்கப்பட்டன. (சொர்க்கத்தில் அவர்களுக்காக 72 கன்னிப் பெண்கள்

*காத்திருப்பதாகவும் சொல்லப்பட்டது.) இந்த மதரஸாக்களில் பயிற்சி பெற்று வந்த முஸ்லிம் இளைஞர்களுக்கு இந்தச் செய்திகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின அவர்கள் தங்களது உயிரையே கொடுத்து தியாகிகளாகத் தயாராயினர்.*

*ஆப்கன் நாட்டிலுள்ள இரண்டு தலைமுறைகளைச் சார்ந்த இளைஞர்கள் ஆயுதப்பயிற்சி பெற்றனர். சோவியத் யூனியனுக்கு எதிரான அமெரிக்காவின் மறைமுகப் போருக்கு இந்த இளைஞர்கள் பயன்படுத்தப்பட்டனர். ஆப்கனிலுள்ள தீவிர மதவாத மனப்பான்மை கொண்ட ஏழு அரசியல் அமைப்புகளும் சோவியத் நாட்டிற்கு எதிரான போரில் ஈடுபடுத்தப்பட்டன. பின்னர் இது பற்றி முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் குறிப்பிட்டதாவது:- முஜாகிதீன்களுக்கு சி.ஐ.ஏ ஆயுதங்களையும், ஆயுதத் தளவாடங்களையும் கொடுத்தது. இந்த ஆயுதங்களையும், நவீனப் பயிற்சியையும் பெற்றுக் கொண்ட அவர்கள் சோவியத் படைகளை வெற்றிகரமாக விரட்டியடித்தனர். அதே நேரத்தில் தங்களுக்குள்ளும் சண்டையிட்டுக் கொண்டு காபூலில் மட்டும் 45000 மக்களைக் கொன்றனர். (நினான் கோஷி பக்கங்கள் 62,63).*

*சோவியத் யூனியனின் கடைசிப் படை ஆப்கனை விட்டுச் சென்ற ஆறு ஆண்டுகளுக்குப்பிறகு இந்தக் குழுக்கள் தங்களுக்கிடையே ஆயுதங்களைக் கொண்டு சண்டையிட்டு சொந்த சகோதர சகோதரிகளையே கொன்று குவித்தன. 1995ஆம் ஆண்டு வாக்கில்தான் இந்த குழுக்களில் வலுவான குழுவாக உருவான தாலிபான்கள் காபூலில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். இவர்களது மோசமான ஆட்சியின் போதுதான் பெண்கள் பள்ளிக் கூடங்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. புராதன பௌத்த, பாமியன் சிலைகள் தகர்க்கப் பட்டன. இந்திய ஏர்லைன்ஸ் விமானம் கந்தகாருக்குக் கடத்தப்பட்டது. சில பயங்கரவாதிகள் விடுதலை செய்யப்பட்ட பின்னர், விமான பயணக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். மஸ்வூது அஸார், அல்காய்தா, உசாமா பின்லேடன் போன்ற தீவிரவாதிகள் இந்தக் காலகட்டத்தில் உருவானவர்கள்தான். துப்பாக்கிகள் அமெரிக்காவிற்கும் அதன் நலன்களுக்கும் எதிராக திரும்பிய போது, தாலிபான்களுக்கு எதிரான பிரச்சாரமும் துவங்கியது. "ஜிகாத்"*

"பயங்கரவாதம்" ஆகிய வார்த்தைகள் புழக்கத்திற்கு வந்தன. 9/11ல் உலக வர்த்தக மையத்திலுள்ள இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டபோது இந்தப் பிரச்சாரம் உச்சகட்டத்தை அடைந்தது. ஜனாதிபதி புஷ் "பயங்கரவாதத்திற்கு எதிரான" போராட்டத்தை துவக்கினார். பின்னர் நடைபெற்ற விஷயங்கள் அனைவரும் அறிந்தது தான்.

வன்முறை, வன்முறையைத்தான் உற்பத்தி செய்யும். ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் அமெரிக்கா நடத்திய போர்கள் காரணமாக மத்தியகிழக்கு முழுமையும் எதிர்த்தாக்குதல்களும், தற்கொலைப்படை தாக்குதல்களும் (குண்டு வெடிப்பு) நிகழ்ந்தன. அமெரிக்காவின் தலையீடு இந்தப் பகுதியில் பெரும் சமூக அரசியல் குழப்பங்களை ஏற்படுத்தியது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று அழைக்கப்பட்ட போரில் பல்லாயிரக்கணக்கான ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் நிச்சயமற்றதாகி விட்டது. பாகிஸ்தான் இதற்கான பலனை தற்போது அனுபவித்து வருகிறது. தற்கொலைப் படைத்தாக்குதல் அங்கு அன்றாட நிகழ்வாகிவிட்டது.

இவைகள் "ஜிகாத்" என்ற பிரிவின் கீழ் வராது. வன்முறையும், பயங்கரவாதமும் ஜிகாத்தின் அம்சங்களாக விளங்குவதில்லை. தனி மனிதனையும், விரும்பத்தகாத சமூக நிலைகளையும் தூய்மைப்படுத்துவதே "ஜிகாத்" ஆகும். நாடுகளை விஸ்தரிப்பதற்கோ வளங்களை கொள்ளை யடிப்பதற்கோ, இனத் தூய்மைக்கோ, மக்களுக்கு எதிரான வன்முறைக்கோ, மக்களின் உள்ளங்களில் அச்சத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ ஜிகாதில் அனுமதி இல்லை. அமைதியையும், ஒழுங்கையும், நியாயத்தையும் நிலை நாட்டுவதே ஜிகாத்தின் உண்மையான பொருளாகும். ஜிகாத்தின் கடைசிக் கட்டமே போராகும். ஆழ் மனத்திலிருந்து ஆசாபாசங்களை விடுவிப்பதிலிருந்து ஜிகாத் தொடங்குகிறது. பல்வேறு சக்திகளால் ஜிகாத், முறை கேடாகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. உண்மையான இஸ்லாமிய நோக்கத்தை அது பிரதிபலிக்கவில்லை.

# சமயத்தைத் தவறாகப் பயன்படுத்துதல்

வன்முறைச் செயல்களில் ஈடுபடும் முஸ்லிம் தீவிரவாதக் குழுக்கள் தாங்கள் நடத்துகின்ற வன்முறைகளை சமயத்துடன் இணைத்துப் பேசுகின்றனர்.

இது முஸ்லிம் குழுக்களுக்கு மட்டுமே உரித்தான ஒரு அம்சமல்ல இது ஒரு பரந்த தன்மையுடையது. சமய உணர்வுகள் மக்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதித்துள்ள காரணத்தால், தேசிய இயக்கங்களிலும், சுதந்திரப்போராட்டங்களிலும் கூட சில சமய முழக்கங்களையோ, சின்னங்களையோ பயன்படுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகி விடுகிறது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகத் தான் உலகில் நாடுகளும், அரசுகளும் உருவாகியுள்ளன. பிரதேசக் கலாச்சாரங்களில் ஆழமாக வேரூன்றியுள்ள இஸ்லாம் பிரதேச நோக்கங்களுக்காக மக்களது ஆதரவைத் திரட்டும் ஆற்றலைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்டபடி இது இஸ்லாமியக் குழுக்களோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல.

"முதல் சிலுவைப் போர்" என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில தகவல்கள் இதோ:- நேரில் பார்த்த சாட்சிகள் மற்றும் கலந்து கொண்டவர்கள் -ஆகஸ்ட் சி.கிரே:- 1095 நவம்பர் மாதத்தில் இரண்டாம் போப் அர்பன், முஸ்லிம் உலகத்தை தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும், (சிலுவைப் போர் என்று மேற்குலகால் வர்ணிக்கப்பட்ட) முயற்சியைத் தொடங்கி வைத்தார். முஸ்லிம்களை நம்பிக்கையற்றவர்கள், காட்டு மிராண்டிகள் என்று வர்ணித்த அவர் கிறிஸ்துவ மக்களை நாட்டை விட்டு வெளியே கிளம்பிச்

செல்லுமாறும், இயேசு கிறிஸ்துவின் பெயரால் முஸ்லிம்களைக் கொன்று குவிக்குமாறும் கட்டளையிட்டார். இது பற்றி அந்தப் புத்தகம் மேலும் விவரித்துச் சொல்லுகிறது. 15.7.1099 அன்று கிறிஸ்துவ வீரர்கள் என்று வர்ணிக்கப்பட்ட சிலுவைக்காரர்களால் ஜெரூசலம் கைப்பற்றப்பட்டது அந்த நகரைச் சார்ந்த 70000க்கும் மேற்பட்ட முஸ்லிம்களும், யூதர்களும் கொன்று குவிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் முஸ்லிம்கள் தரப்பிலோ, யூதர்கள் தரப்பிலோ யாரும் உயிர் பிழைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என அனைவரையும் கிறிஸ்துவ வீரர்கள் தங்களது வாட்களுக்கு இரையாக்கினர். இத்தகைய சம்பவங்களைக் கொண்டு கிறிஸ்துவ சமயத்தின் தன்மையைப் பற்றித் தீர்மானிக்க முடியுமா? கிறிஸ்துவர்கள் மட்டுமல்ல, நியாய உணர்வு கொண்ட கிறிஸ்துவரல்லாதவர்கள் கூட அப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வர மாட்டார்கள். எனவே இறைவனின் பெயரைச் சொல்லிக் கொண்டு, அப்பாவி மக்களைக் கொன்றிடும் மிகச் சில தீவிரவாதிகளின் செயல்களைக் காரணம் காட்டி இஸ்லாத்தைக் குறைகூறக் கூடாது.

கிறிஸ்துவ சமயத்தின் பெயரைச் சொல்லி நிகழ்த்தப்பட்ட பெரும்பாலான கொலைகள் மற்றும் கொள்ளைகள் அரசாங்கத்தாலும், சர்ச்சுகளாலுமே தூண்டப்பட்டு நிகழ்த்தப்பட்டன. இவை நிறுவன பயங்கரவாதம் என்று அழைக்கப்படுகிறது. மாறாக இஸ்லாத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் வன்முறைச் செயல்களுக்கு, இஸ்லாமிய அரசுகளோ அல்லது இஸ்லாமியத் தலைமையோ எந்த விதமான சம்மதத்தையோ, அங்கீகாரத்தையோ வழங்கிட வில்லை. சில தனிப்பட்ட நபர்களாலேயே இவை செய்யப்படுகின்றன. இந்த விஷயங்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

பாப்டிஸ்ட் கிறிஸ்துவப் பிரிவைச் சார்ந்த சிலர் வேத நூல்களையே திரித்துக் கூறி அப்பாவி மக்களைக் கொன்று குவித்தனர்.

இரண்டாவது உலகப் போரின் போது மூன்றாவது ரீக் படையின் தாக்குதலுக்கு உள்ளான ஸ்டாலின் மார்க்ஸிய

லெனினிஸக் கொள்கைகள் மக்களின் உள்ளத்தில் எந்த விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று அறிந்திருந்தார் அதனால் அவர் ரஷ்ய தேசியம் பற்றியே பேசினார். விரக்தியடைந்த அவர் பின்னர் புனித ருஷ்ய அன்னையைப் பிரதி நிதித்துவப்படுத்தும் ஆர்தோடாக்ஸ் சர்ச்சையையே மக்களை ஒரு முகப்படுத்தும் மையப் புள்ளியாக ஆக்கிக் கொண்டார்.

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் ஜப்பானியப் பேரரசு தனது நாடு விரிவாக்கக் கொள்கைக்கும், இராஜியக் கொள்கைக்கும் மக்கள் ஆதரவினைத் திரட்டுவதற்காக ஒரு உபாயத்தைக் கையாண்டது. ஜப்பானியர்களின் ஆன்மாக்களை உசுப்பி விடுவதற்காக சின்டோ சமயத்தின் புனித அம்சங்களையும் ஏன் பௌத்த சமய வழிமுறைகளையும் அது கையிலெடுத்துக் கொண்டது.

இலங்கையில் உள்ள பௌத்த சிங்களர்கள், அங்கு போராடும் தமிழ் இந்துப் பிரிவினைவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக பௌத்த பிக்குகளையே பயன் படுத்துகின்றனர்.

உண்மையான பற்றுறுதி கொண்ட கிறிஸ்துவன் என அறியப்பட்ட ஜெர்மனியின் ஹிட்லர், ஆறு மில்லியன் யூதர்களைக் கொன்று குவித்தான். கடவுளின் விருப்பப்படியே இச் செயலில் ஈடுபட்டதாகக் கூறிய அவன், ஜெர்மெனியின் போர் நடவடிக்கைகளுக்கு சர்ச்சுகளின் ஆதரவையும் பெற்றிருந்தான்.

அமெரிக்காவில் கூட போர்களின் போது முன்னணி புராட்டஸ்டண்ட் கத்தோலிக சர்ச்சுகளும், யூதர்களின் வழிபாட்டுத் தலங்களும், தேசியப் போராட்டங்களுக்கு சமய அங்கீகாரம் அளிக்கும் வகையில் பயன்படுத்தப்படுகின்றன.

இது போலவே இந்தியாவிலும் தேர்தல் நேரங்களின் போது இந்து வலது சாரி சக்திகள் சமய உணர்வுகளைத் தூண்டி தேசிய பிரச்னைகளைச் சமயத்தோடு தொடர்புபடுத்தி ஆதாயம் தேட முயற்சிக்கின்றனர். "சிறுபான்மையினரை தாஜா செய்கிறார்கள்" என்ற பொய்யான பிரச்சாரத்தை மேற்கொண்டு பெரும்பான்மையினர் ஓட்டுக்களை பெற்றிட முயற்சிக்கிறார்கள்.

போர்களையும், சண்டைகளையும், பிரச்சாரங்களையும் நியாயப்படுத்தவும், பொது மக்களுக்கு தெளிவினை ஏற்படுத்தவும் சமயம் எப்போதும் பயன்படுத்தப்பட்டே வந்துள்ளது. ஆனால் பிரச்சாரங்களோ, சண்டைகளோ, போர்களோ, குறிக்கோள்களோ சமயத்தின்பாற்பட்டவை அல்ல. சமயம் இல்லாவிட்டாலும் கூட குறிக்கோள்களும், பிரச்சாரங்களும், சண்டைகளும், போர்களும் இருந்து கொண்டுதான் இருக்கும் என்பதே உண்மை.

# அடக்குமுறை - பயங்கரவாதம் வித்தியாசம் என்ன?

பயங்கரவாதம் சமயம் சார்ந்த ஒரு விஷயமல்ல. அது சமூக பொருளாதார அரசியல் காரணங்களினால் தோன்றிடும் ஒரு விஷயமாகும். தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கம், ஐரிஸ் குடியரசுப்படை, உல்பா மற்றும் அபிநவ்பாரத் போன்ற இந்துத்துவா கொள்கையுடைய சில அமைப்புகள் ஆகியன பற்றி எந்த விதமான அறிமுகமும் தேவையில்லை. அண்மைக் காலமாக, ஊடகங்கள் இஸ்லாத்தைத் தீவிரவாதத்துடன் தொடர்புபடுத்திச் செய்திகளை வெளியிடுகின்றன. உலகளாவிய அளவிலும் தல மட்டங்களிலுமுள்ள நலன்களுக்குமிடையில் பொதுவான தன்மைகள் காணப் படுவதால், ஊடகங்கள் இஸ்லாமிய பயங்கரவாதம் என்ற சொற்றொடரை சற்றுப் பொறுப்பற்ற மகிழ்ச்சியுடன் பயன்படுத்துகின்றன.

நியாயமின்மையும், மக்களது உரிமைகளை நசுக்குகின்ற போக்கும் வன்முறைக்கு வழிவகுத்து பயங்கரவாதத்திற்கு வழி கோலுகிறது. பயங்கரவாதிகள் ஒரு குறிப்பிட்ட நம்பிக்கைக்குச் சொந்தக்காரர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களது செயல்களுக்குச் சமயச் சாயம் பூசப்படுகிறது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்த போராளிகள் அனைவருமே இந்துக்கள் என்பது உலகறிந்த உண்மையாகும். ஆனால் ஊடகங்கள் அதனை அப்படிக் காட்டுவதில்லை. ஐரிஸ் குடியரசுப்படை வடக்கு அயர்லாந்திலுள்ள கத்தோலிக்க கிறிஸ்துவ மக்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறது. ஆனால் மேற்கத்திய ஊடகங்கள் அதனை அப்படி சித்தரிப்பதில்லை.

நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடியவர்களை "பயங்கரவாதிகள்" என்றனர் அப்போதைய ஆட்சியாளர்கள் பகத்சிங்கையே எடுத்துக் கொள்வோம். இலட்சக்கணக்கான மக்களின் கதாநாயகராக இருந்த அவர் இளைஞர்களுக்கும், புரட்சியாளர்களுக்கும் உதாரணமாகத் திகழ்ந்தார். ஆங்கில அரசின் காவல்துறை அதிகாரி ஜான் சண்டர்ஸ்ஸை கொலை செய்தவர்களின் குழுவில் அவரும் ஒருவர். பஞ்சாப் சட்டசபையில் அவர் குண்டு வீசினார் (இதில் யாரும் உயிரிழக்கவில்லை) அவர் மிகப்பெரிய புரட்சியாளர்களில் ஒருவராகவும், சுதந்திரப் போராட்ட வீரராகவும் கருதப்பட்டார். ஆனால் ஆங்கில அரசு அவரைப் "பயங்கரவாதி" என்றே முத்திரை குத்தியது.

இத்தகைய குழுக்கள் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, மேற்குலகிலுள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் கூட வன்முறைப் போக்கையே மேற்கொண்டன. மேற்கு வங்காளத்திலுள்ள புருலியா மாவட்டத்தில் ஆயுதங்களைப் போட்டதாக இங்கிலாந்து நாட்டு பயங்கரவாதி பீட்டர் பிளீச் என்பவர் கைது செய்யப்பட்டு அவருக்கு ஏழாண்டு சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது. ஆனால் கல்கத்தா சிறையில் அவர் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கும்போதே, இங்கிலாந்து நாட்டுப் பிரதமர் டோனி பிளேயரின் வேண்டுகோளை ஏற்று இந்திய ஜனாதிபதி அவருக்கு மன்னிப்பு அளித்து விடுதலை செய்தார். அதுபோலவே இந்த வழக்கில் தண்டனை பெற்று கல்கத்தா சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஐந்து ரஷ்யர்கள் வாஜ்பேய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் போது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். (ஆதாரம்: டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ் 22.7.2000). அமெரிக்க நாட்டுப் பயங்கர வாதியான ரேமண்ட் டேவிஸ் என்பவன் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுத்து வதற்காக லாகூரில் தாலிபான்களை சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது பிடிபட்டான். அவனது விடுதலைக்காக அமெரிக்க அரசு பெரு முயற்சிகள் மேற்கொண்டது. லாகூர் சதுக்கத்தில் அவனால் கொல்லப்பட்ட இரண்டு பேர்களின் உறவினர்களுக்கு அமெரிக்க அரசு தியாத் (இரத்தப்பணம் அதாவது நஷ்டஈடு) வழங்கியது.

*1976 ஆம் ஆண்டு, கியூபா விமானம் ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவத்தில் அமெரிக்காவின் பங்களிப்பு பற்றி 2005ஆம் ஆண்டு தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இது அமெரிக்காவின் இரட்டை நிலையை வெளிப்படுத்தியது, "போசடா" என்ற சி.ஐ.ஏவின் ஏஜென்ட்தான் இந்த விமானத்தில் குண்டு வைத்து 73 கியூபாவினர் இறந்திடக் காரணமாக இருந்தான் என்பதும் தெரிய வந்தது. அவன் புளோரிடாவில் தஞ்சமடைந்தான். "போசடாவை" நாடு கடத்த வேண்டும் என்ற கியூபாவின் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்தது. இது பற்றி "கார்டியன்" எழுதியிருந்ததாவது:- இது ஒது முக்கியமான விஷயமாகும். அமெரிக்கா தனது விஷயத்திலும், கூட்டாளிகள் விஷயத்திலும் ஒரு நிலைப்பாட்டையும், எதிரிகளைப் பொறுத்த அளவில் இன்னொரு நிலைப்பாட்டையும், மேற்கொள்கிறது. (கார்டியன் இதழில் "டன்கன் கேம்பல்" எழுதிய "அமெரிக்கா நண்பர்களுடனும், எதிரிகளுடனும் எப்படி நடந்து கொள்கிறது என்ற கட்டுரை: இது 30.06.2005 அன்று ஹிந்து நாளிதழில் மறு பிரசுரம் செய்யப்பட்டது.)*

*ஈரான் போன்ற நாடுகளிலுள்ள தீவிரவாதக் குழுக்களுக்கும் அமெரிக்கா நிதி உதவி செய்கிறது என்ற செய்திகள் வருகின்றன. ஜார்ஜ் புஷ் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த போது, ஈரானிய அரசைத் தூக்கி எறிய வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு வந்த முஜாகிதீன்-இ-கால்க் என்ற அமைப்பிற்கு நிதியுதவியும், ஆயுதப் பயிற்சியும் அளித்தார். (இந்த அமைப்பினர் இஸ்ரேலுடன் சேர்ந்து கொண்டு ஈரானைச் சார்ந்த பல அணு விஞ்ஞானிகளைக் கொன்றதாகவும் சொல்லப்படுகிறது) இந்த அமைப்பு 1971ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க அரசால் "பயங்கர வாத அமைப்பு எனப் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது. தன்னால் பயங்கரவாத அமைப்பு என அறிவிக்கப்பட்டிருந்த ஒரு அமைப்பிற்கே அமெரிக்கா அரசு அனைத்துவிதமான உதவிகளையும் செய்தது குறிப்பிடத்தக்கது* (http://www.policymic.com / articles /6587/u-s-funded-iran-terrorist-groups-says.shocking-report- by *கிளென் கிரீன் வால்டு) இது போன்ற வெளிப்படையான கபட நாடகங்கள் மேற்குலகம் செய்து வரும் பயங்கரவாதம் பற்றிய*

பிரச்சாரத்தின் அரசியல் நோக்கத்தைத் தோலுரித்துக் காட்டுகின்றன. சிறிய மற்றும் பலவீனமான நாடுகளை மிரட்டவே பயங்கரவாதம் பற்றிய பிரச்சாரம் செய்யப் படுகிறது என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகிறது.

மேற்குலகம் அடக்கு முறையை மேற்கொள்கிறது. அதே நேரத்தில் அதற்கு எதிராகக் கிளம்பும் எதிர் வினைகளையும், பதிலடிகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது. 2003ஆம் ஆண்டு நடைபெற்ற இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு மாநாடு இதனைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு பயங்கரவாதச் செயல்களுக்கு அனைத்து வழிகளிலும் தக்க பதிலடி கொடுப்பது பற்றி ஆராய ஐ.நா.சபை சர்வதேச மாநாடு ஒன்றை நடத்த வேண்டுமென வேண்டுகோள் விடுத்தது, "சர்வதேச பயங்கர வாதத்திற்கான அடிப்படையான காரணங்கள் குறித்து ஆராய வேண்டியதன் அவசியத்தை நாம் வலியுறுத்த விரும்புகிறோம். அன்னிய ஆக்ரமிப்பு, அநீதி, வெளியேற்ற நடவடிக்கை உள்ளிட்ட பயங்கர வாதத்தை ஊட்டி வளர்க்கின்ற அநீதிகள் தொடர்ந்தால் பயங்கர வாதத்திற்கு எதிரான போராட்டம் வெற்றியடையாது" என்பதையும் அம் மாநாடு வலியுறுத்தியது.

ஆனால் வழிதவறிய சில முஸ்லிம்கள் செய்கின்ற தனித்த சில வன்முறைச் சம்பவங்கள் "ஜிகாத்" என்று சொல்லப் படுகின்றது. "ஜிகாத்" என்ற பெயரால் இப்படிப்பட்ட வன்செயல்களில் ஈடுபடுவோர் முஸ்லிம் சமுதாயத்தின் எதிரிகளே. இந்த புத்தி சுவாதீனமற்றவர்கள் சமுதாயத்திற்கு வெறுப்பையே தேடித்தருகிறார்கள். இத்தகைய ஒவ்வொரு நிகழ்ச்சிக்குப் பின்னும் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான பொய்ப்பிரச்சாரம் உத்வேகம் அடைகிறது.

தேவையான அனைத்து வகை முயற்சிகளையும் ஒருங்கிணைத்து எழுத்து, பேச்சு, செயல் மூலமாகப் போராடுவதே "ஜிகாத்" என இஸ்லாம் விளக்கம் அளிக்கிறது. ஆனால் உள் நோக்கம் கொண்ட சில ஊடகங்கள் இதனைக் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. முஸ்லிம்கள் என்று வரும் போது வழி தவறிய சிலர் செய்கின்ற வன் செயல்களை "ஜிகாத்" என்றே வர்ணிக்கின்றன.

சில முஸ்லிம் நாடுகளில், ஒடுக்கு முறைக்கு எதிராக அரசு

சாராத இயக்கங்கள் கிளர்ந்தெழுந்துள்ளதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். மத்திய கிழக்கு நாடுகள் பல துறைகளிலும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளன. கல்வி, வாழ்க்கைத்தரம், வேலை வாய்ப்புகள் என அனைத்து அம்சங்களிலும் அங்கு வாழும் பெரும்பாலான மக்கள் பின் தங்கிய நிலையிலேயே உள்ளனர். வளைகுடா நாடுகளிலுள்ள சில எண்ணெய் அதிபர்களும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான செல்வந்தர்களும் இதற்கு விதி விலக்காக இருக்கலாம். அங்கு வளமான எதிர்காலம் பற்றிய நம்பிக்கை ஒரு வரையறைக்கு உட்பட்டதாகவே உள்ளது.

பெரும்பாலான முஸ்லிம் நாடுகள் மன்னர்கள், சர்வாதிகாரிகள், எதேச்சாதிகாரிகள் ஆகியோரின் ஆளுகையின் கீழ் உள்ளன. அந் நாடுகளில் ஜனநாயக இயக்கங்கள் இரும்புக்கரம் கொண்டு நசுக்கப்படுகின்றன. அடிப்படை உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகள் மறுப்பு, வெளிப் படையற்ற அரசாங்கம், புரையோடிப் போன லஞ்சம் ஊழல் இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து மக்களின் வாழ்க்கையை சகித்துக் கொள்ள முடியாததாக ஆக்கிவிட்டது. இந்த முடியரசர்களுக்கு மேற்கத்திய நாடுகள் ஆதரவு அளிக்கின்றன. அதற்குக் கைமாறாக இவர்கள் தங்கள் நாடுகளிலுள்ள இயற்கை வளங்களையும், இயற்கை எரிவாயுவையும் மேற்கு நாடுகளுக்குத் தாராளமாகத் தாரைவார்க்கின்றனர். இந்தச் சூழ்நிலைகள் காரணமாக சில எதிர்ப்பு இயக்கங்கள் அந்நாடுகளில் தோன்றியுள்ளன. சொந்த நாடுகளிலேயே இந்த அரசுகளுக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

இந்தப் பிரச்னை பற்றி அமெரிக்காவின் அரசியல் தத்துவ வாதியும், அறிஞருமான மைக்கேல் வால்ஸர் என்பார் "முதலில் பயங்கரவாதத்திற்கான காரணம் ஒடுக்குமுறை என்று சொல்கிறார்கள். பின்னர் ஒடுக்குமுறைக்கான காரணம் பயங்கரவாதம் என்று கூறுகிறார்கள்" என்று குறிப்பிடுகிறார். முதலில் சொல்லப்பட்டது தீவிர இடதுசாரிச் சிந்தனையின் வெளிப்பாடு பின்னர் சொல்லப்பட்டது. பிற்போக்குத்தனமான வலதுசாரிச் சிந்தனையின் வெளிப்பாடு" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

அரசியல் வன்முறை எந்த ஒரு சமூகத்திலும் விரும்பத் தக்கதல்ல. பயங்கரவாதம், அரசியல் வன்முறையின் ஒரு வடிவமே ஆகும். ஆனால் உலகத்தில் அரசியல் வன்முறை ஒடுக்குமுறை அரசுகளால் தங்களது சொந்த மக்கள் மீதும், உள்நாட்டு அரசியல் எதிரிகள் மீதும் தொடர்ந்து நடத்தப்பட்டுக் கொண்டே வருகிறது. முறையற்ற அரசுகள் அரசியல் வன்முறையை நிச்சயம் சந்தித்தே தீர வேண்டும்.

பாலஸ்தீன மக்கள் இஸ்ரேலின் ராக்கெட்டுகளையும், ஏவுகணைகளையும், நீண்டகாலமாக கற்களையும், கவண் குண்டுகளையும் கொண்டே பதிலடி கொடுத்தனர். ஆனால் இது எத்தனை நாளைக்கு? இஸ்ரேலிய அரசு தொடர்ந்து நடத்திய வன்முறைச் செயல்கள் ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் போன்ற விடுதலைக் குழுக்களுக்கு ஒருங்கிணைந்த பலம் வாய்ந்த பதிலடி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் பத்து ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற போர்கள், மேற்கத்திய நாடுகள் பாலஸ்தீனப் பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பதிலாக தங்களது புதிய ஆயுதங்களைப் பரிசோதிப்பதற்காக புதிய போர்த் தளங்களை உருவாக்கி வருகின்றன என்ற சந்தேகத்தை மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளது. சதாம் ஹுஸைனின் ஈராக்கில் பேரழிவை விளைவிக்கும் ஆயுதங்கள் இருந்தன என்ற மேற்கத்திய உலகின் பொய்ப்பிரச்சாரம் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இவை மேற்கத்திய நாடுகளின் போர் விருப்பத்தினையும், வன்முறையையும் ரத்த வெறியையும், காட்டுகின்றன. இந்தச் சூழ்நிலைகளே ஏமாற்றத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தி சில தனி நபர்களை மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான ஒரு திட்டமிட்ட தாக்குதல் முயற்சிகளை மேற்கொள்ளத் தூண்டியது. இதன் முடிவில் யாரை பயங்கரவாதிகள் என்று வர்ணித்தார்களோ, அதே தாலிபான்களின் முன்பு தற்போது மேற்கத்திய நாடுகள் மண்டியிடுகின்றன. இஸ்லாம் அல்லது முஸ்லிம்களோடு பயங்கரவாதத்தை இணைத்துப் பேசுபவர்களின் நோக்கத்தை இந்த உண்மைகள் வெளிப்படுத்துகின்றன.

உலகில் தற்போது நடக்கும் நிகழ்வுகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு இஸ்லாத்தைப் பற்றியும், முஸ்லிம்களைப் பற்றியும் முடிவுக்கு வருவது

நியாயமற்றதாகும். இதில் பலியாகிறவர்கள் முஸ்லிம்கள் தான். இலங்கையிலோ, வடக்கு அயர்லாந்திலோ அல்லது காங்கோவிலே உள்ளவர்கள் அந்த நாடுகளில் நடக்கும் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக எப்படி பதில் கொடுக்கிறார்களோ, அதுபோல்தான் முஸ்லிம்கள் தங்களது கோபத்தையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்துகிறார்கள். இஸ்லாம் உலகில் சமாதானமும் சக வாழ்வும் நிலைபெற்றிட வேண்டுமென வலியுறுத்துகிறது. அனைத்து மக்களும், அவர்களது உரிமைகளும், சொத்துக்களும் கண்ணியமும் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது. இது பற்றி குர்ஆன் குறிப்பிடுவதாவது

> "நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பதை(த் தடுப்பதற்காகவோ) அன்றி, மாற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன்போலாவான்" (குர்ஆன் 5:32)

இந்தப் பின்னணியில், பயங்கரவாதம் இஸ்லாத்தின் ஒரு அம்சம் என்று குறிப்பிடுவது ஒரு தவறான கருத்தாகும். சில நம்பிக்கைகளைச் சீர்குலைப்பதில் தீர்வு இல்லை. மனித சமுதாயத்திற்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியையும், ஒடுக்கு முறையையும் வேரோடு அறுத்து எறிவதில் தான் தீர்வு உள்ளது.

# இஸ்லாமோபியாவை (இஸ்லாத்தைப் பற்றிய பீதி) உருவாக்குதல்

சோவியத் நாடு சிதறுண்டு பனிப்போர் முடிவுக்கு வந்த பிறகு மேற்குலகம் குறிப்பாக அமெரிக்கா புதிய எதிரிகளை தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. நியூயார்க் வாசியும், இன்டர்நேசனல் ஹெரால்டு டிரிபியூன் என்ற பத்திரிகையில் கட்டுரை எழுதி வருபவருமான வில்லியம் பிஃபாப் என்பவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"மேற்குலகிற்கும் சோவியத் யூனியனுக்குமான போர் நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக மேற்குலகிற்கும் இஸ்லாத் திற்குமான போர் துவங்கி விட்டதாக பலரும் கருதுகின்றனர்.

கம்யூனிசத்தின் அழிவிற்குப் பின்னர், தங்களது ஆதிக் கத்தையும் வல்லாண்மையையும் செலுத்துவதற்கு புது எதிரியை சில அமெரிக்கர்கள் தேட ஆரம்பித்துள்ளனர். இஸ்லாத்தை எதிரி என்று அறிவிப்பதற்கு அவர்கள் முன்னுரிமை கொடுக்கிறார்கள். இஸ்லாத்தை எதிரி என்று அறிவிப்பது இரண்டாவது பனிப்போரை அறிவிப்பதற்கு ஒப்பாகும். ஆனால் முதல் பனிப் போரில் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி இதில் கிடைக்கப்போவதில்லை. கம்யூனிச சிவப்பு நிற அபாயம் நீங்கி இஸ்லாத்தின் பச்சை நிற பயம் தற்போது அமெரிக்காவைப் பிடித்துக் கொண்டு விட்டது. (பச்சை இஸ்லாத்தின் வண்ணம் என்று கருதப்படுகிறது)

ஆப்கானிஸ்தானத்திலிருந்து சோவியத் படைகளை விரட்டியடிக்க முஜாகிதீன்களையும், அல் கொய்தாவையும் சி.ஐ.ஏ பயன்படுத்தியது. தாங்கள் பெற்ற ஆயுதங்களை அதனைத் தந்த அமெரிக்காவிற்கு எதிராகத் திருப்புவதற்கு

ஆப்கானைச் சார்ந்த இந்தச் சண்டைக் கோழிகளுக்கு அதிக நாட்கள் தேவைப்படவில்லை. நாத்திகர்கட்கும், நம்பிக்கை யற்றவர்கட்கும் எதிராக "ஜிகாத்" செய்யும்படி சி.ஐ.ஏ பிரச்சாரப் பீரங்கிகள் பல ஆண்டுகளாக செய்து வந்த பிரச்சாரத்தின் எதிரொலியாகவே, முஜாகிதீன்கள் அமெரிக்காவிற்கு எதிராகவும், அதன் நலன்களுக்கு எதிராகவும் மத்திய கிழக்கிலும் பிற பகுதிகளிலும் போரிட ஆரம்பித்தனர்.

இந்நிலையில், அமெரிக்க ஆயுத உற்பத்தியாளர்கள் ஆயுத விற்பனைக்காகப் புதிய சந்தைகளைத் தேடினர். பனிப்போரின் முடிவில், ஆயுத விற்பனை மிகவும் குறைந்து போயிற்று. ஆயுத உற்பத்தித் தொழிலில் நீண்டகாலமாக தேக்க நிலை இருந்து வந்தது. ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங் களிடமிருந்து தேர்தல் வெற்றிக்காக நிதி உதவி பெற்ற அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினர்களுக்கு நிலைமை மோசமடைவதாகத் தோன்றியது. 9/11ல் நடைபெற்ற சம்பவம் ஆயுத விற்பனையைப் பெருமளவு அதிகரித்தது. நியூயார்க் இரட்டைக் கோபுரத் தாக்குதல்களுக்குப் பிறகு ரைத்தியான், போயிங், லாக்ஹீடுமார்டின் போன்ற ஆயுத வியாபாரிகளின் தேவை பெரிதும் உணரப்பட்டது. திடீரென்று போர்க்குரல் எழும்பியது. ஆயுத வியாபாரிகளின் பை நிரம்ப ஆரம்பித்தது.

உண்மையைப் பொய்யாகவும், பொய்யை உண்மை யாகவும் மாற்றத் தக்க அளவில் மேற்கத்திய நாடுகளின் பிரச்சாரமுறை அமைந்துள்ளது. பெரும்பாலான மக்கள், விஷயம் அறியாதவர்களாகவும், ஊமைகளாகவும் உள்ளனர். உணர்வுப் பூர்வமான விஷயங்கள், உணர்ச்சிகரமான பிரச்சாரம் ஆகியவை மூலமாக அவர்களை வசப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. "மக்கள் உறவு முறை" இந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டு மக்களின் மனதைக் கட்டுப்படுத்த முடியும் என அது நம்புகிறது. பொதுமக்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை பகுத்தறிவு கொண்டு சிந்திக்கக் கூடாது; அதற்கு மாறாக முக்கிய பிரச்னைகளிலிருந்து அவர்களைத் திசை திருப்பும் வண்ணம் ஒரு கோஷத்தை வழங்க வேண்டும் என்பதே இந்தப் பிரச்சாரத்தின் முக்கிய நோக்கமாகும். உதாரணமாக ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் எழுப்பிய ஒரு கோஷத்தை இங்கு நினைவு கூறலாம். "நீங்கள்

எங்களுடன் இருங்கள்; அல்லது பயங்கரவாதிகளுடன் இருங்கள்" என்பதே அவர் எழுப்பிய கோஷம். அவரை எதிர்த்து யாரும் பேச முடியாத நிலையை இந்த கோஷம் ஏற்படுத்தியது (ஆதாரம் மீடியா கன்ட்ரோல் – நாம் சோம்ஸ்கி)

பல ஐரோப்பிய நாடுகளில் முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தற்போது இது அதிகரித்து வருகிறது. இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக அங்குள்ள அரசுகள் விழிப்புடன் செயல்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்களைக் கேலி செய்யும் ஜோக்கிலிருந்து ஆரம்பித்து, இஸ்லாம் வெறுப்பைப் போதிக்கும் ஒரு மார்க்கமென்றும், முஸ்லிம்கள் சகிப்புத் தன்மையற்ற வெறிபிடித்தவர்கள் என்றும் அங்கு பிரச்சாரம் நடைபெறுகிறது. காபிர்களை கொல்லும்படி இஸ்லாம் போதிப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.

இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் எடுத்து வைக்கப்படுகின்றன. இந்து சமயத்தை அவமதிப்பதற்காகவே முஸ்லிம் மன்னர்கள் கோவில்களை இடித்தனர். ஒவ்வொரு முஸ்லிமுக்கும் நான்கு மனைவியர்களும் இருபது குழந்தைகளும் உள்ளனர். தீவிரவாதிகள் அனைவரும் முஸ்லிம்கள் என்பது போன்ற குற்றச்சாட்டுகள் முஸ்லிம்கள் மீது சுமத்தப்படுகின்றன. இந்தத் தவறான பிச்சாரங்களுக்குக் காரணங்கள் என்னவாக இருந்தாலும், முஸ்லிம்களே வன்முறையில் ஈடுபடுகின்றனர் என்று பழிசுமத்தி அதன் மூலம் அரசியல் ஆதாயம் பெற சில சக்திகள் விரும்புகின்றன. முழு முஸ்லிம் சமூகத்திற்கும் கெட்ட பெயர் ஏற்படுத்தவும் இவர்கள் முயற்சிக்கின்றனர்.

இந்தியாவில் இந்த இஸ்லாமோபியா பிரச்சாரம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. தொலைக்காட்சிச் செய்திகளையும், ஊடகங்களில் வரும் செய்திகளையும் பார்க்கின்ற ஒரு சராசரி மனிதன் தனது அறிவைப் பயன்படுத்தி உண்மை என்ன என்று கண்டறிய முயற்சிப்பதில்லை.

பிரச்னைகள் மிக ஆழமாக வேரூன்றி விட்டன. முஸ்லிம் களுக்கு எதிராக திட்டமிட்ட வெறுப்புப் பிரச்சாரமும், இஸ்லாத்தைப் பற்றிய பீதியை உருவாக்குவதும் எல்லை தாண்டிப் போய்விட்டன. இந்தப் போக்கு எண்ணெய்

வளத்திற்காகப் பல நாடுகளின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதற்கும், தீவிரவாதக்குழுக்கள் சமூகச் சலுகைகளைப் பெறுவதற்கும் துணை புரிகின்றன. அதே நேரத்தில் இந்தப் போக்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்குத் தற்போது அந்த நாடுகளும் அங்குள்ள சமூகங்களும் ஒரு எதிர்மறையான அணுகுமுறையை மேற்கொண்டிடக் காரணமாக அமைகின்றன. சமூகங்களுக்கிடையே ஏற்படும் இந்த கருத்து வேறுபாடு (பிளவு) ஜனநாயகத்தின் நாடி நரம்புகளின் வழியாக ஊடுருவிச் சென்று அவற்றைப் பலவீனப்படுத்தி சமூக மேம்பாட்டிற்கான வழிமுறைகளைச் சீர்குலைக்கின்றன. இந்தக் கால கட்டத்தில் மனித மதிப்பீடுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்த இருண்ட பிளவு வாதப் போக்குகளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக நாம் முறியடித்து வெற்றி கொள்ள வேண்டும்.

பல பகுதிகளில் தலையெடுத்துள்ள இந்த வலது சாரி சமய தீவிரவாதக்குழுக்களின் செயல்பாடுகள் உலகெங்குமுள்ள ஜன நாயக சக்திகளுக்கும், தாராள எண்ணம் கொண்ட முற்போக்கு சக்திகளுக்கும் பெரும் எச்சரிக்கையாக அமைந்துள்ளன. எனவே "இஸ்லாமிய பீதியை" அவர்கள் கட்டுப்படுத்த வேண்டும். இஸ்லாத்திலும், முஸ்லிம்களிடமும் இயல்பாக உள்ள வன்முறைக்குணமே இந்த பயங்கரவாதத்திற்கு காரணம் என்று சொல்லப்படுவது உண்மைக்குப் புறம்பானதாகும். சில சுயநல சக்திகள் தங்களின் அரசியல் லாபத்திற்காகவே இஸ்லாத்தைக் களங்கப்படுத்துகின்றனர் என்பதே உண்மையாகும்.

சமூகங்களுக்கிடையே நல் உறவுகளைப் பராமரிப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நல்லிணக்கத்தையும், சமாதானத்தையும் நாம் பரப்ப வேண்டுமென்றால் சமயத்தை அறநெறிகளைப் போதிக்கும் ஒரு அமைப்பாகவோ பார்க்க வேண்டும். அதற்கு மாறாக வெறும் சடங்குகள் கொண்ட அமைப்பாக அதனைப் பார்க்கக் கூடாது. தங்களது சுய நலத்திற்காக உலக வளங்களையும், வட்டார வளங்களையும், தன்னகத்தே கொண்டு வர முயற்சிக்கின்ற சிலரின் செயல்களை முறியடிக்க நமக்கு யந்திரங்களை விடவும் மனித உணர்வு மிக அதிகமாகத் தேவைப்படுகிறது.

# பயங்கரவாதத்தின் வேர்கள்

கடந்த பல ஆண்டுகளாக உலகின் பல்வேறு பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டு அதன் காரணமாக பெரும் உயிரிழப்பும், பொது அமைதிக்குப் பங்கமும் ஏற்பட்டுள்ளன. உலக வர்த்தக மையத்திலுள்ள இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டது பயங்கரவாதிகளின் சதிச் செயலே என்று சொல்லப்படுகிறது. இது அண்மையில் நிகழ்ந்தது. இதற்கு அதிக விளக்கம் தேவையில்லை. "ஜிகாத்" உணர்வால் உந்தப்பட்ட பயங்கரவாதிகளே இந்தச் செயலில் ஈடுபட்டனர் என்றும் சொல்லப்பட்டது. இந்தப் பயங்கரவாதிகள் பாகிஸ்தானிலிருந்து மத்திய கிழக்குவரையுள்ள பகுதியைச் சார்ந்தவர்கள் என்றும் கூறப்பட்டது. இது இஸ்லாத்தைப் பற்றியும், நம்பிக்கையற்றவர்களுக்கு எதிராக நடத்தப்படும் புனிதப் போரே ஜிகாத் என்ற கருத்துருவாக்கம் பற்றியும் பலகேள்விகள் எழுப்புகிறது.

உலக மக்கள் தொகையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 23 சதவிகிதமாகும். உலகின் தற்போதைய முஸ்லிம்களின் மக்கட் தொகை 170 கோடியாகும். "இஸ்லாம்" என்ற அரபு வார்த்தையின் வேர்ச் சொல் "இல்ம்" (அமைதி) ஆகும். இஸ்லாம் ஒரு அமைதி மார்க்கம் என்றே அறியப்படுகிறது. இஸ்லாத்தின் எதிரிகள் கூட அதனை ஒரு அமைதி மார்க்கமே என்று ஏற்றுக் கொள்வர். நியாயமற்ற செயல்களில் ஈடுபடும்படி இஸ்லாம் தனது நம்பிக்கையாளர்களையும் பின்பற்றுபவர்களையும் ஊக்குவிக்கவில்லை. 9/11 சம்பவத்திற்குப் பிறகு நேட்டோ நாடுகள் முஸ்லிம் நாடுகள் மீதும் முஸ்லிம்கள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. உலக அமைதியையும் பாதுகாப்பையும் பேணுவதாகக் கூறிக் கொண்டு ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் ஆகிய இரு

நாடுகளும் அமெரிக்கப் படையினரால் ஆக்ரமிக்கப்பட்டு முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளன. வன்முறைச் சக்கரம் சுழன்று கொண்டே இருக்கிறது. அந்நாடுகளில் வசிக்கும் மக்களுக்கு இன்னமும் அமைதி கிடைக்கவில்லை. இந்தப் போர்களில் பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர். ஐம்பது லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

இத்தகையோர் பற்றி இறைவன் தனது மறையான திருக்குர்ஆனில் கூறுவதாவது...

> "பூமியில் குழப்பத்தை உண்டாக்காதீர்கள்" என்று அவர்களிடம் சொல்லப்பட்டால் "நிச்சயமாக நாங்கள் தாம் சமாதானவாதிகள்" என்று அவர்கள் சொல்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் தாம் குழப்பம் உண்டாக்குவார்கள் அன்றோ; ஆனால் அவர்கள் இதை உணர்கிறார்களில்லை.
>
> (குர்ஆன் 2:11-12)

உலக அமைதி மற்றும் பாதுகாப்பு பற்றிய விவாதங்களில் வல்லாண்மை மிக்க மேற்கத்திய நாடுகளும், அவற்றின் சக்தி வாய்ந்த ஊடகங்களும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. உலக அமைப்புகளான ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சில் கூட இவர்களின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. அமைதி பற்றி இந்த ஊடகங்கள் செய்கின்ற பிரச்சாரங்களை மக்கள் நம்புகின்றனர். சிறிய நாடுகளின் குரல் நியாயமாக இருந்தாலும் அது இந்த சர்வதேச ஊடகங்களில் இடம் பெறுவதில்லை. வன்முறைக்கும் அழிவிற்கும் முஸ்லிம்களும், முஸ்லிம் நாடுகளுமே காரணம் என்று குற்றம் சாட்டித் தாக்குதல் தொடுக்கின்றனர். இஸ்லாமிய நாடுகள் தங்களை தற்காத்துக் கொள்ளப் போதுமான வலுவைப் பெற்றிருக்க வில்லை என்பதை மேற்கு நாடுகள் நன்றாக உணர்ந்து கொண்டுள்ளன. தங்களுக்கு எதிராக அல்லது உலகெங்கும் வாழும் தங்களது நாடுகளைச் சார்ந்த குடிமக்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடும் படி தங்களின் எதிரிகளைத் தூண்டிவிடும் முயற்சியில் முஸ்லிம்கள் ஈடுபட்டுள்ளதாக மேற்கு நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. இந்த வன்முறைத் தாக்குதல்களுக்கு "பயங்கரவாதம்" என்ற பெயரைச் சூட்டியுள்ள மேற்குலகம் இந்த வார்த்தையை தேவைக்கு

அதிகமாகவே பயன்படுத்தி வருகிறது. மேற்கத்திய நாடுகளுடன் பொருளாதாரத் தொடர்புகள் கொண்டுள்ள பெரும்பான்மையான வளர்ந்து வரும் நாடுகள் அவற்றின் கட்டளைக்கு கட்டுப்பட வேண்டிய கட்டாய நிலையிலுள்ளன. அவை மேற்கு நாடுகளுடன் மோதலைத் தவிர்த்திட விரும்பு கின்றன. மேற்கத்திய நாடுகளின் கட்டளையை ஏற்க மறுப்ப வர்கட்கு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுகின்றன. பயங்கர வாதத்தையும் அதற்கான காரணிகளையும் நாம் ஆராய்கின்ற போது, அதன் பின்னணியில் உள்ள பல்வேறு அரசியல் அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஐரோப்பியர்களின் யூத எதிர்ப்பிற்கும், ஜெர்மனி நாஜிகள் செய்த யூத இனப் படுகொலைக்கும் ஈடாக உருவாக்கப்பட்ட யூத நாடே இஸ்ரேல். இதிலிருந்து தான் பயங்கரவாதத்திற்கான வேர்களைத் தேட முடியும். இஸ்ரேல் என்ற இந்தச் சட்டவிரோதக் குழந்தை இங்கிலாந்தில் கருவாகி உருவாகி ஜனநாயகம் மற்றும் மக்கள் உரிமைகளின் மிகப்பெரிய பாதுகாவலன் என்று கூறிக்கொள்ளும் அமெரிக்காவால் ஊட்டி வளர்க்கப்படுகிறது.

இஸ்ரேல் என்ற நாடு உருவான போது அங்கு 60ஆயிரம் யூதர்களும் 7இலட்சத்து 50ஆயிரம் அரேபியர்களும் இருந்தனர். இங்கிலாந்தின் வெளியுறவுச் செயலாளர் ஏ.ஜே.பால்ஃபோர் 1918ஆம் ஆண்டு இது பற்றி எழுதியதாவது:- நான்கு வல்லரசுகளும் யூத நாடு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். ஜியோனிசம் என்பது சரியோ, தவறோ, நல்லதோ, கெட்டதோ அது பழமை வாய்ந்த பாரம்பரியங்களிலும் தற்காலத் தேவைகளிலும், வருங்கால நம்பிக்கைகளிலும் அந்தப் புராதன நாட்டில் வாழும் ஏழு லட்சம் அரேபியர்களின் அபிலாஷைகள் அல்லது தவறான எண்ணெங்களை விடவும் ஆழமான நம்பிக்கைகளில் வேரூன்றியது."

இலன் பாப்பே என்பவர் இஸ்ரேல் நாட்டிலுள்ள ஹைபா பல்கலைக் கழகத்தின் ஒரு அறிஞர். வெளிப்படையாகப் பேசக் கூடியவர். அசோஸியேடட் பிரஸ்ஸைச் சார்ந்த டான் பொர்ரி என்பவருக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றில் "இஸ்ரேல் பாவத்தில் பிறந்ததா" என்ற கேள்விக்கு "ஆமாம்" என்று

பதிலளித்தார். "யூதர்கள் வந்தார்கள். நிர்மூலமாக்கல், வெளியேற்றல் மூலமாக அரேபியர்களுக்குச் சொந்தமான நாட்டை எடுத்துக் கொண்டார்கள். நாங்கள் ஒரு காலனி ஆதிக்க ஆக்ரமிப்பாளராக இருக்க விரும்புகிறோம். நெறிமுறைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். இத்தகைய ஒரு ஆணவப் போக்கை யாராவது கண்டனம் செய்துள்ளார்களா? பாலஸ்தீனம் ஏழு நூற்றாண்டுகளாக முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் நாட்டைச் சார்ந்த பத்திரிகையாளரும், வரலாற்று ஆசிரியருமான டாம் செகீவ் என்பார் "யூதர்களும் அரேபியர்களும்" என்ற தனது நூலில் சில செய்திகளை ஆவணப்படுத்தியுள்ளார். அதில் 1919 முதல் 1948 வரை பாலஸ்தீனத்தை ஆண்ட ஆங்கில ஆட்சியாளர்கள் எப்படி திட்டமிட்ட மோசடியில் ஈடுபட்டு அங்கு யூதர்களின் ஆட்சியை நிறுவப் பாடுபட்டனர் என்பதை விவரித்துள்ளார். அவரின் இந்த ஆராய்ச்சி அவரையே ஒரு மோதலுக்கு இட்டுச் சென்றது.

செகீவ் மேலும் எழுதியிருப்பதாவது:- யூத அமைப்பும், ஆங்கிலேய அரசும் தொடர்ந்து செல்வாக்கு மிக்க அரேபியர்கட்கு லஞ்சம் கொடுத்தனர். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் வைய்ம் வைஸ்மெனிடம்" அரேபியர்களை விலைக்கு வாங்க முடியும்" என்று கூறினார். அவர்களது உரையாடலின் போது "பக்ஷீஸ்" என்ற அரபு வார்த்தை பயன்படுத்தப்பட்டது. டிரான்ஸ் ஜோர்டானின் இளவரசர் அப்துல்லா யூத அமைப்பின் அங்கமாக இருந்தார்.

இஸ்ரேலை உருவாக்கிய அமெரிக்கா பிரிட்டன் ஆகிய நாடுகளின் மீது கொண்டுள்ள கோபத்திற்கும், வெறுப்பிற்கும் சற்றும் குறையாத வண்ணம் இன்றைக்கு அரபுகள் தங்களது நாடுகளிலுள்ள தகுதியற்ற தலைவர்கட்கு எதிராகவும் கோபம் கொண்டுள்ளனர்.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது, மத்திய கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு இஸ்லாம் காரணமல்ல என்பதும். இந்தப் பகுதியில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டது தான் அனைத்துப் பிரச்னைகளுக்கும்

காரணம் என்பதும் தெரியவரும். அங்குள்ள நாடுகளின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்ற 1950, 1960களில் மேற்கத்திய நாடுகள் தீட்டிய திட்டமும், இஸ்ரேலின் வன்செயல்கள் காரணமாக அரேபிய தேசியம் உத்வேகம் பெற்றதும் இஸ்ரேலுடன் நிகழ்ந்த போர்கள், லெபனானின் அழிவு இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் நடந்த போரில் ஏற்பட்ட அழிவுகள், மேற்குக் கரையையும், சிரியாவின் சில பகுதிகளையம் இஸ்ரேல் பலவந்தமாகக் கைப்பற்றியது தென் ஆப்ரிக்காவில் நிலவிய இனவெறிக் கொள்கையை நினைவு படுத்தும் விதமாகப் பாலஸ்தீனியர்களை முகாம்களில் அடைத்து வைத்திருப்பது. அவர்களின் விவசாய நிலங்களையும், நீர் ஆதாரங்களையும் கையகப்படுத்தியிருப்பது, வீடுகளிலிருந்து அவர்களை வெளியேற்றியிருப்பது அரேபியர்களைப் பிரித்து வைக்கும் முயற்சியாக 375 கி.மீ நீளத்திற்கு சுவர் ஒன்று எழுப்பியிருப்பது ஆகிய நடவடிக்கைகள் அவர்களின் கோபத்தை மேலும் தூண்டியுள்ளது. உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்ட போது அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் "சிலுவைப்போர்" பற்றிக் குறிப்பிட்டது போல, இந்தப் போர்களுக்கும் இஸ்லாமியச் சாயம் பூசப்படுவதில் வியப்பொன்றுமில்லை.

ஆனால் இவற்றில் எதுவும் அமெரிக்காவையோ, இங்கிலாந்தையோ, இஸ்ரேலையோ அல்லது முஸ்லிம் உலகில் சண்டையைத் தூண்டி விடுகின்ற சர்வதேச சக்திகளையோ திருப்திப்படுத்தவில்லை. பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களை வைத்துள்ளது என்று குற்றம் சாட்டி ஈராக்கின் மீது ஆக்ரமிப்புச் செய்ததையும் 9/11ல் நியூயார்க்கின் இரட்டைக் கோபுரங்களைத் தாக்கச் சதி செய்தது அல்கொய்தாவே என்று கூறி அந்த அமைப்பு செயல்பட அனுமதித்ததாகக் குற்றம் சாட்டி ஆப்கானிஸ்தான் மீது குண்டு வீசித் தாக்குதல்கள் நடத்தியவையும், அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் சரியான நடவடிக்கைகள் என்றே நியாயப்படுத்துகின்றன. பிரபல எழுத்தாளர் நோம் சோம்ஸ்கி தனது நூல் ஒன்றில் "இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில் ஆப்கானிஸ்தான் பங்கு பற்றி விசாரணை நடத்தி உண்மையைத் தெரிந்து கொள்ளும் முன்னரே புஷ் நிர்வாகம்

அந்த நாட்டின் மீது படையெடுத்தது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

1958ஆம் ஆண்டிலிருந்தே முஸ்லிம் நாடுகளைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர அமெரிக்கா ஆக்ரமிப்பிலும், படையெடுப்பிலும் ஈடுபட்டு வருகிறது. எண்ணெய் உற்பத்தி செய்யும் பகுதிகள் என வட ஆப்ரிக்கா இந்தோனிஷியா, மத்திய கிழக்கு ஆகிய மூன்று பகுதிகளை ஜனாதிபதி ஐசநோவரின் நிர்வாகம் அடையாளம் கண்டது அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் டல்லஸ் "தீவிர தேசியவாதம்" என்று இந்தப் பிரச்னையை இனம் காட்டினார். ஆனால் தீவிரவாத இஸ்லாம் என்று அவர் கூறவில்லை. பிரெஞ்சு காலனியாதிக்கத்திற்கு எதிராக வட ஆப்ரிக்காவின் தேசிய சக்திகள் அடைந்த வெற்றிகள், எகிப்து ஜனாதிபதி நாசரின் அரபு தேசியமும், அணிசேரா நாடுகளின் கூட்டணியும் இந்தோனிஷியா அதிபர் சுகர்னோவின் மிதமிஞ்சிய ஜனநாயக நடவடிக்கைகளும் அமெரிக்காவின் வெளியுறவுத் துறைக்குப் பிரச்னைகளாக இருந்தன. (நோம்ஸ்கியின் நூல்) இதற்குப் பிறகு தான் போர் நடவடிக்கைளில் ஈடுபடும் படி இஸ்ரேல் ஊக்குவிக்கப்பட்டது. தங்களுக்குள் பரஸ்பரம் கேடு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடும்படி அரபுகள் தூண்டப்பட்டனர். அரபு மற்றும் முஸ்லிம் நாடுகளின் ஆத்திரத்திற்கும் கோபத்திற்கும் பின்னணியில் உள்ள முக்கியமான கிரியா ஊக்கி இது போன்ற செயல்கள் தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக மேற்குலகம் சுமத்தி வரும் "பயங்கரவாதக்" குற்றச் சாட்டை இந்தப் பின்னணியில் தான் பார்க்க வேண்டும். இஸ்லாத்தைப் பற்றித் தெரியாதவர்களிடம் இஸ்லாமோபியாவை (இஸ்லாத்தைப் பற்றிய அச்சம்) உருவாக்குவது தான் பயங்கரவாதம் என்ற இந்தப் புதிய யுக்தியாகும்.

இஸ்லாமியக் கோட்பாடு புரிந்து கொள்வதற்கும் பின் பற்றுவதற்கும் மிகவும் எளிதானது. பல்வேறு நூல்களில் இவை தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளாக இந்த உலகில் இஸ்லாம் சமய சுதந்திரம் வழங்கியுள்ளதை அறிவு ஜீவிகள் உணர்ந்தே உள்ளனர். இஸ்லாம் இயற்கையிலேயே தீவிரவாதப் போக்கு

கொண்டது என்று மேற்கு உலகினர் குற்றம் சாட்டி வரும் அதே நேரத்தில் இஸ்லாம் அந்த நாடுகளில் தொடர்ந்து வளர்ந்து கொண்டே வருகிறது என்பதும் உண்மையாகும். உண்மையில் இஸ்லாத்தின் எளிய கோட்பாடுகளும், உயர்ந்த கொள்கைகளும், பணிவு, சுயநலமின்மை பரிவு, கடப்பாடு, பக்தி, இறைவனைப் பற்றிய தெளிவு ஆகிய பண்புகளைக் கொண்டுள்ள மக்களை மேலும் மேம்படுத்த உதவுகிறது. பல முஸ்லிம் நாடுகளில் உள்ள மக்கள் ஏழைகளாக இருக்கலாம். தொழில் நுட்பத்தில் பின் தங்கியவர்களாக இருக்கலாம். ஆனால் பெரு முயற்சிகள் எதுவுமின்றி மக்களை தன் பால் இழுக்கும் வல்லமையை இஸ்லாம் பெற்றுள்ளது.

இஸ்லாத்தின் போதனைகள் தெளிவானவை. உயர்ந்தவை. "நீதியை நிலை நாட்டுங்கள் அதுவே இறைபக்திக்கு நெருக்கமானது" என அல்லாஹ் குர்ஆனில் கூறுகின்றான். இஸ்லாம் ஒரு அமைதி மார்க்கமாகும். பிரச்னைகளைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளுமாறு மக்களை அது வேண்டுகிறது. தகுந்த நியாயமான காரணமின்றி ஒரு தனி மனிதனைக் கொல்வது ஒட்டு மொத்த மனித சமுதா யத்தையே கொன்றதற்குச் சமமாகும் என குர்ஆன் எச்சரிக்கிறது. இஸ்லாமிய நாடுகளில் வசிக்கின்ற முஸ்லிமல்லாதவர்களின் உயிருக்கும், உடமைகளுக்கும், சுதந்திரத்திற்கும், கண்ணியத்திற்கும் அது உத்தரவாத மளிக்கிறது. முழு சமய சுதந்திரம் அவர்கட்கு வழங்கப் பட்டுள்ளது. மற்றவர்களின் மீதான ஒடுக்குமுறையை எதிர்க்கின்ற இஸ்லாம், அத்தகைய ஒடுக்குமுறைக்கும், அநியாயத்திற்கும் எதிராகப் போராடு பவர்கட்கும் சில வரை முறைகளையும், நியாயங்களையும் வகுத்துள்ளது. ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடும்படியும், அநியாயத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கும்படியும் தன்னைப் பின்பற்று பவர்களை வலியுறுத்தும் இஸ்லாம், அப்படி செய்யும் போது வரம்பு மீறாமலிருக்குமாறும் எச்சரிக்கிறது. சமய சுதந்திரத்தையும் அது அங்கீகரிக்கிறது. ஒரே சீரான தன்மையுடைய ஒரு சமூகத்தைக் கட்டாயத்தின் மூலம் உருவாக்கிட இஸ்லாம் விரும்பவில்லை.

அநீதிக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிரான பல போராட் டங்களை இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் காணலாம்.

தாக்கியவனிடம் மறு கன்னத்தைக் காட்டும் படி இஸ்லாம் சொல்லவில்லை. அதே நேரத்தில், ஒடுக்கு முறையாளர்களை எப்படி எதிர்கொள்ள வேண்டுமென்பதற்கு இஸ்லாம் சில வழி காட்டுதல்களை வகுத்துத் தந்துள்ளது. நியாயமான போராட்டங்களுக்கும், ஒடுக்கு முறையாளர்களை எதிர்த்துச் செய்யப்படும் போராட்டங்களுக்கும் சில விதிமுறைகள் உள்ளன. காரணமில்லாமல் போர் செய்வதை இஸ்லாம் தடுத்துள்ள போதிலும், போரை முற்றிலும் தடை செய்யவில்லை. தாக்குதலுக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிரான பதிலடி நன்கு திட்டமிட்ட முறையில் அமைந்திட வேண்டும். பெண்கள், குழந்தைகள், முதியோர், நோயாளிகள், ஊனமுற்றோர் மற்றும் போரில் கலந்து கொள்ளாதவர்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதை இஸ்லாம் தடை செய்கிறது. போரின் போது, விளைந்துள்ள தானியங்களையும், நீர் நிலைகளையும், மரங்களையும், காடுகளையும் பாதுகாத்திட வேண்டும் எனவும் அது வலியுறுத்துகிறது. இஸ்லாத்தை தீவிரவாதத்துடன் சம்பந்தப்படுத்தும் வண்ணம் அனைத்து வகையான போராட்டங்களையும் "ஜிகாத்" என்று மேற்கத்திய ஊடகங்கள் பிரச்சாரம் செய்து வருகின்றன. ஒருவன் தன்னுடைய அபிலாஷைகளையும், உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்துவது "ஜிகாத்"தில் அடங்கும்.

இந்தப் பின்னணியில் தான் பயங்கரவாதத்தை இஸ்லாத்துடனும், முஸ்லிம்களுடனும் தொடர்புபடுத்திப் பிரச்சாரம் செய்து வரும் மேற்கத்திய நாடுகளின் குற்றச்சாட்டினை நாம் ஆராய வேண்டும். இஸ்லாத்தைப் பற்றித் தெரியாதவர்களிடம் பீதியைக் கிளப்புவதற்காகச் செய்யப்படும் ஒரு பிரச்சார வழிமுறையே "பயங்கரவாதம்" என்பதாகும்.

# பயங்கரவாதம் - ஊடகங்களின் இரட்டை நிலை

மேற்கத்திய நாடுகளில் மின்னணு ஊடகங்கள் மிக உன்னத நிலையை எட்டியுள்ளன. உலகமயமாக்கல் அதற்கு மிகப் பெரிய வாய்ப்புகளை ஏற்படுத்தித்தந்துள்ளது. செயற்கைக் கோள் மற்றும் கம்பி தொழில் நுட்பம் மூலம் அது உலகளாவிய அளவில் செய்திகளைக் கொண்டு செல்கிறது. உலக இணைய தளங்களையும், வானொலிகளையும் அச்சு ஊடகங்களையும் மேற்கத்திய நாடுகள் குறிப்பாக ஆங்கிலோ-அமெரிக்க நாடுகள் தங்களது ஆதிக்கத்தின் கீழ் வைத்துள்ளன.

பெரும்பாலான சர்வதேச தொலைக்காட்சிச் செய்திகள் மேற்கத்திய செய்தி நிறுவனங்கள் மூலமாகவே ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன. இவற்றுள் ராய்டர் டெலிவிஷன், வொர்ல்டு ஒய்டு டெலிவிஷன் நியூஸ், ஏபிடிவி ஆகிய தொலைக்காட்சிச் செய்தி நிறுவனங்களும், செயற்கைக்கோள் மற்றும் கம்பி தொழில் நுட்பம் மூலம் செய்திகளை அளித்திடும் சி.என்.என், ஸ்கை, பி.பி.சி ஆகிய நிறுவனங்களும் அடங்கும். பல்வேறு மொழிகளிலும் செய்தியை இந்த நிறுவனங்கள் ஒளிபரப்புகின்றன. இவை உலக ஒலி அலைகளைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளன.

உலகின் மிகப் பெரிய செய்தி நிறுவனங்களான அசோஸியேடட் பிரஸ், யுனைடெட் பிரஸ் இண்டர்நேசனல், ராய்டர்ஸ் ஏஜென்ஸி, பிரான்ஸ் பிரஸ் ஆகிய நான்கில் முதல் மூன்று நிறுவனங்கள் ஆங்கிலோ அமெரிக்க நிறுவனங்களாகும். இந்த நான்கு நிறுவனங்களும் சேர்த்து 80 சதவிகித உலகச் செய்திகளை வழங்கி வருகின்றன. பல்வேறு நாடுகளைச் சார்ந்தவர்களையும் இந்தச் செய்தி நிறுவனங்கள் பணியில் அமர்த்தியுள்ள போதிலும் தெரிந்தோ, தெரியாமலோ மேற்கத்திய அதிலும் குறிப்பாக ஆங்கில அமெரிக்க செய்தி நிறுவனங்கள் தரும் செய்திகளுக்கு இவை முன்னுரிமை தருகின்றன.

இந்தியாவிலுள்ள பெரும்பாலான முன்னணி ஆங்கில செய்தித் தாள்களும், செய்தி இதழ்களும் மேற்கத்திய செய்தித்தாள் மற்றும் செய்தி இதழ்களில் வரும் செய்திகளையே பெருமையுடன் பிரசுரித்து வருகின்றன. இப்படியாக மேற்கத்திய செய்தி நிறுவனங்கள் தங்களது நலன்களுக்குத் தக்கவாறு இந்திய நிறுவனங்கள் மீது தங்களது செல்வாக்கைச் செலுத்தி அதன் பின்னர் உலகளாவிய செய்தி நிரலைக் கட்டமைக்கின்றன. மாநில மொழிச் செய்தித்தாள்கள் கூட ஆங்கில செய்தித் தாள்களில் வரும் செய்திகளை மொழியாக்கம் செய்து பிரசுரித்து வருகின்றன. இந்தியாவில் மட்டும் இப்படி நடக்கவில்லை. அனைத்து முன்னேறிவரும் நாடுகளும் மேற்கத்திய நாடுகள் எதனைச் சொல்லவேண்டும் என்று நினைக்கின்றனவோ அப்படிப்பட்ட செய்திகளையே பிரசுரிக்கின்றன. பெரும்பாலான இந்திய பத்திரிகைகள் அதே மொழி நடையை செய்திகளை, மரபுகளை, அப்படியே காப்பியடித்துப் பிரசுரிக்கின்றன.

"இஸ்லாமிய பயங்கரவாதம்" என்ற சொற்றொடர் மேற்கத்திய ஊடகங்களின் ஒரு கண்டுபிடிப்பாகும். மேற்கத்திய நலன்களின் பிரதிபலிப்பாகவே இது இந்திய ஊடகங்களிலும் இடம் பெற்று வருகிறது. இஸ்லாம் பயங்கரவாதத்தை போதிக்கவில்லை அதனை ஊக்குவிக்க வில்லை என்று வெறுமனே கூறுவது இதற்குத் தக்க பதிலாக இருக்க முடியாது. சில பயங்கரவாதிகள் இஸ்லாத்தில் தஞ்சம் அடைகின்றனர். அதன் காரணமாக "ஜிகாத்"தை பயங்கர வாதத்துடன் ஒப்பிட்டு செய்திகளை வெளியிட அமெரிக்க சார்பு ஊடகங்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிடுகிறது. பாலஸ்தீனத்தை இஸ்ரேல் ஆக்ரமித்துள்ளது குறித்து ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றிய தீர்மானங்களை அந்த நாடு தொடர்ந்து மீறி வருவதும், எண்ணெய் வளத்தினை அடைவதற்காக அமெரிக்கா மத்திய கிழக்கில் நடத்துகின்ற போர்களும் சில குழுக்களை ஆயுதம் ஏந்திப் போராடத் தூண்டுகிறது. மத்திய கிழக்கு நாடுகளின் செய்திகளை பிரசுரிப்பதில் மேற்கத்திய ஊடகங்கள் இரட்டைப் போக்கைக் கடைப்பிடிக்கின்றன. இஸ்ரேலின் ஆக்ரமிப்பு நடவடிக் கைகளை மென்மையாகக் கருதும் அவை, அடக்கு முறைக்கு எதிரான முஸ்லிம்களின் தற்காப்புத் தாக்குதலை இஸ்லாமிய

பயங்கரவாதம் என சித்தரிக்கின்றன. செய்தி ஊடகங்களை நடத்துவோர், வெவ்வேறு நாடுகளைச் சார்ந்தோர் புரிகின்ற குற்றச் செயல்களை வெவ்வேறு அளவு கோல்களைக் கொண்டுதான் தீர்மானிக்கின்றனர் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இஸ்லாத்துடன் அல்லது முஸ்லிம்களுடன் தீவிர வாதத்தை இணைத்துப் பேசுவதில் இவர்கட்கு ஒரு விசேட அக்கறை உள்ளது என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. பயங்கரவாதம் பற்றியும், பயங்கரவாதிகள் பற்றியும் இரட்டை அளவு கோல்களைக் கடைப்பிடிப்பதன் பின்னணியில் ஒரு உள்நோக்கம் கட்டாயம் இருக்க வேண்டும். ஏனெனில், சீர்குலைவுச் செயல் களுக்கு இஸ்லாமும், முஸ்லிம்களுமே பொறுப்பாக்கப் படுகின்றனர். சில தனிப்பட்ட முஸ்லிம்கள் செய்கின்ற பயங்கரவாதச் செயல்களை இஸ்லாத்துடன் தொடர்புபடுத்தக் கூடாது. எப்படி இந்துக்கள் செய்கின்ற சில செயல்களுக்கு இந்து சமயத்தைப் பொறுப்பாக்க முடியாதோ அதைப் போல் தான் இதுவும். ஆனால் நடுநிலை தவறிய, நியாயமற்ற மேற்கத்திய நாடுகளின் தாக்கத்திற்கு உள்ளான சில ஊடகங்கள், ஊடக பலம் இல்லாதவர்களை பயங்கர வாதத்துடன் இணைத்து குற்றம் சாட்டுகின்றனர்.

மேற்கத்தியர்களின் இரட்டை நாக்கு இன்னும் ஒருபடி மேலே போகிறது. சல்மான் ருஷ்டியின் எழுத்துக்கள் முஸ்லிம்களின் உணர்வுகளைப் புண்படுத்துகின்றன. ஆனால் மேற்கத்திய ஊடகங்கள் " கருத்துச் சுதந்திரம்" என்ற போர்வையில் அவருக்கு ஆதரவு தெரிவிக்கின்றன. ருஷ்டிக்கு ஆதரவு கொடுக்கும் மேற்கத்தியர்கள், "பேரழிவு ஏற்படும்" என்ற சித்தாந்தத்தை ஏற்க மறுத்ததற்காக டேவிட் இர்வினை சிறையில் அடைத்தனர். "கருத்து சுதந்திரம்" என்ற பெயரில் என்ன போலித்தனம் இது? இஸ்ரேலையும் அது கடைப்பிடித்து வரும் கொள்கைகளையும் அமெரிக்காவில் யாரும் குறைகூற முடியாது. அத்தகைய முயற்சிகள் "செமிட்டிக் எதிர்ப்பு" என்ற சட்டத்தின் அடிப்படையிலேயே விசாரிக்கப் படுகின்றன. மேற்கத்திய நாடுகளும் சில வெளிப்படைத் தன்மையற்ற கொள்கைகளை பாதுகாக்க முயற்சிக்கின்றன என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

## வன்முறை - பயங்கரவாதம் - இன அழிப்பு - பட்டியலில் மேற்கு நாடுகளுக்கு முதலிடம்

பயங்கரவாதிகள் கிறிஸ்துவர்களாகவோ, யூதர்களாகவோ, பௌத்தர்களாகவோ, இந்துக்களாகவோ அல்லது முஸ்லிம்களாகவோ இருக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் அவர்கள் கொண்டுள்ள வெறுப்பின் பிறப்பிடம் அவர்கள் வளர்ந்த கலாச்சாரப் பின்னணியிலேயே உள்ளது அவர்கள் வாழுகின்றன சமூகத்தைக் கொண்டே உலகக் கண்ணோட்டம் உருவாகிறது. உலகில் தற்போது நிகழ்ந்து வரும் பயங்கரவாதச் செயல்களுக்கு இஸ்லாமும், முஸ்லிம்களுமே காரணம் என்று பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஆனால் இது போன்ற தீவிரவாதச் செயல்களில் பிற சமயத்தினர் ஈடுபடும் போது அவர்களின் சமயத்தை யாரும் அவதூறு செய்வதில்லை. அண்மைக்கால வரலாற்றில் நிகழ்ந்த பெரும் வன்முறை, இன அழிப்பு, பயங்கரவாதச் செயல்கள் சிலவற்றை இனி பார்ப்போம்.

கி.பி.ஏழாம் நூற்றாண்டில் கிறிஸ்துவ நாடுகளில் இஸ்லாம் பரவிய காலம் தொட்டே இஸ்லாத்தை வன்முறை மார்க்கமென்று பழி சுமத்தி வருகின்றனர். மத்திய கிழக்கில் தற்போது அதிகரித்து வரும் வன்முறைகள் காரணமாகவும் 9/11 சம்பவத்தின் காரணமாகவும், இஸ்லாம் சகிப்புத்தன்மையற்ற பயங்கரவாத மார்க்கமென்று குற்றம் சாட்டப்படுகிறது. இது உண்மையா? அல்லது சில முக்கிய நிகழ்வுகள் மறைக்கப் பட்டுள்ளனவா? பயங்கரவாதம் தொடர்பாக மேற்கத்திய நாடுகள் கடைப் பிடிக்கும் இரட்டை அளவுகோல்கள் இரட்டைப் பேச்சு பற்றி ஏராளமான மேற்கோள்களை நாம் சுட்டிக் காட்டிட முடியும். ஊடகங்களில் விவாதிக்கப் படாத சில முக்கிய உண்மைகள் கீழே பட்டியலிடப் பட்டுள்ளன.

கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களின் தலைவரான போப் ஆண்டவரின் மேலாண்மையை எதிர்த்து, மார்டின் லூதர் கிங் "புராட்ட ஸ்டண்ட்" என்ற புதிய ஒரு பிரிவைத் தோன்றுவித்தார். இதன் காரணமாக லூதர் கிங்கைப் பின்பற்றியவர்கள் கடுமையான முறையில் பழிவாங்கப் பட்டனர். கத்தோலிக் கர்களால் அவர்களது வீடுகள் கொளுத்தப்பட்டன. பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். ஆனால் கத்தோலிக்கர்கள் பயங்கரவாதத்தில் ஈடுபட்டதாக அப்போது யாரும் குற்றம் சாட்டவில்லை.

உண்மையான கிறிஸ்துவன் என்று தன்னை அறிவித்துக் கொண்ட ஜெர்மெனியின் சர்வாதிகாரி ஹிட்லர், கடவுளின் பெயரைச் சொல்லியே 6 மில்லியன் (60 லட்சம்) யூதர்களைக் கொன்று குவித்தான். இந்தக் கால கட்டத்தில் யூதர்களுக்கு எதிராக கிறிஸ்துவர்கள் வன்முறை உச்சக்கட்டத்தில் இருந்தது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். ஹிட்லரை கிறிஸ்துவ பயங்கரவாதி என்று யாராவது கூறினார்களா? இல்லவே இல்லை

ஸ்டாலின், முஸோலினி, மாசே துங் ஆகியோர் இலட்சக் கணக்கான மக்களைக் கொன்று குவித்தனர். ஆனால் அவர்கள் பயங்கரவாதிகள் என அழைக்கப்பட்டார்களா? ஏன் அப்படி இல்லை?

20 ஆம் நூற்றாண்டின் இறுதியில், போஸ்னிய முஸ்லிம்கள் மீது செர்பியர்கள் தாக்குதல்கள் நடத்தி இன அழிப்பில் ஈடுபட்டனர். ஆனால் அவர்கள் மீது கிறிஸ்துவ பழமைவாத பயங்கரவாதிகள் என்று யாரும் குற்றம் சாட்டவில்லை.

ஆங்கிலக் கைக்கூலி பீட்டர் பிளீச் என்பானும், டேனிஸ் தீவிரவாதி கிம்டேவி என்பானும் மேற்கு வங்காளத்தின் புரூலியா மாவட்டத்தில் சீர்குலைவு நடவடிக்கைகளைத் தூண்டும் விதத்தில் வான் வழி மூலம் ஆயுதங்களைப் போட்டனர். அவர்களைப் பிரிட்டீஸ் அல்லது மேற்கத்திய பயங்கரவாதிகள் என இந்திய ஊடகங்கள் சித்தரிக்கவில்லை. பீட்டர் பிளீச் ஏழாண்டுகால தண்டனையை சிறையில் அனுபவித்துக் கொண்டிருக்கும் போதே இந்திய அரசு அவனை விடுதலை செய்தது.

போபாலில் செயல்பட்டு வந்த அமெரிக்க நிறுவனமான

யூனியன் கார்படைலிருந்து 1984ஆம் ஆண்டு டிசம்பரில் விஷவாயுக் கசிவு ஏற்பட்டதன் காரணமாக 25000 பேர் உயிரிழந்தனர். யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைவர் ஆண்டர்சனை விசாரணைக்காக இந்தியாவிடம் ஒப்படைக்க அமெரிக்கா மறுத்து விட்டது.

லாக்கர் பீ குண்டு வெடிப்பாளர்களைத் தங்களது நாட்டிலே விசாரிக்க வேண்டும் என்ற மேற்கு உலகின் நிலைக்கு இது முற்றிலும் மாறுபட்டதாகும். ஏன் இப்படி இரட்டை அளவு கோல்கள்?

நிராயுதபாணிகளான பாலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் கற்பனைக் கெட்டாத முறையில் கொடுமைகள் இழைத்து வருகிறது. அவர்களது பகுதியிலுள்ள நிலங்களை மூன்று முறை அபகரித்துக் கொண்டது. பாலஸ்தீன மக்களைத் தனிமைப் படுத்துவதற்காக இஸ்ரேல் இனவெறிச் சுவர் ஒன்றை அந்தப் பகுதியில் எழுப்பியுள்ளது. அவர்களின் நீர் ஆதாரங்களை அபகரித்து கொண்டு விட்டது. எனினும் மத்திய கிழக்கிலுள்ள ஒரே ஜனநாயக நாடு என்று இஸ்ரேல் புகழப்படுகிறது. ஒரு காலத்தில் பயங்கரவாதி என்று ஆங்கிலேய அரசால் கருதப் பட்ட இஸ்ரேலின் பிரதமர் மெனாசெம் பெகினுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. "யூத பயங்கரவாதிகள்" என்ற வார்த்தை இதுவரை நமது காதுகளில் விழவில்லை. சமமாக நடத்துவதன் லட்சணம் இது தானா?

ஐரிஸ் புரட்சிப் படை கிளர்ச்சியாளர்கள் பிரிட்டிஸ் மக்கள் மீது குண்டு மாரி பொழிந்து எண்ணற்றவர்களைக் கொன்றுள்ளனர். ஆனால் அவர்கள் ஐரிஸ் தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்படவில்லை. ஏன் என்று இன்னும் யாருக்கும் தெரியவில்லை. (கத்தோலிக்கர்கள் நிறைந்து வாழும் வடக்கு அயர்லாந்து பிரிவினை கோரி வருகிறது என்பது அனைவரும் அறிந்ததுதான்.) முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் நாடுகளில் நடை பெற்ற ஒட்டு மொத்த மனிதக் கொலைகள் (170 கோடி முஸ்லிம்கள் தற்போது உலகில் உள்ளனர்) அமெரிக்காவில் நடைபெறும் மனிதக் கொலைகளை விடவும் குறைவான விகிதத்திலேயே உள்ளன. அமெரிக்காவில் ஒவ்வொரு இரவிலும் மிகச் சிறிய பிரச்னைகளுக்குக் கூட ஒருவரை ஒருவர் கொல்கின்றனர்.

ஜப்பான் நாட்டிலுள்ள ஹிரோஸிமா, நாகசாகி ஆகிய நகரங்களில் அமெரிக்கா அணு குண்டுகள் வீசியதன் காரணமாக இரண்டு லட்சம் மக்கள் உயிரிழந்ததற்கு அனைத்து அமெரிக்க மக்களையும் பொறுப்பாக்க முடியுமா? என்று நாம் கேட்க விரும்புகிறோம். போர்கள் எதிரிகளுக்கிடையில் தான் நடைபெற வேண்டும். அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்று அமெரிக்கர்கள் சொல்கிறார்கள். ஆனாலும் ஜப்பானைப் பணிய வைக்க வேண்டும் என்ற நோக்கில் தானே இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான அப்பாவி பொது மக்களைக் கொன்று குவித்தனர்?

சில குழுக்கள் செய்கின்ற காரியங்களுக்கு அந்தக் குழுவினர் சார்ந்துள்ள சமயங்களையோ அல்லது தேசிய இனங்களையோ பொறுப்பாக்கக் கூடாது என்பதே நியாய சிந்தனை யுடையோரின் கருத்தாகும். உதாரணமாக ஹிட்லர் செய்த கொடுமைகளுக்காக ஜெர்மென் கிறிஸ்துவர்களை பழிக்கக் கூடாது. அது போலவே ஹிரோஸிமா, நாகசாகி நகரங்களில் அணு குண்டுகள் வீசப்பட்டு அதன் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்ததற்கு சாதாரண அமெரிக்க கிறிஸ்துவர்களைப் பொறுப்பாக்க முடியாது.

சிலுவைப் போர்களில் நிகழ்ந்த காட்டு மிராண்டித்தனம் பற்றியும் அல்லது "ஸ்பானிஷ் விசாரணை" பற்றியும் கிறிஸ்துவர்கள் உண்மையிலே திடுக்கிடுகின்றனர்.

மாபெரும் குத்துச்சண்டை வீரரான முஹம்மது அலியிடம் கிறிஸ்துவ பத்திரிகையாளர் ஒருவர், "உசாமாபின் லேடன் பின்பற்றும் இஸ்லாத்தை நீங்கள் பின்பற்றுவது குறித்து என்ன உணர்கின்றீர்கள் என்று கேட்டபோது, அதற்கு அவர் ஹிட்லர் உங்களது சமயத்தைச் சார்ந்தவராக இருப்பது பற்றி நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்? என்று திருப்பிக் கேட்டார்.

பெரும்பாலான சமயங்களும், கலாச்சாரங்களும் "கண்ணாடி வீடுகளுக்குள் இருப்பவர்கள் கற்களை எறியக் கூடாது" என்ற கருத்தினையே கொண்டுள்ளன. நீங்கள் (மேற்கு உலகத்தினர்) உங்களது வீடுகளின் நிலையை உணராமல் முஸ்லிம்களின் மீது கல்லெறிந்து கொண்டிருக்கிறீர்கள்.

பயங்கரவாதம் பற்றி மேற்குலகம் தரும் புள்ளி விவரங்களைப் பார்த்தால் இந்தப் பிரச்னையில் முஸ்லிம்கள்

*அல்லது இஸ்லாமிய நாடுகள் எந்த இடத்தில் இருக்கின்றன. என்பதை அறிந்து கொள்ள முடியும். அமெரிக்க உள்துறை சமர்ப்பித்துள்ள வருடாந்திர அறிக்கை தரும் புள்ளி விவரப்படி 1992-1997 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பாவில் அதிக எண்ணிக்கையிலான பயங்கரவாதச் சம்பவங்கள் (831) நிகழ்ந்துள்ளன. அதற்கு அடுத்தாற்போல் லத்தீன் அமெரிக்காவிலும் (602 சம்பவங்கள்) மூன்றாவதாக மத்திய கிழக்கிலும் (422சம்பவங்கள்) நிகழ்ந்துள்ளன. அதே ஆண்டுகளில் இந்த சம்பவங்களில் ஐரோப்பிய நாடுகளில் 7621 பேர் பலியானதாகவும், மத்திய கிழக்கு நாடுகளில் 2692 பேர் பலியானதாகவும் இந்த அறிக்கை தெரிவிக்கிறது.*

*வாஷிங்டனிலுள்ள வால்ஸ் சர்வதேசப் பள்ளி வெளியிட்டுள்ள அறிக்கையில், பௌத்த ஆம் சின்ரிக் யோவால் விஷவாயு பிரயோகிக்கப்பட்டதும், ஒரு அமெரிக்கக் கிறிஸ்துவரால் ஒக்லா கோமாவில் குண்டு வீசப்பட்டதும், வட அயர்லாந்து கத்தோலிக்கர்கள் நீண்ட காலமாக நிகழ்த்தி வரும் பயங்கரவாதச் செயல்களும், இந்தியாவிலுள்ள இந்துக்களின் வன்முறைச் செயல்களும் (பாபரி மசூதி இடிப்பும் அதற்குப் பின்னர் நடந்த கலவரங்கள்) முஸ்லிம்களுக்கு எதிராக புத்தர்கள் நடத்திய வன்செயல்களும், போஸ்னியாவிலும், கொசாவோவிலும் பழமைவாத செர்பிய கிறிஸ்துவர்கள் முஸ்லிம்கள் மீது நடத்திய இன சுத்திகரிப்புச் சம்பவங்களும், வட அமெரிக்காவில் போதைப் பொருட்கள் தொழிலில் ஈடுபட்டுள்ள கத்தோலிக்கக் குழுக்களின் வன்முறைகளும், இந்துத் தமிழர்களால் ஸ்ரீ லங்கா புத்த மத அரசிற்கு எதிராக நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதச் செயல்களும் பட்டியலிடப் பட்டுள்ளன. இந்த அறிக்கை பயங்கரவாதம் உலகளாவிய அளவில் வியாபித்திருப்பதையும் அதன் பல்வேறு சமய கலாச்சாரப் பின்னணியையும் தெரிந்து கொள்ள உதவுகிறது.*

*எப்.பி.ஐ அளித்துள்ள புள்ளி விவரங்களின்படி அமெரிக்காவில் நிகழ்ந்த பயங்கரவாதச் சம்பவங்களின் பட்டியல் இதோ....*

*1. எப்.பி.ஐ கோப்புகளின் படி, பயங்கரவாதிகளில் 6 சதவிகிதம் பேரே முஸ்லிம்கள், அமெரிக்காவின் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடத்திய பிற குழுக்கள் பற்றிய*

விபரம் வருமாறு: லாட்டினோஸ் 42 சதவிகிதம்; தீவிர இடது சாரிக்குழுக்கள் 24 சதவிகிதம்; யூதத் தீவிரவாதிகள் 7 சதவிகிதம்; கம்யூனிஸ்ட்கள் 5 சதவிகிதம்; பிற பயங்கரவாதக்குழுக்கள் 16 சதவிகிதம்.

2. பயங்கரவாதிகளில் 6 சதவிகிதம் பேர் தான் முஸ்லிம்கள் என்றால், பின் ஏன் மேற்கத்திய ஊடகங்கள் முஸ்லிம் பயங்கரவாதிகள் நடத்தும் தாக்குதல்களை மட்டுமே வெளியிடுகின்றன? இது ஒரு நியாயமற்ற செயலாகும் இவற்றை வெளியிடும் விதம் மோசடியானது; தவறானது.

3. இனி, ஐரோப்பாவில் நிகழ்ந்த பயங்கரவாதச் செயல்களைப் பார்ப்போம் 29.7.2011 தேதிய டைம்ஸ் ஆப் இந்தியாவில் வெளி வந்த ஈரோபோல் அறிக்கையில் பெரும்பாலான பயங்கரவாதச் செயல்களின் பின்னணியில் பிரிவினைவாதிகளே உள்ளனர். முஸ்லிம்கள் அல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4. டெக்கான் ஹெரால்டு பெங்களூர் பதிப்பில் வெளிவந்த வெள்ளை பயங்கரவாதம் வெறுப்புக் கலாச்சாரம் என்ற தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

விஸ்கோன்சின் நகரிலுள்ள குருத்துவாராவில் ஆறு சீக்கியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் வெள்ளை நிற இன வெறி குழுக்களில் தொடர்புடைய அமெரிக்க முன்னாள் இராணு வீரர் ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளார். இச்செயல் அமெரிக்காவில் நிலவி வரும் இன வெறியையும், சகிப்புத் தன்மையற்ற நிலைமையையும் எடுத்துக் காட்டுகிறது.

அமெரிக்காவில் சீக்கிய சமூகத்தினர் மீது நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதச் செயல்கள் வெள்ளை பயங்கர வாதத்தையே சுட்டிக் காட்டுகிறது. முஸ்லிம்கள் அல்லது தாடி வைத்திருந்தவர்கள் என்ற காரணத்திற்காக ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர். உள்நாட்டு எதிரிகள் விஷயத்தில் இது போன்ற செயல்களை அமெரிக்க அரசு தனது கண்களை மூடிக் கொள்கிறது. இஸ்லாமிய தீவிரவாதிகள் விஷயத்தில் மட்டுமே கவனம் செலுத்தும் அமெரிக்கா, கிறிஸ்துவ வெள்ளை இன வெறி பயங்கர வாதக் குழுக்களைக் கண்டு கொள்வதில்லை. 2009ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா

விலுள்ள தீவிரவாதக் குழுக்களின் எண்ணிக்கை 149லிருந்து 824ஆக அதிகரித்து விட்டது.

வெறுப்புக் குற்றங்களின் பின்னணியில் வெள்ளை இன வெறிக் குழுக்கள் உள்ளன என்பதை அமெரிக்க ஊடகங்கள் மிகுந்த தயக்கத்துடன்தான் ஒப்புக் கொண்டுள்ளன. அரபு நிலப் பகுதிகளையும், ஜெரூசலத்தையும் ஆக்ரமித்து வைத்துக் கொண்டுள்ள இஸ்ரேலுக்கு அமெரிக்கா அளித்து வரும் வரைமுறையற்ற ஆதரவும், நிதிஉதவியுமே தீவிரவாதமும் பயங்கரவாதமும் தோன்றக் காரணமாகும் என்பதை அறிஞர்களும் பிறரும் உணரத் தலைப்பட்டு விட்டனர். இனி சில உண்மைகளைப் பார்ப்போம்.

அரபுப் பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் ஒரு போதும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் அமெரிக்கா, குவைத்திலிருந்து ஈராக் படைகளை வெளியேற்ற இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பெர்லின் சுவர் இடிக்கப்பட்டபோது அமெரிக்கா மகிழ்ச்சி தெரிவித்தது. ஆனால் பாலஸ்தீன மக்களை அவர்களின் விளைநிலங்களிலிருந்தும், பாசன கிணறுகளிலிருந்தும் யூதக் குடியேற்றங்களிலிருந்தும் பிரிக்கும் வகையில் 370 கி.மீ நீளமுள்ள சுவர் ஒன்றினைக் கட்டிட இஸ்ரேலுக்கு அமெரிக்கா பெருமளவு நிதி உதவி அளித்தது.

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை ஈராக் வைத்துள்ளது என்ற பொய்யான பிரச்சாரத்தை எம்.என்.சியுடன் தொடர்புடைய ஊடகங்கள் செய்து வந்தன. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கும் உலக நாடுகளின் கருத்துக்களுக்கு முரணாகவும் எண்ணெய் வளம் கொண்ட ஈராக்கை கைப்பற்றுவதற்காக அமெரிக்கா பன்னாட்டுப்படை ஒன்றை உருவாக்கியது. இஸ்ரேல் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வது பற்றி எந்தப் பிரச்னையும் எழுப்பப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் ஈராக்கின் அணு ஆயுத நிலைகள் மீது குண்டு பொழிய இஸ்ரேலுக்கு அனுமதி வழங்கியது. ஈரான் பயமுறுத்தப் படுகிறது. அது அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கிறது என்று பிரச்சாரம் செய்யப் படுகிறது. ஆனால் இரண்டாம் உலகப் போரின்போது

ஜப்பானில் உள்ள மக்கள் வசிக்கும் பகுதிகளில் அணு குண்டுகளைப் போட்டு பேரழிவை ஏற்படுத்திய ஒரே நாடு அமெரிக்காதான்.

இஸ்லாம் உலகப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று அமெரிக்கச் சிந்தனையாளர்கள் கூறுகிறார்கள். பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் ஜனநாயகம் இல்லை, மனித உரிமைகள் பேணப்படவில்லை. அங்கு ஒடுக்குமுறை அரசுகள் உள்ளன என்று இதற்கு காரணம் கூறப்படுகிறது. இஸ்லாத்திற்கு எதிராக மேற்குலகம் என்ற தலைப்பில் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. ஆனால் சீனாவுடன் வர்த்தகம் செய்திட அமெரிக்கர்களுக்கு எந்த விதமான தயக்கமும் இல்லை. மேற்குலகிற்கும் சீனாவுக்குமிடையில் எந்த விதப் பேச்சுவார்த்தையிலும் ஈடுபடத் தேவையில்லை என்றே அமெரிக்கர்கள் கருதுகின்றனர்.

தங்களது உரிமைகள் நசுக்கப்படுகின்ற போது மக்கள் இயல்பாகவே அதற்கு எதிர்வினையாற்றி தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். "தேசிய" உணர்வுகள் அடிப்படையிலேயே பல விடுதலைப் போராட்டங்கள் துவக்கப்பட்டன. இதுவும் கூட ஒரு மேற்கத்தியக் கண்டுபிடிப்புத்தான்.

முடிவாக நியாயத்துடன் கூடிய அமைதியைத் தருகின்ற ஒரு புதிய உலகம் பற்றியே நாம் சிந்திக்க வேண்டும். மயான அமைதியை அல்ல.

ஸ்ரீலங்காவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்ப் பிரிவினைவாதிகள் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆயுதம் தாங்கிப் போராடி வந்தனர். அந்தத் தீவிரவாதிகளுக்குத் தமிழ் நாட்டில் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் குண்டு வீசினார்கள். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை ஒரு தற்கொலைப்படை தீவிரவாதி கொன்றான். ஆனால் அவர்கள் ஒரு போதும் தமிழ் தீவிரவாதிகள் என்று அழைக்கப்படவில்லை. ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்களில் பெரும்பாலானோர் இந்துக்களே.

உல்பா அமைப்பு 1990க்கும் 2000க்குமான இடைப்பட்ட காலத்தில் வடகிழக்கு மாநிலங்களில் 749 பயங்கரவாதச்

செயல்களில் ஈடுபட்டது. ஆனால் இந்த அமைப்பு ஒரு போதும் பயங்கரவாத அமைப்பாக சித்தரிக்கப்பட்டதில்லை.

இது சம்பந்தமாக எழும் மிகப் பெரிய கேள்வி இது தான். பயங்கரவாத்தை கட்டுப்படுத்துகிறேன் என்று கூறிக் கொண்டு இஸ்லாத்தை அவதூறு செய்ய மேற்குலகம் முயற்சிக்கிறதா? இஸ்லாமிய நாடுகளின் மீது ஆக்ரமிப்புச் செய்வதற்கும், அந்த நாடுகளைச் சேதப்படுத்தி தங்களது சொற்படி நடக்கின்ற அரசுகளை அங்கு உருவாக்குவதற்கும், அந்த நாடுகளின் வளங்களைக் கொள்ளையடிப்பதற்கும், தங்கள் நாட்டு நுகர் பொருட்களை அங்கு ஏற்றுமதி செய்வதற்கும், புனர் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை தங்களது நிறுவனமான எம்.என்.சிக்கு கிடைக்கச் செய்வதற்கும் இதனை ஒரு தந்திரமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறார்களா?

# தற்கொலை குண்டு வெடிப்புகள் இஸ்லாத்தில் தடை

தற்கொலை குண்டு வெடிப்பு என்பது ஒருவன் தானே விரும்பி தன்னுடைய உடலில் வெடிக்கக்கூடிய வெடி பொருளை கட்டிக் கொண்டு ஒரு குறிப்பிட்ட பகுதிக்குச் சென்று அதனை வெடிக்கச் செய்து அதன் காரணமாக உயிரை இழப்பது இந்த முறையில் குண்டு வெடிப்புகள் தற்போது ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈராக், செசன்யா, சோமாலியா ஆகிய நாடுகளில் நிகழ்த்தப்படுகின்றன.

இது இராணுவ இலக்குளை குறிவைத்து மட்டுமே நடத்தப்படுவதில்லை மாறாக சாதாரண மக்களைக் குறிவைத்தும் நடத்தப்படுகின்றன.

அந்நிய ஆக்ரமிப்புக்கு எதிராக முஸ்லிம் தீவிரவாதிகள் நடத்துகின்ற மிக வலிமை வாய்ந்த ஒரு தாக்குதல் முறை இது என்று நம்மில் பலபேர் நம்பிக் கொண்டிருக்கிறோம். இலங்கையில் உள்ள தமிழ்ப் புலிகள் தான் (இவர்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள். எனினும் சமயத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை) 1980ஆம் ஆண்டு முதன் முதலில் இந்த "தற்கொலைக் குண்டு வெடிப்பை அறிமுகப்படுத்தி செயல் படுத்தியவர்கள். அந்தக் கால கட்டத்தில் மிக அதிக அளவிலான தற்கொலைக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இந்தப் பகுதியில் தான் நிகழ்ந்தன. அதற்குப் பிறகு தற்கொலை குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் மத்திய கிழக்குப் பகுதியில் நிகழ ஆரம்பித்தன. குறிப்பாக ஆப்கானிஸ்தானையும், ஈராக்கையும் அமெரிக்கா ஆக்ரமித்த போது இந்தச் சம்பவங்கள் மிக அதிக அளவில் நடைபெற்றன.

சிக்காகோவிலுள்ள "தற்கொலை பயங்கரவாதம்" பற்றிய ஆராய்ச்சிப் பிரிவின் தலைவரும், "வெற்றிக்காக உயிரிழத்தல்" என்ற புத்தகத்தை எழுதியவரும், அமெரிக்காவில் பெரிதும் மதிக்கப்படும் அரசியல் விஞ்ஞானியுமான ராபர்ட் பெபே என்பார் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

"உலகில் தற்கொலை பயங்கரவாதம் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆனால் "ஏன்" என்பதில் பெரிய குழப்பம் நிலவுகிறது. 2001 செப்டம்பர் 11ல் நடந்த தாக்குதல் உள்ளிட்ட பல தாக்குதல்கள் சமய நோக்கம் கொண்ட முஸ்லிம் பயங்கரவாதிகளாலேயே நிகழ்த்தப்படுகின்றன என்பதும், இஸ்லாமியஅடிப்படைவாதம் தான் இதன் மையக் காரணமாக உள்ளது என்றும் தெரியவருகிறது. முஸ்லிம் சமுதாயத்தைச் சீர்திருத்துவதன் மூலமே, 9/11 போன்ற சம்பவங்களைத் தவிர்க்க முடியும் என்ற நம்பிக்கையை இது வலுப்படுத்துகிறது. ஈராக் வெற்றி கொள்ளப்பட்டபிறகு அந்த நடவடிக்கைக்கு ஆதரவாக அமெரிக்காவில் பொதுக் கருத்து உருவானதற்கும் இதுவே முக்கியக்காரணமாகும். இருந்த போதிலும் தற்கொலை பயங்கரவாதத்திற்கும், இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்குமிடையே தொடர்பு இருப்பதாக அனுமானிப்பது தவறானதாகும். இது அமெரிக்காவின் உள் நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட வழிவகை செய்வதோடு, தேவையற்ற முறையில் முஸ்லிம்களுக்கு இன்னல்கள் விளைவிக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

பேராசிரியர் பெபே, 1980க்கும் 2003க்கும் இடைப்பட்ட கால கட்டத்தில் உலகில் நிகழ்ந்த ஒவ்வொரு தற்கொலை குண்டு வெடிப்புச் சம்பவத்தையும் பட்டியலிட்டுள்ளார். மொத்தம் 315 சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் ஒரு பயங்கரவாதி, பிறரைக் கொல்கின்ற முயற்சியில் ஈடுபட்டு தானே இறந்து போன சம்பவங்களும் அடங்கும். ஆனால்அரசுகளின் அங்கீகாரத்துடன் நடைபெற்ற தாக்குதல்கள் இதில் வரவில்லை. (உதாரணமாக வட கொரியா தென் கொரியா மீது நடத்திய தாக்குதல்) உலகமெங்கும் நிகழ்த்தப்பட்ட தற்கொலை பயங்கரவாத தாக்குதல்கள் பற்றித் தொகுக்கப்பட்ட ஒரு முழுமையான பட்டியல் இது என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கில அச்சு

மற்றும் மின் அணு ஊடகங்களிலிருந்து மட்டுமல்லாது, அரபி, ஹீப்ரு, ரஷ்யன் தமிழ் ஆகிய ஊடகங்களிலிருந்தும் தகவல்கள் பெறப்பட்டு இந்த அறிக்கையில் தொகுக்கப்பட்டுள்ளன. இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கும், தற்கொலை பயங்கரவாதத்திற்கும் பெரிய அளவிலான தொடர்பு எதுவுமில்லை என்பதையே இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. பிற சமயங்களுக்கும் இது பொருந்தும். உண்மையில் தற்கொலைத் தாக்குதல்களைத் தூண்டியதில் முன்னணிப் பங்கு வகித்தவர்கள் ஸ்ரீலங்காவிலிருந்த தமிழ்ப்புலிகளும், இந்தியா விலுள்ள மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் குழுவினருமேயாவர். இந்த மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட்டுகள் இந்துக் குடும்பங் களிலிருந்து வந்தவர்களே. ஆனால் இவர்கள் சமயத்தை ஒரேயடியாக எதிர்ப்பவர்கள் அல்லது சமய நம்பிக்கை அற்றவர்கள்.

அமெரிக்க அரசின் புள்ளி விவரங்களின் படி 2007ஆம் ஆண்டில் மட்டும் மிக அதிக அளவிலான அதாவது 1058 தற்கொலைத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இதில் 542 சம்பவங்கள் அமெரிக்காவின் ஆக்ரமிப்புக்குள்ளான. ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் நிகழ்ந்தன. கடந்த 25 ஆண்டுகளில் நிகழ்ந்த தாக்குதல்களைப் போல் இது இரண்டு மடங்கு அதிகமாகும். இன்னும் சொல்லப்போனால், இதுவரை நிகழ்ந்த தற்கொலைத் தாக்குதல் சம்பவங்களில் ஐந்தில் நான்கு பங்கு சம்பவங்கள் கடந்த ஏழு ஆண்டுகளில் நடைபெற்றுள்ளன. இந்தச் சம்பவங்கள் தற்போது உலகெங்கும் நடைபெற்று வருகின்றன.

வாஷிங்டன் போஸ்ட் எழுதியிருப்பதாவது:- 1983ஆம் ஆண்டிலிருந்து அர்ஜென்டைனா, அல்ஜீரியா, குரோசியா, சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் 50க்கும் மேற்பட்ட குழுக்கள் இது போன்ற தாக்குதல்களில் ஈடுபடுகின்றன. இக்குழுக்களைச் சார்ந்தவர்கள் வாகனங்கள், கார்கள் ஆகியவற்றில் குண்டுகள் வைத்தும், இடுப்புக் கச்சைகள், உள் உடுப்புகள், பொம்மைகள், மோட்டார் சைக்கிள்கள், படகுகள், முதுகில் சுமந்து செல்லும் பைகள், வயிறுகள் (கற்பம் தரித்தது போல் காட்டிக் கொண்டு) ஆகியவற்றில் வெடிக்கக் கூடிய குண்டுகளை வைத்தும் இச் சம்பவங்களை நிகழ்த்துகின்றனர். கடந்த 25 ஆண்டுகள் கால

*கட்டத்தில் நடைபெற்ற 1840 சம்பவங்ககளில் 86 சதவிகி தத்திற்கும் அதிகமான சம்பவங்கள் 2001 ஆம் ஆண்டிற்குப் பிறகு நிகழ்ந்துள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் மிக அதிகமான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.*

*பெரும்பாலான இளைஞர்கள் கீழ்க்கண்ட காரணங்களால் தீவிர மனப்பான்மை கொண்டவர்களாக மாறி விடுகிறார்கள்.*

*1. தங்களது நாடு அல்லது பகுதி அந்நிய நாட்டின் ஆக்ரமிப்புக்கு உள்ளாகி இருப்பது.*

*2. மேற்கத்திய இராணுவப் படைகளால் ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பது*

*3. அவமரியாதையும், தோல்வி உணர்வும் கொண்டிருப்பது*

*4. பழிக்குப் பழி வாங்க எண்ணுவது*

*5. தங்களது குடும்ப உறுப்பினர்கள் கொல்லப்பட்டதற்குப் பழி தீர்ப்பது.*

*இது போன்ற செயல்களுக்கும், இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கும் எந்த விதமான சம்பந்தமுமில்லை. இவை தெளிவான யதார்த்தமான பிரச்னைகளாகும். இது பற்றிய பேராசிரியர் பெபேயின் கருத்துக்கள் தெளிவானவை. அவர் குறிப்பிடுவதாவது:- "இன்னும் சொல்லப் போனால் அனைத்துத் தற்கொலை பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னணியிலும் ஒரு குறிப்பிட்ட சமயச் சார்பற்ற, போர்த்தந்திர இலக்கு இருக்கின்றது, தங்களது தாய் நாடு என்று அந்த பயங்கரவாதிகள் கருதக் கூடிய நாடுகளிலிருந்து இராணுவப்படைகளை விலக்கிக் கொள்ளும்படி நவீன ஜனநாயக நாடுகளை நிர்ப்பந்திப்பது இதன் முக்கிய நோக்கமாக இருக்கின்றது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக சமயம் இருப்பதில்லை. ஆனாலும் பயங்கரவாத அமைப்புகள் தங்களது அமைப்புகளுக்கு ஆள் சேர்க்கின்ற போதும் விரிவான போர்த்தந்திரங்களை வகுத்துக் கொள்ளும் போதும் சமயத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.*

*இஸ்லாம் தற்கொலைக் குண்டு வெடிப்பையோ, அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவதையோ அங்கீகரிக்க*

வில்லை என்ற சமய போதனையைக் கேட்டு ஒரு தீவிர எண்ணம் கொண்ட முஸ்லிம் வன்முறைப்பாதையிலிருந்து விலகிச் செல்வதில்லை. தன்னுடைய குடும்பம் அல்லது சமயத்தின் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களுக்காக அவன் பழிக்குப் பழி வாங்கவும், தண்டனை கொடுக்கவும் தயாராகி விடுகிறான்.

முஸ்லிம்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளக் கூடியவர்கள் இது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்களே என்று சிலர் எண்ணக் கூடும். முஸ்லிம்களுக்கு வேறு எதிரிகள் யாரும் தேவையில்லை. இவர்களே போதும் ஒட்டு மொத்த சமூகத்தையும் தவறான முறையில் சித்தரித்திட அவர்கள் தங்களால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறார்கள். இது போன்ற சக்திகளைத் தவிர வேறு யாராலும் இஸ்லாத்தை இந்த அளவுக்கு இழிவு படுத்த முடியாது.

சிலர் இது போன்ற பைத்தியக்காரத்தனமாக வழிமுறைகளை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்? இதற்கு சமய போதனை காரணமா அல்லது இந்தப் பயங்கரவாதிகளின் பெற்றோர்களின் போதனை காரணமா? அல்லது இந்த பயங்கரவாதிகளை உருவாக்குவதற்கு வேறு ஏதாவது ஒரு அமைப்பு உள்ளதா? வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுத்து அப்பாவி மக்களைக் கொல்வதற்குப் பல வழிகள் உள்ளன. பம்பாயில் நடைபெற்ற வகுப்புக்கலவரத்தின் போது திட்டமிட்ட முறையில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இதனைக் கண்ணுற்ற நியாய புத்தியுள்ள பல முஸ்லிம் இளைஞர்கள் பழிக்குப் பழி வாங்கத் தாக்குதல்களில் ஈடுபடப்போவதாகக் கூறி தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர். குஜராத்தில் நடைபெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தின் போது, அரசியல் சமூக விஞ்ஞானிகள் பலரும் இது முஸ்லிம்கள் மத்தியில் பயங்கரவாதிகள் உருவெடுக்க வழிவகுத்திடும் என ஆரூடம் கூறினர். இஸ்லாம் போன்ற ஒரு பெரிய சமூகத்தில் பழிக்குப் பழி வாங்குவதற்காக தீவிரவாத எண்ணம் கொண்ட சிலர் பைத்தியக்காரத்தனமான வழி முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். அவர்கள் பின்னர் ஒரு கட்டத்தில் வன்முறைப் பாதைக்குச் சென்று விடுகின்றனர்.

நல்லவேளையாக இந்தப் பயம் பொய்யாகிப் போனது.

அதுபோல் குஜராத்திலோ அல்லது இந்தியாவின் வேறு எந்த பகுதியிலோ நடைபெறவில்லை. முஸ்லிம் அமைப்புகள் நடத்திய தொடர் கருத்தரங்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நியாயம் வேண்டி சட்டப்பூர்வமான முயற்சிகளையே மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. அப்பாவி மக்களையோ அல்லது சந்தேகமற்றவர்களையோ குறி வைத்து நடத்தப்படும் தாக்குதல்களையோ அல்லது பழிக்குப்பழி வாங்குவதையோ உலமாக்கள் ஆதரிக்க வில்லை. சில முன்னணி முஸ்லிம் மார்க்க அறிஞர்கள் தற்கொலைத் தாக்குதல் ஹராம் (தடுக்கப்பட்டது) என அறிவித்தனர். இது போன்ற உத்தரவுகள் (பத்வாக்கள்) சவூதி அரேபியா மற்றும் கெய்ரோவிலுள்ள முன்னணி மத்ரஸாக்களிலிருந்து வெளியிடப்பட்டன. இஸ்லாமியக் கோட்பாட்டின் படி இது ஒரு பாவமான செயல் என உலமாக்கள் ஒருமித்த கருத்துத் தெரிவித்துள்ளனர்.

போர் பற்றிய இஸ்லாத்தின் விதிமுறைகளைப் பற்றி சரியாகத் தெரிந்து கொள்ளாத, தவறாக வழி நடத்தப்பட்ட சில முஸ்லிம் இளைஞர்கள் "ஹராம்" என்று சொல்லப் பட்டிருப்பது திடீரென்று ஹலாலாக (அனுமதிக்கப்பட்டதாக) மாறிவிடாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இது இஸ்லாத்தின் வழி முறை அல்ல. தற்கொலை புரிவது நபிகள் நாயகம்(ஸல்) அவர்களால் மட்டுமல்ல, எல்லாம் வல்ல இறைவனாலும் தடுக்கப்பட்டுள்ளது. அறிவு ஞானம் பெற்றவர்களிடமிருந்து தான் அறிவினைத் தேடிப் பெற வேண்டும். இஸ்லாத்தைப் பற்றி எதுவும் தெரியாத அல்லது அரைகுறையாகத் தெரிந்து கொண்டுள்ள சில முஸ்லிம் தலைவர்களிடமிருந்து தெளிவினைப் பெற முடியாது. இதுபோன்ற தாக்குதல்கள் அரசியல் காரணங்களுக்காகவே நடத்தப்படுகின்றன. சமய ரீதியான காரணங்கள் எதுவு மில்லை. பாவம் என்று சொல்லி தடுக்கப்பட்ட செயல்களைச் செய்து அதன் மூலம் "தியாகி" என்ற தகுதியினைப் பெறமுடியும் என்று சிலர் நினைப்பது முட்டாள் தனமானதாகும். எல்லாம் வல்ல இறைவன் குர்ஆனில் பின் வருமாறு கூறுகிறான்.

> உங்களை நீங்களே மாய்த்துக் கொள்ள வேண்டாம்; திண்ணமாக அல்லாஹ் உங்கள் மீது

*அளப்பரிய கருணை புரிந்துள்ளவனாக இருக்கிறான் (குர்ஆன் 4:29)*

*உங்களுடைய கைகளால் உங்களுக்கு அழிவைத் தேடிக் கொள்ளாதீர்கள் (குர்ஆன் 2:95)*

ஒரு ஹதீஸில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாவது...

*திண்ணமாக யார் வேண்டுமென்றே தனது உயிரை மாய்த்துக் கொண்டாரோ அவர் நரக நெருப்பில் வைத்து தண்டிக்கப்படுவார். அவர் அங்கேயே எப்போதும் நிரந்தரமாக இருப்பார் (புகாரி 5-77-87)*

மேற்கண்ட குர்ஆன் வசனங்களிலிருந்தும், ஹதீஸ் களிலிருந்தும் ஒருவன் தன்னுடைய உயிரை தானே எடுத்துக் கொள்வது தடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும். இப்படிச் செய்பவனை சொர்க்கத்தில் நுழைவதின்றும் அல்லாஹ் தடுத்திடுவான் எனவும் ஹதீஸ்களை தெரிவிக்கின்றன.

# இஸ்லாமிய அடிப்படை வாதம்

இஸ்லாத்திற்காகப் பரிந்து பேசும் யாரொருவரையும் அடிப்படைவாதி என்று முத்திரை குத்தும் போக்கு அர்த்தமற்றது மட்டுமல்ல மிகவும் தவறானதுமாகும். முஸ்லிம்கள் ஒரே விதமாக வார்க்கப்பட்ட சமுதாயத்தினர் அல்லர். அனைத்து வகையான அரசியல் கருத்துக்கள் நிலைப்பாடுகள் கொண்டவர்களும் இஸ்லாத்தைப் புரிந்து கொள்வதில் வேறுபாடுகள் கொண்டவர்களும் இந்த சமுதாயத்தில் உள்ளனர்.

இருந்த போதிலும், கடந்த சில ஆண்டுகளாக சில பாரம் பரியமிக்க முஸ்லிம் குழுக்களிடம் சமய வெறியுணர்வும், சகிப்புத் தன்மையற்ற நிலையும் உருவாகியிருப்பது வெளிப்படையாகத் தெரியும் ஒரு அம்சமாகும்.

அடிப்படைவாதம் பல்வேறு காரணங்களால் உருவாகிறது.

1. சில நவீன முஸ்லிம் தலைவர்கள் தங்களது அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காக அடக்குமுறை நடவடிக்கைகளைமேற்கொண்டு, பழமைவாத முஸ்லிம் தலைவர்களைத் தொல்லைக்குளாக்குகின்றனர். சமயத் தலைவர் களையும், சிந்தனைவாதிகளையும் சிறையி லடைத்தும், மரண தண்டனைகள் அளித்தும் கொடுமைப் படுத்துகின்றனர். இது போன்ற அத்துமீறல்கள் ஒரு காரணமாகும்.

2. சில நவீன இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் கடைப்பிடித்து வரும் பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக ஒரு சிலரின்

கரங்களில் மட்டும் செல்வம் குவிகிறது இது இன்னொரு காரணமாகும்.

3. 1950ஆம் ஆண்டிலிருந்து பாரம்பரியச் சிந்தனைகளையும், வாழ்க்கை முறைகளையும் அவற்றுடன் தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் தொடர்ந்து அவதூறு செய்வது கேலி புரிவதும் மூன்றாவது காரணமாகும்.

4. முஸ்லிம் நாடுகளில் காணப்படுகின்ற அரசிற்கு எதிரான எதிர்ப்புணர்வை மேற்கத்திய நாடுகள் வேண்டுமென்றே பலவீனப்படுத்தி. இஸ்லாமியத் தலைவர்களை இழிவு படுத்துகின்றன. ஒடுக்குமுறை அரசுகளைத் தாங்கிப் பிடிக்கின்றன. முஸ்லிம் நாடுகளை பொருளாதார ரீதியில் ஒட்டாண்டியாக்கி கடனாளி சமூகமாக அவற்றை மாற்றியுள்ளன. இது போன்ற மேற்கத்திய நாடுகளின் கொள்கை பிறிதொரு காரணமாகும்.

## இன்று...

இஸ்லாத்திற்கும் பயங்கரவாதத்திற்கும் தொடர்பு உள்ளது என்ற எண்ணம் தற்போது உருவாகியுள்ளது. 2001 செப்டம்பர் 11க்கு பிறகு இந்த எண்ணம் இயற்கையாகவே வலுப் பெற்றுள்ளது. எனினும் உண்மையை எதுவும் மறைத்துவிட முடியாது. உலக வர்த்தக மையத்தையும், வாஷிங்டனிலுள்ள பென்டகன் இராணுவ தலைமை நிலையத்தையும் தகர்த்த பயங்கரவாதிகளின் செயலுக்கு இஸ்லாத்தைக் குறை கூற முடியாது. எப்படி விஷ வாய்வு அறைகளுக்காக (ஜெர்மனியின் ஹிட்லர் யூதர்களைக் கொல்லப் பயன்படுத்திய முறை) கிறிஸ்துவ சமயத்தைக் குறை கூற முடியாதோ, எப்படி ஐரிஸ் பயங்கரவாதிகளுக்காக கத்தோலிக்க சமயத்தை குறை கூற முடியாதோ அது போல் தான் இதுவும். பயங்கரவாதிகள் தங்களுக்கு உகந்த வழிமுறைகளைக் கடைப்பிடித்து காரண காரியங்களுக்கு அப்பாற்பட்டும், சராசரி நிலைமைக்கு மாறாகவும் செயல் படுகிறார்கள்.

இஸ்லாத்தின் மனச்சாட்சியும், மிகப் பெரும் பான்மையான முஸ்லிம்களின் மனச்சாட்சியும் நியாயத்

திற்காகவும், உண்மைக்காகவும் பொது மனித மதீப்பீடுகளுக்கு ஆதரவாகவும் இருக்கிறது. அனைத்து முஸ்லிம்களையும் ஒரு தூரிகை கொண்டு வண்ணம் பூசுவதன் மூலம் நாம் இந்த பூமிப்பந்தில் ஐந்து பேரில் ஒருவராக உள்ள 170 கோடி முஸ்லிம்களின் புகழுக்குக் களங்கம் கற்பித்து அவர்களின் மனிதத்தன்மையை குறைத்து மதிப்பிடுகிறோம். அவர்களது சமூகங்களும், வரலாறுகளும், மேற்கத்திய நாடுகளின் இருண்ட பகுதியாக சித்திரிக்கப்படுகிறது.

முஸ்லிம்கள் உண்மையான வரலாற்றுக்குச் சொந்தக் காரர்கள். 800 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்களின் நாகரீகம் உலகில் விஞ்ஞானத்திற்கும், கல்விக்கும், புதிய சிந்தனைக்கும் புதிய கண்டுபிடிப்புக்களுக்கும் இலக்கியத்திற்கும், பயணத்திற்கும், அரசியலுக்கும், பன்னாட்டு உறவுகளுக்கும் அளப்பரிய பங்களிப்பைச் செய்துள்ளது.

இன்றைக்கு முஸ்லிம்கள் தங்களது வரலாற்று அடையாளங்களை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். புதிய காலனி ஆதிக்கதிலிருந்தும், ஒடுக்கு முறையும் அநீதியும் நிறைந்த உலகப் போக்குகளிலிருந்தும் விடுபட்டு நிலைத்த பொறுப்பான ஒரு எதிர்காலத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## நாளை:

வேறுபட்ட திசைகளுக்கு இழுத்துச் செல்லும் குழப்பங்களுக்கும், முரண்பாடுகளுக்கும் மத்தியில், முஸ்லிம் உலகம் வருங்காலத்தில் செயல்திறனும், முற்போக்கு எண்ணமும் கொண்ட ஒரு நாகரீக சமூகமாக உருவெடுத்திட தன்னைப் புனரமைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. "சிறுபான்மை தீவிரவாதிகள்" என்று கூக்குரல்களையும், கோஷங்களையும் புறந்தள்ளி விட்டு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் உலகிற்கு விடுத்த செய்தியின் தற்போதைய மற்றும் எதிர்கால முக்கியத்துவம் பற்றிய விவாதங்களிலும், கருத்துப்பரிமாற்றங்களிலும் அது ஈடுபட்டுள்ளது. இது போன்ற புதிய கருத்துக்களும், கொள்கைகளும், சிந்தனைகளும் இஸ்லாத்தையும் முஸ்லிம் சமூகங்களையும் உள்ளுக்குள்ளேயே சீர்திருத்துவதோடு ஒரு பன்முகத் தன்மை கொண்ட உலகம் பரிணாம வளர்ச்சிக்குத்

தேவையான தனது நியாயமான பங்களிப்பைச் செய்திடும் என்பது திண்ணம்.

முஸ்லிம் உலகம் தற்போது எதிர் நோக்கியுள்ள கேள்விகளுக்கு எளிய பதில்கள் எதுவுமில்லை. அல்லது அதன் பிரச்னைகள் இணக்கமான முறையில் தீர்வு காணக் கூடிய தாகவும் இல்லை. சில நேரங்களில் நிலைமை அவ நம்பிக்கை ஏற்படுத்தும் முறையிலும், அச்சுறுத்தும் வகையிலும் உள்ளது. ஆனாலும் இறைவன் பால் தாங்கள் கொண்டுள்ள விசுவாசம் காரணமாக முஸ்லிம்கள் தங்களது எதிர் காலம் நன்றாக இருக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளனர். அறிவார்ந்த நிலையிலும், சமூக அரசியல் தளங்களிலும் புதிய சிந்தனை களோடு தொடர் முயற்சிகள் மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்திற்கான மாற்று வழிமுறைகளையும் வாய்ப்புகளையும் பெற முடியும் என்பதை அவர்கள் உணர்ந்தே உள்ளனர். விழிப்புணர்வு அவர்களின் கூற்றுப்படி பாதிப் போருக்கச் சமமானதாகும்.

# பெண்கள்

## மறைந்து கிடக்கும் கடந்த காலமும், தெளிவற்ற எதிர்காலமும்

மேற்குலகிலும், கிழக்கு நாடுகளிலும் மக்கள் கொண்டிருந்த தவறான கருத்துகளை தீர்மானம் செய்வதற்காக பல்வேறு சமூகத்தினர் கடந்த காலங்களில் பெண்களை எப்படி நடத்தினர் என்று ஆய்வு செய்வது பயனுள்ளதாக இருக்கும்.

### 1. பாபிலோனிய நாகரீகம்

பாபிலோனியச் சட்டங்களின் படி பெண்கள் மிகவும் கீழாக நடத்தப்பட்டனர். அவர்களுக்கு எந்தவிதமான உரிமைகளும் வழங்கப்படவில்லை. ஒரு ஆண் ஒரு பெண்ணைக் கொலை செய்தால், அவனுக்குத் தண்டனை அளிப்பதற்குப்பதிலாக அவனது மனைவிக்கு மரணதண்டனை விதித்தனர்.

### 2. கிரேக்க நாகரீகம்

பழங்கால நாகரீகங்களிலேயே கிரேக்க நாகரீகம் மிகச் சிறந்த நாகரீகமாகக் கருதப்படுகிறது. ஆனால் இந்தச் சிறப்பு வாய்ந்த நாகரீகத்தில் பெண்களுக்குஅனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டு அவர்கள் கீழான முறையில் நடத்தப்பட்டனர் கிரேக்கப் புராணங்களின் படி, மனிதர்கள் சந்திக்கும் அனைத்து வகையான தீய ஊழ்களுக்கும் "பண்டோரா" என்ற கற்பனைப் பெண்ணே மூலகாரணம் என்று கருதப்பட்டது. கிரேக்கர்கள் பெண்களை கீழான மனிதப் பிறவிகளாகவும் ஆண்களைவிடக்

குறைந்தவர்களாகவும் கருதினர். பெண்களின் கற்பு விலையுயர்ந்ததாகக் கருதப்பட்டு அவர்களுக்கு மதிப்பு அளிக்கப்பட்ட போதிலும், பின்னாட்களில் அந்த எண்ணம் மறைந்து பாலியல் வக்ர உணர்வும், தன் முனைப்பும் அவர்களிடம் தலைதூக்கின. கிரேக்க சமுதாயத்தின் அனைத்துப்பிரிவு மக்களிடையேயும் விபச்சாரம் பெருமளவில் இருந்தது.

## 3. ரோம நாகரீகம்:

ரோம நாகரீகம் உச்ச கட்டதில் இருந்த போது ஒருவனுக்கு அவனுடைய மனைவியின் உயிரைப் பறிக்கும் உரிமை இருந்தது. விபச்சாரமும், நிர்வாணமும் ரோமானியர் களிடையே பெருமளவில் இருந்தது.

## 4. எகிப்திய நாகரீகம்:

எகிப்தியர்கள், பெண்களைத் தீய சக்தியாகவும், பிசாசின் வடிவமாகவும் கருதினர்.

## 5. ஆரம்பகால கிறிஸ்துவம்:

ஆரம்பகால கிறிஸ்துவம், பெண்களை உணர்வூட்டு பவர்களாகவும் (அதாவ ஆண்களை மயக்குபவர்களாகவும்) ஆதம் சொர்க்கத்திலிருந்து பூமிக்கு வருவதற்கு காரணமாக இருந்தவர்களாகவும் கருதியது.

கி.பி.587ஆம் ஆண்டில், பிரான்ஸ் நாட்டில் பெண்களை மனிதர்களாகக் கருதலாமா, வேண்டாமா என்பது பற்றி ஆய்வு செய்வதற்காக ஒரு மாநாடே நடைபெற்றது. தேவாலயங்கள் பெண்களை இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தின. 8ஆம் ஹென்றி என்ற இங்கிலாந்து அரசன் பெண்கள் பைபிளைப் படிக்கக்கூடாது என்று தடைவிதித்தான். மத்திய காலம் முழுமையும் இந்தத்தடை நீடித்தது. கி.பி.1850க்கு முன்னர் இங்கிலாந்தில் பெண்கள் குடிமக்களாகவே கருதப்பட வில்லை. கி.பி.1882வரை இங்கிலாந்து நாட்டுப்

பெண்களுக்குத் தனிப்பட்ட உரிமைகள் எதுவும் வழங்கப்படவில்லை.

## 6. இந்திய நாகரீகம்:

கணவன் இறந்தவுடன் மனைவி உடன் கட்டை ஏறி உயிர்துறக்கும் "சதி" என்ற வழக்கம் சில இந்திய இந்து சமூகங்களில் பன்னெடுங்காலமாக நிலவி வந்தது. பின்னர் பல்வேறு காலகட்டங்களில் இந்தப் பழக்கம் தடை செய்யப்பட்டது.

## 7. இஸ்லாத்திற்கு முந்தைய அரேபியா:

பெண்களைக் கீழானவர்களாகக் கருதும் போக்கு உலகமெங்கும் நிலவிய கி.பி.ஏழாம் நூற்றாண்டில், அதே எண்ணப்போக்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வருகைக்கு முன்னர் அரேபிய மக்களிடமும் இருந்தது. அந்த சமூகத்தின் பல்வேறு இனக்குழுவைச் சார்ந்த ஆண்களிடையே இனக்குழுச் சண்டைகளும். சில்லறைச் சச்சரவுகளும் கொள்ளையும், குழப்பமும் பெருமளவில் இருந்தன. அத்தகைய ஒரு சமூக அமைப்பில் பெண்கள் மிகவும் கீழாக நடத்தப்பட்டனர்.

இஸ்லாத்தின் வருகைக்கு முன்னர் அரேபியாவில் பிறந்த பச்சிளம் பெண் குழந்தைகள் உயிரோடு புதைக்கப்பட்டனர். பெண் குழந்தைகள் இருப்பது கௌரவக் குறைவு என்று மக்கள் எண்ணியதே இதற்குக் காரணமாகும். 10 ஆண்களில் ஒருவர் இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டு வந்தனர். ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் இந்தக் குற்றச் செயலுக்குத் துணை நின்றனர். பெற்ற தாய்மார்களே தங்களது கணவன்மார்களிடம் பெண் குழந்தைகளைக் கொல்வதற்காக ஒப்படைத்தனர். இரண்டாவதாக வறுமைகாரணமாகவும் பெண் குழந்தைகளைக் கொன்றனர்.

இந்தக்கால கட்டத்தில், அரேபிய சமூகத்தில் பல விநோதமான திருமணப் பழக்கங்கள் இருந்தன. ஆண்கள் அடிக்கடி திருமணம் செய்து கொண்டனர். தங்களின் விருப்பப்படி 10, 20, ஏன் சில சமயங்களில் 100 திருமணங்கள் கூட செய்து கொண்டனர். இதனை ஒரு சமூகத்தகுதியாக

அவர்கள் கருதினர். விவாகரத்தும் மிக எளிதாகவும், அடிக்கடியும் நிகழ்ந்தன. இந்தப் போக்கினைத் தடுத்திட திருக்குர்ஆன் கட்டுப்பாடுகளையும், கடுமையான விதிமுறை களையும் வகுத்துத்தந்துள்ளது. இன்னொரு விநோதமான ஒரு பழக்கமும் அப்போது ஆண்களிடையே நிலவி வந்தது. அதாவது சில ஆண்கள், தங்களது மனைவிமார்களிடத்தில் பாலுறவு வைத்துக்கொள்ள மாட்டோம் என்று உறுதி மொழி எடுத்துக்கொண்டு அவர்களை விட்டு விட்டுச் சென்று விடுவார்கள். அப்படி விட்டுச் சென்ற மனைவியர்களை விவாகரத்தும் செய்யமாட்டார்கள். இதனால் அவர்கள் மறுமணம் செய்து கொள்ள முடியாது. அத்தகைய சூழ்நிலை யிலேயே அவர்கள் தங்களது முழு வாழ்நாட் களையும் கழிக்க வேண்டியதிருந்தது.

> திருக்குர்ஆன் அத்தகைய ஆண்களை "அவர்களை வைத்துக் கொள்ளுங்கள் அல்லது கண்ணியமான முறையில் பிரிந்து செல்ல அனுமதியுங்கள்" என அறிவுறுத்தியது (திருக்குர்ஆன் 2: 224 – 227)

இன்னும் பல சம்பவங்களில் ஒரு விதவைப் பெண் இறந்து போன அவளது கணவனின் பூர்வீகச் சொத்தாகக் கருதப்பட்டு, அவருக்கு இன்னொரு மனைவி மூலம் பிறந்த மூத்த மகனுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டாள். இந்தக் கீழ்த்தரமான பழக்கத்தினையும் திருக்குர்ஆன் ரத்துச் செய்தது.

> "மேலும் உங்கள் மூதாதையர் மணமுடித்திருந்த பெண்களை நீங்கள் ஒரு போதும் மணமுடித்துக் கொள்ளாதீர்கள். முன்னால் நடந்தது நடந்து விட்டது. உண்மையில் இது ஒரு மானக்கேடான வெறுக்கத்தக்க செயலாகும். கீழ்த்தரமான நடத்தையுமாகும். (குர்ஆன் 4:22)

விதவை ஒருத்தி இறந்து போன தனது கணவரின் மூத்த மகனுக்கு (இன்னொரு மனைவி மூலம் பிறந்த) திருமணம் செய்து வைக்கப்படவில்லையென்றால், அவளது கொழுந் தன்களின் சொத்தாக அவள் மாறி விடுவாள். அவளது கொழுந் தன்களில் ஒருவர் அவளை உடமையாக ஆக்கிக் கொள்வார். அந்த விதவைப் பெண் எந்தச் சூழ்நிலையிலும் கணவரின் வீட்டை விட்டுச் செல்ல அனுமதிக்கப் படமாட்டாள்.

இஸ்லாத்திற்கு முந்திய அரேபியாவில் வரைமுறையற்ற பாலுறவு காரணமாக திருமணமாகமலேயே பெண்கள் கர்ப்பமடைந்தனர். கீழ்படியாததற்காக பெண்கள் ஆண்களால் அடிக்கடி அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.

பெரும்பாலான இனக்குழுக்களில் பெண்களுக்கு எந்தவிதமான மரியாதையும் இல்லை. அவர்கள் வெறும் போகப் பொருளாகவே கருதப்பட்டனர். அவர்கள் வெளியே செல்லும் போது மிகக் குறைந்த அளவிலான ஆடைகளையே அணிந்து கொண்டனர். சில சமயச்சடங்குகளை நிறைவேற்றும் போது கூட (நிர்வாண கோலத்தில் மக்காவின் புனித இல்லத்தைச் சுற்றி வரும்படி பணிக்கப்பட்டனர்) ஆண்களை மகிழ்ச்சிப்படுத்தும் ஒரு பொழுது போக்குப் பொருளாகவே பெண்கள் கருதப்பட்டனர்.

இஸ்லாத்திற்கு முந்தைய அரேபியச் சமூகத்தில் பெண்களுக்குப் பரம்பரைச் சொத்தில் பங்கு எதுவுமில்லை அதற்கு நேர்மாறாக பெண்கள் வாங்கவும், விற்கவுமான ஒரு பொருளாகவும், கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படும் ஒரு வழிமுறையாகவும் கருதப்பட்டனர். திருக்குர்ஆன் இவற்றையெல்லாம் நீக்கிவிட்டு புதிய விதிமுறைகளை வகுத்தளித்துத் தந்துள்ளது. பரம்பரைச் சொத்தில் மட்டுமல்ல நியாயமான முறையில் சொத்துக்களை அடையவும் பெண்கட்கு உரிமை உண்டு எனத்திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது.

## நவீன சமூகத்தில் பெண்கள்:

தற்போது உலகின் பல்வேறு பகுதிகளிலும் நிகழ்ந்து வருகின்ற சம்பவங்களைப் பார்க்கின்ற போது, பெண்களை நடத்துகின்ற விஷயத்தில், கி.பி.ஏழாம் நூற்றாண்டில் இஸ்லாத்தின் வருகைக்கு முன்னர் அரேபிய சமூகத்தில் நிலவிய அந்த இருண்ட அறியாமைக் காலத்திற்கு நாம் சென்று கொண்டிருக்கிறோமா என்ற எண்ணம் மேலோங்குகிறது. பெண்சிசுக் கொலை என்ற பெயரில் பெண் குழந்தைகளைக் கொல்கின்ற பழக்கம் இன்றைக்கும் தொடர்கிறது. யூனிசெப் அளித்துள்ள உலகக் குழந்தைகள் பற்றிய அறிக்கையில், இந்தியாவில் சிறுவர்கள், சிறுமிகளை விட அதிக

எண்ணிக்கையில் உள்ளனர் என்றும், 1000 சிறுவர்களுக்கு 880 சிறுமிகள் என்ற அளவில் பாலியல் விகிதம் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் ஆண்-பெண் விகிதாச்சாரம் 1000:954 என்ற அளவில் உள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. பெண் சிசுக் கொலை காரணமாகவே பெண்களின் பிறப்பு எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும், 70 மில்லியன் பெண் குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே அழிக்கப்படுவதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. திகைப்பூட்டும் இந்தப் புள்ளி விவரங்கள் ஒட்டு மொத்த மனித சமுதாயத்தையே வெட்கித் தலைகுனியச் செய்யும் விதத்தில் உள்ளன. ஆனாலும், மனித உரிமைகளைப் பேணுகின்ற ஒரு நாகரீக உலகத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று இன்னமும் நம்புகிறோம். இந்த நவீன யுகத்தில் பெண் என்பவள் ஒரு போகப் பொருளாகவும், அழகு சாதனப் பொருளாகவும் குறுக்கப்பட்டு விட்டாள். உண்மையான அல்லது பொய்யான சமத்துவம் என்று கருதி, பெண்கள் தெரியாமலேயே தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்ளும் நிலைக்கு வந்து விட்டனர்.

பெண்களுக்கு உரிமைகள் வழங்கியுள்ளதாக நவீன சமூகம் பீற்றிக் கொள்ளலாம். ஆனால் அது அவர்களின் பாதுகாப்பு பற்றி அவ்வளவாகக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. "பெண் விடுதலை" என்ற கோஷம் அவர்களை சுரண்டு வதற்கான வாசல்களைத் திறந்து விட்டுள்ளது என்பதுதான் உண்மை நிலையாகும். ஒரு விநோதமான குழப்பம் தற்கால சமுதாயத்தில் நிலவி வருகிறது. பெண் விடுதலை என்பது யதார்த்தத்தில் ஒன்றுமில்லை என்பதும் அது சந்தையில் பெண்களின் இருப்பை அதிகரிக்கவே உதவியுள்ளது என்பதும் தற்போது நிரூபணமாகியுள்ளது. பாலுறவு உலகின் மிகப் பெரும் சந்தைப் பொருளாகி விட்டது மட்டுமல்ல அது மனித சமுதாயத்தை சித்திரவதைக்குள்ளாக்கும் ஒரு பொருளாகவும் ஆகி விட்டது. அது மனிதர்களைக் கொல்கிறது. (எய்ட்ஸ் நோய், தற்கொலை, கொலை ஆகியன மூலம்) குடும்பங்களை அழிக்கிறது; சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கிறது.

கால் நடைகளை விடப் பெண்கள் மோசமாக நடத்தப் படுகின்றனர். விபச்சாரம், பெண் பாலியல் தொழிலாளிகள்,

ஆபாச நடனம் ஆடுபவர்கள், நிர்வாணம், சீதனக் கொலைகள், மணப்பெண்கள் எரித்தல், தற்கொலைகள், சூதாட்டம், திருமணமாகாமல் சேர்ந்து வாழ்தல், குடிப்பழக்கம், பெண்களுக்கிடையே ஓரினப்பாலுறவு, பலருடன் அவ்வப்போது உடலுறவு வைத்துக்கொள்ளல் ஆகிய தீய செயல்கள் எங்கும் நிறைந்து காணப்படுகின்றன.

பெண்களை வணிகப் பொருளாகக் கருதும் போக்கு இன்றைக்கும் தொடர்கிறது. பெண்களைப் போகப் பண்டமாகச் சித்தரிக்கும் போக்கிற்கு சாதுரியமான, ஏற்கத்தக்க வழிமுறைகள் பல உருவாக்கப்பட்டுள்ளன. விளம் பரங்களிலும், ஊடகங்களிலும் தோன்றும் மிகக்குறைந்த ஆடை அணிந்துள்ள பெண்கள் (பெண்களுக்குச் சம்பந்தமே இல்லாத கார் விற்பனை, பானங்கள், ஷமுசா போன்ற விளம்பரங்கள்) ஆபாசப்படங்கள், ஆடை அவிழ்க்கும் பார்கள், சில உணவகங்களில் காணப்படும் உடல் உறுப்புகள் தெரியும் வண்ணம் மிகக் குறைந்த அளவு உடை அணிந்துள்ள பெண்பணியாளர்கள், உடலுறுப்புகளை அழகுபடுத்திட, குறிப்பாக மார்பகங்களை பெரிதாக்கிட செய்யப்படுகின்ற அறுவை சிகிட்சைகள் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

## பாலுணர்வு வெறி

தற்போது வல்லுறவுக் கொடுமையிலிருந்து பெண்கள். சிறுமிகள், ஒன்று மறியாக் குழந்தைகள் என யாரும் தப்ப வில்லை. அவர்கட்குப் பாதுகாப்பும் இல்லை. பெண்களும், சிறுமிகளும் கடத்தப்பட்டு, கற்பழிக்கப்பட்டு கொல்லப் படுகின்ற பல சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இது போன்ற அவமானகரமான சில சம்பவங்கள் படமாக்கப்பட்டு பின்னர் அவை அப்பாவிப் பெண்களைப் பயமறுத்தவும், அவதூறு செய்யவும், அவர்களின் நற்பெயரைக் கெடுக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. சில மோசமான விஷமிகள் இத்தகைய பாலியல் வல்லுறவுக் காட்சிகளை சமூக வலைத் தளங்களில் ஒளிபரப்பி சட்டத்திற்கே சவால் விடுகின்றனர். இதுபோன்ற நிகழ்வுகள் நமது சமயப் பண்பினையும், சமுதாய உணர்வையும் நாகரீகமான வாழ்க்கை முறையையும் கேலிப் பொருளாக்குகின்றன.

இது போன்ற வரைமுறையற்ற பாலியல் உறவுகள் காரணமாக பல நாகரீகங்கள் அழிந்து போனதற்கு வராற்றில் பல சான்றுகள் உள்ளன. நமது திரைப்படங்களும், வார இதழ்கள் மற்றும் நாளிதழ்களும் பாலியல் உணர்வுகளைத் தூண்டுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. துரதிருஷ்ட வசமாக புகழ்பெற்ற தேசிய ஆங்கில இதழ்களும், நாளிதழ்களும் கூட பெண்களின் ஆபாசப்படங்களை வெளியிட்டு அவர்களைப் மோகப் பொருளாகக் காட்ட முயற்சிக்கின்றன. எளிதில் கெட்டுப் போகும் வாய்ப்புகள் கொண்ட இளைஞர்களுக்கு இது போன்ற விஷயங்கள் தற்போது வலைத் தளங்களில் காணக்கிடைக்கின்றன. இத்தகைய வெறியூட்டும் பாலுணர்வுப் போக்கை முடிவுக்குக் கொண்டுவருவதில் அரசாங்கம், சமூக விஞ்ஞானிகள், ஊடகங்கள், சமயத்தலைவர்கள் என அனைத்துத் தரப்பினரும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நமது கலாச்சாரம் மற்றும் குடும்ப வாழ்வு மட்டுமல்ல நமது நாகரீகமே பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. இயற்கைக்கு முரணான உறவுகள். திருமணத்திற்கு முந்திய உறவுகள், திருமண பந்தத்திற்கு அப்பாற்பட்ட உறவுகள் ஆகியவற்றை ஆதரித்து எழுதப்படும் கருத்துக்களை இரும்புக்கரம் கொண்டு தடுக்க வேண்டும். இறையச்சம், தார்மீகப் பண்புகளை மதித்தல், பொறுப்புணர்வு ஆகியன சமூகத்தில் முக்கியக் கோட்பாடுகளாகப் போதிக்கப்படவேண்டும்.

சமூகத்தின் சரிபாதியாக உள்ள பெண்களின் உரிமைகளை மறுக்கின்ற எந்த ஒரு சமயமும் மக்களின் ஆதரவைப்பெற முடியாது. இஸ்லாம் பெண்களைச் சமநிலையில் வைத்துள்ளது. அவர்களது உடல் மற்றும் மன ரீதியான அம்சங்களை கவனத்தில் எடுத்துக் கொண்டு செயல்படுவதன் மூலமே சமத்துவத்தை உறுதி செய்யமுடியும். சுய அடை யாளத்தை விட சம பங்களிப்பு வழங்குவதே ஆண்களுக்கும், பெண்களுக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளையும் கடமை களையும் சரியாகச் செய்வதற்கான திறவு கோலாக இருக்க முடியும். குழந்தைப்பேறு மூலம் பெண்கள் மனித சமுதாயத்தை முன்னெடுத்துச் செல்வதில் முக்கியப்பங்கு வகிக்கிறார்கள். அதே நேரத்தில், பொருளாதார உற்பத்தி மூலம் ஆண்கள் மனித சமுதாயத்தை நிலை பெறச்

செய்கிறார்கள். எனவே இருதரப் பினருக்குமிடையே ஒரு சிறிய வித்தியாசத்தை நாம் காண முடியும். 1400 ஆண்டுகளுக்கு முன்னர் அன்றைய சமூக அமைப்பில் பெண்களின் பாதுகாப்பும், கண்ணியமுமே முக்கியப்பிரச்னைகளாக இருந்தன. இன்றைக்குப் பேசப்படும் உரிமைகள் அப்போது பிரச்னையாக இருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

இஸ்லாத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இருபத்தொன்றாம் நூற்றாண்டில் முஸ்லிம் சமுதாயத்தில் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளுக்கும் சமூகப் பொருளாதார பிரச்னைகளில் நிலவிடும் நடைமுறை உண்மைகளுக்கு மிடையிலான வித்தியாசத்தை நாம் உணர்ந்து அதனைப் பராமரிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

# பெண்களைப் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

குர்ஆன் வசனங்கள் அருளப்பட ஆரம்பித்த உடனேயே இஸ்லாம் பெண்களுக்கான உரிமைகளை மீட்டுக் கொடுத்து ஆன்மீக விஷயத்தில் அவர்கள் ஆண்களுக்கு நிகரானவர்களே என்பதை உறுதி செய்தது. வாழ்க்கையில் ஆண்களும், பெண்களும் சம பங்காளிகளே என்று இஸ்லாம் கூறுகிறது. அவரவர்களுடைய அரிய திறமைக்கும் வலிமைக்கும் தகுந்தாற் போல் ஒவ்வொருவருக்கும் பல தரப்பட்ட பொறுப்புகளும், கடமைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. நபிகளாரின் போதனைகள் அரேபியப் பெண்களைச் சென்றடைந்தபோது அந்தப் போதனைகள் தங்களை விடுதலை பெறச் செய்யும் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர். உண்மையில் இஸ்லாத்தை முதன் முதலில் ஏற்றுக் கொண்டவர் ஒரு பெண்மணியே (நபிகளாரின் மனைவி கதீஜா(ரலி) ஹழ்ரத் உமர்(ரலி) இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்னரே அவரது தங்கை பாத்திமா இஸ்லாத்தில் இணைந்தது இதற்கு இன்னொரு முக்கிய உதாரணமாகும். இறைவனின்

சேவகர்களாக அவர்கள் மாறிவிட்டதால் அவனால் படைக்கப் பட்ட பொருட்களை வணங்குவதினின்றும் அவர்கள் விடுதலை பெற்றனர். தங்கள் மீது தொடுக்கப்பட்டிருந்த அனைத்து விதமான ஒடுக்குமுறைகளிலிருந்தும் பெண்கள் விடுதலை அடைந்தனர். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பெண் விடுதலைக்கு ஆதரவாக இருந்தார்கள். தங்களது தூதுத்துவ வாழ்க்கை முழுவதும் அதனை வலியுறுத்தி வந்தார்கள். தமது இறுதி உரையின் போதும் அவர்கள் அதனை வலியுறுத்தத் தவறவில்லை. (இந்த தமது இறுதி உரையின் போது, நபிகளார் இஸ்லாத்தின் முக்கிய அம்சங்களை வலியுறுத்தினார்கள்)

" ஓ! என் மக்கஙே! உங்களது சொந்தப் பெண்கள் மீது உங்களுக்குச் சில உரிமைகள் இருக்கின்றன. ஆனால் அவர்கட்கும் சில உரிமைகள் உள்ளன. இறைவனின் அனுமதி மற்றும் நம்பிக்கையின் பேரில் தான் நீங்கள்அவர்களை உங்களது மனைவியர்களாக ஆக்கிக் கொண்டீர்கள் என்பதை நீங்கள் நினைவு கூர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் உங்களது உரிமைகளுக்குக் கட்டுப்பட்டால் நீங்கள் அவர்களுக்கு உண்ண உணவளியுங்கள். உடுத்த ஆடை வழங்குங்கள். பெண்களை நன்முறையில் நடத்துங்கள். அவர்களுடன் அன்புடனும் கனிவுடனும் நடந்து கொள்ளுங்கள். ஏனெனில் அவர்கள் உங்களது பங்காளிகள். உங்களுக்கு உதவிட கடமைப் பட்டவர்கள். நீங்கள் விரும்பாதவர்களை அவர்கள் நண்பர் களாக்கிக் கொள்ள அனுமதிக்காதீர்கள். அவர்கள் கற்பு நெறி தவறாது பாதுகாத்திடுங்கள்

## சீர்த்திருத்தம்

பல்லாண்டு காலமாக வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்பட்ட பெண்கள் இறுதியில் விடுதலை பெற்றனர். இஸ்லாம் வந்த பிறகு அவர்களது உரிமைகள் நிலை நாட்டப்பட்டன. ஆண்களின் பங்காளிகளாக, துணைவர்களாக அவர்கள் சமமாக நடத்தப்பட்டனர். ஒவ்வொரு பெண்ணுக்கும் தெளிவான புனிதமான உரிமைகள் வழங்கப்பட்டு அவள் தகுதியான உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டாள். எப்படி இப்படிப்பட்ட நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய முன்னோடியான

மாற்றங்கள் ஏற்பட்டன?

இஸ்லாத்தின் "பெண் விடுதலை" பற்றிய சிந்தனை ஆண்களிடமிருந்தோ அல்லது பெண்களிடமிருந்தோ உருவாக வில்லை. அது இறைவனால் மனித சமுதாயத்திற்கு வழங்கப் பட்டதாகும். குர்ஆன் வசனங்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டபோது அவற்றை உடனடியாக மக்களுக்குத் தெரிவிப்பார்கள். அதனைக் கேட்ட மக்களும் உடனடியாக அவற்றை தங்களது வாழ்க்கையில் நடைமுறைப் படுத்துவார்கள். இவ்வாறாக பெண்களின் உரிமைகள் பற்றிய இறை வசனங்களும் பெண்கள் அன்பாக நடத்தப்பட வேண்டும் என்ற இறை கட்டளைகளும் மக்களால் புறக்கணிக் கப்படவில்லை. இறைவசனங்கள் தெரிவிக்கப்பட்ட பிறகு முஸ்லிம் ஆண்கள் இதற்கு முன்னர் பெண்கள் பற்றித் தாங்கள் கொண்டிருந்த கருத்துக்களையும் போக்குகளையும் மாற்றிக் கொள்ளத் தலைப்பட்டனர். எனவே பெண்கள் தங்களது உரிமைகளுக்காகப் போராடவேண்டிய தேவை ஏற்பட வில்லை பெண்விடுதலைக்காக போராட்டங்களோ, ஊர்வலங்களோ, எதிர்ப்புகளோ தேவைப்படவில்லை. இஸ்லாத்தின் வருகைக்கு முன்னர் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்து பெண்களை கீழான முறையில் நடத்திய அதே ஆண்கள் கருணையாளர்களாகவும், இறை அச்சம் உடையவர்களாகவும் தங்களது பாவங்களுக்காக வருந்துபவர் களாகவும் மாறினர்.

"உங்களில் யார் மனைவியரிடத்தில் நன்முறையில் நடந்து கொள்கிறாரோ அவரே மிகச் சிறந்தவர்" என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறிய போது, அவர்கள் அதனை கவனத்துடன் செவிமடுத்துக் கேட்டார்கள். மேலும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் "யாரொருவருக்கு இறைவன் இரண்டு பெண்குழந்தைகளைக் கொடுத்து அவன் அக்குழந்தைகளை அன்பாக நடத்துகிறோனோ அவன் சொர்க்கத்தில் நுழைவான்" என்று நவின்றார்கள்.

சமூக சீர்திருத்தங்கள் மேற்கொண்ட பிறகு, கற்பழிப்பு, கொலை, பிறந்த பெண் குழந்தையைக் கொல்லுதல் ஆகிய குற்றங்களுக்கு நபிகளார் மரண தண்டனை விதித்தார்கள். மேலும் விபச்சாரம், சூதாட்டம், நடனம், குடிபோதையில் களியாட்டம் ஆகிய தீய செயல்களுக்கும் தடை விதித்தார்கள்.

நபிகளார் ஊதாரித்தனத்தையும், ஒருவன்/ஒருத்தி பலருடன் அவ்வப்போது பாலுறவு வைத்துக் கொள்ளும் பழக்கத்தையும் தடை செய்தார்கள். பெண்களை பொருளாதாரச் சுமையாகவோ, விளையாட்டுப் பொருளாகவோ, இச்சையைத் தீர்த்துக் கொள்ளப் பயன்படும் ஒரு கருவியாகவோ அவர்கள் அனுமதிக்கவில்லை.

## இஸ்லாமியச் சட்டத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள்

இஸ்லாம் திருமணத்தை உணர்வு பூர்வமாக பாலுறவு சுகத்தை அளிக்கும் ஒரு வழியாகவும், நியாயமான முறையில் இன விருத்தி செய்யப்பயன்படும் ஒரு வழியாகவும், குடும்பங்களுக்குள் உறவுகளையும், ஒற்றுமையையும் பேணுகின்ற ஒரு வழியாகவும் கருதுகின்றது. சொத்துரிமையைப் போல் அல்லாமல் திருமணத்தை இஸ்லாம் ஒரு ஒப்பந்தமாகவே கருதுகிறது. இது பெண்களின் நிலையில் ஒரு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இஸ்லாம் ஒரு பொது அறிவு மார்க்கமாகும். அது மனித இயல்புகளுடன் ஒத்துப் போகிறது. அது மனித வாழ்க்கையின் யதார்த்தங்களை அங்கீகரிக்கிறது. இஸ்லாத்தில் பெண்கள், மிக வலுவான குடும்ப பரம்பரை உரிமைகளை அனுபவிக்கிறார்கள். இஸ்லாமியச் சட்டப்படி பெண்கள் கீழ்க்கண்ட உரிமைகளைப் பெற்றுள்ளனர்.

1. திருமணமான முஸ்லிம் பெண் தன்னுடைய இயற்பெயரை விட்டுவிட வேண்டியதில்லை. தன்னுடைய தனித்த அடையாளத்தை அவள் தக்க வைத்துக் கொள்ளலாம்.

2. திருமணம் செய்யப்போகும் ஆண் மகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அவளுக்குண்டு இந்த விஷயத்தில் அவளது சம்மதம் பெறப்பட வேண்டும்.

3. முஸ்லிம் திருமணத்தில் மணமகன் தான் பெண்ணுக்கு மஹர் பணம் கொடுக்க வேண்டும். (மணப்பெண்ணின் தகப்பனாருக்கு அல்ல) மஹர் தொகையை அவளே நிர்ணயம் செய்து திருமணத்தின் போது கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். இந்த மஹர் பணத்தை அவள் தனது சொந்த சொத்தாகப் பாவித்து அதனை வைத்திருக்கவோ, செலவு செய்யவோ, முதலீடு செய்யவோ அவளுக்கு முழு உரிமை உண்டு. இதில் தன்னுடைய ஆண் உறவினர்கள் யாரும் அவளுக்குக் கட்டளை இட முடியாது.

4. முஸ்லிம் வாரிசுரிமைச் சட்டத்தின் படி, தகப்பனாருடைய சொத்தில், சகோதரர்களைப் போலவே, அக்குடும்பத்தில் உள்ள பெண்களுக்கும் பங்கு உண்டு. (குறிப்பாக மனைவி, மகள், அம்மா, சகோதரி ஆகியோருக்கு).

5.வாரிசுரிமையின் படி தன்னுடைய பெற்றோரிடமிருந்து பெறும் சொத்தை அல்லது பிற அன்பளிப்புப் பொருட்களை அவளே வைத்துக் கொள்ளலாம். அதனைத் தனது கணவருக்கோ, அல்லது கணவரின் சகோதரிகளுக்கோ கொடுக்க வேண்டியதில்லை. பெற்றோர்களின் சொத்திலும், கணவனுடைய சொத்திலும் அவளுக்கு பங்கு உண்டு. சொத்துக்களை அடையவும், அதனை விற்பதற்கும் அவளுக்கு உரிமை உண்டு.

6.பெண்களை அன்புடன் நடத்தும்படி குர்ஆன் முஸ்லிம்களை வலியுறுத்துகிறது (குர்ஆன் 4:19) தங்களுடைய பெண் உறவினர்களைப் பாதுகாத்துப்பராமரிக்கும் பொறுப்பை இஸ்லாம் ஆண்களிடம் ஒப்படைத்துள்ளது. மனைவி பணம் படைத்தவளாக இருந்தாலும் கூட கணவனே அவளுக்கும், குடும்பத்திற்கும் ஆகும் செலவிற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்பது இதன் பொருளாகும். தனது சொந்தப் பணத்தை மனைவி

குடும்பத்தைப் பராமரிப்பதற்காக செலவிட வேண்டியதில்லை. இதற்கு கைமாறாகப் பெண்கள் கணவனுக்கு விசுவாசமாகவும், கற்புடையவளாகவும் நடந்து கொள்ள வேண்டும். *(குர்ஆன் 4:34 ).*

7.கணவனுடன் வாழ முடியாத நிலையில், கணவன் விவாகரத்துச் செய்ய மறுத்தால், அவனிடமிருந்து விவாகரத்துப் பெறும் உரிமை(குலா) மனைவிக்கு உண்டு.

8.விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாம்.

9.விவாகரத்துப் பெற்ற பெண் மறுமணம் செய்து கொள்ளலாம்.

10.விரும்பினாலோ, அல்லது சூழ்நிலைகளின் நிர்ப்பந்தம் காரணமாகவோ பெண் வேலைக்குச் சென்று பொருள் ஈட்டலாம்.

11.அடிக்கடி சொல்லப்படும் பொதுவான ஒரே மாதிரியான கூற்றுக்கு மாறாக, இஸ்லாம் பெண்களின் செயல்பாட்டை ஒரு வீட்டின் நான்கு சுவர்களுக்குள் குறுக்கி விடவில்லை. ஏதாவது ஒரு வேலை செய்ய விரும்பும் ஒரு பெண்ணிற்கு இஸ்லாம் எந்த விதமான தடையும் விதிக்கவில்லை. விவசாயம், வியாபாரம், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்த பெண்களை நபிகளார் தடுக்கவில்லை நபிகளாரின் மனைவியர்களில் ஒருவரான ஜைனப்(ரலி) அவர்கள் கைவினைப் பொருட்கள் தயாரிப்பதில் வல்லவராக இருந்தார்.

12.அறிவைப் பெறுவதில் ஆண்களும் பெண்களும் சமமானவர்களே என இஸ்லாம் கருதுகிறது. அறிவைப் பெறுவது ஆண்-பெண் இருபாலரின் கடமை என இஸ்லாம் வலியுறுத்துகிறது. இறை வசனங்கள் அருளப்பட்ட போது நபிகள்

நாயகம்(ஸல்) அவர்கள் முதலில் அவ் வசனங்களை ஆண்களடங்கிய சபையில் ஓதிக் காட்டியதாகவும், பின்னர் பெண்கள் அடங்கிய கூட்டத்தில் ஓதிக் காட்டியதாகவும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆரம்ப நாட்களில் எழுதியவர்களில் ஒருவரான இப்னு இஸ்ஹாக் குறிப்பிடுகிறார்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் திருக்குர்ஆனும் உருவாக்கித்தந்துள்ள உயரிய கலாச்சாரம் இதுதான். இதுவே மனிதனுக்கு இறைவன் வகுத்தளித்துத் தந்துள்ள வாழ்க்கைத் திட்டமாகும்.

இவையெல்லாம் பெண்களுக்கு சமூகம் வழங்கியுள்ள சலுகைகள் அல்ல. ஒருவருடைய விருப்பு வெறுப்பு களுக்கேற்ப யாரும் இதனை விலக்கிக் கொள்ள முடியாத படி இவற்றிற்கு இஸ்லாமியச் சட்டத்தில் உத்திரவாதம் அளிக்கப் பட்டுள்ளது. இவை நிலையானவை. உலகில் உள்ள எந்த சக்தியாலும் இவற்றை மாற்றவோ, திருத்தவோ முடியாது. இவ்வாறாக இஸ்லாம் பெண்களின் கண்ணியத்தைப் பாதுகாக்கிறது. மேற்கத்திய உலகம் பெண்களை ஒரு நடமாடும் ஜடப்பொருளாகக் கருதி அவர்களுக்கு ஆத்மா உண்டா என்று ஐயம் எழுப்பிய அந்தக் கால கட்டத்திலேயே இஸ்லாம் பெண்களுக்கு இத்தகைய உரிமைகளை வழங்கியிருந்தது. இஸ்லாம் பெண்களை உயரியவர்களாக மிகவும் மதிக்கத்தக்கவர்களாகக் கருதுகிறது. மதிக்கத்தகு தியற்றவர்களாகவோ, அல்லது இகழத்தக்கவர்களாகவோ கருதவில்லை.

சில மத்திய கிழக்கு நாடுகளிலும், சில முஸ்லிம் நாடுகளிலும் ஏன் இந்தியாவிலும் கூட முஸ்லிம் பெண்கள் நன்முறையில் நடத்தப்படாததற்கு சில கலாச்சார ரீதியான பிரச்னைகள் தான் காரணமேயன்றி இஸ்லாம் அதற்குக் காரணமல்ல. இஸ்லாம் ஒரு அடக்கு முறை மதமாக இருந்தால் ஏன் உலகின் பல நாடுகளையும் சார்ந்த பிறமதப் பெண்கள் விருப்பத்துடன் இஸ்லாத்தில் இணைகிறார்கள்?

# இஸ்லாத்தில் பெண்களின் கடமைகள்

இஸ்லாம் ஒரு முறையான, சமநிலையான வாழ்க்கை முறையாகும். பெண்களின் உரிமைகளை வரையறுத்துக் கூறியுள்ள இஸ்லாம் அவர்களது கடமைகளையும் வகுத்தளித்துத் தந்துள்ளது. ஒரு முஸ்லிம் பெண், கீழ்க்கண்ட கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

1. ஓரிறைவன் மீது நம்பிக்கை கொண்டு (தௌஹீது) இஸ்லாத்தைக் கடைப்பிடிப்பது அவளது முதன்மைக் கடமையாகும். அவள் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். ரம்ஜான் மாதத்தில் நோன்பு நோற்க வேண்டும், ஏழைகளுக்குத் தனது செல்வத்திலிருந்து ஜகாத் கொடுக்க வேண்டும் (அதற்கான தகுதி பெற்றிருந்தால்) பணவசதி பெற்றவராக இருந்தால் ஹஜ்புனிதப் பயணம் மேற்கொள்ள வேண்டும்.

2. அவள் தனது கற்பினை எப்போதும் பாதுகாத்து வரவேண்டும். திருமணமின்றி வேறு யாருடனும் எந்தவிதமான பாலியல் உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது.

3. அவள் கண்ணியமான உடையினை அணிய வேண்டும். வெளியே செல்லும் போதும், நெருங்கிய உறவினர்கள் அல்லாத பிற வயதுக்கு வந்த ஆண்களைச் சந்திக்கும் போது ஹிஜாப் அணிய வேண்டும். (ஹிஜாப் என்பது வெளியில் அணிந்து கொள்ளும் நீளமான ஆடை அல்லது முக்காடு என்று பொருளாகும் 33:59, 24:30-31 ஆகிய திருக்குர்ஆன் வசனங்களைப் பார்க்கவும்) அவள் ஆண்களைப் போல் உடை அணியக் கூடாது.

4. இஸ்லாமிய நெறிகளின்படி குழந்தைகளை வளர்ப்பது அவளது கடமையாகும். வீட்டு விஷயங்களை அவள் கவனித்துக் கொள்ள வேண்டும். குடும்பம், பரஸ்பர ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பின் பேரில் நடந்த போதிலும், குடும்பத்தின் முழுக்கட்டுப்பாடும் அவளிடமே இருக்க வேண்டும். அவளே குடும்பத்தின் தலைவியாவாள்.

5. அவள் தனது கணவருக்கு உதவியாளராக இருக்க வேண்டும். ஒரு விசுவாசமான மனைவி ஆடையைப் போன்றவள்.

அவளே அமைதி, அன்பு, மகிழ்ச்சி, கணவரின் திருப்தி என அனைத்திற்கும் ஊற்றுக் கண்ணாக இருப்பவள்.

6.அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறாக நடக்கும் படி அவளுக்குச் சொல்லப்பட்டால், சொல்லியவர் தனது கணவனாக, தந்தையாக, சகோதரனாக இருந்தாலும் அதனை அவள் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

7.கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உதவுபவராக இருக்க வேண்டும் என்றே இஸ்லாம் கூறுகிறது. ஒருவரையொருவர் அடக்கியாளக் கூடாது. ஒவ்வொரு வருக்கும் பொறுப்புகளும் கடமைகளும் தனித்தனியே உள்ளன. அவர்கள் இணைந்து மகிழ்ச்சியான ஒரு குடும்பத்தை உருவாக்கி அதன் மூலம் வலுவான, நீடித்த, அமைதியான சமூக வாழ்க்கைக்கு தங்களது பங்களிப்பைச் செய்திட வேண்டும்.

## முக்காடு அல்லது புர்கா

முஸ்லிம் பெண்களின் உடைக் கலாச்சாரம் தற்போது பெரிதும் குறை கூறப்படுகிறது. உடைக்குறைப்பையே "பெண் விடுதலை" அல்லது "சுதந்திரம்" எனப் பலரும் எண்ணுகின்றனர். ஒரு பெண் எந்த அளவுக்கு தனது உடலைக் காட்டுகிறாளோ அல்லது பிறர் பார்த்திட அனுமதிக்கிறாளோ அதுவே பெண் விடுதலையின் அடையாளம் என்று கருதப்படுகிறது. புராதன கால சமூகங்களைச் சார்ந்த பெண்கள் தங்களது உடல் அழகை பொது இடங்களில் காட்டுமாறும் முடிந்த அளவுக்கு கவர்ச்சிகரமான உடைகளை அணியுமாறு தூண்டப்பட்டனர். இது போன்ற செயல்கள் பெண் விடுதலையைப் பிரதிபலிக்கவில்லை. அவர்கட்கு உரிமைகளையும் அளிக்கவில்லை. மாறாக ஆண்கள் ரசிக்கும் ஒரு காட்சிப் பொருளாகவும்,இச்சையுடன் உடல் அழகை நோக்கிடும் ஒரு போகப் பண்டமாகவும் திகழ்ந்தனர். அந்த நிலையே இன்றைக்கும் நீடிக்கிறது.

முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அல்லது முக்காடு அணிந்து கொள்வது பற்றி அடிக்கடி விவாதங்கள் நடைபெறுகின்றன. இது பெண்களைக் கட்டுப்படுத்தும் ஒரு முறை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. முஸ்லிம்கள், இதனை உணர்வுப் பூர்வமாக நியாயப்படுத்தியும் முஸ்லிமல்லாதவர்கள் இதனை கடுமையாக எதிர்த்துப்பேசியும், எழுதியும் வருகின்றனர். இந்தப்பிரச்சாரம் பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து நடை பெற்று வருகின்றது. தற்போது இதற்கு ஒரு அடையாளப் பூர்வமான, அரசியல் பூர்வமான முக்கியத்துவமும் கிடைத்து வருகிறது. ஆனால் முக்காடு பற்றி திருக்குர்ஆன் என்ன கூறுகிறது?.

முக்காடு என்பதற்கு திருக்குர்ஆனில் குறிப்பிடப் பட்டுள்ள வார்த்தை ஹிஜாப் என்பதாகும். இந்த வார்த்தை திருக்குர்ஆனில் எட்டு இடங்களில் வருகிறது. (இறை வசனங்கள் 19:17, 30:32, 17:45, 42:51, 7:46, 33:53, 83:15) ஹிஜாப் என்பதற்கு திரைத்துணி, பர்தா, பிரித்தல் என்று பொருளாகும். ஆனால் ஹிஜாப் என்பது தலையையும், உடல் முழுவதையும் மூடுகின்ற ஒரு துணி என்றே காலம் காலமாக முஸ்லிம்களால் உணரப்பட்டு வருகிறது.

பெண்களின் கற்பையும், கண்ணியத்தையும் பாதுகாத்து ஒரு இறை நெறிமிக்க சமூகத்தை உருவாக்கிட அவர்கள்(பெண்கள்) நெகிழ்வான ஆடை களையே அணிய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இப்போதுள்ள நிலையில், கிமார், பர்தா, சாதோர், அபயா, முக்காடு ஆகியன நெகிழ்வான ஆடைகளாகும். இந்திய உபகண்டத்திலுள்ள முஸ்லிம் பெண்களை புர்கா எனப்படும் தலை முதல் கால்வரை மறைக்கும் ஆடையை அணிகிறார்கள். மத்தியக் கிழக்கு நாடுகளிலுள்ள முஸ்லிம்கள் நிகாப் எனப்படும் முகத் திரையைப் போட்டுக் கொள்கிறார்கள் ஈரானிய முஸ்லிம் பெண்களோ கருப்புத்துணியைப் பயன்படுத்துகிறார்கள். அரேபிய முஸ்லிம் பெண்கள் அபயா என்ற நீண்ட துணியை அணிந்து கொள்கிறார்கள். பிற பகுதிகளிலுள்ள முஸ்லிம் பெண்கள்தலையில்தாவணி போட்டுக்கொள்கிறார்கள்.

# ஹிஜாப்
# இறைவனை மகிழ்விக்கும் உடை

கோஷாமுறை, நெகிழ்வான ஆடைகள், கண்ணியமான உடைகள் ஆகியவற்றின் நன்மைகள் அளப்பரியன. இன்றைக்கும் கூட மிகவும் இறுக்கமான ஆடைகளை அணிந்து கொண்டு தங்களது உடலைக் காட்டிக் கொள்ளாத பெண்களும், மெல்லிய உடைகள் அணிந்து தங்களது உடல் அழகை வெளிக்காட்டாத பெண்களும் பெரிதும் மதிக்கப் படுகிறார்கள். மாறாக சினிமாவில் நடிப்பவர்கள், நடனம் ஆடுபவர்கள், உடலை வெளிக்காட்டிக் கொள்பவர்கள், பணத்திற்காக விளம்பரங்களில் தோன்றுவோர் இச்சையுடனே பார்க்கப்படுகின்றனர். பலகோடிகள் ரூபாய் முதலீட்டில் செயல்பட்டுவரும் அழகு சாதனப் பொருட்கள், சோப்புகள், சாம்பு, உள்ளாடைகள், ஆடம்பர பைகள், ஆடைகள், பெண்கள் உபயோகிக்கும் சுத்தப்படுத்தும் துணிகள், கருத்தடை மாத்திரைகள்-உறைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் தங்களது விளம்பரங்களில் பெண்களை அலங்கோலமான முறையில் காட்டுகின்றன. குறைவான உடையணிந்த பெண்கள் - நன்றாக உடல் முழுவதையும் மறைக்கும் ஆடையணிந்த ஆண்கள் என்ற மேற்கத்திய உடைக் கலாச்சாரம், அதன் மூலம் பெண்களின் அழகை காசாக்கும் நிலை ஆகியன பெண்களுக்கு எதிரான அவர்களின் மனப்பான்மையைக் காட்டுகின்றன.

முஸ்லிம் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்று மார்பில் அடித்துக் கொள்ளும் மேற்கத்தியர்கள் கோஷாவை, முகத்திரையை தடை செய்வதன் மூலம் தங்களது எண்ணத்தை வெளிப்படுத்துகின்றனர். உண்மையிலேயே பெண்கள்

தங்களது அழகை தங்களது கணவர்மார்களைத் தவிர வேறுயாருக்கும் காட்ட மாட்டோம். பொது நிகழ்ச்சிகளிலோ, திரைகளிலோ தோன்ற மாட்டோம் என்று முடிவெடுத்துச் செயல்பட்டால், 8பில்லியன் கோடி டாலர் முதலீட்டில் இயங்கிவரும் இந்த அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் நட்டமடைந்துவிடும். இந்நிலையில் துருவிப்பார்க்கும் கண்களிலிருந்தும், மீடியாக்களின் வெளிச்சத்திலிருந்தும் பாதுகாப்பு வேண்டி ஏராளமான பெண்கள் இஸ்லாத்தில் இணைந்து வருவதை ஏன் மேற்கத்தியர்கள் கவலையுடன் நோக்க வேண்டும்? டோனிபிளையர் மனைவியின் சகோதரி லாரன்பூத், மர்யம் ஜமீலா(முன்னாள் மார்க்கரட் மர்க்யூஸ்), பிரிட்டிஸ் பத்திரிகையாளர் ஒன்னோ ரிட்லி, மலையாளக் கவிஞர் கமலா சுரையா போன்றோருக்கு இஸ்லாத்தில் அமைதியும் ஆறுதலும் கிடைக்கிறதென்றால், இது பற்றி மேற்குலகமும், பெண்ணிய வாதிகளும் ஏன் காலத்திற்கு ஒவ்வாத பழமை வாதம் கொண்ட பத்தாம் பசலித்தனமான இஸ்லாத்தில் மேற்குலகைச் சார்ந்த இத்தகைய பெண் விடுதலையாளர் களெல்லாம் இணைகிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கட்டும். மிகப் பெரும் பொருட் செலவில் ஆடை மற்றும் அழகு சாதனப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் நடத்தும் அலங்காரப் பேரணிகளில் கலந்து கொள்ளும் பெண்களை ஆடை அணியாமல் வரும்படி ஊக்கு விக்கிறார்களே, இதை பற்றி அவர்கள் கேள்வி எழுப்ப வேண்டாமா? குடும்ப அமைப்பு சிதறவும், தனிப்பட்டவர்கள் அமைதி இழக்கவும் காரணமாக அமைகின்ற இத்தகைய உடல் இச்சையைத்தூண்டும் அணிவகுப்புகளை ஏன் நடத்துகிறார்கள் என்று அவர்களிடம் கேள்விகள் கேட்க வேண்டாமா?

தங்களது விருப்பப்படி நடந்து கொள்ள பெண்களுக்கு முழு சுதந்திரம் உள்ள இன்றைய நவீன சமூக அமைப்பில் தங்களுக்கு விருப்பமான உடையைத் தேர்ந்தெடுத்து அணிந்து கொள்ள அவர்களைத் தடுப்பது எந்த வகையில் சரியாகும்? முக்காடோ, புர்காவோ அணியுமாறு ஒருவரைக் கட்டாயப் படுத்துவது ஒடுக்கு முறையென்றால், அதனை நீக்கும்படி கட்டாயப்படுத்துவதும் ஒடுக்குமுறை தானே? ஏன்

சுதந்திரத்தையும், சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள் முஸ்லிம்கள் விஷயத்தில் மட்டும் இந்த உடை தான் அணிய வேண்டும் என்ற உடைக்கோட்பாட்டைக் கட்டாயமாகத் திணிக்க வேண்டும்? முக்காடோ, புர்காவே அணிவது ஒரு முஸ்லிம் பெண்ணின் தனிப்பட்ட விருப்பமாகும். அதனை மற்றவர்கள் மதிக்க வேண்டும். மற்ற சமயத்தினரின் அடையாளங்களான தலைப்பாகை, தலைத் தொப்பி, சிலுவைச் சின்னங்கள் பதிக்கப்பட் பேழைகள் ஆகியவற்றை யாரும் ஆட்சேபிப்ப தில்லை. மாறாக மதிக்கின்றனர். கிறிஸ்துவ கன்னிப் பெண்கள் அணியும் உடுப்பை ஒத்ததுதான் முஸ்லிம் பெண்கள் அணியும் முக்காடும் புர்காவும்.

இஸ்லாமியப் பெண்களின் கண்ணியமான நேர்த்தியான உடை விஷயத்தில் மட்டும் ஏன் இந்த இரட்டை அளவுகோல்கள்? என்பது நமக்குப் புரியவில்லை. ஒருவரைப் போலவே மற்றவர்களும் நடந்து கொள்ள வேண்டும். என்று எதிர்பார்ப்பது சகிப்பத் தன்மையல்ல. மாறாக அவர்களைப் புரிந்து கொள்ள முடியாத போதும் அல்லது அவர்களுடன் முரண்படும் போதும் அவர்களின் விருப்பங்களை மதிப்பதே சிகிப்புத் தன்மையாகும்.

முடிவாக, முக்காடு அல்லது புர்கா அணியுமாறு பெண்களை இஸ்லாம் வலியுறுத்துவது அவர்களிடையே எந்த விதமான எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை. நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட இந்த இஸ்லாத்தின் செய்தி இன்றைக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பெண்கள் கண்ணியமிக்க தங்களது சமய அடையாளத்தைப் பிரதிபலிக்கின்ற இந்த ஆடையைப் பெருமையுடன் அணிந்து கொள்கின்றனர். மேலும், உலகெங்கிலுமுள்ள கோடிக் கணக்கான முஸ்லிம் பெண்கள் விருப்பத்துடனேயே தங்களது தலைகளை மூடிக்கொள்கின்றனர். மேற்கத்திய நாட்டினர் கூறுவது போல் இதில் எந்த விதமான கட்டாயமும் இல்லை. இறைவனை மகிழ்ச்சியடையச் செய்யவே முஸ்லிம் பெண்கள் ஆடை அணிகிறார்கள். மற்றப் பெண்களோ தாங்கள் வாழ்கின்ற சமூகங்களைத் திருப்திப்படுத்த அல்லது மகிழ்விக்க ஆடை அணிகிறார்கள். இதுதான் வேறுபாடு.

# கோஷா அறிவு மற்றும் நவீனத்தின் வெளிப்பாடு

2011ம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற ஏமன் நாட்டைச் சார்ந்த பெண்ணிய வாதியான தவக்கல் கார்மன் என்பவர் இஸ்லாமியப் பெண்கள் பெற்று வருகின்ற மதிப்பையும், கண்ணியத்தையும் மிகச் சிறந்த முறையில் பட்டிய லிட்டுள்ளார். நார்வே நாட்டின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற நோபல் பரிசு வழங்கும் விழாவில் அவர்கள் அபயா உடையணிந்து தலையில் முக்காடிட்டு கலந்து கொண்ட போது சர்வதேச அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் பெரும் வியப்புத் தெரிவித்தன. நீங்கள் அணிந்துள்ள கோஷா உங்களது கல்விக்கும் அறிவுத்தரத் திற்கும் பொருந்தி வரவில்லை என்பதையும், கோஷா அணிவது பெண்களை ஒடுக்கும் ஒரு பிற்போக்கான வழிமுறை என்பதையும் நீங்கள் உணரவில்லையா? என்று அங்குள்ளவர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு தவக்கல் கார்மன் பதிலளித்ததாவது:- ஆரம்ப காலங்களில் மனிதர்கள் நிர்வாணமாகவே இருந்தனர். அவர்களின் சிந்தனை வளர்ந்த போது உடைகள் அணிய ஆரம்பித்தனர். இப்போது நான் எப்படி இருக்கிறேன், என்ன உடை அணிந் திருக்கிறேன் இது பல்வேறு கால கட்டங்களில் மனிதன் பெற்ற அறிவு மற்றும் நவீனத்தின் வெளிப்பாடாகும். பிற்போக்குத்தனமாகாது நிர்வாணம் பிற்போக்குத் தனமானது. அது மனித சமுதாயத்தை பழங்காலத்திற்கு பின்னோக்கித் தள்ளுகிறது.

# விவாதத்திற்குறிய சில பிரச்சனைகள்

## கேள்வி: இஸ்லாமியச் சட்டப்படி வாரிசுரிமைச் சொத்தில் ஆணின் பங்கில் பாதி பெண்களுக்கு வழங்கப்படுகிறது?

பதில்: வாரிசுச் சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு என்று இஸ்லாம் உரிமை வழங்கியிருப்பதன் மூலம் அவர்களைப் பொருளாதார ரீதியில் சக்தி பெற்றவர்களாக ஆக்கியுள்ளது. இஸ்லாத்திற்கு முந்திய அரேபியாவில் மகன்களுக்கே தந்தையின் சொத்து முழுவதும் போய்ச் சேர்ந்தது. ஆனால் தகப்பனாரின் சொத்துக்களிலிருந்து மகன்கள் பெறும் சொத்தின் பாதிக்குச் சமமான சொத்து மகள்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென குர்ஆன் கட்டளையிட்டுள்ளது. பெண்களே ஒரு சொத்தாகக் கருதப்பட்டு, தந்தையின் இறப்பிற்குப் பின் மகன்களிடம் ஒப்படைக்கப்பட்ட அந்தச் சமுதாயத்தில் இது ஒரு பெரும் புரட்சிகரமான நடவடிக்கை யேயாகும். இதற்கு இரண்டு குறிக் கோள்கள் இருந்தன. முதலாவதாக இது பெண்களின் தனித்த அடையாளத்தை அங்கீகரித்து அவர்களும் மனித சமூகத்தின் ஒரு சுயேட்டையான அங்கமே எனக் கருதியது. இரண்டாவதாக பொருளாதார ரீதியில் பெண்களை வலிமையுடன் வைத்திருப்பது.

தகப்பனார்கள், கணவன்மார்கள், மகன்கள், மற்றும் குழந்தைகள் இல்லாத சகோதரர்கள் ஆகியோரின் சொத்துக் களிலும் பெண்களுக்குப் பங்கு உண்டு எனத் திருக்குர்ஆன் கட்டளையிட்டுள்ளது. அன் நிஸ்ஸா அத்தியாயத்தில் உள்ள மூன்று வசனங்களில் நெருங்கிய உறவினர்களின் சொத்துக்களில் பெண்களுக்குரிய பங்கு பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன. (11, 12, 176 வசனங்களைப் பார்க்கவும்). இந்த வசனங்களில் வாரிசுச் சொத்தில் குழந்தைகள், பெற்றோர் மனைவிமார்கள் ஆகியோருக்கு வழங்கப்பட வேண்டிய பங்கு பற்றி வரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றை மனிதர்களின் முடிவிற்கு அல்லாஹ் விட்டுவிடவில்லை. நெருங்கிய உறவினர்கள் இல்லாத போது, தூரத்து உறவினர்

கட்குப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டிய பங்கு பற்றியும் அதற்கான வழிமுறைகளும் அதில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மனிதனின் தேவைகள் பற்றி இறைவன் கொண்டுள்ள ஞானத்தின் அடிப்படையிலும் பல்வேறு வித்தியாசமான சூழ்நிலைகளில் குடும்ப உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்புகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டும் இந்த வாரிசுரிமை சொத்து பற்றிய சட்டங்கள் சரியான முறையில் வரையறுக்கப் பட்டுள்ளன.

இப்போதைய நிலவரப்படி பார்த்தால், ஒரு பெண்ணிற்கு தந்தையின் சொத்தில் ஆணுக்கு அளிக்கப்படும் பங்கில் பாதிதான் கிடைக்கும் என்பது நியாயமற்றது போல் தோன்றலாம். ஆனால் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் நிலவிய சூழ்நிலைகளைக் கருத்தில் எடுத்துக் கொண்டு பார்த்தால் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும், இஸ்லாமும் பெண்களுக்கு வாரிசுச் சொத்து கிடைக்கச் செய்வதில் மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்னேற்றகரமான பாதையை நோக்கி எடுத்து வைத்த அடிகளாகவே கருத வேண்டும். தங்களுக்கும் சொத்தில் பங்கு கிடைக்கும். அதன் உரிமையாளர்களாக இருக்கலாம் அதனைத் தாங்களே வைத்துக் கொள்ளலாம். செலவு செய்து கொள்ளலாம், முதலீடு செய்து கொள்ளலாம் என்பது பெண்களே கற்பனை செய்து பார்க்க முடியாத ஒரு அற்புத உரிமையாகும். தந்தையின் சொத்தை சமமாகப் பங்கிடுவதற்குப் பதிலாக, தந்தையின் சொத்திலிருந்து ஆண்களுக்குக் கிடைக்கும் பங்கின் பாதியினைப் பெறுவதற்கு பெண்கள் உரிமையுடையவர்கள்.

இனி, குடும்பத்திலும், சமூகத்திலும் பெண்களின் பங்களிப்பு பற்றியும், வாரிசுச் சொத்தில் அவர்கட்கு வழங்கப்பட்டுள்ள பங்கின் நியாயம் பற்றியும் நாம் ஆராய்வோம். சமூகத்தில் பெண்களின் பங்களிப்பைப் பற்றி ஆய்ந்து பார்த்தோமானால், இஸ்லாத்திலும், குர்ஆனிலும் அவர்கட்கு எந்த விதமான அநீதியும் இழைக்கப்படவில்லை என்பது தெரியவரும். ஆண்களை விடப் பெண்களின் பொருளாதாரப் பொறுப்புகள் குறைந்தவைதான். எனவே பெண்களின் பொருளாதாரப் பொறுப்புகளுக்குத் தகுந்தவாறு அவர்கட்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. குடும்பத்திற்கு வருமானம் ஈட்டுவதையும் அதனைப் பராமரிப்பதையும்

ஆண்கள் வசமே இஸ்லாம் ஒப்படைத்துள்ளது. ஆண்கள் தான் மனைவியையும், குழந்தைகளையும், பெற்றோர்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும். ஆண்கள் தான் அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், கல்வி என அனைத்தையும் வழங்க வேண்டும். தங்களது ஆண், பெண் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைப்பதும் அவர்களின் கடமையே! எனவே ஆண்களோடு ஒப்பிடும் போது, பெண்களின் உண்மையான குடும்பச் செலவு மிகக் குறைவே. இந்தச் சூழ்நிலையில், தனது குடும்பத்தைச் சார்ந்த ஆண்கள் பெறும் சொத்தில் பாதிப்பங்கு அவர்களுக்குக் கிடைத்தாலே அது அவர்களின் நியாயமான பங்கை விட அதிகமாகவும், நியாயமான சம பங்காகவும் இருக்கும். பெண்களின் நிலையைப் பார்த்தோமானால், அவர்கள் திருமணத்திற்கு முன்னர் தங்களது தந்தையர்களாலும், திருமணத்திற்குப் பிறகு தங்களது கணவன் மார்களாலும் அதன் பின்னர் தங்களது மகன்களாலும் பராமரிக்கப்படுகிறார்கள் (அவர்கள் கணவர்களை இழந்தவர்களாக இருந்தால்). அவர்களுக்குப் பொருளாதார ரீதியான கடப்பாடு ஏதும் இல்லாத சூழ்நிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பங்கு போதுமானது தான்.

ஆகையால், பாலினப் பாகுபாடு அல்லது ஒரு தலைச் சார்பு என்ற குற்றச்சாட்டில் எந்த விதமான உண்மையும் இல்லை. இஸ்லாம் பொருளாதார உரிமைகளுக்கும் ஆண்-பெண் ஆகிய இருபாலாரின் கடமைகளுக்குமிடையே ஒரு சம நிலையைப் பேணிட முயற்சி எடுத்துள்ளது என்பதையே இது காட்டுகிறது. பெண்கள் தங்களது சொத்துக்களையும், செல்வங்களையும், சேமிக்கவோ, முதலீடுகள் செய்யவோ முடியும். ஆனால் ஆண்கள் தங்களது சொத்துக்களையும் வருமானத்தையும் தங்களுடைய மனைவிக்காகவும், பிள்ளைகளுக்காகவும் செலவு செய்வதற்கு கடமைப் பட்டவனாக இருக்கிறார்கள். மேலும் சொத்தில் தாங்கள் பெறும் பங்குக்கு மேலதிகமாக, திருமணம் செய்து கொள்ளும் போது ஆண்கள் மணப் பெண்களுக்கு மஹர் கொடுக்க வேண்டியதுள்ளது.

ஒருவர் ஒரு மகனையும் ஒரு மகளையும் விட்டு விட்டு மரணமடைந்து விட்டார் என்று வைத்துக் கொள்வோம். வாரிசுரிமை மூலம் மகனுக்குக் கிடைக்கும் சொத்து, அவன்

தனது திருமணத்தின் போது மனைவிக்குக் கொடுக்கும் மஹர் மூலமாகவும், திருமணம் செய்து கொடுக்கும் வரை தனது சகோதரியை உள்ளடக்கிய குடும்பதைப் பராமரிப்பதன் மூலமாகவும், குறைந்து போவதற்கு வாய்ப்புகள் உள்ளன. வேலை செய்வதன் மூலம் தான் அவனுக்கு கூடுதல் வருமானம் கிடைக்க வாய்ப்புகள் உண்டு. அதே நேரத்தில் அவனது சகோதரியின் பங்கு அப்படியே குறையாமல் இருக்கும். அல்லது அவள் அதனை முதலீடு செய்திருந்தால், அந்தச் சொத்து அல்லது செல்வம் அதிகரிப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. திருமணமாகும் போது அவன் கணவரிடமிருந்து மஹர் பெற்றுக் கொள்வாள். கணவராலேயே பராமரிக்கப்படுவாள். அவளுக்கு எவ்விதமான பொருளாதாரச் சுமையும் இல்லை.

## கேள்வி: ஏன் முஸ்லிம் நாடுகளில் பெண் களுக்கு வாக்குரிமை வழங்கப்படவில்லை ?

*பதில்:* ஜனநாயக நடைமுறையைக் கடைபிடிக்கும் இஸ்லாமிய நாடுகளில் ஆண்-பெண் இரு பாலாருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டு அவர்கள் தேர்தலில் போட்டி யிடவும் அனுமதிக்கப்படுகின்றனர். முஸ்லிம் பெண்கள் வாக்களிக்கும் உரிமையை மட்டும் பெற்றிருக்கவில்லை. மாறாக சில நாடுகளில் அவர்கள் ஆட்சியின் தலைமைப் பொறுப்பிலும் இருந்துள்ளனர். துருக்கியில் 1993-96ம் ஆண்டுகளில் தன்ஸு சில்லர் என்ற பெண்மணி பிரதமராகப் பணியாற்றியுள்ளார். பங்களா தேசத்தில் தொடர்ச்சியாக இரண்டு பேகம்கள் 1991ஆம் ஆண்டிலிருந்து பிரதமராகப் பதவி வகித்து வருகின்றனர். பாகிஸ்தானில் பேநசீர் புட்டோ இரண்டு முறை பிரதமராக இருந்துள்ளார். உலகிலேயே முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் இந்தோனிஷியாவில் மேகவதி சுகர்னோபுத்ரி நான்காண்டுகள் பிரதமராகப் பதவி வகித்துள்ளார். ஆறு வளைகுடா நாடுகளில் மட்டுமே ஜனநாயகம் இல்லை. அங்கு மன்னராட்சி நடக்கிறது. எனவே ஆண்-பெண் இருபாலாருக்கும் அங்கு வாக்களிக்க உரிமை வழங்கப்படவில்லை. ஆனால் குவைத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி இருக்கிறார். அங்கு பெண்களுக்கு வாக்குரிமை உண்டு. தேர்தல்களிலும் போட்டி யிடுகிறார்கள். எனினும் குவைத் பாராளுமன்றத்தின்

அதிகாரங்கள் வரையறைக்குட்பட்டவை. பாராளுமன்றத்தின் முடிவுகளை மாற்றியமைக்க மன்னருக்கு அதிகாரம் உண்டு.

சவூதி அரேபியாவிலும் ஜனநாயக முறை துவங்கி விட்டது. அங்கு உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஆனால் அத் தேர்தல்களில் ஆண்கள் மட்டுமே வாக்களிக்க முடியும். 2015ஆம் ஆண்டிற்குப் பிறகு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படும் என்று அந்நாடு உறுதிமொழி அளித்துள்ளது. பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையும் தேர்தல்களில் போட்டியிடும் உரிமையும் வழங்கப்பட வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவதால் மன்னராட்சிக்கு உட்பட்ட இந்த நாடுகளும் விரைவிலேயே ஜனநாயகப்பாதைக்குத் திரும்பும் என நம்பப்படுகிறது. ஆனாலும், பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுவதற்கு முன்பு அந்த நாடுகளில் ஜனநாயகம் மலர வேண்டும். பல மேற்கத்திய நாடுகளில் சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் தான் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் சர்வாதிகார ஆட்சி முறை முஸ்லிம் நாடுகளுக்கு மட்டுமே உரியதல்ல. இன்றைக்கு உலகின் மிகப் பெரிய வல்லரசுகளில் ஒன்றாகத் திகழும் சைனாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வாதிகார ஆட்சியே இருக்கிறது. அங்கு யாருக்கும் வாக்குரிமை இல்லை. இஸ்லாத்தைப் பொறுத்த வரை, அரசியல் விஷயங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் எந்த விதமான பாகுபாடும் இல்லை. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் மறைவிற்குப் பின்னர், மிகுந்த விரிவான ஆலோச னைகளுக்குப் பின்னரே கலீபாக்கள் தேர்ந்தெடுக் கப்பட்டனர். இந்த கலந்தாலோசனையில் ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். கலீபா தேர்ந்தெடுக் கப்பட்டவுடன் ஆண்களும், பெண்களும் கலீபாவைச் சந்தித்து அவருக்குத் தங்களது ஆதரவினைத் தெரிவிக்கும் உறுதிமொழியினை அளித்தனர்(பைஅத்)

இஸ்லாமிய வரலாற்றின் துவக்க காலகட்டத்தில் மூன்றாவது கலீபாவைத் தேர்ந்தெடுக்கும் போது, புகழ் பெற்ற நாயகத் தோழரான அப்துல் ரஹ்மான் இப்னு அவூஃப் என்பார் மதினா நகரத்தில் வாழ்ந்த அனைவரையும் சந்தித்து இஸ்லாமியப் பேரரசின் கலீபாவாக யார் வரவேண்டும் என்று

கேட்டு அவர்களின் கருத்துக்களை அறிந்து கொண்டார். இந்த கருத்தறியும் முயற்சியின் போது அவர் மதினாவில் வசித்து வந்த பெண்களையும், பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்களையும் சந்தித்தார். இந்த முயற்சிக்குப் பின்னர் அவர் அறிவித்ததாவது:-

"நான் மதினாவிலுள்ள ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் என ஒவ்வொருவரையும் சந்தித்து அவர்களிடம் கருத்துக் கேட்டேன். அனைவரும் ஹழ்ரத் அலீயை(ரலி) விட ஹழ்ரத் உதுமானே (ரலி) கலீபாவாக வேண்டுமென விருப்பம் தெரிவித்துள்ளனர். (அவாஸின் மினல் குவாஸிம் - இப்னு அல் அரபி) வீடுகளில் மறைவாக வாழ்ந்து வந்த பெண்களிடம் அரசியல் பற்றி ஆலோசனைகள் நடத்தப்பட்டதையே இச் செய்தி நமக்கு உணர்த்துகிறது. எனவே பெண்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டதற்கான எந்த விதமான சான்றுகளும் இஸ்லாத்தில் இல்லை. ஒருமித்த கருத்து ஏற்படுத்துவதில் நாட்டம் கொண்டிருந்த தோழர்கள் கடைப்பிடித்த நடைமுறைகளுக்கு இந்தக் கருத்து முரணானதாகும். முதல் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகே இஸ்லாத்தில் பெண்களின் தகுதி குறைக்கப்பட்டு அவர்கள் இரண்டாந்தர நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

## பெண்கள் கல்வியும், வாகனங்கள் ஓட்டுவதற்கான உரிமையும்

முஸ்லிம் பெண்கள் பள்ளிகூடங்களுக்குச் சென்று கல்வி பயின்றிட அனுமதிக்கப்படவில்லையெனவும், உயர் கல்வி கற்றிட அனுமதிக்கப்படவில்லை எனவும், சில நாடுகளில் முஸ்லிம் பெண்கள் வாகனங்கள் ஓட்டுவதற்கான உரிமங்கள் வழங்கப்படுவதில்லையென்றும் ஒரு பொதுவான கருத்து நிலவி வருகிறது. இஸ்லாமிய ஷரிஅத் சட்டங்களும் இவற்றுக்கு ஏதாவது சம்பந்தம் உள்ளதா? என்பது பற்றி ஆராய்வோம்.

ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் கல்வி பயின்றிட வேண்டும் என்ற உரிமையை இஸ்லாம் அங்கீகரிக்கிறது. கல்வி கற்பது ஆண்-பெண் இருபாலாரின் கட்டாயக் கடமையாகும் என நபிகள்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். பெரும்பாலான வளைகுடா நாடுகளிலும், எகிப்திலும் உள்ள

பல்கலைக்கழகங்களில் மாணவர்களை விட அதிக எண்ணிக்கையில் மாணவிகளே கல்வி பயில்கின்றனர்.

பொது மக்களில் அதிக எண்ணிக்கையில் பட்டம் பெற்றவர்களும் பெண்களே ! பெண்களுக்கு கல்வி கற்பதற்கான வசதிகள் கடந்த முப்பது ஆண்டுகளில் அதிக அளவில் அளிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். ஆப்கானிஸ்தானிலுள்ள தாலிபான்கள் தான் பெண்கள் பயிலும் பள்ளிக்கூடங்களைக் குண்டுவைத்துத் தகர்த்தனர். அவர்களது செயல்களுக்கும் இஸ்லாத்திற்கும் எந்த விதமான சம்பந்தமுமில்லை.

கார்கள் மற்றும் வானங்கள் ஓட்டுவதற்கு பெண்களுக்கு அனுமதி அளிக்கும் விஷயத்தில் சவூதி அரேபியா தான் சற்று இறுக்கமான நிலையினை மேற்கொண்டுள்ளது. சவூதி அரேபியா ஒரு பழமைவாத மன்னராட்சிக்கு உட்பட்ட நாடாகும். பெண்களுக்கு கார் ஓட்ட உரிமங்கள் வழங்குவது ஆண்-பெண் இருபாலாரும் கூடிப் பழகுவதற்கு வழிவகுத்து விடும் என அங்குள்ள ஆட்சியாளர்கள் அஞ்சுவதே இதற்குக் காரணமாகும். ஆனால் இஸ்லாமிய ஷரீஅத் சட்டம் பெண்கள் வாகனங்களை ஓட்டுவதற்கு தடை செய்யவில்லை. நபிகளார் காலத்தில் பெண்கள் குதிரை மற்றும் ஒட்டகங்களின் மேல் அமர்ந்து கொண்டு பயணம் செய்துள்ளனர். கூடிப் பழகுவதற்கு வழி வகுத்துவிடும் என்ற ஒரே காரணத்திற்காக பெண்கள் வாகனங்கள் ஓட்டுவதற்கு ஒட்டு மொத்தத் தடை விதிப்பது தேவையற்றது. எந்த நாடு இதனைச் செய்தாலும், அது தனது சொந்த கோதாவிலேயே செய்கிறது, இது ஷரீஅத்திற்குப் புறம்பானதாகும். இது போன்ற கட்டுப்பாடுகளுக்கு இஸ்லாத்தைக் குறை கூறுவது சரியல்ல.

## பலதார மணமும், ஒருதார மணமும்

ஒரே நேரத்தில் ஒரு மனிதனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால், அது பலதாரமணம் என அறியப்படுகிறது. ஒரு நேரத்தில் ஒரு மனைவியை மட்டுமே கொண்டிருப்பது ஒருதார மணம் என்பதாகும்.

# மேற்கத்திய ஆயுதம்

காரணங்களையோ, நோக்கத்தையோ தெரிந்து கொள்ளாமல் இஸ்லாத்தின் எதிரிகளும், அறியாமை கொண்ட சிலரும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் புரிந்திட்ட பலதார திருமணம் பற்றி குறை கூறி வருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுகள் வரலாற்றுப் பின்னணியற்றவை. பகுத்தறியும் தன்மையற்றவை. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மனித சமுதாயத்தின் நாகரீகத்திற்கும் கலாச்சாரத்திற்கும் அளித்திட்ட பெரும் பங்களிப்பை கவனத்தில் கொள்ளாது அறியாமை காரணமாகவும், சமயக் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் நபிகளார் மீதும், இஸ்லாத்தின் மீதும் கொண்ட வெறுப்புணர்ச்சி காரணமாகவும் கூறப்படும் குற்றச் சாட்டுகளே இவை.

ஒரு தார மணம் ஒரு அறநெறிப் பண்பெனக் கூறும் மேற்கத்தியச் பிரச்சாரம் ஒரு புதிய கண்டுபிடிப்பே என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மத்திய காலத்தில் பலதார மணம் உலகெங்கும் இருந்து வந்தது. சமூக அந்தஸ்து எனக்கருதி நூற்றுக்கணக்கான மனைவியரைக் கொண்டிருந்தவர்கள் மேற்கத்திய சமூகத்தில் இருந்தனர். ஈஸா நபியைத் தவிர (ஜீஸஸ்) பெரும்பாலான நபிமார்கள் திருமணம் செய்து கொண்டவர்களே. துறவிகள் கூட ஆசை நாயகிகளை வைத்திருந்தனர். அரேபியாவில் கால் நடைகளைக் காட்டிலும் பெண்கள் மோசமாக நடத்தப்பட்டனர். பிறந்த பெண் குழந்தைகளை தந்தைமார்களே கொன்றனர். சமூக வசதிக்காகவே திருமண உறவுகள் ஏற்படுத்தப்பட்டன. விவாகரத்துக்கள் பெருமளவில் இருந்தன. இன்றைய மேற்கத்திய நாகரீகத்தில் வரைமுறையற்ற பாலுறவுகள் (ஒருவர் பல பெண்களுடன் உறவு வைத்துக் கொள்வது) ஒரு விதியாகவே மாறிவிட்டன.

இன்றைக்கும் கூட உலகின் மேற்கு நாடுகளிலும் சரி கிழக்கு நாடுகளிலும் சரி, பலதாரமணம் முஸ்லிம்கள் மற்றும் அல்லாதவர்கள் என அனைவரிடமும் உள்ளது. இவற்றில் சில சட்டப்பூர்வமானவை. சில சட்டத்திற்குப் புறம்பானவை. சில வெளிப்படையாகவும், சில ரகசியமாகவும் உள்ளன.

திருமணமான பெரும் எண்ணிக்கையிலானோர் தனிப்பட்ட முறையில் ஆசை நாயகிகளை வைத்திருப்பதும், விரும்பு கிறவர்களின் இல்லங்களுக்குச் செல்வதும், பிற பெண்களுடன் வெளியே வலம் வருவதும் இன்றைக்கு வாடிக்கையான நிகழ்வுகளாகி விட்டன. இதனை அறிந்து கொள்ள ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை. அறநெறியாளர்கள் விரும்பு கிறார்களோ, இல்லையோ முறையற்ற பல தாரமணங்கள் இன்றைக்கு அங்கிங்கெனாதபடி எங்கும் உள்ளன.

## ஜூடிஸம் - பலதார மணம்

பைபிள் மற்றும் தல்மூத் காலகட்டங்களில் இஸ்ர வேலர்கள் பலதார மணம் புரிபவர்களாகவே இருந்துள்ளனர். சிலருக்கு நூற்றுக்கும் மேற்பட்ட மனைவியரும் உண்டு. தல்முதீக் மொசைக் சட்டங்கள் பலதாரமணத்தை ஊக்குவித் துள்ளன அவர்களிடம் வருகைதந்த பெரும்பாலான நபிமார் களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர்கள் உண்டு.

விக்கி பீடியா தகவல்களின் படி, நபி இப்ராகிம்(அலை) அவர்களுக்கு சாரா, ஹாஜிரா என இரு மனைவிமார்களும், நபி சுலைமான் (அலை) அவர்கட்கு 700 மனைவியர்களும், 300 ஆசை நாயகிகளும், யாகூப் நபியவர்களுக்கு நான்கு மனைவியர்களும், தாவூத் நபியவர்களுக்கு எட்டு மனைவியர்களும், நபி மூஸா(அலை) அவர்களுக்கு நான்கு மனைவிகளும் (சஃபைபர், கிப்சியா, பின்ட்கினி, பின்ட் ஹூபாப்) இருந்தனர். பிப்ளிகா கலைக் களஞ்சியத்தின் படி, ஒரு சாதாரண யூதன் நான்கு மனைவியரைத் திருமணம் செய்யலாம் எனும் நிலை இருந்தது, ஒரு யூத மன்னர் பதினெட்டுப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற நிலை இருந்து வந்தது. இந்த பலதாரமண முறை ராபி ஜெர்ஷோம் பின் யாஹூதா காலம் வரை தொடர்ந்தது (கி.மு. 630 – 1030) அவர் தான் இந்த முறைக்கு எதிராக ஒரு பிரகடனம் வெளியிட்டார். யூத ஆடு மேய்க்கும் கூட்டத்தினர் கி.பி 1950 வரை இந்த பழக்கத்தைக் கொண்டிருந்தனர். பின்னர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணந்து கொள்ளக் கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டு பலதாரமணம் தடை செய்யப் பட்டது.

எனினும் கிறிஸ்துவ, யூத சமயங்கள் எப்போதும் ஒருதார மணக் கொள்கையையே கொண்டிருந்தன என்றோ, பலதார மணத்தை எதிர்த்து வந்தன என்றோ கூறுவது சரியாக இருக்காது. இப்போதும் இதே நிலைதான் என்று எஸ்.டி.கோய்டியன், (நூல்: யூதர்களும் அரபிகளும்) எல்.டி.ஹாப்ஹவுஸ் (நூல்: பரிணாம நெறி முறைகள்), ஈ.ஏ.வாஸ்டர்மார்க் (நூல்: திருமணம் பற்றிய வரலாறு) போன்ற யூத அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இடம் பெயர்ந்து வந்து இஸ்ரேலில் குடியேறிய யூதர்களின் பலதார மணம் காரணமாக அந்நாட்டு வீட்டு வசதி வாரிய அதிகாரிகளுக்கு பெரும் தொல்லைகளும், பிரச்னைகளும் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கிறிஸ்துவ அறிஞர்களின் நிலை நன்கு தெரிந்தது தான். ஆப்ரோ ஆசிய கிறிஸ்துவப் பாதிரிமார்களும் விபச்சாரம், மணமாகாத ஆண்-பெண் உறவு, படுக்கையைப் பகிர்ந்து கொள்ளல் ஆகியவற்றிற்கு மாற்றாக பலதார மணத்திற்கு முன்னுரிமை கொடுத்தனர்.

கடுமையான ஒருதார மணத்திற்கும், விபச்சாரம், ஒருபால் உறவு, களவு வாழ்க்கை, துரோக வாழ்க்கை, பாலுறவு விருப்பமின்மை ஆகியவற்றுக்கு முள்ள தொடர்புகளையும் சம்பந்தங்களையும் ஆராய்ந்தால் பல விஷயங்கள் வெளிப்படும். கிரேக்க-ரோம் மற்றும் யூத - கிறிஸ்துவ நாகரீகம் பற்றிய வரலாற்றுப்பதிவுகள் இது சம்பந்தமாக மேலும் பல தெளிவான விளக்கங்கங்களை நமக்குத் தருகின்றன.

## கிறிஸ்துவம் - பலதார மணம்

பைபிள் அருளப்பட்ட காலத்தில், பலதார மணம் புழக்கத்தில் பெருமளவு இருந்து வந்தது. நபி ஈஸா (அலை) அவர்கள் பலதாரமணத்தை எதிர்த்துப் பேசியதாகத் தெரியவில்லை. அது சமய, சமுதாய, தார்மீக ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பழக்கமாகவே இருந்து வந்துள்ளது. அதற்கு தடை எதுவும் இல்லை. இதனால் பைபிளில் இது பற்றி எதுவும் கூறப்படவில்லை. பைபிள் இதனைத் தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ, முறைப்படுத்தவோ

இல்லை. பைபிளில் கூறப்பட்டுள்ள பத்து கன்னிப் பெண்களின் கதையை, ஒரே நேரத்தில் பத்துப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வதற்கான அனுமதி என சிலர் எடுத்துக் கொண்டுள்ளனர். இது சம்பந்தமாக பைபிளில் கூறப்பட்டுள்ள நபிமார்கள், அரசர்கள், குலத்தலைவர்கள் ஆகியோரின் கதைகள் நம்ப முடியாதவைகளாக உள்ளன.

ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொண்ட கிறிஸ்துவ அரசர்களின் கதைகள் ஏராளமாக உள்ளன. பிரடெரிக் வில்ஹெல்ப் II, மற்றும் பிலிப் ஆகியோர் சர்ச் மற்றும் செயின்ட் லூதர் அனுமதி பெற்று ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொண்டனர். கி.பி.1650ல் நூரம்பர்க்கில் நடைபெற்ற மாநாட்டில், மக்கள் தொகை குறைவுப் பிரச்சனையைச் சமாளிக்க ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்ளலாம் என்று அனுமதி வழங்கப்பட்டது.

17ம் நூற்றாண்டு வரை, கிறிஸ்துவ சர்ச்சுகளால் பலதார மணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறையில் இருந்தது. மார்மோன்ஸ் (ஜீஸஸ் கிறிஸ்துவின் பிந்தைய கால துறவிகளின் சர்ச்) பலதார மணத்திற்கு அனுமதி வழங்கியது. அவர்களும் பலதார மணம் புரிந்தனர்.

இதிலிருந்து பலதார மணம் ஒரு சட்டப்பூர்வமான முறையாக அனைத்து நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பதையும், யூதர்களின் நபிமார்களும் பலதார மணம் புரிந்துள்ளனர் என்பதும், நபி ஈஸா (இயேசு கிறிஸ்து) அதனை எதிர்க்கவில்லை என்பதும் தெரியவருகிறது.

ஒரு தார மணம்,புனித பால் காலத்தில் தான் கிறிஸ்துவ சமுதாயத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. அப்போது தான் கிறிஸ்துவ சமயத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. கிரேக்க ரோமானியக் கலாச்சாரத்திற்கேற்ப இந்த மாற்றம் செய்யப்பட்டது. இந்தக் கலாச்சாரத்திற் குட்பட்டிருந்த மக்கள் ஒரு தார மணத்தைக் கடைப்பிடித்த போதிலும் அவர்களிடமிருந்த அடிமைப் பெண்களை தங்கள் விருப்பம் போல் அனுபவித்தனர். சுருங்கச் சொன்னால், அவர்கள் வரைமுறையற்ற பல தார மணத்தைக் கடைப்பிடித்தனர்.

ஆரம்பகாலக் கிறிஸ்துவர்கள் பெண்களைப் பாவம் நிறைந்தவர்கள் என்றும், திருமணம் செய்யாமலிருப்பதே ஆண்களுக்கு நல்லது என்றும் கருத்துக் கொண்டிருந்தனர். இது, மனித சமுதாயத்தின் முடிவுக்கு வழிவகுக்கும் என்பதால், தங்களது கருத்தோடு சமரசம் செய்து கொண்டு, ஒருவரை மட்டும் மணந்து கொள்ளுங்கள் என்று கூற ஆரம்பித்தனர்.

## ஹிந்துயிஸம் - பலதார மணம்

புராதன காலத்திலிருந்து, பலதார மணம் என்பது மனித சமுதாயத்தில் நடைமுறையிலிருந்த ஒரு பழக்கமாகவே இருந்து வந்துள்ளது. உலகில் தோன்றிய எந்த நாகரீகமும் இந்தப் பழக்கத்திற்கு விதிவிலக்காக இல்லை. புராதான இந்தியாவில் பல பெண்களை மணப்பது ஒரு அனுமதிக்கப்பட்ட பழக்கமாக இருந்ததோடு மட்டுமல்லாது பலரும் அப்பழக்கதைக் கடைப்பிடித்தனர். பல ஹிந்து கடவுள்களும், அவதாரங்களும் பலதார மணம் புரிந்து கொண்டிருந்ததாக ஹிந்துப் புராணங்களும், ரிக்வேதம் போன்ற வேத நூல்களும் கூறுகின்றன. இராமனின் தந்தையான தசரத மகாராஜாவுக்கு கௌசல்யா, சுமத்ரா, கைகேயி என மூன்று மனைவியர்கள் இருந்தனர். ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு 16100 மனைவியர்கள் இருந்தனர் அவர்களில் ராதை, ருக்மணி, சத்யபாமா, ஜம்பா தேவி, சத்யா, லக்ஷ்மணா, காளிந்தி, பத்ரா, மிஷ்ரவிந்தா ஆகியோர் முக்கியமானவர்கள்.

ஹிந்து சமய நூல்களான வேதங்களிலும் சரி மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களிலும் சரி, பகவத்கீதையிலும் சரி ஒருவர் எத்தனை பெண்களைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று எந்த வரையறையும் சொல்லப்படவில்லை. இந்த வேத நூல்களின் படி ஒருவர் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம். 1955 ஆம் ஆண்டு ஹிந்து திருமணச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகுதான், ஹிந்துக்களிடையே பலதாரமணம் தடை செய்யப்பட்டது. தற்போது, இந்தியச் சட்டத்தின் படி தான் ஹிந்துக்களிடையே பலதார மணம் தடை

செய்யப்பட்டுள்ளதே தவிர, ஹிந்து வேதங்களில் கூறப்பட்டுள்ள உபதேசங்களின் அடிப்படையில் அல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## மேற்கத்திய சமூகம் - பலதார மணம்

மேற்கத்திய சமூகத்தில், கணவன் - மனைவி உறவில் சிக்கல் நேரிடுகின்ற போது, கணவன், மனைவியை விட்டு விலகிச் சென்று விடுகிறான். பிறகு வேறொரு பெண்ணுடன் திருமணம் செய்து கொள்ளாமலேயே வாழ்கிறான். மேற்கு நாடுகளில் மூன்று வகையான பலதார மணம் கடைப்பிடிக்கப்படுகிறது. 1) தொடர் பலதார மணம்: இது, திருமணம் - விவாகரத்து - பின்னர் திருமணம் - மீண்டும் விவாகரத்து எனும் நிலையில் அமைந்தது. 2) ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டுள்ள ஒரு ஆண், ஒன்றுக்கு மேற்பட்ட பிற பெண்களுடன் உறவு கொண்டிருப்பது (3) திருமணம் ஆகாத ஒருவன் பல பெண்களுடன் தொடர்பு கொண்டிருப்பது. மேற்கு நாடுகள் இதனை அனுமதிக்காத போதிலும், நடைமுறையில் அது ஒரு பலதாரமண சமூகமாகவே உள்ளது. இது பற்றி டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் மேற்குலகில் ஒரு தார மணமே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நடைமுறையில் எந்தப் பொறுப்பையும் ஏற்காத ஒரு பலதார மணச் சமூகமே உள்ளது. சலித்துப் போனவுடன் பெண்ணைக் ஆண் கைவிட்டு விடுகிறான். அவள் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அவளது எதிர்காலத்திற்கு முதல் காதலன் எந்தப் பொறுப்பும் ஏற்பதில்லை.

ஒரு பலதார மணக் குடும்பத்தில் வாழ்கின்ற பெண்ணை விட அவளது நிலைமை நூறு மடங்கு மோசமாக உள்ளது. அத்தகைய ஆயிரக்கணக்கான அபலைப் பெண்கள் மேற்கு நாடுகளின் வீதிகளில் இரவு நேரத்தில் குவிந்து கிடக்கின்ற காட்சியினை நாம் பார்க்கின்ற போது, பலதார மணத்தைப் பற்றி நிந்தித்துப்பேச மேற்கு நாடுகளைச் சார்ந்தவர்கட்கு எந்த தகுதியும் இல்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும். தெருக்களில் அலைந்து கொண்டு சட்டத்திற்கு புறம்பான

குழந்தையை வைத்துக் கொண்டு வீடின்றி கவனிப்பாரற்று தெருவில் வருவோர் போவோரெல்லாம் இகழத் தக்க வாழ்க்கை வாழ்வதைக் காட்டிலும், பலதார மணக் குடும்பம் ஒன்றில், குழந்தைகளுடன் மரியாதையுடனும், கண்ணி யத்துடனும் வாழ்வது தான் ஒரு பெண்ணுக்கு நல்லதாகும் என்று கூறியுள்ளார். சம்மதத்தின் பேரில் வயதுக்கு வந்தவர்கள் வரைமுறையற்ற பாலியல் உறவுகளில் ஈடுபடுவதை அனுமதிக்கும் மேற்கத்திய சமூகத்தில் தகப்பனற்ற குழந்தைகளும், திருமணமாகாத இளம் தாய்மார்களும் நிறைந்து காணப்படுகின்றனர். இவர்கள் சமூகத்தில் பெரும் சுமையாகக் கருதப்படுகின்றனர். சில மேலை நாட்டுக்காரர்கள், ஒரு தார மணம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது என்று கூறுகின்றனர். ஆனால், இவர்கள் உண்மையிலேயே பெண்களின் உரிமைகளைப் பற்றிக் கவலைப் படுகிறார்களா? பெண்களைச் சுரண்டுகின்ற, நசுக்குகின்ற பல நடைமுறைகள் இன்றைய சமூக அமைப்பில் உள்ளன. இதன் காரணமாகப் பெண் விடுதலை இயக்கங்கள் தோன்றியுள்ளன. பல பெண்ணிய வாதிகளும் உருவாகியுள்ளனர்.

மேற்கத்திய சமூக அமைப்பில் ஒருதார மணம் ஆண்களைப் பாதுகாத்து அவர்கள் எந்த விதமான பொறுப்புணர்வுமின்றி சுற்றிலும் மேய்ந்திட வழி வகுக்கிறது, எளிதான, சட்டரீதியான கருக்கலைப்பு, முறையற்ற பாலியல் உறவுக்கான கதவுகளைப் பெண்களுக்குத் திறந்து விட்டுள்ளது இதனையே பாலுறவுப் புரட்சி என அழைக்கின்றனர். ஆனால் அவளோ குடும்பக் கட்டுப்பாட்டு முறையின் தொல்லை களையும், கருக்கலைப்பினால் ஏற்படும் பின்விளை வுகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. பால்வினை, எய்ட்ஸ் போன்ற நோய்களால், பெண்கள் பாதிக்கப்படும் நிலையில், ஆண்கள் எந்த விதமாக கவலையுமின்றி சுதந்திரமாக இருக்கிறார்கள். ஒரு தார மணம் காரணமாக ஆண்கள் பாதுகாப்புப் பெறும் போது, பெண்கள் தொடர்ந்து ஆண்களின் ஆசைக்குப் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். பலதார மணம் ஆணாதிக்க சமுதாயத்தால் பெரிதும் எதிர்க்கப் படுகிறது. இதற்குக் காரணம் அது ஆண்களை பொறுப்பாளி களாகவும், நன்நடத்தையாளர்களாகவும் இருக்கும்படி கட்டாயப் படுத்துகிறது. பலதார மணம் செய்து கொண்ட

ஆண்களுக்கு தங்களது மனைவிகளையும், குழந்தைகளையும் பராமரித்துப் பாதுகாக்கின்ற பெரும் பொறுப்பு உள்ளது. இதிலிருந்து அவர்கள் தப்பிக்க இயலாது.

## இஸ்லாம் - பலதார மணம்

மேற்குலகிலும் சரி, கிழக்குலகிலும் சரி, ஒரு முஸ்லிம் உடல் இச்சை உள்ளவன் என்றும், முஸ்லிம்கள் வரையறைக் குட்பட்டோ அல்லது வரையறையின்றியோ பெண்களைத் திருமணம் செய்து கொள்பவர்களென்றும் ஒரு கருத்து நிலவி வருகிறது. கணக்கற்ற மனைவியர்களை கொண்டிருக்க முஸ்லிம்கள் முழு சுதந்திரம் பெற்றுள்ளனர் என்றும், அது ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு மாறுவது போல் எளிதானதென்றும் அவர்கள் நினைக் கின்றனர். உணர்ச்சியைக் கிளறக்கூடிய சில திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர் கதைகள், மலிவு விலைக் கதைகள், ஊடகங்களின் தவறான சித்தரிப்பு, சில முஸ்லிம் தனி நபர்களின் பொறுப்பற்ற போக்கு ஆகிய காரணங்களாலேயே இது போன்ற கருத்துக்கள் வேரூன்றியுள்ளன.

துரதிருஷ்டவசமாக, குர்ஆன் கற்பித்துள்ளதற்கும், நபிகளாரின் வழிகாட்டுதலுக்கும் மாறாக சில முஸ்லிம் அரசர்கள் எந்த விதமான குற்ற உணர்வுமின்றி நடந்து கொண்டு அதன் மூலம் நபிகளாரின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தி இதுபோன்ற ஒரு தவறான பிரச்சாரம் செய்யப்பட வழிவகுத்து விட்டனர். இதன் விளைவு என்ன வென்றால், இது போன்ற பிரச்சாரம் காரணமாக பல லட்சக்கணக்கான மக்கள் இஸ்லாத்தின் பிரகாசமான ஒளியை, அதன் தத்துவார்த்தமான கொள்கைகளைப் பார்ப்பதினின்றும் தடுக்கப்பட்டுள்ளனர். அத்தகைய எண்ணம் கொண்டவர்களுக்காகவே கீழ்க்கண்ட விளக்கங்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இதனை நன்கு படித்து சுயமாக ஒரு முடிவுக்கு வரலாம்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இஸ்லாத்தை மக்களிடம் எடுத்துரைத்த போது, அந்த சமூகத்தில் பலதார மணம் பரவலாக இருந்தது. அந்தப் பழக்கம் ஆழமாக வேர் விட்டிருந்தது. குர்ஆன் இந்தப் பழக்கத்தை புறக்கணித்து.

அதனை கைவிடச் சொல்லவில்லை. அல்லது அதனை எந்த விதமான வரை முறையுமின்றி தொடரச் சொல்லவும் இல்லை. பலதார மணத்திலுள்ள குழப்பங்களையோ, பொறுப்பற்ற தன்மைகளையோ குர்ஆன் கண்டு கொள்ளாமலில்லை. பொறுத்துக் கொள்ளவும் இல்லை.

ஏற்கனவே அப்போது நிலவி வந்த சமுதாய பழக்க வழக்கங்களையும் நடை முறைகளையும் நெறிப்படுத்தியது போல் இந்த முறையையும் செம்மைப்படுத்தி அதிலுள்ள தீமைகளை அகற்றி நன்மைகளை உறுதி செய்திட குர்ஆன் வழிவகை செய்தது. சமூகத்தின் அடித்தளமாக இருக்கும் குடும்ப அமைப்பில் எந்த விதமான குழப்பமும் நேராது பாதுகாத்து அதனை நேர் செய்யவே குர்ஆன் இந்த விஷயத்தில் தலையிட்டது. ஒருவரை மட்டுமே மணந்து கொள்ளுங்கள் என்று சொன்ன ஒரே சமய வேதநூல் திருக்குர்ஆனே ஆகும். திருக்குர்ஆனின் மூன்றாவது அத்தியாயமான அந்-நிஸாவில் வரும் கீழ்க்கண்ட இறைவசனங்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

> உங்கள் மனதிற்கு விருப்பமான இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு பெண்களைத் திருமணத் செய்து கொள்ளுங்கள். அவர்களிடம் நீதமாக நடந்து கொள்ள முடியாது என்று நீங்கள் அஞ்சும் பட்சத்தில் ஒரு பெண்ணை மட்டுமே திருமணம் செய்து கொள்ளுங்கள்.

குர்ஆன் வசனங்கள் அருளப்படுவதற்கு முன்னர், பலதார மணத்திற்கு எந்தவிதமான அதிகபட்ச வரம்பும் இல்லை. ஆண்கள் பல மனைவியரைத் திருமணம் செய்து கொண்டிருந்தனர். ஆனால் குர்ஆன், நான்கு மனைவியர்கட்கு மேல் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று உச்சவரம்பு விதித்தது. அதற்கும் பல நிபந்தனைகளை விதித்துள்ளது. ஒரு மனிதன் தனது அனைத்து மனைவியர்களையும் சமமாக நடத்த வேண்டும். அவர்களிடம் பிரியம் காட்டுவதிலும் சமமாக நடந்து கொள்ள வேண்டும். ஆனால் அப்படி மனிதர்களால் நடந்து கொள்ள முடியாது என்பதையும் குர்ஆன் தெளிவு படுத்தியுள்ளது.

> மனைவியர்களுக்கிடையே முழுக்க முழுக்க

நீதியாக நடந்து கொள்ள நீங்கள் விரும்பினாலும், அது உங்களால் முடியாது. எனவே நீங்கள் (ஒரு மனைவியின் பக்கமே) முற்றிலும் சாய்ந்து மற்றவளை அந்தரத்தில் விடப்பட்டவள் போல் ஒதுக்கிவிடாதீர் (திருக்குர்ஆன் 4:129).

நியாயமாக நடந்து கொள்ள வேண்டுமென்பதை இது வலியுறுத்துகிறது. ஆனால் சில விசேட சூழ்நிலைகளில் இஸ்லாம் பலதார மணத்தை அனுமதிக்கிறது அவையாவன.

1. மனைவி குழந்தை பெற இயலாத மலட்டுத் தன்மை கொண்டவளாக இருக்கிறாள். ஆனால் கணவன் குழந்தை வேண்டுமென விரும்புகிறான். இந்தச் சூழ்நிலையில் மலட்டுத் தன்மை கொண்ட மனைவியை விவாகரத்துச் செய்வதை விட, இரண்டாவதாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் கணவனின் இந்த இரண்டாம் திருமணம் காரணமாக, முதல் மனைவி அவனிடமிருந்து பிரிந்து செல்ல விரும்பினால் அவள் அவ்வாறு செய்யலாம்.

2. முதல் மனைவி கடும் நோயால் பாதிக்கப்பட்டு தன்னுடைய திருமண உறவுகளையோ, குடும்பக் கடமைகளையோ நிறைவேற்ற இயலாத நிலை இருக்குமானால் குடும்பத்தின் ஸ்திரத்தன்மையை கருத்தில் கொண்டு கணவன் இரண்டாவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளலாம்.

3. ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடிய ஒரு சமூகத்தில் பலதாரமணம் ஒரு தீர்வாக இருக்கக்கூடும். சாதாரணமாக இந்தச் சூழ்நிலை ஒரு போருக்குப் பின்னர் தான் ஏற்படும். உஹதுப்போரின் போது முஸ்லிம் ஆண்கள் பலர் கொல்லப்பட்டதன் காரணமாக அவர்களது மனைவியர் விதவை களாயினர். குழந்தைகள் அனாதைகளாகினர். எனவே அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பும், கடமையும் பிற முஸ்லிம்கட்கு ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் தான் பலதாரமணம் பற்றிய இறைவசனங்கள் அருளப்பட்டன. அந்த

விதவைகளையும், குழந்தைகளையும் பாதுகாத்திட திருமணம் ஒரு சிறந்த வழியாக இருந்தது.

4. முதலாம் இரண்டாம் உலகப் போர்களில் கலந்து கொண்ட நாடுகளில் பெண்களின் விகிதாச்சாரம் ஆண்களை விட அதிகமாக இருந்தது. அனைத்து மனைவியர்களையும் நியாயமாக நடத்துவதற்குரிய தகுதியும், திறனும் பெற்றிருக்கக் கூடிய ஆண்கள், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர்களை மணந்து கொள்வதே இந்த சூழ்நிலையில் ஒரு சிறந்த தீர்வாக இருக்க முடியும். திருமணம் என்ற பந்தமில்லாமல் மிக அதிக எண்ணிக்கையிலான பெண்களைத் அப்படியே விட்டு விடுவது நல்லதல்ல.

5. திருமணத்திற்கு அப்பாற்பட்ட பாலுறவை இஸ்லாம் தடுக்கிறது. ஆசை நாயகிகள் என்ற வார்த்தைக்கு இஸ்லாத்தில் இடம் இல்லை. இஸ்லாம் ஆண்களுக்கு கண்ணியத்தை அளித்துள்ளது. அதிகமான ஆசை நாயகிகளை வைத்திருப்பதைவிட, ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைக் கொண்டிருப்பது ஒரு கண்ணியமான முறையாகும் நம்முடைய செயல்களுக்கு நாம் தான் பொறுப்பேற்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது. பெண்களை அனுபவித்து விட்டு தந்தைக்குரிய கடமைகளைச் செய்யாமல் தவிர்ப்பது மனித தன்மைக்கு எதிரானது. நியாயமற்றது.

6. இரண்டாவது மனைவியாக வரப்போகிற பெண், அவனுக்கு ஏற்கனவே ஒரு மனைவி இருக்கிறாள் என்ற காரணத்தைக் காட்டி திருமணம் செய்து கொள்ள மறுக்கலாம். ஆனால் ஒருவனின் முதல் மனைவி தனது கணவனின் இரண்டாவது திருமணத்திற்கு ஒப்புதல் கொடுத்து, இரண்டாவது மனைவியாக வரப்போகிறவளும் சம்மதம் தெரிவித்து விட்டால், மற்றவர்கள் ஏன் அதனை ஆட்சேபிக்க

வேண்டும்?

இரண்டு மனைவியர்களை மணந்து கொண்ட ஒருவன், ஒரு மனைவி மீது மட்டும் அதிகப் பிரியம் காட்டினால், இறுதித் தீர்ப்பு நாளின் போது அவன் ஒரு பக்க புஜம் சாய்ந்தவனாக வருவான் (ஊனமுற்றவன் போல) என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள். இஸ்லாம் ஒரு தார மணத்தை விதியாகவும், பலதார மணத்தை சில அசாதாரணமான சூழ்நிலைகளில் செய்ய வேண்டிய ஒரு விதிவிலக்காகவும் கருதுகிறது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாக இமாம் அபூ ஹனிபா அவர்கள் கூறிவதாவது ஒரு மனைவியுடையவன் மகிழ்ச்சியாக, திருப்திகரமாக வாழ்கிறான். இரண்டு மனைவிகள் உடையவன் பிரச்னைகளிலும், சிக்கல்களிலும் உழன்று தவிக்கிறான். பொதுவாக, ஒரு தார மணம் தான் உலகெங்கிலுமுள்ள முஸ்லிம் களிடம் வழக்கில் உள்ளது. எனவே இஸ்லாத்தில் பலதார மணம் என்பது ஒரு விதியல்ல. அது ஒரு விதி விலக்கே. நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஒரு அனுமதியே அது. நம்பிக்கை சார்ந்த தன்று. தேவை சார்ந்ததுமன்று. முஸ்லிம்கள் நான்கு பெண்களைத் திருமணம் செய்து கொள்வது கட்டாயம் என்று அநேகர் தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

இது சம்பந்தமான இறை வசனங்கள் உஹதுப் போருக்குப் பின்னர் அருளப்பட்டன. இப்போரில் ஆண்கள் அதிகம் கொல்லப்பட்டதால், விதவைகளும், அநாதைகளும் உருவாகினர். அவர்களைப் பாதுகாப்பது வாழ்ந்து வந்த முஸ்லிம்களின் கடமையாக இருந்தது. அத்தகைய விதவைகளையும், அநாதைகளையும், பாதுகாக்கவே திருமணம் ஒரு வழியாகக் கருதப்பட்டது.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது, பலதார மணத்தை இஸ்லாம் அறிமுகப்படுத்தவில்லை என்பதையும், இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ள பலதார மணம் ஒரு கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு விதியாக வலியுறுத்தப் படவில்லை என்பதையும் உணர்ந்து கொள்ள முடியும். இஸ்லாம் அதனை ஒழிக்கவில்லை. ஒழித்திருந்தால் அது பெயரளவில் இருக்குமே தவிர நடைமுறைக்கு வராது. இன்றைக்கும் கூட, தங்களது அரசியல் சட்டமோ அல்லது சமூக நிலையோ அங்கீகரிக்கா விட்டாலும் கூட பலர் பலதார

மணம் புரிந்து கொண்டுள்ளதை நாம் பார்க்க முடிகிறது. கடைப்பிடிக்க வேண்டியவற்றை மட்டுமே இஸ்லாம் கூறியுள்ளது.

வெறும் தாளில் மட்டும் இருந்து கொண்டு நடைமுறைக்கு ஒவ்வாத எதனையும் இஸ்லாம் சொல்லவில்லை. யதார்த்தமான, நடைமுறைக்குச் சாத்தியமான வாழ்க்கை முறையையே இஸ்லாம் வலியுறுத்துகிறது. எனவே தான் அது நிபந்தனைகளுக்கு உட்பட்ட பலதார மணத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. மனித சமுதாயத்திற்கு நன்மை பயக்காது என்ற நிலை இருக்குமானால், இறைவன் நிச்சயம் பலதார மணத்திற்கு அனுமதி வழங்கியிருக்கமாட்டான். இறைவனைத் தவிர வேறு யார் இதனை அதிகம் அறிவார்கள்?

# விதவைகள் மற்றும் விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களின் மறுமணம்

ஏன் இஸ்லாம் பல தார மணத்தை அனுமதித்துள்ளது. ஏன் விதவைகள் மற்றும் விவாக விலக்கான பெண்களின் மறு மணத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அதற்கான காரணங்களை யாரும் கற்பனை செய்ய இயலாது. காரணங்கள் உண்மையானவை. எல்லா இடங்களிலும் எல்லா காலங்களிலும் அவற்றை நாம் காணமுடியும்.

என் சைக்ளோ பிரிட்டானிகா கூற்றுப்படி பொதுவாக எந்த ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திலும் பெண்களின் இறப்பு ஆண்களின் இறப்பை விடக் குறைவாகவே உள்ளது.

சமுதாய, அரசியல் காரணங்களினால், விதவைகள் மற்றும் கைவிடப்பட்ட பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. போர்கள், விபத்துக்கள், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் சிறை வாசம் ஆகியனவே இதற்கு முக்கியக் காரணங்களாகும்.

முதல் உலகப் போரின் போது 80 லட்சம் வீரர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பான்மையோர் ஆண்களே. இரண்டாம் உலகப் போரின் போது 6 கோடி பேர் கொல்லப்பட்டனர். பலர் அங்ககீனமாயினர். இவர்களில் பெரும் பான்மையோர் ஆண்களே.

ஈராக் - ஈரான் போரின் போது (1979 – 1988) பத்தாண்டுகள் கால இடைவெளியில் 82,000 ஈரானியப் பெண்களும், ஒருலட்சம் ஈராக் பெண்களும் விதவைகளாயினர்.

தெருக்களில் ஒவ்வொரு நாளும் விபத்து நடக்காத நாடே இல்லை என்று சொல்லாம். இந்தியாவில் 2009 ஆம் ஆண்டில் மட்டும் 3 லட்சத்து 60 ஆயிரம் பேர் சாலை விபத்துக்களில் மரணமடைந்ததாக சமீபத்திய அறிக்கையில் சொல்லப் பட்டுள்ளது. இவற்றில் 77 சதவிகிதம் பேர் ஆண்கள். இருபத்து மூன்று சதவிகிதம் பேர் பெண்கள்.

சிறைக் கைதிகளில் பெரும்பாலோர் ஆண்களே. இது இன்னொரு முக்கியப் பிரச்னையாகும். அமெரிக்க அரசின் புள்ளி விவரத்துறையின் கணக்கின்படி அந்நாட்டில் உள்ள சிறைக்கைதிகள் 16 லட்சத்து 13ஆயிரத்து 740 பேரில் 15லட்சத்து 278பேர் ஆண்களே (அதாவது 92 சதவிகிதம்) பெண் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 13ஆயிரத்து 462பேர்கள் (அதாவது 8 சதவிகிதம் மட்டுமே) ஆதாரம்: 2009ஆம் ஆண்டு அமெரிக்க நீதி மற்றும் சிறைக்கைதிகள் துறை வெளியிட்டுள்ள புள்ளி விவரம். - ஹ¯தர் சி.வெஸ்ட்) சில குற்றவாளிகளுக்கு மரண தண்டனை, ஆயுள் தண்டனை உள்ளிட்ட தண்டனைகள் வழங்கப்படுகின்றன. ஒரு ஆரோக்கியமான சமுதாய அமைப்பில் பெண்களின் உரிமையை நிலை நாட்டிட முறையான, மனிதாபிமானமான தீர்வுகள் தேவைப்படுகின்றன.

இது போன்ற அசாதாரணமான சூழ்நிலைகளில் திருமண உறவுகளை முறித்துக் கொள்வதை இஸ்லாம் பரிந்துரைக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை வழங்கப்படும் சூழ்நிலைகளில் திருமண உறவு தானாகவே முறிந்து விடுகிறது. இது போன்று பாதிக்கப்பட்ட பெண்கள், புதிய கணவரை சட்டப்படி மணந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். இவ்வாறு பலதார மணம்

இத்தகைய பெண்களைக் காப்பாற்றி அவர்களின் சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க உதவுகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உள்ள ஒரு சமுதாய அமைப்பில், பலதார மணம் தடை செய்யப்பட்டு ஒருவருக்கு ஒருத்தி என்ற சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால், விதவைகள் மற்றும் விவாகரத்துப் பெற்ற பெண்களின் நிலை என்னவாகும்? எப்படி எவ்வாறு அவர்கள் தாங்கள் விரும்பும் துணையைத் தேர்ந்தெடுக்க முடியும்? எப்படி அவர்கட்குப் பரிவும், புரிதலும், ஆதரவும், பாதுகாப்பும் கிடைக்கும்? இந்தப் பிரச்னையின் விளைவுகள் உடல் சார்ந்தவை மட்டுமல்ல. அவை தார்மீக நெறிமுறைகள், உணர்வுகள், இயற்கை விதிமுறைகள் சார்ந்தவைகளாகவும் உள்ளன. ஒரு சராசரிப் பெண், அவள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாலும், வெளிநாட்டில் பணி புரிந்தாலும், புலனாய்வுத் துறையில் பணியாற்றினாலும் அவளுக்குச் சொந்தமாக ஒரு வீடும், குடும்பமும் தேவை. தன்னைக் கவனித்துக் கொள்ள அவளுக்கு ஒருவர் நிச்சயம் தேவை. உடல் சார்ந்த நிலையில் இதனை நாம் அணுகினாலும் விளைவுகள் மிகவும் சிக்கலாகவே தென்படுகின்றன. அவற்றை நாம் புறக்கணிக்க முடியாது. இல்லையென்றால், மனரீதியிலான பிரச்னைகள், நரம்புத் தளர்ச்சி சமூகத்தின் மீது வெறுப்பு, மனத் தடுமாற்றம் போன்ற பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

இத்தகைய இயற்கையான விருப்பங்களையும், உணர்வுபூர்வமான அபிலாஷைகளையும் நாம் புரிந்து கொண்டாக வேண்டும். சொந்தம் என்று உரிமை கொண்டாடிட, கவனிக்கப்பட, கவனித்துக் கொள்ளப்பட அவளுக்கு ஒருவர் தேவைப்படுகிறார். ஒரு பெண் இது போன்ற ஒரு சூழ்நிலையில் தனது இயல்பை மாற்றிக் கொள்வதில்லை. அல்லது தேவதூதர்கள் வாழ்வது போன்ற ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில்லை.

வாழ்க்கையை அனுபவிப்பதற்கும், அதில் உரிய பங்கினைப் பெறவும் தங்களுக்கு உரிமை இருப்பதாகவே அவர்கள் நினைக்கிறார்கள். இவற்றை சட்டப்பூர்வமான, நெறி சார்ந்த முறையில் பெற முடியவில்லை என்றால், அவர்கள் தற்காலிகமான ஆபத்துக்கள் நிறைந்த வேறு வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டிய திருக்கிறது. நிரந்தரமான,

*உறுதியான துணையின்றி வாழ்வது பெண்களுக்கு சிரமமானதாகவே இருக்கும். இது போன்ற சூழ்நிலைக்கு இலக்காகும் பெண்கள், பதற்றமடைபவராகவோ அல்லது ஒரு கிளர்ச்சியாளராகவோ அல்லது நெறிமுறைகளை மீறுபவராகவோ மாறி விடுகிறார்கள்.*

*கடந்த காலங்களில், கணவரை இழந்த பெண், கணவரின் சகோதரருக்கோ அல்லது அவளது வளர்ப்பு மகனுக்கோ வாரிசுச் சொத்துப் போல் வழங்கப்பட்டாள். அவர்கள் அவளை கொடூரமாக நடத்தினர். இந்திய சமூக அமைப்பில் கணவன் இறந்ததும், அவனது சிதையிலேயே மனைவியும் விழுந்து உயிர் துறப்பது வழக்கமாக இருந்தது. அவள் உயிர் வாழ வேண்டும் என்றால் உலக ஆசாபாசங்களிலிந்து விலகியிருந்து காலமெல்லாம் துன்பத்திலேயே உழல வேண்டும்.*

*ஆனால் இஸ்லாம், கணவனை இழந்த அல்லது விவாகரத்துப் பெற்ற பெண்கள், நான்கு மாதம் 10 நாட்கள் இத்தா (எனப்படும் காத்திருப்பு காலம்) இருக்க வேண்டும் என வரையறுத்துள்ளது. அதற்குப் பிறகு அவள் தன்னை அலங்கரித்துக் கொள்ளலாம். அவள் மறுமணம் செய்து கொள்ளலாம். இதற்கு குர்ஆன் அனுமதி வழங்கியுள்ளது.*

> *இன்னும், உங்களில் வாழ்க்கைத் துணை இல்லா (ஆடவர், பெண்டி)ருக்கும் விவாகம் செய்து வையுங்கள். (குர்ஆன் 24:32)*

# நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் குடும்ப வாழ்க்கை

இஸ்லாமிய வெறுப்பாளர்களும், குறை கூறுபவர்களும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் குடும்ப வாழ்க்கையைப் பெரிதும் விமர்ச்சிக்கிறார்கள். நபிகளார் பலதார மணம் புரிந்ததையும், இயேசுகிறிஸ்து திருமணமாகாமலேயே வாழ்ந்ததையும் ஒப்பிட்டு அவர்களின் விமரிசனம் அமைகிறது. நபிமார்கள் திருமணத்தை தவிர்த்து வாழ வேண்டுமென்றும் சாதாரண பொதுமக்கள் தான் தங்களது அபிலாஷைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்து கொள்ள திருமணம் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் பொதுவான ஒரு கருத்து நிலவி வருகிறது.

தம்மைப் பின்பற்றுபவர்களின் வாழ்க்கை எங்ஙனம் அமைந்திட வேண்டுமென்பதற்கு முன்மாதிரியாக நபிகளார் வாழ்ந்து காட்டினார்கள். ஒரு ஹதீஸின் படி (நபிமொழி) நபித் தோழர்கள் தாங்கள் பற்றற்ற பக்தி வாழ்க்கை வாழ்வதாக நபிகளாரிடம் தெரிவித்தார்கள். ஒருவர் தான் திருமணம் செய்து கொள்ள வில்லையென்றும், இரண்டாமவர் தான் மாமிச உணவு உண்பதில்லையென்றும், மூன்றாமவர் தான் வெறுந்தரையில் படுத்துறங்குவதாகவும், நான்காமவர் தான் எப்போதும் நோன்பு நோற்பதாகவும் கூறினார்கள். அதற்கு நபிகளார் அவர்களிடம் "எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! நான் திருமணமானவன், எனினும் பக்தி வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறேன். நான் மாமிசம் உண்கிறேன். நோன்பிருக்கிறேன். நானும் தூங்குகிறேன். விழித்திருக்கிறேன்" என்று பதிலளித்தார்கள்.

உலகாதாய விஷயங்களும், சமய நடவடிக்கைகளும் இணைந்தே இருக்க வேண்டுமென்று வலியுறுத்திய நபிகளார்,

இந்த இரண்டிற்குமிடையில் ஒரு சம நிலை இருக்க வேண்டுமென வலியுறுத்தினார்கள். உலகாதாய விஷயங்களுக்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் அளிக்க வில்லை. அதே நேரத்தில் ஆன்மீகத்தின் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிடவில்லை. சொத்துக் குவிப்பதையும் மித மிஞ்சி உலக இன்பங்களில் மூழ்கியிருப்பதையும் கண்டித்த அவர்கள் அதே நேரத்தில் கடுமையான துறவற வாழ்க் கையையும் ஆதரிக்கவில்லை. இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் அவர்கள் வாழ்வைப் பிரிக்கவில்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கட்கும், இயேசு கிறிஸ்துவுக்குமிடையே அணுகுமுறையில் உள்ள வித்தியாசம் இதுதான். மனிதனின் நடத்தையில் எந்த விதமான தீவிரப் போக்கையும் இஸ்லாம் ஊக்குவிக்கவில்லை. அளவுக்கு அதிகமான உடல் இச்சையையோ இன்பநுகர்வையோ அது ஆதரிக்கவில்லை. ஒரு தார மணத்திற்கே இஸ்லாம் முன்னுரிமை அளிக்கிறது ஆனால் அதை வலியுறுத்தவில்லை. சில சூழ்நிலைகளில் போர் புரிவதை அது அனுமதிக்கிறது. ஆனால் அதன் மையச் செய்தி இறைவனுக்கு அடி பணிதலும், சமாதானமுமேயாகும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் அது மனிதனுடைய நடத்தையை அவனிடமுள்ள திறமைக்கும், தேவைக்கும் வரைமுறைக்கும் உட்பட்டே ஒழுங்குபடுத்த வேண்டுமென்றும் மனிதனுடைய இயற்கையான குண நலன்களை தீவிரமாக மாற்ற முயற்சிக்கக் கூடாதென்றும் கூறுகிறது. ஏனெனில் அப்படி மாற்றுவது உடல் ரீதியில் சாத்தியமற்றது. ஆன்மீக ரீதியில் விரும்பத்தகாதது.

இஸ்லாம் ஆன்மீக வாழ்க்கையையும், உலக வாழ்க் கையையும் இணைத்தே பார்க்கிறது. இந்த இரண்டிற்கு மிடையில் வித்தியாசம் பார்க்காத இஸ்லாம், இந்த இரண்டு விஷயங்களிலும் மனிதர்கட்கு நேர் வழிகாட்டுகிறது. ஒன்றை யொன்று முறிக்கக்கூடிய வகையில் மனிதர்கள் செயல்படக் கூடாது எனவும் வலியுறுத்துகிறது. தனிப்பட்ட மனிதர்களின் உடல் மற்றும் ஆன்மீக ரீதியான தேவைகளை அங்கீகரிக்கும் இஸ்லாம், எந்த அளவிற்கு ஒரு மனிதன் தனது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம், எந்த அளவிற்கு அவன் அவற்றை வரம்பு மீறாமல் பார்த்துக் கொள்ளலாம் என்பதற்கும் சில

விதிமுறைகளை வகுத்துள்ளது. மனிதனின் உடல் ரீதியான தேவைகளை நியாயமான வழிமுறைகளில் அறநெறி எல்லைகளுக்கு உட்பட்டு நிறைவேற்றிக் கொள்ள அனுமதிக்கா விட்டால், அது மனிதவாழ்க்கையில் ஊழலுக்கும் சீர்குலைவுக்கும் வழிவகுத்துவிடும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

அதுபோலவே, உடல் இச்சைகளைத் திருப்திகரமான முறையில் தீர்த்துக் கொள்ளக் கூடிய வெளிப்படைத்தன்மை கொண்ட ஒரு சமூகத்தைக் கட்டமைப்பதே இஸ்லாத்தின் குறிக்கோளாகும். துறவறம் என்ற பெயரில் ஆசைகளை மூடி மறைப்பதிலுள்ள ஆபத்துக்களையும், அதன் காரணமாக கடந்த காலங்களில் பல சமுதாயங்கள் அழிந்து போனதையும் இஸ்லாம் உணர்ந்திருக்கிறது. தவச்சாலைகள் தீய செயல்களின் கூடாரமாக மாறி வருவதையும், மடங்கள் அவதூறுப் பிரச்சாரங்களுக்கு இலக்காகி வருவதையும் நாம் பார்த்து வருகிறோம். சமூகத்தை அத்தகைய நிலைகளிலிருந்து காப்பாற்ற இஸ்லாம் தன்னைப் பின்பற்றுபவர்கள் திருமணம் செய்து கொண்டு, குடும்பத்தை உருவாக்கி, பிறப்பும், பந்தமும், பாசமும் கொண்ட ஒரு சமூகத்தைக் கட்டமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது. பொருளாதார ரீதியிலான பொறுப்புகளைச் சுமத்திட இது மிகவும் அவசியம் என இஸ்லாம் கருதுகிறது. தனிநபர்கள், உரிமைகள், கடமைகள், பாத்தியதைகள், பொறுப்புகள் ஆகியன மூலம் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டிட முடியும் எனவும் அது கருதுகிறது.

ஒரு முன்னுதாரணமான கணவன்மார்களாகவும், தந்தைமார்களாகவும், நபிமார்கள் இருக்க வேண்டுமென எதிர் பார்ப்பது பொருத்தமானதேயாகும். இந்த அடிப்படையில் தான் நபிகளார் செய்திட்ட பலதார மணங்கள் (பெரும்பாலும் விதவைகள்) அமைந்திருந்தன. தாமும் பிறரைப் போன்ற ஒரு மனிதரே அதற்கு அதிகமாக அல்லது குறைவாக ஒன்றுமில்லை என நபிகள் நாயகம்(ஸல்) அவர்களே அறிவித்துள்ளதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சாதாரண மனிதன் தான் சமூகத்திற்குத் தேவையே தவிர தெய்வீகத் தன்மையுள்ள மனிதன் அல்ல. மனித ஆசைகளோ, மனித இயற்கைக் குணங்களோ இல்லாத ஒருவர் தேவதூதர் என்ற

நிலைக்குப் பொருந்தி வர முடியும். அவர்களுக்கு புனிதமும், மரியாதையும் கிடைக்கக்கூடும். ஆனால் மனித குண நலன்களை அவர்கள் பிரதிபலிக்க மாட்டார்கள். இது வியப்பாகவோ அல்லது புகழுக் குரியதாகவோ இருக்கலாம். ஆனால் ஒரு மனிதனை உருவாக்கக் கூடிய அடிப்படைப் பண்புகள் இல்லாத காரணத்தால் அது ஆர்வத்துடன் பின்பற்றத்தக்க ஒன்றாக இருக்காது. அது போலவே திருமணம் செய்து கொண்டு, குடும்பத்தை நடத்தி வரும் ஒரு நபியால் மட்டுமே குடும்ப வாழ்க்கையிலுள்ள சிரமங்களையும், சவால்களையும் எதிர் கொண்டு, தம்மைப் பின்பற்றுவர்கட்கு அந்த விஷயத்தில் வழி காட்ட முடியும். அத்தகைய ஒரு தலைவர் மட்டுமே ஒவ்வொரு தனிமனிதனது குடும்ப வாழ்க்கையில் ஏற்படக் கூடிய சிக்கலான பிரச்னைகளை தீர்க்க வல்ல வழிகாட்டுதல்களை வழங்கக்கூடிய தகுதி பெற்றவராக இருப்பார்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், திருமணமே செய்து கொள்ளாமல் இருந்திருந்தால், ஒரு நிறைவு பெற்ற மனிதர் என்ற தகுதியினைப் பெற்றிருக்க மாட்டார்கள். ஒரு முன்மாதிரியான சமூகத்தை உருவாக்க வேண்டுமென்ற அவர்களது குறிக்கோள் முழுமை பெற்றிருக்காது. இன்றைக்கு இருப்பதைப் போன்ற ஒரு நம்பகத்தன்மையும் அதற்கு இருந்திருக்காது. அனுபவங்களின் அடிப்படையில் அமைந்த வழிகாட்டுதல்களே இந்த உலகிற்குப் பொருத்தமானதாக இருக்கும். ஒரு அனுபவம் வாய்ந்த தலைவரின் சரியான வழிகாட்டுதல்கள் இல்லையென்றால், ஒரு சாதாரண மனிதன் பாலுறவு சம்பந்தபட்ட பிசன்னைகளை, குடும்பம் மற்றும் சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பெரும் இன்னல்களைச் சந்திக்க நேரிடும். தெய்வீக வழிகாட்டு தல்களைப் பொறுத்த அளவில் அற நெறிகளுடன் இந்த அம்சங்களை ஒன்று சேர்ப்பது ஒரு நிறைவேறாத பணியாகவே இருக்கும். இந்த அடிப்படையிலேயே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் புரிந்திட்ட பலதார திருமணங்களை அணுக வேண்டும்.

# தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட குர்ஆன் வசனங்கள்

இஸ்லாத்தின் எதிரிகளும், இஸ்லாத்தைக் குறை கூறுபவர்களும், முஸ்லிமல்லாதவர்கட்கு எதிராக முஸ்லிம்கள் நிகழ்த்தும் வன்முறை செயல்களை இஸ்லாம் ஆதரிப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர். மனித சமுதாயத்திற்கு எதிராக மிக மோசமான குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் நாடுகளைச் சார்ந்தவர்களே இந்தக் குற்றச்சாட்டினை முஸ்லிம்கள் மீது சுமத்துகின்றனர். இரண்டு உலக மகாயுத்தங்கள், போஸ்னிய இனப்படுகொலை, ஸ்டாலினிய பயங்கரவாதம், ஜப்பான் மீதான அணு குண்டுத் தாக்குதல், ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா, லெபனான் ஆகிய நாடுகளின் மீதான தாக்குதல் ஆகிய இது போன்ற கொடூரச் செயல்களில் ஈடுபட்டவர்களின் பீரங்கிகள் இன்னமும் ஓய்வடையவில்லை. சில குர்ஆன் வசனங்கள் வன்முறையைத் தூண்டும் விதத்தில் அமைந்துள்ளதாக அவர்களது ஊடகங்கள் செய்து வரும் தவறான பிரச்சாரம், இஸ்லாத்தை களங்கப்படுத்தும் வகையில் உள்ளது. எண்ணெய் வளம் கொண்ட, வளந்துவரும் முஸ்லிம் நாடுகளின் மீது தாங்கள் நடத்துகின்ற போர்களையும், ஆக்ரமிப்புகளையும் நியாயப்படுத்தவே அவர்கள் இந்தப் பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

குர்ஆன் முஸ்லிம்களுக்கு வழிகாட்டும் ஒரு வேத நூலாகும். அது ஒரே நேரத்தில் இறக்கியருளப்பட்டதல்ல. மக்காவிலும், மதீனாவிலுமிருந்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பின்பற்றிய ஒரு சமுதாயத்தைச் சீர்திருத்தி வழி காட்டுவதற்காக இறைவனால் 23 ஆண்டுகளாக அருளப்பட்ட வேத நூலே குர்ஆன் ஆகும். இந்த இரு நகரங்களிலும் வாழ்ந்த

மக்கள் ஒருவருக்கொருவர் வேறுபட்ட தன்மை கொண்டிருந்தவர்கள். தமது 23 ஆண்டுகள் கால நபித்துவ வாழ்க்கையில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் 13 ஆண்டுகள் மக்காவில் இஸ்லாத்தைப் போதித்து வந்தார்கள். அவர்கள் அங்கு ஒரு விரோதமான சூழ்நிலையைச் சந்திக்க வேண்டிய திருந்தது. அங்கிருந்த குறைஷியர்கள் காட்டிய எதிர்ப்பு நாளா வட்டத்தில் கண்டனமாகவும், தொல்லையாகவும் துன்புறுத் தலாகவும் மாறியது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைக் கொலை செய்திடவும் அவர்கள் முயற்சித்தனர். இந்நிலையில் அமைதியாக வாழ முடியும் என்ற நம்பிக்கையில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும், அவர்களைப் பின்பற்றியவர்களும் மதினாவிற்கு இடம் பெயர்ந்து சென்றனர். தங்களது குடும்பத்தினரையும், சொத்துக்களையும் மக்காவிலேயே விட்டு விட்டுச் சென்றனர். குறைஷி யர்களின் கொடுங் கோன்மை காரணமாகவே நபிகளாரும், அவர்தம் தோழர்களும் மக்காவிலிருந்து கட்டாயமாக வெளியேறி மதீனாவில் குடியேறும் சூழ்நிலை ஏற்பட்டது என்பதே உண்மையாகும். மதீனாவில் இறைவன் மற்றும் அவனது தூதரான நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் கட்டளைகளை ஏற்று அதன்படி தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள மக்கள் முன்வந்தனர். நாளாவட்டத்தில் நபிகளாரைப் பின்பற்றுவோர் எண்ணிக்கை அதிகரித்தது.

ஆனாலும், நபிகளார் மதீனாவிற்கு இடம் பெயர்ந்து சென்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே, மக்கா நகர் குறைஷியர்கள் முஸ்லிம்கள் மீது போர் தொடுத்தனர். "பத்ரு" என்ற இடத்தில் நடைபெற்ற இப் போரில் முஸ்லிம்கள் வெற்றி பெற்றனர். குறைஷியர்கள் தோற்றனர். மூன்றாம் ஆண்டிலும், குறைஷியர்கள் முஸ்லிம்கள் மீது போர் தொடுத்தனர். இந்தப் போரில் (உஹது) முஸ்லிம்களுக்கு பின்னடைவும், உயிரிச் சேதமும் ஏற்பட்டபோதிலும், முழுத் தோல்வி நேராமல் பார்த்துக் கொண்டனர். ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டில், குறைஷியர்கள் 10,000 வீரர்களுடன் மீண்டும் அணி திரண்டு வந்தனர். தங்களது எண்ணிக்கையும், போர்த் தளவாடங்களும், ஒப்புநோக்கில் மிகக்குறைந்த அளவிலேயே இருந்ததை உணர்ந்து கொண்ட நபிகளார், மதீனா நகரைச் சுற்றி

அகழிகள் தோண்டி எதிரிகளுடனான நேரடி மோதலைத் தவிர்த்தார்கள். பல நாட்கள் மதீனாவை முற்றுகையிட்டுப் பலனில்லாமல் சோர்வடைந்துபோன குறைஷியர்கள் போரிடாமலேயே திரும்பிச் சென்றனர். ஹிஜ்ரி ஏழாம் ஆண்டில் இரு தரப்பிற்கும் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. எனினும் ஆறு மாதத்திற்குள்ளாகவே குறைஷியர்கள் உடன்பாட்டினை மீறினார்கள். இதற்குப் பதிலடியாக ஹிஜ்ரி எட்டாம் ஆண்டில் நபிகளாரே 10,000 வீரர்கள் கொண்ட படைக்குத் தலைமை தாங்கி மக்கா நோக்கிச் சென்றார்கள். எந்த விதமான சண்டையும் புரியாது ரத்தம் சிந்தாமல் அந்நகரைக் கைப்பற்றினார்கள். எனினும் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு நபிகளார் பொது மன்னிப்பு வழங்கினார்கள். இவையே நபிகளார் துவக்க காலத்தில் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளாகும். இந்தக் காலம் முழுமையும், குர்ஆன் மூலமாக இறைவன் நபிகளாருக்கு வழிகாட்டினான்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எந்தப் போரையும் வலிந்து மேற்கொள்ளவில்லை. போர்கள் அவர்கள் மீது திணிக்கப் பட்டன என்பதே வரலாற்று உண்மையாகும். தாங்களும், தங்களைப் பின்பற்றியவர்களும் தாக்கப்பட்டபோது தற்காப்புக்காகப் போரில் ஈடுபட்டு தாக்க பதிலடி கொடுத்தார்கள். உடன்படிக்கைகளை எதிரிகள் மீறிய போது போர்ப்பிரகடனம் செய்தார்கள் ஆனால் போரில் கலந்துகொள்ளாதவர்கட்கு பொது மன்னிப்பு வழங்கினார்கள்.

குர்ஆன் வசனங்களைப் புரிந்து கொள்கின்றபோது, அவை எந்தச் சூழலில் அருளப்பட்டன என்பதைப்புரிந்து கொள்வது மிகவும் அவசியமானதாகும். ஆனால் இஸ்லாத்தைக் குறை கூறுபவர்கள் இந்த விஷயத்தில் தவறு இழைத்து விடுகிறார்கள். இறை வசனங்கள் அருளப்பட்ட சூழ்நிலைகளை கருத்தில் கொள்ளாது, இஸ்லாத்தின்பால் தாங்கள் ஏற்கனவே கொண்டிருந்த கருத்துக்களுக்கு ஆதரவாக பொருள் கொள்கிறார்கள்.

இந்தியாவிலும், உலகின் வேறு பல பகுதிகளிலும் சில குர்ஆன் வசனங்கள் குறித்து குழப்பம் ஏற்படுத்திட சிலர் முயற்சிக்கின்றனர். சில எழுத்தாளர்கள் குர்ஆன் வசனங்களுக்கு

அவை வெளிப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளாது தங்கள் விருப்பம் போல் தவறாகப் பொருள் கொண்டு எழுதி வருகின்றனர். குர்ஆன் வசனங்கள் அவை வழங்கப்பட்ட கால சூழ்நிலைக்கு ஏற்பப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்யத் தவறுபவர் வழி தவறியவராகவே கருதப்படுவார். நம்பிக்கையில் விசுவாசமாக இருப்பதே குர்ஆனையும் அதன் வசனங்களையும் ஓதுவதற்குரிய முன் நிபந்தனையாகும். ஒருவர் தவறான எண்ணத்துடன் ஓதினால் அவர் எந்த விதமான வழி காட்டுதலும் பெற மாட்டார்.

குர்ஆனைப் பற்றித் தேர்ந்த அறிவு கொண்டவர்கள், வரலாற்றுச் சூழ்நிலைகளையும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் நன்கு அறிந்தவர்கள் ஆகியோர் எழுதியுள்ள விளக்கவுரைகளும், தெளிவுரைகளுமே ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

சில எழுத்தாளர்களால் தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டுள்ள சில குர்ஆன் வசனங்களையும் அதற்குரிய சரியான விளக்கங்களையும் இனி பார்ப்போம்.

**2:190** மேலும் உங்களுடன் போர் புரிபவர்களுடன் நீங்களும் அல்லாஹ்வின் பாதையில் போர் புரியுங்கள். ஆனால் நீங்கள் வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறுபவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை.

**2:191** அவர்களை நீங்கள் எங்கு கண்டாலும் வெட்டி வீழ்த்துங்கள். மேலும் எங்கிருந்து அவர்கள் உங்களை வெளியேற்றினார்களோ அங்கிருந்து நீங்கள் அவர்களை வெளியேற்றுங்கள். பித்னா (அராஜகத்தைத்) தோற்றுவிப்பது கொலையைக் காட்டிலும் மிகக் கொடியதாகும். மஸ்ஜிதுல் ஹராமுக்கு அருகே அவர்கள் உங்களுடன் போர் தொடுக்காத வரை நீங்களும் அதன் அருகே அவர்களுடன் போர் தொடுக்க வேண்டாம். ஆயினும் அவர்கள் உங்களோடு போர் செய்தால் நீங்களும் அவர்களோடு போர் புரியுங்கள். இத்தகைய நிராகரிப்பாளர்களும் இதுவே தண்டனையாகும்.

**2:192** ஆயினும் அவர்கள் (போரிலிருந்து) விலகிக் கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பு வழங்குபவனாகவும், கருணை புரிபவனாகவும் இருக்கின்றான்.

*2:193* பித்னா இல்லா தொழிந்து தீன் (வாழ்க்கை நெறி) அல்லாஹ்வுக்கே உரித்தானதாகும் வரை நீங்கள் அவர்களோடு தொடர்ந்து போர் புரியுங்கள். ஆனால் அவர்கள் விலகிக் கொண்டால் அக்கிரமக்காரர்களைத் தவிர வேறு எவரையும் துன்புறுத்துவது அனுமதிக்கப்பட்டதல்ல.

*2:194* போர் தடை செய்யப்பட்ட சங்கைக்குரிய மாதத்திற்கு சங்கைக்குரிய மாதமே ஈடாகும். மேலும் சங்கைக்குரிய அனைத்திற்கும் (அவற்றின் கண்ணியம் மீறப்பட்டால்) சமமான அளவில் ஈடு செய்யப்படும். எனவே உங்களிடம் எவரேனும் வரம்பு மீறினால் அந்த அளவிற்கு நீங்களும் அவருக்குப் பதிலடி கொடுங்கள். ஆயினும் அல்லாஹ்விற்கு அஞ்சி வாழுங்கள். வரம்புகளை முறிப்பதிலிருந்து விலகி இருப்பவர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.

தற்போதைய நம்முடைய நவீன காலத்தில் இந்த இறை வசனங்கள் தான் தவறான முறையில் புரிந்து கொள்ளப்பட்டு அதிகம் விவாதத்திற் குரியனவாகவும், இஸ்லாம் அடிப்படையிலேயே வன்முறையப் போக்கைக் கொண்டிருக்கிறது என்று இஸ்லாமிய எதிர்ப்பாளர்களால் குறை கூறிடவும் காரணமாக அமைந்துள்ளன.

முஸ்லிம்களுக்கும் பிற சமுதாயங்களுக்கு மிடையிலான உறவினை ஒழுங்குபடுத்தும் பல வழிகாட்டுதல்களை இந்த இறை வசனங்கள் கொண்டிருப்பதால் அவற்றை அனைவரும் கவனமாகப் படித்து சரியான முறையில் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் பிற சமூகங்களுக்கு முஸ்லிம்கள் எங்ஙனம் பதில் சொல்லக் கடமைப் பட்டுள்ளார்கள் என்பதையும் புரிந்து கொள்ள இந்த இறை வசனங்களை மிகுந்த ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும்.

கேள்வி மிக எளிதானது. ஆனால் நீங்கள் வரம்பு மீறாதீர்கள் வரம்பு மீறுபவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை என்று இந்தப் பகுதியின் துவக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இறைவசனங்கள் (2:190) வன்முறையில் ஈடுபடுவதற்கான ஒரு அனுமதி அல்லவா? என்று சிலர் வாதிடுகின்றனர். ஆனால் குர்ஆனில் கூறியுள்ள நெறிமுறைகளின் அடிப்படையில் இந்த

வசனங்கள் எந்தச் சூழ்நிலைகளுக்குப் பொருந்தி வருகின்றன என்பதைப் பார்க்காமல் திரித்துக் கூறுவதால் இந்த தவறான புரிந்துணர்வு ஏற்படுகிறது என்பதே உண்மையாகும்.

குர்ஆன் வசனங்களைப் படிக்கின்ற போது அவை சம்பந்தமான எச்சரிக்கை குறிப்புகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். முதலாவது எந்த ஒரு வசனத்தையும் அது வழங்கப்பட்ட சூழ்நிலையை கருத்தில் எடுத்துக் கொண்டு படிக்க வேண்டும். குறிப்பிட்ட வசனங்களை திருக்குர்ஆன் முழுவதிலும் கூறப்பட்டுள்ள பிற வசனங்களுடன் இணைத்துப் படிக்க வேண்டும். இரண்டாவதாக குர்ஆன் இருபத்து மூன்று ஆண்டுகள் கால கட்டத்தில் படிப்படியாக அருளப்பட்டது என்பதையும் அது அப்போது வாழ்ந்து வந்த மக்களின் சூழ்நிலைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப மட்டுமல்ல இனி காலம் காலமாக வரக்கூடிய ஒட்டுமொத்த மனித சமுதாயத்தின் சூழ்நிலை களுக்கும், தேவைகளுக்கும் ஏற்பவும் அருளப்பட்டது என்பதையும் மறந்து விடக்கூடாது. சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் குர்ஆன் வசனங்கள் அருளப்பட்ட போது முஸ்லிம்கள் சந்தித்து வந்த பிரச்னைகளைப் பற்றி அறிந்து கொள்வது மட்டுமின்றி குர்ஆன் உண்மையில் எதனை மேம்படுத்திட முயற்சிக்கிறது என்ற கண்ணோட்டத்தில் இதனை நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

எந்தச் சூழ்நிலையில் இந்த குறிப்பிட்ட வசனங்கள் அருளப் பட்டன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்போது நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் முற்றுகையிடப்பட்டிருந்தனர். வாழ்வா, சாவா என்ற ஒரு பயங்கரமான நிலையில் அவர்கள் சிக்கியிருந்தனர். முஸ்லிம்களுக்கும், அரேபியாவிலிருந்த இனக் குழுக்களுக்கும் குறிப்பாக மக்கா நகர் குரைசியர்களுக்கு மிடையே பகைமை இருந்து வந்தது. மக்காவில் முஸ்லிம்களை ஒழிக்க முடியாத நிலையில் மதினாவில் தஞ்சம் புகுந்திருந்த முஸ்லிம்கள் அங்கு வலிமையும், வளமையும் பெற்ற வருவதைக் கண்ட எதிரிகளான குரைசியர்கள் ஆயுதங்கள் ஏந்தி முஸ்லிம்களை ஒரேயடியாக ஒழித்து விட முடிவு செய்தனர்.

குரைசியர்கள் ஒரு பெரும் போருக்குத் தங்களைத் தயார்

படுத்திக் கொண்டிருந்தனர். அந்தப் போர் தான் முஸ்லிம்களுக்கு வாழ்வா அல்லது அழிவா என்பதைத் தீர்மானித்த பத்ருப் போராகும். (குர்ஆன் 2:164) இதன் மூலம் முஸ்லிம்களை முற்றிலும் அழித்து விட குரைசியர்கள் திட்ட மிட்டிருந்தனர். பின்னர் அருளப்பட்ட இறை வசனங்கள் இதனைத் தெளிவு படுத்துகின்றன.

நீங்கள் உங்கள் நம்பிக்கையிலிருந்து விலகிச் செல்லும் வரை அவர்கள் உங்களுடன் போரிட்டுக் கொண்டே இருப்பார்கள் (குர்ஆன் 2:217)

அடக்கு முறையையும், துன்புறுத்தலையும் எப்படி எதிர் கொள்ள வேண்டுமென்பதற்கும், தங்களைத் தாக்குபவர் களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கும் வழிகாட்டவே இறைவன் இந்த வசனங்களை இறக்கி யருளியுள்ளான் என்பது மிகவும் தெளிவாகிறது.

இதற்கு பதிலாக இறைவன் "நீங்கள் எங்கு கண்டாலும் அவர்களைத் தழுவிக் கொள்ளுங்கள், உங்களை உங்களது வீடுகளிலிருந்து விரட்டியதற்காகவும், உங்களைக் கொலை செய்ய முயற்சித்ததற்காகவும் அவர்களை முத்தமிடுங்கள்" என்றா கூறியிருப்பான் என்ற நியாயமான கேள்வி எழுகின்றது. இந்தக் கருத்துக்கு ஆதரவாக இன்றைய உலகில் எந்தச் சட்டமும் இல்லை. தர்க்க ரீதியான நியாயமும் இல்லை. இன்றைக்கு சில நாடுகள் தாங்கள் தாக்கப்படுவோம் என்று கருதியே மற்ற நாடுகளை முன் கூட்டித் தாக்குகின்றன. எந்த விதமான விரோத நடவடிக்கைகளும் துவங்காத நிலையிலேயே இதனைச் செய்கின்றன. இதனை அமெரிக் காவின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் அதற்குப் பெயர் "முன்னெச்சரிக்கைப் போர்" என்பதாகும்.

எனவே முஸ்லிம்களுக்கு வேறு வழிகள் எதுவுமில்லை அத்தகைய சூழ்நிலையில் தற்காப்புக்காகப் போரிடும் படி அதுவரை சண்டை புரிவதினின்றும் விலகியிருந்த முஸ்லிம்களுக்கு இறைவன் அனுமதி வழங்கினான். எனவே இவை மக்கா நகர் குரைசியர்களுக்கும் மதினா முஸ்லிம்களுக்குமிடையே மோதல்கள் அதிகரித்திருந்த காலகட்டத்தில் முஸ்லிம் சமூகத்தின் வாழ்வே கேள்விக்குறியாகி நின்ற போது அருளப்பட்ட

இறைவனங்களாகும்.

மேலும் இந்த வசனங்களில் முஸ்லிம்களுக்கு குறிப்பாக சில அறிவுரைகள் அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப வழங்கப்பட்டிருந்தன. உதாரணமாக, அவர்களைக் கொல்லுங்கள் என்ற வார்த்தையானது முஸ்லிம்களுக்கு எதிராக சண்டையில் ஈடுபட்டிருந்தவர்கட்கு குறிப்பாக குரைசியர்களைப் பற்றிச் சொல்லப்பட்ட ஒன்றாகும். இந்தக் கொடுங்கோலர்களான குரைசியர்கள் தான் முஸ்லிம்களை மக்காவிலிருந்த அவர்களது வீடுகளிலிருந்து துரத்தியடித்தவர்கள். எனவே முஸ்லிம்களுக்கு உங்களை எங்கிருந்து விரட்டினார்களோ அங்கிருந்து நீங்கள் அவர்களை விரட்டுங்கள் என இறைவன் அனுமதி வழங்கினான். அவர்கள் மக்காவிலிருந்த புனித மஸ்ஜித்தை ஆக்கிரமித்திருந்தனர். எனவே முஸ்லிம்கள் புனித மஸ்ஜித்தின் எல்லைகளுக்குள் நின்று போரிட வேண்டாமென அறிவுறுத்தப்பட்டனர்.

எனினும் சிரமமான, சோதனையான அந்தச் சூழ்நிலைகளிலும் முஸ்லிம்கள் வரம்பு மீற வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டனர். இதன் பொருள் அவர்கள் பெண்களையோ, குழந்தைகளையோ போரில் ஈடுபடாதவர் களையோ கொல்லக் கூடாது, உடமைகளை தீயிட்டுக் கொளுத்தக் கூடாது, கால்நடைகள் உண்ணும் பயிர்களை அழிக்கக்கூடாது, ஆக்ரமிப்பாளர்களுக்கு வரம்புக்கு அதிகமாக பதிலடி கொடுக்கவோ கூடாது என்பதாகும். வரம்பு மீறுதல் சுய அழிவில் கொண்டுபோய் விடும் என முஸ்லிம்கள் எச்சரிக்கப்பட்டனர்.

உங்களுடைய கைகளால் உங்களுக்கு அழிவைத்தேடிக் கொள்ளாதீர்கள் (குர்ஆன் 2:195)

மேலும் எதிரிகள் போர் நிறுத்தம் செய்தால், முஸ்லிம்களும் தங்களிடமுள்ள ஆயுதங்களை கீழே போட்டுவிட வேண்டும். போரை போரைக் கொண்டே எதிர் கொள்ள வேண்டும். எனவே முஸ்லிம்கள் நடத்திய போரானது எதிரிகளை நிர்மூலமாக்கி அவர்களை அழிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டதல்ல. மாறாக

பகைமையை ஒழித்து அவர்களை வழிக்குக் கொண்டு வருவதற்காகச் செய்யப்பட்டதாகும்.

மிகப் பரந்த அளவில் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான கொள்கைகள் இந்த வசனங்களில் அடங்கியுள்ளன. குர்ஆனின் கூற்றுப்படி தற்காப்புக்காக மட்டுமே முஸ்லிம்கள் போரில் ஈடுபடமுடியும். இஸ்லாத்திற்கு எதிராகவும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் யார் போர் தொடுக்கிறார்களோ அவர்கள் தான் உண்மையான எதரிகள் என்பது குர்ஆன் வகுத்துள்ள கோட்பாடாகும். (நிராகரிப் போரால்) போர் தொடுக்கப்பட்டோருக்கு அவர்கள் அநீதமிழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் (போர் தொடுத்தோரை எதிர்த்து) யுத்தம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டு விட்டது. (குர்ஆன் 22:39) (மேலும் திருக்குர்ஆனில் 60:80; 4:91 இறை வசனங்களையும் பார்க்கவும்). எனவே தான் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நடத்திய பத்ருப்போர், உஹதுப் போர், அகழிப் போர் ஆகிய இந்த மூன்று போர்களும் தற்காப்பின் பாற் பட்டதாகவே இருந்தன. கடைசியில் குறிப்பிடப்பட்டுள்ளது ஒரு போரே அல்ல. அது ஒரு தற்காப்பு நடவடிக்கையே மதினாவைச் சுற்றி தோண்டப்பட்டிருந்த அகழிகளைத் தாண்டி எதிரிகளால் உள்ளே வர இயலவில்லை. எனவே ஒரு மாத கால முற்றுகைக்குப் பின்னர் அவர்கள் சோர்வடைந்து திரும்பிச் சென்றனர். வரம்பு மீறுதல் கூடாது. சண்டையை முஸ்லிம்கள் துவக்கக்கூடாது என்பதே இந்த வசனங்கள் கற்றுக் கொடுக்கும் பாடமாகும்.

நீங்கள் வரம்பு மீறாதீர்கள். அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை

குர்ஆனில் கூறப்பட்டுள்ள தற்காப்பு நடவடிக்கைகள் அடக்கு முறைக்கு எதிரானதாகும். அடக்கு முறையும், துன்புறுத்தலும் படுகொலைகளை விட மோசமானது. அடக்கு முறை வார்த்தைகளால் விவரிக்க இயலாத அழிவிற்கு மக்களை இட்டுச் செல்லும். அடக்கு முறையும், துன்புறுத்தலும் அடக்குபவர், அடக்கு முறைக்கு ஆளானவர் ஆகிய இருவரையும் தரமிழக்கச் செய்கிறது. மக்கள் அனைவரும் துய்க்க வேண்டிய நல் வாய்ப்புகளையும்,

நியாயமான உரிமைகளையும் அது மறுக்கிறது புதுப் புது மோதல்களை உருவாக்கி, வெறுப்பிற்கு எண்ணெய் ஊற்றுகிறது. எனவே கொடுமைகளுக்கும், வேதனைகளுக்கும், அவதூறுக்கும் ஆளாகியிருந்த மதினா முஸ்லிம்களைப் பாதுகாத்திட மக்கா குரைசியர்களுடன் போரிடுமாறு குர்ஆன் முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கியது.

பின்னர் சொல்லப்பட்ட இறை வசனங்கள் அடக்கு முறையின் தன்மையைப் பற்றி கீழ்க்கண்டவாறு விவரிக்கிறன.

அவர்கள் உங்களை விட்டு விடவில்லையென்றால், உங்களுக்கு சமாதானத்தை அளிக்கவில்லையென்றால், தங்களது கரங்களுக்குத் தடை போடவில்லையென்றால் என்ற இந்த வசனங்கள் அடக்குமுறையானது தொடர்ந்து நிகழ்த்தப்படும் ஒரு ஒடுக்குமுறை என்பதையும் அது ஒருவர் தனது மனச்சாட்சியின் படி வாழ்ந்திட அவருக்குள்ள உரிமையை மறுத்து சமாதானத்திற்கான வாய்ப்புகளையும் மறுக்கிறது என்பதை உணர்த்துகின்றன. அடக்கு முறை என்ற வார்த்தை அரபியில் பித்னா என்று மொழி பெயர்க்கப்படுகிறது. அவ்வார்த்தை துன்புறுத்தல் வேதனை, கொலை, துரோகம் எனப்பல அர்த்தங்களை உள்ளடக்கியதாகும். தங்களது நம்பிக்கையைக் கடைப் பிடிப்பதிலிருந்தும் மக்களைத் தடுப்பது என்பதும் இதன் பொருளாகும். இத்தகைய சூழ்நிலைகளில் போர் தேவையானதாகவும், நியாயமானதாகவும் ஆகிவிடுகிறது. (பின்னொரு அத்தியாயத்தில் குர்ஆன் போரை கொடூரமான ஒன்று என்று குறிப்பிடுகிறது (2:217)

அடக்குமுறைக்கு எதிராக உயிர் வாழ்வதற்காக நடத்தப்படும் போரை இறைவனின் வழியில் நடத்தப்படும் ஒரு நியாயமான போராக குர்ஆன் கருதுகிறது. இறைவனின் வழியில் நடத்தப்படும் என்ற வார்த்தைக்கு நம்பிக்கையை பரப்புவதற்காகச் செய்யப்படும் போர் என்று பொருள் கொள்ளக் கூடாது. குர்ஆனில் ஒரு முறை கூட அப்படிச் சொல்லப்படவில்லை. இதன் நோக்கம் அடக்கு முறையிலிருந்தும், வேதனையிலிருந்தும் விடுதலை பெறுவதேயாகும். பித்னா இல்லாதொழிந்து தீன் (வாழ்க்கை நெறி) அல்லாஹ்வுக்கே உரித்தானதாகும் வரை (2:193) என்ற

வசனங்கள் இஸ்லாத்தின் மேலாண்மையோ, அல்லது நம்பிக்கை இல்லாதவர்கள் மீது ஒடுக்கு முறையை ஏவுவதையோ அல்லது அவர்களைக் கீழ்மைப் படுத்துவதையோ குறித்திடவில்லை.

மாறாக இந்த வசனங்கள், மனிதனை மனிதன் அடிமைப் படுத்திடும் சமூக நிலை மாற வேண்டும். அடக்கு முறையிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற தீர்க்கமான முடிவினை வலியுறுத்தவே பயன்படுத்தப்பட்டுள்ளன. துன்புறுத்தப்படுவோம் என்ற அச்ச உணர்வின்றி மக்கள் இறைவனை வணங்கிட வேண்டும். உண்மையில் சமயம் இறைவனுக்காகவே என்ற வார்த்தை அனைத்து நம்பிக்கை கொண்டோரின் வணக்கத்தையே பொதுவாகக் குறிக்கிறது. இது குர்ஆனின் அத்தியாயம் 22, வசனம் 40ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறைவனின் வழியில் அடக்குமுறையை எதிர்த்துப் போரிட்டவர்கள் மடங்கள், கிறிஸ்துவ தேவலாயங்கள், யூத ஆலயங்கள், அல்லாஹ்வின் பெயரால் உள்ள மஸ்ஜிதுகள் ஆகியவற்றிற்குப் பாதுகாப்பு அளித்தனர். இல்லையெனில் அவைகள் தகர்க்கப் பட்டிருக்கும். சமயம் இறைவனுக்காகவே என்ற அதே வார்த்தைகளே இங்கு பயன் படுத்தப்பட்டுள்ளன.

மேலும் சமய அடிப்படையில் ஒருவரைத் துன்புறுத்தக் கூடாது என்பதே அடக்கு முறைக்கு எதிரான போரின் முடிவான நோக்கமாகும் என்பதையே இந்த வசனங்கள் உணர்த்துகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் விரும்பி ஏற்றுக் கொண்ட நம்பிக்கையைக் கடைப்பிடிப்பதற்கு உரிமை உள்ளது. உண்மையில் இந்த வசனங்களுக்கும், குர்ஆனின் பன்முகத்தன்மை கொண்ட வசனங்களுக்கும் எந்த விதமான முரண்பாடும் இல்லை.

இஸ்லாத்தை மக்கள் ஏற்கும் வரை போரைத் தொடர்ந்து நடத்திட வேண்டும் என்று இதற்குச் சொல்லப்படும் எதிர்மறையான விளக்கம் குர்ஆனின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணானது மட்டுமல்ல, ஏராளமான அதன் பிற வசனங்களுக்கும் (சமயத்தில் கட்டாயமில்லை (2:256) முரணாக உள்ளது. முஸ்லிம்கள், பிற சமய மக்களுடன் உடன்பாடுகளும், ஒப்பந்தங்களும் செய்து கொள்ள

வேண்டுமென்று குர்ஆன் குறிப்பிடும் பல வசனங்களை இந்த எதிர்மறை விளக்கம் பொருளற்றதாக்கி விடுகிறது.

குர்ஆனின் 2:190–195 வசனங்களை போரைத் தவிர்த்திட வலியுறுத்தும் பிற வசனங்கள் 4:76; 4:34; 4:89; 4:91; 9:5; 9:12; 9:14; 9:29; 9:36; 9:123 ஆகியவற்றுடன் இணைத்துப் படித்திட வேண்டும். ஆனால் குர்ஆன் வசனங்கள் 9:5 மற்றம் 3:151 ஆகியன குறை காண்பவர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளன இந்த வசனங்களின் பொருத்தம் பற்றி இனி விவாதிப்போம்.

இணை வைப்பாளர்களை எங்கு கண்டாலும் அவர்களை விடாதீர்கள், சிறைப்பிடியுங்கள், பதுங்கியிருக்கக் கூடிய ஒவ்வொரு இடத்திலும் காத்திருந்து அவர்களைக் கொல்லுங்கள் என்ற இந்த வசனங்கள் அனைத்து முஸ்லிம்களுக்கும் இடப்பட்ட ஒரு ஆணையாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அது போரின் போது சொல்லப்பட்ட ஒரு குறிப்பிட்ட அறிவுரை மட்டுமே என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த இறை வசனங்களின் முதல் பகுதி போர் செய்யக்கூடாத புனித மாதங்களைப் பற்றிப் பேசுகிறது. பனி தம்ரா, பனி கனானா என்ற இரு இனக் குழுக்கள் மட்டுமே முஸ்லிம்களிடம் செய்து கொண்ட உடன் பாட்டை மதித்து நடந்தன. மதினாவைச் சுற்றியிருந்த பிற இனக்குழுக்கள் அடிக்கடி உடன்பாட்டை மீறி முஸ்லிம்களுக்கு தொல்லைகள் கொடுத்தும் அவர்களைக் கொன்றும் வந்தனர். உண்மையில் முஸ்லிம்களிடம் வரம்பு மீறி நடந்து கொள்வது அரேபிய இனக் குழுக்களின் பொதுவான பண்பாக இருந்தது. முஸ்லிம் உயிர் வாழ்வதே கேள்விக் குறியாக இருந்தபோது அவர்கள் தற்காப்புக்காகப் போர் செய்திட அனுமதிக்கப் பட்டனர். ஆனால் அதே நேரத்தில் எதிரிகள் மனம் திருந்தினால் மோதல் முடிவுக்கு வந்து விடவேண்டும். அவர்கள் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் உண்மை என்னவெனில் போர்க்களங்களில் கூட இஸ்லாமிய எதிரிகள் நியாயமான முறையில் நடந்து கொள்ளவில்லை. ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த இனக்குழு உடன்பாடுகளை அவர்கள் பின் பற்றி நடக்க வில்லை. எதிரிகள் ஆயுதங்களைக் கீழே போட்டவுடன் முஸ்லிம்களும் சண்டையை நிறுத்தி விட்டு

வாட்களை தங்களது உறையினுள் போட்டனர். ஆனால் மக்கா குரைசியர்கள் இதனைத் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு வஞ்சக மனப்பான்மையுடன் பல முஸ்லிம்களைக் கொன்று குவித்தனர். எனவே இந்த இறைவசனங்கள் இது போன்ற போக்கிற்கு எதிராக உம்மோடு ஒப்பந்தம் செய்து கொண்டு பின்னர் ஒவ்வொரு முறையும் தங்களுடைய ஒப்பந்தத்தை எவர் முறிக்கின்றார்களோ (8:56) அத்தகையவர்கள் பால் கோபத்தை வெளிப்படுத்துகிறது. இந்த குறிப்பிட்ட மக்களைப்பற்றியே இந்த வசனங்கள் பேசுகின்றன.

அந்த குறிப்பிட்ட சூழ்நிலையின் போது அருளப்பட்ட வசனங்களிலிருந்து வாள் வசனங்களை எடுத்து விட்டால், அவற்றை அனைத்து வகையான வன்முறைகளையும் நியாயப்படுத்தப் பயன்படுத்த முடியும். சத்தியத்தை நிராகரிப்போரின் உள்ளங்களில் வெகுவிரைவில் நாம் பேரச்சத்தை ஏற்படுத்துவோம். ஏனெனில் இறைவனுக்கு இணையானவை என்று நிரூபிக்கும் எந்த ஆதாரத்தையும் எவற்றுக்கு அல்லாஹ் இறக்கிவிட வில்லையோ அவற்றை அவனுடன் இணையாக்கிவிட்டார்கள் (குர்ஆன் 3:151) என்ற இந்த வசனங்கள் தான் (பயமுறுத்தல் வசனங்கள்) எதிர்ப்பாளர்கள் பயன்படுத்தும் வசதியான ஒரு ஆயுதமாக இருக்கிறது.

இஸ்லாமிய எதிரிகளாலும், குறை கூறுபவர்களாலும் செய்யப்படும் இந்தப் பிரச்சாரங்களுக்கு முற்றிலும் மாறாக, இந்த வசனங்கள் உண்மையை உரைத்திடும் விளக்கங்களே தவிர மக்களின் மனதில் கோபத்தையும், பயங்கர வாதத்தையும் தாண்டி விடுகின்ற முயற்சிகள் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வசனங்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பத்ருப் போரில் வெற்றி பெற்று ஒரு வருடத்திற்குள்ளாகவே மீண்டும் மக்காவிலுள்ள எதிரிகளுடன் போரிட வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலை ஏற்பட்ட போது அருளப்பட்டவையாகும். நபிகளார் உஹதுப்போருக்கான தயாரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது இறைவன் நபிகளாரின் பயிற்சி குறைந்த போதிய ஆயுதங்களற்ற படையினரால் எதிரிகள் அச்சுறுத்தப்படுவார்கள் என்ற

வாக்குறுதியை விடுத்தான். எனவே அது முஸ்லிம்களுக்கு இடப்பட்ட ஆணையல்ல.

சாதாரணமாக மேற்கொள்ளப்படும் தற்காப்பு நடவடிக்கைகளில் கூட அச்சுறுத்தல் இருப்பதைக் காணும் பலர், இது போன்ற வசனங்களில் மேலும் பல வஞ்சகமான கருத்துக்கள் இருப்பதாக யூகிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. வேதங்களை கருப்புத்தூரிகை கொண்டு அடிக்க (பூசுவதற்கு) விரும்புகின்றவர்கள் தற்காப்புக்காக போர் செய்வதையும், அடக்குமுறையை எதிர்த்து நியாயம் கிடைத்திடப் போர் செய்வதையும் போதிக்கின்ற பகவத்கீதையிலிருந்தும் பல பாடங்களைப் பெற்றிட முடியும். தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரர்களான கௌரவர்களுடன் போர் செய்வதை விட ஆயுதம் ஏந்தாமல் கொல்லப்படுவதையே விரும்பிய அர்ஜுனனிடம் பகவான் கிருஷ்ணன் சொர்க்கத்தில் நுழைவதினின்றும் உன்னைத் தடுத்திடும் இத்தகைய அசுத்தமான சிந்தனைகள் உனக்குத் தோன்றியது எப்படி? இந்த கீழான செயலற்ற தன்மையையும், பலவீனத்தையும் விட்டொழித்து விட்டு எழுந்துவா (பகவத் கீதை அத்தியாயம் 4. வசனங்கள் 43-468 மற்றும் அத்தியாயம் 2 வசனங்கள் 2,3) என்று குறிப்பிடுகிறார்.

பகவத் கீதையில் கூறப்பட்டுள்ள இந்த வசனங்கள் சொர்க்கத்தை அடைவதற்காக வன்முறையையும், கொலை புரிவதையும் ஊக்குவிக்கின்றன என்று யாரேனும் ஒருவர் விளக்கமளித்தால் அது எப்படியிருக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். வேண்டுமென்றே செய்யப்படும் அந்த விளக்கம் அந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தி வராத ஒன்றாக இருக்குமல்லவா? ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு எற்ப சரியான முறையில் புரிந்து கொள்ளப்படும் போது அது அநீதிக்கு எதிராக நியாயத்தை நிலை நாட்டிடச் செய்யப்பட்ட பரிந்துரையே என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

## நன்றி

கடந்த பல ஆண்டுகளாக நூற்றுக்கணக்காணவர்களிடமிருந்து நான் பெற்ற கருத்துக்களையும் நுணுக்கமான அறிவார்ந்த செய்திகளையும் பிரதிபலிக்கின்றது இந்நூல் . கடந்த பல ஆண்டுகளாக யார் யார் எனக்கு உதவி புரிந்தனர், இந்தக் கருத்துக்களை என்னுள் விதைத்தனர் என்று என்னால் பட்டியலிட முடியாது.

எனினும் இந்நூலை எழுதுவதற்கு எனக்கு நேரடியாகத் துணை புரிந்தவர்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நூலில் நான் சில புத்தகங்களிலிருந்து சில கருத்துக்களை எடுத்தாண்டுள்ளேன். அந்த நூலின் ஆசிரியர்கட்கு எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்திட விரும்புகிறேன். அவர்களில் முதன்மையானவர்கள் அமெரிக்க நாட்டின் சி.ஐ.ஏ. அமைப்பின் தேசிய புலனாய்வுக் குழுவின் முன்னாள் துணைத்தலைவரும், தேர்ந்த அரசியல் விஞ்ஞானியுமான திரு கிரஹாம் இ-புல்லர், முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதியும் இந்திய பத்திரிகை கவுன்சிலின் தலைவருமான திரு மார்க்கண்டேய கட்ஜு, ஜார்ஜ் டௌன் பல்கலைக் கழகத்தின் சர்வதேச விவகாரம் மற்றும் இஸ்லாமிய படிப்பியல் பிரிவின் பேராசிரியர் திரு. ஜான் லூயிஸ் எஸ்பொசிட்டோ, இந்திய இஸ்லாமிய அறிஞர்களான ஜனாப் ரபீக் ஜகரிய்யா, ஜனாப் ஏ.ஜி. நூரானி, லண்டன் மிடில் செக்ஸ் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறைப் பேராசிரியரும் எழுத்தாளருமான ஜனாப் ஜியாவுத்தீன் சர்தார், பல ஊடக நிறுவனங்களிலும் பி.பிசியிலும் பணியாற்றிய பெங்களூர் பத்திரிகையாளர் ஜனாப் மக்பூல் அஹ்மத் சிராஜ் ஆகியோராவர்.

இந்த நூலிற்கு எந்த வணிக நோக்கமுமில்லை அதனை நான் எதிர்பார்க்கவுமில்லை.

மத்திய அரசிடமிருந்து ஜன்பித் மற்றும் பத்மபூஷன் விருதுகள் பெற்றவரும், புக்கர் விருது பெற பரிந்துரைக்கப்பட்ட வருமான டாக்டர் யூ.ஆர். ஆனந்த மூர்த்தி, மங்களூர் மற்றும் கோவா பல்கலைக் கழகங்களின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் ப.ஷேக் அலி, ஹம்பி கன்னடப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் நிறுவனத் துணை வேந்தரும் மத்திய அரசின் மிகப் பெரிய இலக்கிய விருதான ஜன்பித் விருது பெற்றவருமான டாக்டர் சந்திரசேகர கம்பர், கர்நாடகக் காவல்துறையின் சட்ட ஒழுங்கு டி.ஜி.பி திரு பிபின் கோபால் கிருஷ்ணா, யுனஸ்கோ, யுனிடோ, ஐடிபி ஆகிய நிறுவனங்களின் முன்னாள் ஆலோசகர் ஜனாப் அப்துல் ரஹ்மான் கமருத்தீன், கர்நாடக அரசின் முதன்மைச் செயலாளர் ஜனாப் முஹம்மது சனாவுல்லா IAS, காவல் துறை முன்னாள் தலைவர் ஜனாப் யூ. நிசார் அஹமது IPS, ஆகிய நிபுணர்கள் இந்த நூலின் கையெழுத்துப் பிரதிகளைச் சரிபார்த்துத் தந்து உதவி புரிந்துள்ளனர்.

எனது இந்தப் பணியினை மேலும் செழுமைப் படுத்திட இப் பெருமக்களின் அரிய ஆலோசனைகள் உதவின. அவர்கள் அனைவர்கட்கும் இறைவன் அருள் பாலிப்பானாக. அவர்களது முயற்சிகளுக்குத் துணை நிற்பானாக. ஆமீன்.

பத்திரிகையாளரும், பிபிசியில் பணியாற்றியவருமான ஜனாப் மக்பூல் அஹ்மத் சிராஜ் அவர்கட்கும், www.karnatakamuslims.com என்ற இணைய தளத்தின் தலைமை ஆசிரியரான ஜனாப் செய்யிது தன்வீர் அஹ்மது அவர்கட்கும் அவர்கள் அளித்திட்ட தொடர் உதவிகளுக்காக நான் பெரிதும் நன்றிக் கடன் பட்டுள்ளேன். இந்தப் பணியில் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணிவுடனும் என்னுடன் இணைந்து பணியாற்றிய திரு முஹம்மது நுஃமான் கானுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது குடும்ப உறுப்பினர்கட்கும், சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன். இந்தப் பணியில் நான் ஈடுபட்டிருந்த போது சில முக்கியமான குடும்ப நிகழ்ச்சிகளில் என்னால் கலந்து கொள்ள இயலவில்லை. எனினும் அதனைப் பொருட்படுத்தாது எனக்கு ஊக்கமளித்த எனது துணைவியார் ஸபானா பிர்தௌஸ¨க்கும், மகள்

சையிதா சுஃபியாவுக்கும் எனது நன்றிகள். இவை அனைத்திற்கும் மேலாக இந்தப் பணியில் ஈடுபட என்னை ஊக்குவித்த எனது தாயார் அஸ்மத் சாரா அவர்கட்கு எனது உளப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது பிரார்த்தனையும், பரிவான சொற்களும் தான் என்னை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக இந்தப் பணியில் ஈடுபட எனக்கு தேவையான நிதிவசதியையும், உறுதியையும் தெளிவையும் கருணைமிக்க அல்லாஹ் வழங்கினான். அவனுடைய கிருபைஇல்லையென்றால் இந்தப் பணி முழுமை பெற்றிருக்காது. சிறப்பாக அமைதிருக்காது. ஒட்டு மொத்த மனித குலத்திற்கும், அன்பையும், சமாதானத்தையும் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள எனக்கு வழிகாட்டுமாறு அந்த ஏக இறைவனை இறைஞ்சுகிறேன்.

சையத் ஹமீது மோஹ்ஸின்
தலைவர், ஸலாம் சென்டர்
பெங்களூர்?

# Bibliographic References


| | |
|---|---|
| 1. Muhammad<br>Encyclopedia of Seerah | Afzalur Reman |
| 2. The Emergence of Islam | Dr. Mohammed<br>Hameedullah |
| 3. The Life of Muhammed | Haykal. |
| 4. Muhammad | Martine Lings. |
| 5. Prophet Muhammad | Fathullah Gulen |
| 6. A World Without Islam | Graham E Fuller. |
| 7. The Islamic Threat,<br>Myth of Reality | John L. Esposito |
| 8. Demystifying Islam | Dr. Ali Shehata. |
| 9. Muhammad and the Quran | Rafiq Zakaria |
| 10. Islam in Focus | Hammudah Abdalati |
| 11. The Holy Quran | Abdullah Yusuf Ali. |
| 12. The Quran | Dr. Nazeer Ahamed. |